650
650/4-67

# ஜூபிடர் தமிழ் மாலை

20 DEC 1967

## பத்தாம் வகுப்பு

ஜூபிடர் பப்ளிஷிங் ஹவுஸ்

TB
031 (10)
N67
130150

# ஜூபிடர் தமிழ் மாலை

(பத்தாம் வகுப்பு)

650
4-67

20 DEC 1967
PUBLIC (INFORMATION AND PUBLICITY) DEPTT.

ஆசிரியர் குழு:
வித்துவான். பி. கே. நரசிம்ம ஐயங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
கோகுலநாத இந்துமகாஜன உயர்நிலைப்பள்ளி, சேலம்.

&

வித்துவான். பொ. இராமலிங்கம், பி. ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
டான் பாஸ்கோ உயர்நிலைப்பள்ளி,
காட்டுப்பாடி நகர் விரிவு. (வ. ஆ.)

&

வித்துவான். பி. செல்வராஜ்,
தலைமைத் தமிழாசிரியர்,
நகராண்மை உயர்நிலைப்பள்ளி, உதகை.

**ஜூபிடர் பப்ளிஷிங் ஹவுஸ்**

**192, முதல் அக்ரஹாரம், சேலம் டவுன்.**

பதிப்புரிமை.

முதற் பதிப்பு (ஜனவரி) 1967.

Revised (டிசம்பர்) 1967.

130150

[ Paper used: 14·8 kgs. Double Demy (White Printing) ]

விலை ரூபாய். 2—25

அச்சிட்டோர் : லிட்டரரி பிரஸ், சேலம்-1.

# உள்ளுறை

REGISTRAR OF BOOKS SECTION
20 DEC 1967
PUBLIC (...) DEPT.

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்த்து : | |
| 1. | இறை வாழ்த்து | 7 |
| 2. | மொழி வாழ்த்து | 7 |
| 3. | நாட்டு வாழ்த்து | 7 |
| 2. | அறவுரை : | |
| 1. | திருக்குறள் | 8 |
| 2. | இன்னிலை | 14 |
| 3. | பழமொழி | 15 |
| 3. | தொடர்நிலைச் செய்யுள் : | |
| 1. | சிலப்பதிகாரம் | 17 |
| 2. | மணிமேகலை | 20 |
| 3. | பெரியபுராணம் | 23 |
| 4. | கம்பராமாயணம் | 29 |
| 5. | இரக்ஷணிய யாத்திரிகம் | 34 |
| 6. | சீறாப்புராணம் | 37 |
| 7. | பாரத வெண்பா | 43 |
| 8. | மனோன்மணீயம் | 49 |
| 4. | பல்சுவைப் பகுதி : | |
| | புறநானூறு | 52 |
| 1. | புனைந்துரை | 52 |
| 2. | சீட்டுக்கவி | 53 |
| 3. | சிலேடை | 53 |
| 4. | சிறு பிரபந்தம் | 54 |
| 5. | வழிபாட்டுப் பாடல்கள் | 55 |
| | குறிப்புரை | 57 |

## உரை நடைப் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இசைக்கலை<br>(வித்துவான். அ. நாராயணசாமி அவர்கள்.) | ... | 101 |
| 2. | குடும்பக் கலை<br>(திரு. கோ. சந்திரமவுலீஸ்வரன், M.A., B.O.L, B.T.) | ... | 106 |
| 3. | பிள்ளைக் கவிஞர்<br>(புலவர். தி. முருகுசுந்தரம், எம். ஏ.) | ... | 112 |
| 4. | நோபல் பரிசு<br>(பேராசிரியர். ஞா. தேவநேயப்பாவணர், எம். ஏ.) | ... | 119 |
| 5. | செல்வத்துக் கொருசொல்<br>(வித்துவான். பொ. இராமலிங்கம், பி. ஏ.) | ... | 123 |
| 6. | வீரச் சுவை<br>(வித்துவான். ஐயன்பெருமாள் கோனர்.) | ... | 130 |
| 7. | சீறூர் சீரமைப்பு<br>(வித்துவான். பி. கே. நரசிம்ம ஐயங்கார்.) | ... | 136 |
| 8. | முற்கால வாழ்க்கையும் தற்கால வாழ்க்கையும்<br>(பேராசிரியர். மயிலை சிவமுத்து அவர்கள்.) | ... | 143 |
| 9. | ஐக்கிய நாட்டுச் சங்க அமைப்பு<br>(வித்துவான். பி. செல்வராஜ்.) | ... | 156 |
| 10. | புலான் மறுத்தல்<br>(வித்துவான். பா. வேங்கடாசலம், பி. ஏ.) | ... | 162 |
| 11. | கர்ணனும் கும்பகர்ணனும்<br>(வித்துவான். சே. மா. கோதண்டராம முதலியார்.) | ... | 168 |
| 12. | விஞ்ஞான உலகம்<br>(திரு. J. S. பாபு கிறிஸ்டியன், பி. ஏ.) | ... | 175 |
| 13. | வேடர் குலத் திலகம்<br>(வித்துவான். மு. இரத்தினவேலு.) | ... | 181 |
| 14. | பிறந்த நாள் கடிதம்<br>(மொழிபெயர்ப்பு: திரு. ஓ. வீ. அளகேசன் அவர்கள்.) | ... | 193 |

## உரை நடைப் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 16. | பேரறிஞர் பெர்னர்ட்சா (திரு. புலவர். தணிகை உலகநாதன் அவர்கள்.) | ... | 199 |
| 17. | இலக்கிய ஓவியம் — முத்தொள்ளாயிரம் (பேராசிரியர். திரு. ச. ஆறுமுக முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி.) | ... | 207 |
| 18. | நாலடியார் தோன்றிய வரலாறு (வித்துவான். த. சிவசங்கரன் அவர்கள்.) | ... | 213 |
| 19. | புதுவேனில் (திரு. மு. இராசாக் கண்ணனார், M. A., B. O. L.) | ... | 218 |


## மனப் பாடப் பகுதி


| | | வரிகள் |
|---|---|---|
| **I. வாழ்த்து :** | | |
| கடவுள் வாழ்த்து | ... | 4 |
| **II. அறவுரை :** | | |
| திருக்குறள் 1, 3, 6, 10, 19, 27, 36, 38, 44, 50 | ... | 20 |
| இன்னிலை — செய்யுள் 3 | ... | 4 |
| பழமொழி — செய்யுள் 2 | ... | 4 |
| **III. தொடர்நிலைச் செய்யுள் :** | | |
| பெரியபுராணம் : செய்யுள் 4, 7, 14, 21 | ... | 16 |
| கம்பராமாயணம் : செய்யுள் 4, 7, 12, 20 | ... | 16 |
| இரக்ஷணிய யாத்திரிகம் : செய்யுள் 3, 10 | ... | 8 |
| சீருப்புராணம் : செய்யுள் 3, 16, 17 | ... | 12 |
| **IV. பல்சுவைப் பகுதி :** | | |
| வருணனை — மருதம் (கம்பர்) | ... | 4 |
| பிள்ளைத் தமிழ் | ... | 8 |
| காந்தியடிகள் | ... | 4 |
| | | 100 |

## தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உத்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜய ஹே.

— கவிஞர் இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும், சிந்துவையும், குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும், திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது. இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன ; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கின்ற உனக்கு, வெற்றி ! வெற்றி ! வெற்றி !

REGISTRAR OF BOOKS SECTION
20 DEC 1967

## பத்தாம் வகுப்பு

# செய்யுட் பகுதி

## 1. வாழ்த்து

### 1. இறைவாழ்த்து

திருவருட்பா

எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந்
　　தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
யொத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
　　யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமான் நடம்புரியு
　　மிடமெனநான் தேர்ந்தே னந்த
வித்தகர்த மடிக்கேவல் புரிந்திடவென்
　　சிந்தைமிக விழைந்த தாலோ.

— இராமலிங்க அடிகள்.

### 2. மொழி வாழ்த்து

உள்ளத்தி லுண்மையொளி யுண்டாயின்
　　வாக்கினிலே யொளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்குங்
　　கவிப்பெருக்கு மேவு மாயிற்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெல்லாம்
　　விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டா
　　ரிங்கமரர் சிறப்புக் கண்டார்.

— பாரதியார்.

### 3. நாட்டு வாழ்த்து

மடைகளிலே வாளைபாய மான்மருளு நாடு
　　மழைமுழங்க மயிலாட வண்டிசைக்கு நாடு
புடைகூவுங் குயில்கீதம் புசித்தினிக்கு நாடு
　　பூவைபுகல் கிளிமழலை பொருந்துதமிழ் நாடு

படைமூங்கில் வெள்வளையைப் பாண்மிழற்றும் நாடு
பரவையலை யோயாது பாடுகின்ற நாடு
நடைவழியே குரங்கேறி மரமேறு நாடு
நாகெருமை சேற்றில்மகிழ்ந் தாடுந்தமிழ் நாடே.

— திரு. வி. க.

---

## 2. அறவுரை

### (1) திருக்குறள்

### அறத்துப்பால்

#### கடவுள் வாழ்த்து

1. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

#### வான்சிறப்பு

2. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

#### அறன் வலியுறுத்தல்

3. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

#### இல்வாழ்க்கை

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

#### வாழ்க்கைத் துணைநலம்

5. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

#### அன்புடைமை

6. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

## விருந்தோம்பல்

7. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

## இனியவை கூறல்

8. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

## செய்ந்நன்றி யறிதல்

9. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

10. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

## அடக்கமுடைமை

11. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

12. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

## ஒழுக்கமுடைமை

13. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

## பொறையுடைமை

14. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

## அழுக்காறாமை

15. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

### புறங்கூறுமை

16. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

### பயனில சொல்லாமை

17. பயினில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கள் பதடி எனல்.

### ஒப்புரவறிதல்

18. ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

### ஈகை

19. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.
20. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

### புகழ்

21. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

### வாய்மை

22. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.
23. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

### இன்னா செய்யாமை

24. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

### நிலையாமை

25. உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

## பொருட்பால்

### இறைமாட்சி

26. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

### கல்வி

27. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

### கல்லாமை

28. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

### கேள்வி

29. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

30. கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாம் துணை.

### அறிவுடைமை

31. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

### சிற்றினஞ் சேராமை

32. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.

### தெரிந்து செயல்வகை

33. செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

### வலியறிதல்

34. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

### காலமறிதல்

35. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

### இடனறிதல்

36. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

### தெரிந்து தெளிதல்

37. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

### செங்கோன்மை

38. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

### கொடுங்கோன்மை

39. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

### வெருவந்த செய்யாமை

40. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

### ஊக்கமுடைமை

41. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

### இடுக்கணழியாமை

42. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

### வினைத்தூய்மை

43. பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

### நட்பு

44. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

### உட்பகை

45. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

### கள்ளுண்ணாமை

46. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

### பெருமை

47. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

### பண்புடைமை

48. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வார்
மக்கட்பண் பில்லா தவர்.

### உழவு

49. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.
50. உழவினுர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

— திருவள்ளுவர்.

---

## (2) இன்னிலை

### அறப்பால்

#### பிறவி அறுக்கும் வழி

தூயசொல் லாட்டும் துணிவறிவும் துன்பங்கள்
தோயக் கலங்காத் துணைவலியும் — பூயல்
படுக்கும் திருவத்த ஞரே பறிப்பர்
அடுக்கும் மடிச்சேரா வாறு.

### பொருட்பால்

#### பொருட் செல்வச் சிறப்பு

உடைமையரு தீட்டல் உறுதுணையாம் யாண்டும்
உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்கால் சுற்றம்
உடையவரும் வேறு படும்.

### வீட்டுப்பால்

#### பேரின்ப வீட்டு நெறி

நல்லினம் சாரல் நயனுணர்தல் பல்லாற்ருன்
நல்லினம் ஓம்பல் பொறையாளல் — ஒல்லும்வாய்
இன்னுர்க் கினிய புரிதல் நெறிநிற்றல்
நன்னுப்பண் உய்ப்பதோர் ஆறு.

— பொய்கையார்.

---

## (3) பழமொழி

### சான்ருேர் இயல்பு

1. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும் — சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்ருேர்க் கணி.

### முயற்சியுடைமை

2. வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த் — தாளாண்மை
தாழ்க்கும் மடிகோள் இலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துதல் இன்று.

### குரங்கின் கைக்கொள்ளி

3. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த ளுகி — நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

### உறவினர்தம் உறுநெறி உறுக

4. தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்
என்ன படினும் அவர்செய்வ செய்வதே
இன்ஞெலி வெற்ப இடரென்னை துன்னூசி
போம்வழி போகும் இழை.

### கீழ் மக்கள் குணம் மாருது

5. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநல மாகாவாம் கீழ்.

## கூடிப் பிரியேல்

6. விலங்கேயும் தம்மோ டுடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅ யிழியு மலைநாட இன்னதே
பேஎயோ டானும் பிரிவு.

## அகத்தில் உள்ளது முகத்திற் காட்டும்

7. வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய் ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்.

## சோம்பேறியை வேலையிடக் கூடாது

8. மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும்—கொடியன்னாய்
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்
மூரி உழுது விடல்.

## பொருள் மனிதனுக்கும், மனிதன் பொருட்கும் காவல்

9. உடையதனைக் காப்பான் உடையான் அதுவே
உடையானைக் காப்பதூஉ மாகும்—அடையின்
புதற்குப் புலியும் வலியே புலிக்குப்
புதலும் வலியாய் விடும்.

— முன்றுறை அரையனார்.

# 3. தொடர்நிலைச் செய்யுள்

## (1) சிலப்பதிகாரம்

## அடைக்கலக் காதை

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம் :

மதுரையைச் சார்ந்த இடைக்குல மடந்தையாகிய மாதரி என்பவளைக் கவுந்தியடிகள் வழியிலே கண்டார். அவள், ஆரியாங்கனை என்ற தேவதைக்குப் பாற் சோறு படைத்துத் திரும்பிக் கொண்டிருந்தாள். பசுக்களைப் புரக்கும் இடையர் குல மங்கையாகிய அவள் குற்றமற்றவள்; வயதில் முதிர்ந்தவள்; இரக்க உள்ளம் படைத்தவள். இத்தகைய உயர் பண்புடைய வளிடம் கண்ணகியை அடைக்கலம் செய்தால் குற்றம் நேராது என்று நினைத்தார்.

ஆதலால் கவுந்தியடிகள், மாதரியைப் பார்த்து, 'கோவல னுடைய தந்தையாகிய மாசாத்துவானின் பெயரை, இம்மதுரை நகர வணிகர் குல மக்கள் கேள்விப்பட்டால் உடனே கோவலனை யும் கண்ணகியையும் அவர்கள் தம் வீட்டில் ஆவலோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆதலால் அதுவரை உன்னிடம் கண்ணகியை அடைக்கலப் படுத்துகிறேன்' என்று கூறினர்.

மேலும், கண்ணகிக்கு வேண்டியன செய்க. தோழியாக வும், பாதுகாவலாகவும், தாயாகவும் அவளுக்கிருந்து தாங்குக.

மண்மகள் கண்டறியாக் கால்களையுடையவள் கண்ணகி. தன் கணவன் கடும் வெயில் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் வருந்துவதற்காக அவள் வருந்துபவள். இக்கற்புத் தெய்வம் போன்ற சிறந்த தெய்வத்தை யாம் கண்டதில்லை.

பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் மழை பெய்யத் தவருது; வளம் குறையாது; அரசியல் சிதையாது. தவமுனிவர் வைத்த அடைக்கலப் பொருள் சிறியதாயினும் அது பேரின்பம் தரும் என்றெல்லாம் கவுந்தியடிகள் கூறினர்.

மாதரி, கவுந்தியடிகளை வணங்கினுள். கதிரோன் மறையும் நேரத்தில், கன்றை ஆவலோடு நாடிச் செல்லும் ஆவின் குரலொலி தோன்ற, உறிக்காவடியரும், இடைச்சியரும் புறத்தே சுற்றி வர, கோல், குந்தம் முதலியன அமைந்த மதுரை மதில் வாயிலைக் கடந்து தன் வீடு எய்தினள்.

## மாதரியின் உயர்பண்புகள்

அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பில் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி என்போள்,
காவுந்தி ஐயையைக் கண்டடி தொழலும்,
ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்
கேதம் இன்றென எண்ணின ளாகி

## கண்ணகி அடைக்கலமாதல்

மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகும் அளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலம் தந்தேன்

## மாதரி தாயாகுக

மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கீங்

## கண்ணகியின் சிறப்பு

கென்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்

தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்

### கற்பின் சிறப்பு

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ

### தவத்தோர் அடைக்கலச் சிறப்பு

தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய்

### மாதரி மனையகம் புகுதல்

கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே
கவுந்தி கூற உவந்தனள் ஏத்தி
முனையிள வெண்பல் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமயத்துக்
கன்றுதேர் ஆவின் கனைகுரல் இயம்ப
மறித்தோள் நவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை ஆய்ச்சியர் சிலர்புறம் சூழ
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

— இளங்கோவடிகள்.

## (2) மணிமேகலை

## மலர்வனம் புக்க காதை

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம்:

சினாலயத்தில் இருக்கும்படியான உண்ணா நோன்பியொருவன், உறியிலே கமண்டலம் தாங்கியும், பிரம்பு ஏந்தியும், கண்ணிற் காண முடியாத உயிர்க்கும் மனமிரங்கியும், நீராடாத உடம்பைத் தாங்கியும் வந்தான்.

இங்ஙனம் வந்த உண்ணா நோன்பியைக் கட்குடியன் கண்டான். 'அடிகாள்! நான் சொல்வதைக் கேள். இந்தத் தென்னங் கள்ளைக் குடிப்பாயாக. உன் உள்ளம் உடனே இன்பம் எய்தும். இப்பிறவி இன்பம் மறுபிறவி இன்பம் ஆகியவற்றை அக் கள் நல்கும். அதனை நீ குடித்து விட்டால், அதன் பயனை நீ நன்கு அறிவாய். அதன் பின்னர் என்னை நீ கை விடுவாயா? கள்ளைக் குடி' என அவனை வேண்டிக் கொள்ளும் கட்குடியனுக்குப் பின்னரே, தோளிலே அலரிமாலை சூட்டிக்கொண்டும், மார்பிலே எருக்கம் பூமாலையை அணிந்து கொண்டும், இடையிலே கிழிந்த துணியையும், சுள்ளிகளையும் கட்டிக் கொண்டும், உடம்பிலே திருநீறு பூசிக் கொண்டும், பலரிடம் பண்பற்ற பல சொற்களைப் பேசிக்கொண்டும், அழுதல், விழுதல் போன்ற பல செயல்களைச் செய்து கொண்டும் வரும் பித்துக் கொளிக்குப் பின்னாலே வந்து பார்த்து உளம் வருந்தி நிற்பவர்களும், காவிரிப்பூம் பட்டினத்து மாளிகையில் ஓவியர் தீட்டிய கண்கவர் பல்வகை ஓவியங்களைக் கண்டு நிற்பவர்களும், மணிமேகலைக்காக மனம் வருந்தினார்கள்.

வெட்பாலை, மூங்கில், அசோகம் முதலியவற்றின் மலர்கள் நிறைந்துள்ள உவவனத்தைச் சுதமதி காட்ட, அவளும் அங்குச் சென்று மலர் கொய்ய நுழைந்தனள்.

மணிமே கலையொடு மாமலர் கொய்ய
அணியிழை நல்லாய் யானும் போவலென்
றணிப்பூங் கொம்பர் அவளொடுங் கூடி
மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வுழீஇச்

### உண்ணா நோன்பி

சிமிலிக் கரண்டையன் நுழைகோற் பிரம்பினன்
தவலருஞ் சிறப்பின் அராந்தா ணத்துளோன்
காணா உயிர்க்குங் கையற் றேங்கி
உண்ணா நோன்போ டுயவல் யானையின்
மண்ணா மேனியன் வருவோன் தன்னை

### களிமகன்

வந்தீர் அடிகள்நும் மலரடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்முரை கேண்மோ
வழுக்குடை யாக்கையின் புகுந்த நும்முயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா
திம்மையும் மறுமையும் இறுதியில் இன்பமும்
தன்வயின் தருஉமென் தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ கொழுமடல் தெங்கின்
விலைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டால் எம்மையும் கையுதிர்க் கொண்மென
உண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்
றுண்மென இரக்குமோர் களிமகன் பின்னரும்

### பித்தன்

கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்
குவிமுகிழ் எருக்கின் கோத்த மாலையன்
சிதவல் துணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய உடையினன்
வெண்பலி சாந்தம் மெய்ம்முழு துரீஇப்
பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்

கழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்
தொழூஉம் எழூஉம் சுழலலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பங் கண்டுநிற் குநரும்

### ஓவியங் காண்போர்

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்

### மலர்வனம் புகுதல்

... ... ... ... ... ... ... ... இணைந்துகக்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனந் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலையென்.

— சீத்தலைச்சாத்தனார்.

## (3) பெரிய புராணம்

## மெய்ப்பொருள் நாயனுர் புராணம்

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம்:

சேதி நாட்டிலே உள்ளது திருக்கோவலூர். இவ்வூரில் மலை நாடர்களுக்குத் தலைவராக இருந்தவர், மெய்ப்பொருள் நாயனுர். சிவனடியார்களின் வேடங்களை மெய்ப்பொருளாக நினைத்தமையால் அவருக்கு அப்பெயர் ஏற்பட்டது.

மெய்ப்பொருள் நாயனுர், சிவனடியார்களின் கருத்தறிந்து பணி செய்து வந்தார். சிவன் கோயிலில் செய்ய வேண்டிய தொண்டுகளைச் செய்து வந்தார்.

இங்ஙனம் அவர் ஒழுகிவரும் நாளில், அவரோடு முத்தநாதன் என்பவன் பகைமை கொண்டான்; பலமுறை போர் செய்தான்; யானைப் படை முதலியவற்றை இழந்தான்; அவமானம் அடைந்தான்; பகைமை வழியே வெல்ல முடியாது என்ற முடிவுக்கு வந்தான்.

அவன் சிவவேடம் தாங்கினுன். மெய்ப்பொருள் நாயனுரின் அரண்மனை நோக்கி வந்தான். அவன் வந்த நேரம் காலை நேரமாகும். அரண்மனை வாயிலில் நின்று கொண்டிருந்த தத்தன் என்பவன் தடுத்தும், அதைப் பொருட்படுத்தாமல் மெய்ப்பொருள் நாயனுர் தம் மனைவியோடு உறங்கிக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்றுன். இதனைக் கண்ட தேவி தன் கணவனை உடனே எழுப்பினுள்.

துயிலுணர்ந்த மெய்ப்பொருள் நாயனுர் பொய்ச் சிவவேடத்தானை வணங்கினுர்; வழுத்தினுர். 'சிவபெருமான் மொழிந்த சிவாகம நூல் ஒன்றனை உனக்குப் படித்துக் காட்டப் போகிறேன்; ஆதலால், நீயும் நானும் தனித்திருக்க வேண்டும்' என்று அவன் கூறினுன்.

மெய்ப்பொருள் நாயனுர், தம் மனைவியை வெளியே போகும்படி பணித்தார். சிவாகம நூலைப் படிக்கும்படி வேண்டினுர். அவன், புத்தகக் கவளியை அவிழ்ப்பது போல நடித்தான்; அவர் வணங்கும் போது, புத்தகக் கவளியில் இருந்த கத்தியால் குத்தினுன்.

இச்செய்தியை விழிப்புடன் பார்த்திருந்த தத்தன் ஓடி வந்து அவனைக் கொல்ல முயன்றான். மெய்ப்பொருள் நாயனார் அவனைத் தடுத்தார். ' அச்சிவனடியாருக்கு யாதோரிடையூறும் நேராவண்ணம் அழைத்துச் சென்று பாதுகாப்பிடத்தில் விட்டு விட்டு உடனே திரும்புக ' என்றார்.

அங்ஙனமே அவன் செய்தான். இச்செய்தியைக் கேட்ட மெய்ப்பொருள் நாயனார் தம் அரசியல் துறையில் இருப்பவர்க்கும், மனைவி மக்கட்கும் ' திருநீற்றிலே பக்தி கொள்க ' என்று கூறிச் சிவனின் திருவடி நீழலெய்தினார்.

## மெய்ப்பொருள் நாயனாரின் சைவத் தொண்டு

1. சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட
மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார்.

2. மங்கையைப் பாக மாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து
வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர் தாளலால் சார்பொன்
றில்லார்.

3. தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன வாகும் என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து
வந்தார்.

## போரில் முத்தநாதன் தோற்றல்

4. இன்னவா றொழுகும் நாளில் இகல்திறம் புரிந்தோர்
மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால்
அமர்மேற் கொண்டு
பொன்னணி யோடை யானை பொருபரி காலாள்
மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப்
போனான்.

### முத்தநாதனின் வஞ்சக எண்ணம்

5. இப்படி இழந்த மாற்ருன் இகலினுல் வெல்ல
மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம் அறிந்துவெண்
ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில்
வெல்வா னுகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற்
சேர்வான்.

### முத்தநாதனின் பொய்த் தவ வேடம்

6. மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள்
கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த
நாதன்.

### தத்தன் தடுத்தல்

7. கடையுடைக் காவ லாளர் கைதொழு தேத்தி நின்றே
உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும்
என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டும் துயில்கொளும்
இறைவன் என்ருன்.

### மன்னனது பள்ளியறையில் வஞ்சகன் சார்தல்

8. என்றவன் கூறக் கேட்டே யானவற் குறுதி கூற
நின்றிடு நீயும் என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக்
கண்டான்.

## மாதேவி மன்னனைத் துயிலுணர்த்தல்

9. கண்டுசென் றணையும் போது கதுமென
எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட ராமெனக் குவித்த
செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று கொள்கையின்
வணங்கி நின்று.

## வந்த காரணம் வஞ்சகன் கூறல்

10. மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த
தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ என்று கூற
உங்கள்நா யகனார் முன்னம் உரைத்த வாகமநூல்
மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப
வென்றான்.

## தன் ஆவலை மன்னன் தெரிவித்தல்

11. பேறெனக் கிதன்மே லுண்டோ
பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய
வேண்டும் என்ன
நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும் என்றவன்
விளம்ப வேந்தன்.

## மன்னன் சிவாகமங் கேட்டலும் முடிவும்

12. திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய வந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மேல்
இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி இனியருள் செய்யு
மென்றார்

13. கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை
மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர்
வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தவப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத்
தொழுது வென்றார்.

**'தத்தா நமர்' என நாயனார் தடுத்து வீழ்தல்**

14. மறைத்தவன் புகுந்த போதே
மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி வாளினால்
எறிய லுற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார்
நீண்ட கையால்
தறைப்படும் அளவில் தத்தா நமரெனத்
தடுத்து வீழ்ந்தார்.

**இன்னா செய்தானுக்கும் இனியதே செய்தார்**

15. வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும் தலையினால்
வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன எம்பிரான்
அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய்
விடுநீ என்றார்.

**இறைவனது ஆணையைத் தத்தன் இயம்பல்**

16. அத்திறம் அறிந்தா ரெல்லாம் அரசனைத்
தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம் எனப்புடை
சூழ்ந்த போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்துடன்
கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை என்றான்.

### வஞ்சகனை ஆளுருக் கானத்தில் சேர்த்தல்

17. அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி ஆளுருக் கானம் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின்
மீண்டு போந்தான்.

### கடமையாற்றிய தத்தன் கோமகன் முன் நிற்றல்

18. மற்றவன் கொண்டு போன வஞ்சனை
வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற
ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன்
குறிப்பில் நின்றான்.

### தத்தனை நாயனார் புகழ்தல்

19. சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்த தியார்செய்ய
வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங்
கருணை கூர்ந்தார்.

### நாயனார் நவின்ற அறிவுரை

20. அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர் என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.

### நாயனார் எய்திய நற்பேறு

21. தொண்டனார்க் கிமயப் பாவை
துணைவனா ரவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல்
நீழல் சேரக்
கொண்டவர் இடைய றாமல் கும்பிடும்
கொள்கை ஈந்தார்.

— சேக்கிழார்.

## (4) கம்பராமாயணம்

## கங்கைப் படலம்

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம் :

தவப்பள்ளியிலே இருந்த இராமபிரானைக் காண்பதற்குக் குகன் தன் சுற்றத்தாரோடு வந்தான். இச்செய்தியைக் குகன், இலக்குவன் வழியே அனுப்பினன். இலக்குவன் தன் தமையனை வணங்கி, குகனின் சிறப்பியல்புகளை மொழிந்து, அவனை அவன் பார்க்க வந்திருப்பதாகக் கூறினன்.

இராமன், குகனை வருமாறு பணித்தான். தவப்பள்ளியினுள்ளே சென்ற குகன், இராமனைத் தொழுது, வாய் பொத்தி நின்றான். உண்பதற்காகத் தேனும் மீனும் கொணர்ந்திருப்பதாக இராமனிடம் குகன் உரைத்தான். இது கேட்ட இராமன் புன்முறுவல் பூத்தான். 'குகனே! அன்பால் நீ கொண்டு வந்தவை அமிழ்தினும் இனியவையே. இன்றிரவு யாம் இங்குத் தங்குவோம். ஆதலால் நீ உன் சுற்றத்தோடு சென்று நாளை விடியற் காலையில் நாவாயுடன் இங்கு வருக' எனப் பணித்தான்.

'இராமபிரானே! உன்னை அரச கோலத்துடன் பார்க்க வேண்டிய என் கண்கள், துறவுக் கோலத்துடன் நீ இருப்பதைப் பார்த்தன. இத்தகைய கண்களை நான் தோண்டி எறியாமல் இன்னும் இருக்கின்றேன். உன்னை விட்டுப் பிரிய என் மனம் இணங்கவில்லை. உன்னிடம் தங்கித் தொண்டு செய்ய விரும்புகின்றேன்' என்று குகன் கூறினான்.

இதைக் கேட்ட இராமன், 'அங்ஙனமாயின் இவ்விரவுப் பொழுதை இவ்விடத்திலேயே கழிப்பாயாக' என மொழிந்தான். உடனே குகன் அளவற்ற மகிழ்ச்சி கொண்டான். தன் சுற்றத்தாரேயன்றித் தானும் இராமபிரானைக் காக்கும் தொழிலில் ஈடுபட்டான். இரவுப் பொழுதில் கண்ணும் கண்ணுறங்காமல் காவல் புரிந்த இலக்குவனைக் கண்டான். நாணல் புற்படுக்கையில் இராமன் துயில் கோடலைக் கண்டு உள்ளம் நொந்தான்.

தன்னூரிலேயே இருக்கும்படி இராமனைக் குகன் வேண்டிக் கொண்டான்; எல்லாப் பணிவிடைகளையும் செய்வதாகக் கூறினான். உண்ணத் தேனும், தினை மாவும், விளையாடக் காடும், நீராடப் பொய்கையும் உளவென்று சொன்னான்.

தன் குடிலில் ஒரு நாளாவது தங்கிச் செல்லுமாறு இராமனைக் குகன் வேண்டிக் கொண்டான்; இங்ஙனம் அவன் தங்குவதை வாழ்விலொரு திருநாளாக நினைத்தான்.

குகனது மனப்பான்மையை உணர்ந்த இராமன், ஒரு சில நாட்களில் அவனது வீட்டுக்கு வருவதாகச் சொல்லி அவனுக்கு மனநிறைவு உண்டாக்கினான்.

'இராம பிரானே! என்னையும் உன்னுடன் காட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்வாயானால், கடிய வழிகளைச் செம்மைப் படுத்தித் தருவேன்; நறிய காய்கனிகளைக் கொணர்ந்து தருவேன்; உறையுள் அமைத்துக் கொடுப்பேன்' என்றிவ்வா றெல்லாம் மொழிந்தான்.

இச்சொற்களைக் கேட்ட இராமன், 'குகனே! நீ என் உயிர் போன்றவன்; என் தம்பியாகிய இலக்குவன் நின் தம்பியாவான்; இச் சீதையும் உன் உறவினளாவள்; இவ்வுலகம் முழுவதும் உனக் குரியது; முன்னே உடன் பிறந்தார் நால்வராக இருந்தனர்; இப்போது உன்னோடு ஐவரானோம். ஆதலால், நீ நின்னுடு செல்க. நாட்டை ஆள்க. நான் அயோத்திக்கு மீளும்போது நின் இருப் பிடத்திற்குத் தவறுமல் வருவேன்' என்றான்.

## குகனது வருகையை இராமனிடம் இலக்குவன் இயம்பல்

1. நிற்றியீண் டென்று புக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகினன்
நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும் தானும் உள்ளத் தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுகன்
ஒருவன் என்றான்.

## இராமனைக் குகன் காணல்

2. அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ
அவனை என்றான்
பண்ணவன் வருகவென்னப் பரிவினன்
விரைவின் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் களித்தனன்
இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய்
புதைத்து நின்றான்.

## குகனின் அன்புக் காணிக்கை

3. இருத்தியீண் டென்ன லோடும் இருந்திலன்
எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்
கமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல்
திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன்
விளம்ப லுற்றான்.

## அன்புக் காணிக்கையை இராமன் ஆவலோடு ஏற்றல்

4. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால்
அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும்
சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய வென்னில் பவித்திரம்
எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெ மன்றோ
என்றான்.

## குகனை, நாவாயுடன் நாளை வருகெனப் பணித்தல்

5. சிங்கவே றனைய வீரன் பின்னரும் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை ஏறுதும்
நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந்
தினிதுன் னூரில்
தங்கிநீ நாவா யோடும் சாருதி விடியல் என்றான்.

## பிரியேன் எனக் குகன் கூறல்

6. கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன்
உணர்த்து வானிப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த
கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின்
இருக்கை நோக்கித்
தீர்கிலே னான தைய செய்குவென் அடிமை என்றான்.

### இவண் எம்மொடு தங்குகென இராமன் இயம்பல்

7. கோதைவில் குரிசி லன்ஞன் கூறிய கொள்கை
கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதல ஞகு மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்தியீண்
டெம்மொ டென்ருன்.

### குகனும் சேனையும் காவல் புரிதல்

8. அடிதொழு துவகை தூண்ட அழைத்தனன்
ஆழி அன்ன
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சுற்ற ஏவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கிவாய் அம்பு பற்றி
இடியுடை மேகம் என்ன இணையடி ஏத்தி நின்ருன்.

### இலக்குவன் இமையாமல் காவல் புரிதல்

9. மாலைவாய் நியமம் செய்து மரபுளி இயற்றி வைகல்
வேலையாய் அமுதன் ஞளும் வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர் வரிவில் ஏந்திக்
காலைவாய் அளவும் தம்பி இமைப்பிலன் காத்து
நின்ருன்.

10. மற்றவள் இறைஞ்சி ஏக மாமலர்த் தவிசு நீங்காப்
பொற்ருெடி யோடும் ஐயன் துயில்தரும்
புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச ஞகி இருகணீர் அருவி சோர
உற்றவோ வியம தென்ன ஒருசிலை யதனின் நின்ருன்.

### இராம இலக்குவர் நிலைக்காகக் குகன் கண்ணீர் சிந்துதல்

11. தும்பியின் குழாத்தின் சுற்றும் சுற்றத்தன்
தொடுத்த வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன்
விழித்த கண்ணன்
தம்பிநின் ருனை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவிசோர்
குன்றின் நின்ருன்.

### கதிரோன் தோற்றம்

12. துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நினையல் அம்மா வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போல் முன்னைநாள்
இறந்தான் பின்னுள்
பிறக்குமா றிதுவென் பான்போல் பிறந்தனன்
பிறவா வெய்யோன்.

### தம்மூரில் தங்குமாறு இராமனைக் குகன் வேண்டல்

13. பொய்ம்முறை அலராவெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை உறுதாராய் குறைவிலெம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை யுறவென்னு இனிதிரு நெடிதெம்மூர்.

14. தேனுள தினையுண்டால் தேவரும் நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையும் உளதன்றே
நானுள தனையும்நீ இனிதிரு நடவெம்பால்.

15. ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குதும் அடியேமெம் குடிலிடை ஒருநாள்நீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான்.

### இராமனது மறுமொழி

16. அண்ணலும் அதுகேளா அகநிறை அருள்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளில் குறுகுதும் இனிதென்றான்.

### தன்னையும் அழைத்துச் செல்லுமாறு குகன் வேண்டல்

17. நெறியிடு நெறிவல்லேன் நேடினென் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவிவை தரவல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன் ஒருநொடி
வரையும்மைப்
பிறிகிலென் உடனேகப் பெறுகுவெ னெனின்யேன்.

18. திருவுள மெனின்மற்றென் சேனையும் உடனேகொண்
டொருவலென் ஒருபோதும் உறைகுவென் உளரானுர்
மருவல ரெனின்முன்னே மாய்குவென்
வசையில்லேன்
பொருவரு மணிமார்பா போதுவென் உடனென்றுன்.

## குகனது வேண்டுகோளை இராமன் நயம்பட மறுத்தல்

19. அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவலுன் இளையானிந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன்.

20. துன்புள தெனினன்றே சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தெனவுன்னு
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளராஞேம்.

21. படருற உளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு பகையாபோய் யானென உரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேன்யான்
வடதிசை வருமந்நாள் நின்னுழை வருகின்றேன்.

— கம்பர்.

---

## (5) இரக்ஷணிய யாத்திரிகம்

## இரக்ஷணிய சரிதப் படலம்

### *சிலுவைப்பாடு*

பாடப் பகுதியின் கதைச் சுருக்கம் :

இயேசுநாதர், மதத் துரோகம் செய்ததாகவும், அரசத் துரோகம் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டார். அதனுல் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்ல யூதர்களும், யூதேய நாட்டுத் தலைவனுன பொந்தியு பிலாத்து என்பவனின் போர் வீரர் களும் அழைத்துச் சென்ருர்கள். அங்ஙனம் செல்லும்பொழுது அவர்கள் வாய் கொழுத்துப் பல தீய சொற்களைச் செப்பினுர்கள். அந்தோ! அவற்றையெல்லாம் பொறுத்தார், ஏசுநாதர்.

பகைவர், ஏசுநாதர் மீது அணிவித்திருந்த செவ்வங்கியை நீக்கினுர்கள்; அவர் முன்னுடுத்திருந்த உடையையே அவருக்குக் கட்டினுர்கள். அவருயிர்க்கு எமனுக நிற்கும் சிலுவையை அவரைக் கொண்டே தூக்கச் செய்தார்கள். அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

ஏசுநாதரின் கை சோர்ந்தது; கால் சோர்ந்தது; கண்ணிருண்டது; காதடைத்தது. இந்த நிலேயில் வரும் ஏசுநாதரை எருசலேம் நகரார் கண்டனர்.

மரியன்னேயின் அன்பு மகனுக்கா இக்கதி ஏற்பட்டது என்று சொல்லித் தெருவின் இரு மருங்கிலும் பெண்கள் நின்று வாய் விட்டுக் கதறினுர்கள்

செந்தாமரை முகம் வாடியதே; கண்மலர் பொலிவற்றதே என்று சொல்வாராஞர்கள். பெண்களும், குழந்தைகளும் அரற்றினுர்கள். அவரைப் பார்த்தவரும், அவரைப் பற்றிக் கேட்டவர்களும் உள்ளம் உருகினுர்கள்.

ஏசுநாதரின் சீடர்கள், யூதர்களிடையே மறைந்து மறைந்து சென்ருர்கள். மரியன்னே, நெருப்பிலிட்ட பூங்கொடி போல் வாடி உயிர் மெலிந்து சென்ருள்.

ஏசுநாதரைக் கொலேக் களத்தின்கண் சேர்த்தார்கள் கொலேஞர்கள். ஏசுநாதரின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் இரண்டு கள்வர்களேச் சிலுவையில் நிறுத்திக் கொல்வாராஞர்கள்.

அப்போதும் ‘பரம பிதாவே! இம்மக்கள் அறியாமையால் இக்கொடுமையைச் செய்கிருர்கள். ஆதலால் அவர்களே மன்னித்தருள்க’ என ஏசுநாதர் வேண்டிக் கொண்டார்.

### ஏசுநாதருக்குப் பகைவர் செய்த கொடுமைகள்

1. பொல்லாத யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்
வல்லானே எள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை எல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தார்.

2. செவ்வங்கி யைக்களேந்து தேவர்பிரான் முன்தரித்த
அவ்வங்கி யைத்தரித்தே ஆகடியம் பல்பேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவை தணேச்சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோஞர்.

### ஐயன் துன்பநிலை

3. கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு
காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன் மறுகூடு வரக்கண்டார் அணிநகரார்.

### ஏசுவைக் கண்ட எருசலேம் மக்கள் துயரநிலை

4. மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்ருது மெல்லியலார் தாம்குழுமி
வீதியிரு மருங்கும் மொய்த்தார்வாய் விட்டழுது.

5. செந்தா மரைபோல் திகழும் திருவதனம்
அந்தோ வதங்கி அழகுகுடி போயதென்பார்
நந்தாக் கருணை நருத்துளிக்கும் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பார்.

6. பெண்டிரெலாம் அழுதரற்றப் பிள்ளைகள் எலாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுயர் எனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப்
பதைத்தேங்க.

### அருட்சீடரும் அன்னை மரியும்

7. குழல்நூலின் பிரியாத குருத்துவமார் அருட்சீடர்
அழலனைய துயர்நலிய அழுதுகரந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள்
பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோல் சாம்பியுயிர் தளர்ந்தேக.

### ஏசுவைக் கொலைக்களத் துய்த்தல்

8. இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி எவ்வுயிரும்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான்
கொலைக்களத்தில்.

## ஏசுவைச் சிலுவையில் அறைதல்

9. மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள்
செயலொழியச்
சொற்றமறைத் திருவசனத் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்ருர் குருசுமிசை.

## அருள் வள்ளல் திருவாக்கு

10. தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல்.

— கிருஷ்ணப்பிள்ளை.

---

## (6) சீருப்புராணம்

### கபு காபுப் படலம்

#### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம் :

மனித வடிவில் தோன்றியிருக்கும்படியான அருள் வள்ளலாகிய முகமது நபியே! என் தந்தை, வேதங்களை நன்கு கற்ற புலவராவார்; மதீனமா நகரில் வாழும் யூதர்கள் போற்றிப் புகழத் தக்க நிலையில் உள்ளவராவார்.

எம் தந்தையும் தாயும் செய்த தவப் பேற்றினுல் நான் தோன்றினேன். என் தந்தைக்கு என்னைத் தவிர்த்து வேறு குழந்தைகள் இல்லை. என் பெற்ருேர் சிறந்த புராண நூற்களை ஆராய்ந்து எனக்குக் கபுகாபு என்னும் பெயரைச் சூட்டினர்; சீரும் சிறப்புமாகப் போற்றி வந்தனர். மேலும் வேதங்களையும், புராணங்களையும் கற்பித்தனர்.

ஈமான், இபாதத்து, இஹ்சான் என்ற மூன்று வேதங்களைப் பற்றிய நூற்களும், ஞான நூற்களும், இவை போன்ற பல நூற்களும் இருக்கும் பெட்டிகள் நூற்றுக்கு மேலும் உள்ளன. அப் பெட்டிகளுக்கு ஒருவகைப் பாதுகாப்பும் இல்லை. ஆதலால் நான், அவற்றுள் எந்த நூல் என் மனத்திற்கிசைந்த நூல் எனத் தேர்ந்தெடுத்தேன்.

ஒரு பெட்டிக்குள்ளே மற்றெரு பெட்டி இருந்தது. இந்தப் பெட்டியின் மீது முத்திரை இருந்தது. இஃது யாதாக இருக்கலாம் என்ற ஐயத்துடன் நான் அதனை எடுத்துக் கொண்டு போய் என் தந்தையிடம் காட்டினேன். அவர் பின் வருமாறு கூறுவாராஞர்.

'மகனே! இந்தப் பொற் பெட்டியில், மாணிக்கக் கற்களையோ, அணிகலன்களையோ உனக்குத் தெரியாமல் நான் மறைத்து வைக்கவில்லை. மாயம், கபடு முதலிய தீய பண்புகள் படைத்த ஒருவன் உலகில் தோன்றித் தீன் என்னும் மதத்தை உண்டாக்கி நமக்கே பகையாக அமைவான் என்று பெரியோர்கள் ஆய்ந்த வேதங்களில் அவனது பெயர் முதலியன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத்தகைய செய்தி அடங்கிய நூல் இப்பெட்டியினுள் வைக்கப்பட்டுளது; முத்திரையும் அதன்மீதுளது. ஆதலால் நீ இதனைத் தொடாதே என்று கூறினர்.

என் தந்தை மது குடித்த மயக்கத்தில் இருந்தார். என் தாய் என்னை அறியா வண்ணம் முத்திரையை நீக்கி அப்பெட்டியைத் திறந்தேன். கடிதத்தைப் படித்தேன். அக்கடிதத்தில் முகமது நபியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்பெயரைப் பன்முறை செப்பினேன். என் தாய் உடனே ஓடி வந்தாள். 'அந்தோ! என் மகன் ஏன் அங்ஙனம் அடிக்கடி அப்பெயரைச் சொல்கிருன்; முனிவர்களே! நன்கு பார்த்துச் சொல்லுங்கள்; என் மகனுக்கு ஏதாவது பித்துப் பிடித்துள்ளதா?' எனக் கதறி அழுதாள். என் தந்தையும் என்னை அண்மி, 'உனக்கு என்ன நேர்ந்தது? எனக் கேட்டார். உடனே நான் என் வீட்டிலுள்ளோர்க்குப் பின் வருமாறு சொன்னேன்: பொன், மணி முதலியவற்றைப் பிறருக்குத் தருமம் செய்வது எல்லார்க்கும் பொதுவாக அமைந்ததாகும். ஆனல் உலகையே வாழ வைக்கும் ஒரு திருப் பெயராகிய முகமது என்னும் பெயரைப் பிறர் அறிய வொட்டாமல் மறைத்து வைப்பது சிறந்த அறமாகாது. வேதம், கலை முதலியவற்றைத் தந்தை தன் மக்கட்குப் புகட்ட வேண்டுமே யொழிய அவற்றை மறைத்து வைக்கக் கூடாது என்றேன்.

## கபு காபுவின் தந்தை சிறப்பு

1. வானவர் ஏவல் பூண மானிட வடிவாய் வந்த
தானவ அரசு செய்யத் தவமுயன் றழகு பெற்ற
கோனகர் மதீனத் துற்ற ஜுூதர்கள் குழூஉக்கொண்டேத்தும்
ஈனமில் மறைகள் வல்ல பண்டிதன் எந்தை மன்னே.

## கபு காபுவின் பிறப்பு

2. எந்தையும் யாயும் பன்னுள் இயற்றிய தவத்தால் வந்த
சந்ததி என்ன வேறு தனயரில் லாது நானும்
புந்தியின் உவகை கூரப் போற்றிநற் புராணந் தேர்ந்து
நந்தலில் கபுகா பென்னும் நாமமும் நவின்றிட் டாரால்.

## கபு காபுவின் வளர்ப்புச் சிறப்பு

3. உத்தமர் செல்வம் போன்றும் உளத்தனு
மாசொன் றில்லாப்
பத்தியர் தவமே போன்றும் பகரறும் விசும்பில்
தோன்றும்
சித்திர மதியம் போன்றும் செவ்வியர் இருவர் ஆவி
வைத்ததோர் உடம்பு போன்றும் நாட்குநாள்
வளர்த்திட் டாரால்.

## கபு காபுவின் கல்விப் பயிற்சி

4. பேதமை அகற்றிப் புந்திப் பெருக்கெடுத்
தொழுகல் செய்யும்
வேதவா சகம்பு ராண காவிய விதிக ளியாவும்
ஓதென ஓது வித்தென் உளத்தினுக் கியைந்த தாகப்
போதரச் செய்து நின்றார் பொருவிலா வண்ணத்
தன்றே.

## முத்திரையிட்ட பொற்பேழையைக் கபுகாபு காணல்

5. முன்னவர் ஓதும் வேதம் மூன்றினும் தெரிந்த நூல்கள்
பன்னெறி ஞான நூல்கள் இனையன பலவுந் தொக்க
மின்னவிர் பேழை நூற்றின் மேலுமுண்
டருங்காப் பின்றி
என்னுளம் பொருந்து நூல்மற் றெவையவை
தெருள்வன் மன்னே.

6. அன்னவிற் பேழை யுட்கண் அறையினு
டகத்தின் வாய்ந்த
மின்னவிர் கிரணச் செப்பொன் றிருந்தமென்
விரலால் தீண்டி
என்னிதென் றறிவோம் என்ன எடுப்பமுத்
திரைகள் தம்மால்
பின்னரும் வைத்து மீண்டே தோவெனப் பேதுற்
றேனுல்.

### கபு காபுவின் ஐயம்

7. சிந்தையின் ஐயம் தோன்றித் தெளிவிலா
தெம்மான் பாலின்
வந்துதாள் வழுத்தி இல்லின் வயங்குபொன்
பேழை யின்கண்
எந்தையே இருப்ப தென்னென் றியம்பினேன்
இயம்ப லோடும்
சந்ததி என்னக் கூவி அன்பொடு சாற்று வானல்.

### கபு காபுவின் ஐயத்தைத் தந்தை தீர்த்தல்

8. சொல்லிய கனகச் செப்பில் சுடர்மணித்
தொகுதி யேனும்
எல்லையில் நிதிய மேனும் இழைபல வேனு மியாதும்
ஒல்லைநீ அறியா வண்ணம் ஒளித்ததென்
றெள்ளல் வேண்டா
மல்லலம் புவியில் செய்த தவத்தினல் வந்த மைந்த.

9. மாயமும் கபடும் பொய்யும் மறையெனத்
திரட்டி முன்னள்
ஆயதே வதத்தின் மார்க்கத் தறத்தினை
வழுக்கிப் பேசும்
தீயவன் ஒருவன் தோன்றித் தீனெனும்
மதமுண் டாகக்
காய்கதி ரவனைப் போல்பிற் காலத்தில் வருவன்
என்றே.

10. அன்னவன் நெறியால் மாந்தர்க் கடுபகை
பெரிதுண் டாகும்
என்னமுற் பெரியோர் ஆய்ந்த வியன்மறை
அதனுட் கண்டு
பன்னிநிச் சயித்துப் பேரும் புள்ளியும் பரிவின் தீட்டும்
பொன்னின்முத் திரைநீ தீண்டல் அன்றெனப்
புகழ்ந்து சொன்னன்.

## கடிதத்தைக் கபு காபு படித்தல்

11. வெறியினுல் தந்தை வைகும் வேஜோயில் ஈன்ருள்
தானும்
அறிகிலா வண்ணம் புக்கு அறைதிறந்
தரும்பொன் செப்பைக்
குறியொடும் எடுத்து வல்லே கொண்டொரு
புறத்தில் சார்ந்து
செறியுமுத் திரையை நீக்கி நோக்கினன்
சிறப்ப மன்னே.

12. விரித்ததை நோக்கும் போழ்தின் விறனபி
முகம்ம தென்னத்
திருத்திய பெயரும் வீறும் சிறப்புமெய்ப்
புதுமைப் பேறும்
கருத்துறத் தெளிய வாசித் தனன்கடு தாசின் கண்ணே
ஒருத்தரும் தெரியா வண்ணம் ஒளியொன்று
பிறந்த தன்றே.

## அன்னேயின் ஆருத் துயரம்

13. தீனெனும் பெரும்பே ராசை மயக்கத்தால்
சிந்தை நேர்ந்து
வானவர் பரவும் வண்மை முகம்மதே
முகம்ம தேயென்
ருனநுந் திருநா மத்தை அடிக்கடி உரையா நின்றேன்
ஏனிவன் புலம்புற் ருனென் றேங்கியாய் பதறி வந்தாள்.

14. ஏதெனும் அறியேன் இங்ஙன் இருந்தனன்
புலம்பு கொண்டான்
மாதவம் உடை யீர் பித்தோ வஞ்சனைத்
தொழிலோ சூழ்ந்த
தீதெவை குறிப்பு நோக்கிச் செப்புமென் றிணைய கூறி
வாதையின் பதைத்துச் சோர்ந்து கண்ணினீர்
வடித்து நின்ருள்.

### தந்தையும் வருந்தி மகனை வினுதல்

15. எனக்குமுன் னிருந்து தாதை இருகணீர்
ஒழுகப் பார்த்தின்
றுனக்குறும் வரலா றென்னோ டுரையென
உரைப்பப் பின்னர்க்
கனக்கரும் கவிகை வள்ளல் நும்பெயர்
கருத்துள் நாட்டி
மனைக்கணின் இருந்தோர்க் கெல்லாம் தெரிதர
வகுக்க லுற்றுன்.

### கபு காபு விடையிறுத்தல்

16. அரியபொன் மணிபூண் ஆடை ஆதியா மற்று முள்ள
பொருள்பல வெனினும் யார்க்கும் வழங்குதல்
பொதுமை யன்றே
ஒருதிரு மொழியால் வாழும் உலகென்றல்
அதனைத் தோன்று
திருள்பட மறைத்தல் கல்லாப் புல்லர்க்கும்
இழிவ தாமால்.

17. போதமும் தருமம் நேர்ந்த புந்தியும் புகழின் பேறும்
வேதமும் கலையும் ஞான விளக்கமும் மனுவின் நூலும்
காதலின் பயந்த மைந்தர் கருத்தினில் சிறப்பச்
செய்தல்
தாதையர் கடனே யன்றிக் கரப்பது தகைமைத் தன்றே.

— உமறுப் புலவர்.

## (7) பாரத வெண்பா

### பாடப் பகுதியின் முன் கதைச் சுருக்கம்:

துரியோதனனின் கட்டளைப்படியே பஞ்சபாண்டவர்கள் காட்டிற்குச் சென்றார்கள்; பன்னிரண்டாண்டு காட்டிலே வாழ்ந்தார்கள்; மேலும் ஓராண்டு எவரும் அறியாமல் கரந்து வாழ்ந்தார்கள்; மீண்டு வந்தார்கள். உபலாவிய நகரில் வந்து தங்கினார்கள். சூதாட்டத்திலே இழந்த நாடு நகரங்களைத் திரும்பப் பெற நினைத்தார்கள். துவாரகா புரியிலிருந்த கண்ணபிரானை அருச்சுனன் தேரிலே அழைத்து வந்தான். தரும புத்திரனின் உறைவிடத்தில் இருந்த தனி மண்டபத்தில் கண்ணபிரானும், வீமன் முதலியோரும், பாஞ்சால ராசனும், விராடராசனும், போச ராசனும், மற்றவரும் அமர்ந்திருந்தனர். அப்போது கண்ணபிரான், துரியோதனனிடம் இழந்த நாட்டைத் திரும்பப் பெறுவது குறித்துப் பஞ்சபாண்டவரின் கருத்துணரலானான்.

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம்:

'பஞ்ச பாண்டவர்களே! துரியோதனனிடம் போர் செய்து நாட்டை மீட்கப் போகின்றீரா? அன்றிப் போர் செய்ய வியலாமல் மீண்டும் காட்டுக்குப் போக விரும்புகின்றீரா?' எனக் கேட்டான் கண்ணபிரான்.

இதைக் கேட்ட தருமன் பின்வருமாறு கூறுகிறான்: 'கண்ணபிரானே! துரியோதனின் பக்கலிலே மிக வல்லமை பெற்ற வீடுமன், விதுரன், கன்னன், அசுவத்தாமா முதலியோர் இருக்கின்றனரே. இவர்களை நாம் வெல்ல முடியுமா?' என்றான். மேலும் துரியோதனனிடம் கண்ணபிரான் தூதாகச் சென்று, அவன் கவர்ந்த நாட்டை மீண்டும் தருமாறு தூண்ட வேண்டுகிறான் தருமன்.

தருமனது உரையைக் கேட்ட வீமன், 'போரிலே வெற்றி எய்துவதும், தோல்வி எய்துவதும் வேந்தர்க்குப் பொதுவாக அமைந்த பண்புகளாகும். ஆனால் ஒரு மன்னன், பிற மன்னனிடம் நாடு இரப்பது நாடக்கூடாத பண்பாகும்' என வெகுண்டுரைத்தான்.

'வீமா! தனி மரம் தோப்பாகுமா? நாம் தனித்து வாழ்வது சிறந்ததாகுமா? நம் பங்காளிகளுடன் ஒன்று கூடி வாழ்வது ஒரு நற்பேருகும்' என்று தருமன் கூறி அவ்வீமனை அமைதி படுத்த முயன்றான்.

'தருமனே! அன்று மன்னர் கூடிய அவையில் துச்சாதனன், திரௌபதியின் துகில் களைந்தபோது திரௌபதி முதலியோர் கூறிய சபதத்தையும், அப்போது இருந்த என் வன்றேள் துடிப்பையும் நீ நேரிற் கண்டாய். இங்ஙனங் கண்டும் அவ்வாறெல்லாம் பேசுகின்றாய். உன்னுடன் நானும் பிறந்தது என் தலையெழுத்தாகும்' என்று வீமன் மீண்டும் வெகுண்டுரைத்தான்.

'வீமா! பெருமைபடத் தம்பிமார் புகழ்ந்து பேசப்படுகின்றனர். இங்ஙனம் இருக்கும் போது நம் தம்பிமார் அவமானம் தரும் செயல் புரிந்தால் அதனைத் தீங்காகக் கொள்ளலாமா? துரியோதனன் முதலியோராகிய சகோதரருடன் நட்போடு வாழ விரும்பலாம்; அந்த நிலைக்கு வழி ஏற்படாவிடில் போர் தவறாமல் ஏற்படுமன்றோ?' என்றான் தருமன்.

'மழையும் தோற்றுப் போகக் கூடிய அளவில் மிகவும் அம்பு எய்யும்படியான கைகளுடைய கண்ணனே! நீ துரியோதனனிடம் தூதாகச் செல்க. எங்களுக்குரிய நாட்டைக் கேட்க. இதை மறுத்தால் ஐந்தூர் கேட்க. இவற்றையும் மறுத்தால் ஐந்து வீடு கேட்க' என்று கண்ணனிடம் தருமபுத்திரன் வேண்டிக் கொண்டான். மேலும், 'அவன் ஐந்து வீடுகளையும் கொடுக்க விரும்பவில்லையானால், போருக்கு வரும்படி கூறுக' எனவும் கேட்டுக் கொண்டான்.

தருமனின் அமைதி உரைக்கு ஒருப்படாத அருச்சுனன் 'நான் தேரிலே குதிரை பூட்டிக் கையிலே வடிக்கயிறு பிடித்துப் போருக்குச் செல்வேனானால் துரியோதனன் முதலிய அனைவரையும் எமன் வாயில் புகச் செய்வேன்' என்று வெகுண்டு சொன்னான்.

'அரசே! துரியோதனனின் அரசவையிலே திரௌபதி விரித்த கூந்தல் இன்னும் முடியப் பெறாமல் இருப்பதை மறந்தனையோ' என்றான் நகுலன்.

கண்ணன், சகாதேவனின் கருத்தைக் கேட்டபோது அவன் கூறுவன: 'மாயனே! மணிவண்ணனே! நீ ஏன் அத்தினாபுரிக்குச் செல்கின்றாய் என்ற காரணம் எனக்குத் தெரியும்' என்றான்.

'சகாதேவனே! உங்கட்காக நான் தூது செல்கின்றேன். இப்படி இருக்கும்போது என்னைப் பற்றித் தகுதியற்றதொன்றனை மொழிகின்றாய். யான் நினைத்தது யாதென்றுணர்கின்றாய்?' என்று கண்ணன் கேட்டான்.

'மாயத்தில் வல்ல கண்ணனே! துரியோதனுதியர்க்கும் எங்கட்கும் போர் விளைத்து, அவர்களையும், எங்களையும், துணையாக வந்த அரசர்களையும் மடியச் செய்யும் திருவுளங் கொண்டாய்' எனச் சகாதேவன் கண்ணனுக்குரைத்தான்.

'சகாதேவனே! நான் நினைத்ததை நீயுணரும் ஆற்றல் பெற்றிருந்தால், இந்த ஆயிரக்கால் மண்டபத்துள் நான் கரந்திருப் பதைக் கண்டு பிடிக்க' என்று கண்ணன் சொல்லித் தூண்கள் ஆயிரத்திலும் மறைந்து கொண்டான்.

'இரணியனைக் கொல்வதற்குத் தூணிலிருந்து புறப்பட்ட திருமாலே! என்முன் எழுந்தருள்க' எனச் சகாதேவன் வணங்கிப் பலவாறு திருமாலை (கண்ணனை)ப் புகழ்ந்ததும், அவன் வெளிப் பட்டு 'நீ வேண்டும் வரம் யாது' எனக் கேட்டான். 'நாங்கள் உலகாளும் வரம் தருக' எனச் சகாதேவன் கேட்க, அவனும் 'நான் துரியோதனனிடம் நாடு கேட்க அவன் தாரானுகில், போர் செய்தாவது அதை வாங்கித் தருகிறேன்' என்றுன்.

### கண்ணன், தருமனது கருத்துணர்தல்

1. போர்வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ
பார்வீரர் என்று பரசியக்கால் — ஓரீர்நீர்
உய்வீராய் முன்னடைந்த வெங்கானம் போவீரோ
ஐவீரும் சொல்லீர் அமர்ந்து.

### வெல்வது எங்ஙனமெனத் தருமன் ஐயுறல்

2. வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியில்
மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ — பெற்றம்
தனிமுரசங் காத்தருளும் தாமரையாள் கோனே
இனியவரை வெல்வாரை எண்ணு.

### தூது செல்கெனக் கண்ணனை வேண்டுதல்

3. நின்னைச் செலவிட்டால் நீர்நாடு தாரானேல்
பின்னைப் பொருகை பிழையன்றே — உன்னைக்காண்
மாதவனே மாயவனே மாலவனே மற்றெமக்கோர்
தூதுவனே யாக்கத் துணி.

### வீமன் தருமன் மீது சினத்தல்

4. ஆற்றுவரேல் தோள்வலியால் கொள்வதுவும்
ஆற்ருரேல்
தோற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே
— மேற்ருேனர்
மன்னவரை மன்னவர்கள் மண்ணிரந்தார்
இல்லைகாண்
என்னவர சாள்கை இது.

### ஒன்றி வாழ்தலே உயர்வெனத் தருமன் புகறல்

5. உற்ருரை யெல்லாம் உடன்கொண் டரசாளப்
பெற்ருல் அதின்மிக்க பேறுண்டோ — வெற்பார்
பனிமருவும் பூந்தொங்கல் பாழியந்தோள் வீமா
தனிமரமும் தோப்பாமோ தான்.

### மீண்டும் தருமன் மீது வீமன் சினத்தல்

6. சூழ்சபையில் சூளுற்ற சூளுறவும் அஞ்ஞான்றென்
பாழியந்தோள் பட்ட பரிபவமும் — வாழியாய்
நின்ஞேடே தோற்றுதற்கு நோற்றேனே பாவியேன்
என்ஞேட் டெழுத்தோ இது.

### பொறுக்கெனத் தருமன் வீமனுக்குக் கூறல்

7. தாமானங் கூறப் பெறுவரே தம்பிமார்
தீமானம் செய்ததனுல் தீங்குண்டோ — ஆமாகில்
ஆமளவு நட்புகந்தால் அன்ருகில் நின்றதே
தேமருவு தாரோய் செரு.

### கண்ணன்பால் தன்முடிவைத் தருமன் உரைத்தல்

8. கார்தோற்றுப் போகத் தொடுக்கும் கரத்தானே
பார்வேண்டின் பாம்புயர்த்தோன் தான்மறுத்தால்
— ஊர்வேண்டல்
ஆங்கவையும் தான்மறுத்தால் ஐந்துமனை
தாம்வேண்டிப்
பாங்குடனே போதாய் பரிந்து.

9. மன்னவர்கள் எல்லாரும் தாமறியப் பார்வேண்டில்
அன்னவனும் ஐந்தில் மறுத்தானேல் — பின்னைப்
பொருபடைக்கை மாலேநீ வேண்டிப் போதாய்
அரவுயர்த்தோன் தன்பால் அகன்று.

### தருமன் மீது விசயன் வெகுளல்

10. ஆரமருள் தேராழி ஆர்த்து வடிக்கயிறு
போர்மருவு மாவின்மேல் பூட்டுவையேல் —
கூரம்பால்
கூடலார் மன்னவரைக் கூற்றின் பகுவாயின்
பாடியிலே உய்க்கும் படி.

### தருமன் மீது நகுலன் வெகுளல்

11. இந்திரன்சேய் போக இனிய இரட்டையரில்
புந்தி நகுலன் புகன்றெழுந்து — வந்தித்தே
அந்நாள் முதலா அரிவைகுழல் கூடாமை
மன்னு மறந்தனையோ மற்று.

### கண்ணனின் நினைவுணர்ந்ததாகச் சகாதேவன் புகலுதல்

12. மாயா மணிவண்ணு மண்ணுலகும் விண்ணுலகும்
தாயாகி நின்றவொரு தற்பரமே — நீயேகும்
காரணங்கள் எல்லாம் அறிந்தேனே கஞ்சமலர்
வாரணங்காத் துய்த்தாய் மகிழ்ந்து.

### என் நினைவு யாதெனக் கண்ணன் வினுதல்

13. தூதாகப் போவேனைச் சொன்ன தகவின்மை
வேதா திபனே விளம்பிக்காண் — ஏதோதான்
மன்னற்கு நேரிளைய மன்னவனே என்னினைவை
இன்னதே என்றுரையாய் ஈங்கு.

### கண்ணனின் நினைவைச் சகதேவன் புகலுதல்

14. அந்தமற மன்னவர்க ளோடே அடியோமைச்
சிந்தப் புடைத்துத் திசையெங்கும் — வந்த
படைபொருத மன்னரையும் பாரதத்தால் கொல்ல
அடைவுடனே தானினைந்தாய் ஆங்கு.

### தூணின்கண் கண்ணன் மறைதல்

15. சாதேவ னேடும் தருக்கித் துடனெழுந்து
மாதேவ மண்டபத்தி லேபுகுந்து — சாதேவன்
தானறியா வண்ணம் தனித்தனித்தூண் ஆயிரத்தில்
போயறியத் தானொளித்தான் புக்கு.

### கண்ணனைச் சகதேவன் பரவுதல்

16. அன்றங் கிரணியனைக் கொல்லவே அத்தூணில்
நின்றுபுறப் பட்ட நொடியோனே — இன்றென்முன்
போதாய்நீ என்று புகழ்ந்தேத்தி நின்றானே
சாதேவ னருந் தலத்து.

17. காற்றும் கனலும் இடியும் கதிரோனும்
தோற்றும் சுடரும் சுருதியுமாய் — நாற்றிசையோ
டெல்லா உயிருமாய் நின்றாய் எனக்குறிப்பைச்
சொல்லாயென் றானே தொழுது.

### சகதேவன் வரம் வேண்டல்

18. அரவுயர்த்தோன் தன்னால் அருங்கானம் எய்தி
முரசுயர்த்தோன் பட்டதுயர் தீர — அரவணைமேல்
கண்வளர்ந்தாய் நாங்கள்மிகக் காசினியை யாள்வதற்கு
மண்ணளந்தாய் நல்காய் வரம்.

### கண்ணன் வரமளித்தல்

19. பாராளும் மன்னவன்தன் பால்யான்போய்ச் சந்துரைத்து
நேராக நாடு விடானகில் — சீராரும்
கொற்றக் குடையும் குருநாடும் கூடவருள்
வெற்றியுட னந்தருவோம் மிக்கு.

## (8) மனோன்மணீயம்

### பாடப் பகுதியின் கதைச் சுருக்கம் :

சேர நாட்டின் தலைநகரம் வஞ்சிமா நகர் ஆகும். இத்தகைய வஞ்சி நாட்டில் நன்செய் நாடு (நாஞ்சில் நாடு) உள்ளது. இந்த நாடு வளம் மிகுந்த நாடாகும். மருத நிலங்களும், நெய்தல் நிலங் களும் இங்குக் கலந்துள்ளன.

உலர்ந்த மீனை வண்டானம் என்னும் நாரை தன் அலகிலே கவர்ந்து கொண்டு ஓடுகிறது; இதைக் கண்ட நுளைச்சியர்கள் (நெய்தல் நிலப் பெண்கள்) தம் காதில் உள்ள குண்டலத்தைக் கழற்றி அதன்மீது எறிகிறார்கள்; அங்ஙனம் எறியப்பட்ட குண்ட லம், எருமை மீது நின்று தன் சிறகை உலர்த்தும் கடற்காக்கை யின் மேல்பட்டுத் துன்பம் உண்டாக்குகிறது.

தாழம்பூவின் நிழலைத் தன் குஞ்செனத் தாரா என்ற பறவை எண்ணித் தழுவிக் கொள்கின்றது. இதைக் கண்டு சிரித்த அல்லி மலரின் வாயிலே கோங்க மலர் தன் மகரந்தத்தைச் சிந்துகிறது. வெண் முத்தினை அன்னப் பறவையின் முட்டையென எண்ணிப் பருந்து அதைத் தூக்கிச் சென்று அடப்பங் கொடியின் கண் மறைக்கிறது.

இங்ஙனமே மலைப்பகுதியில் உள்ள காரா என்ற பசு, ஆமை, அன்றில் பறவை, முதலியன புனைந்துரைக்கப்படுகின்றன. அங்கு மழை வளம் சிறிதும் குறையாது. மதகு நீர் பாய்வதனால் ஏற்படும் ஒலி, 'ஓம்' என்ற பிரணவ மந்திர ஒலி போன்றிருக்கிறது.

அங்கு வயலாகிய கம்பளம் பரப்பப்பட்டிருக்கிறது. செந்தாமரை மொட்டு விளக்காகத் திகழ்கிறது. முத்தும், சோவியும் பணமாக அங்குள்ளன; நண்டு தன் காலால் அவற்றைத் தள்ளித் தள்ளி எண்ணுகின்றது.

அன்னம், கொக்கு முதலிய பறவைகளின் ஒலி, இரவுக் கடைகளின் பேரொலியைப் போன்றிருக்கிறது. இத்தகைய ஒலி, நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியில் அமைந்திருப்பதாயிற்று.

## மருதமும் நெய்தலும் மயங்கிய நாஞ்சில் நாடு

வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேயமொன் றுளததன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே
மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்.

## பறவை பற்றிய புனைந்துரை

மழலைவண் டானம் புலர்மீன் கவர
ஓம்புபு நுளைச்சியர் எறிகுழை தேன்பொழி
புன்னைநுண் தாதால் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக் கலக்கண் விளைக்கும்
கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்
தாரா தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கலர்த் தாதே
வால்வளை சூலுளைந் தீன்றவெண் முத்தம்
ஓதிமக் குடம்பையென் றுன்னுபு காலால்
பருந்தினம் கவர்ந்துசென் றடம்பிடைப் புதைக்கும்.

## விலங்கு பற்றிய புனைந்துரை

கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தல் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா தீம்பால் துளிக்கும்.
அலமுகம் தாக்குழி அலமரும் ஆமை
நுளைச்சியர் கணவரோ டிழைத்திடும் ஊடலில்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை ஒளிக்கும்.

## அன்றில் பறவை

பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட் டுறங்கா.

## உப்பேற்றிய ஓடம் பிணித்தல்

வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்
உப்பார் பஃறி ஒருநிரை பிணிப்பர்.

### நாஞ்சில் நாட்டின் மழைவளம்

இப்பெருந் தேயத் தெங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு.
கொண்மூ என்னுங் கொள்கலம் கொண்ட
அமிழ்திணை அவ்வயின் கவிழ்த்தபின் செல்புழி
வடியுநீ ரேநம் மிடிதீர் சாரல்.

### நாஞ்சில் நாட்டு நீர்வளம்

நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்
எய்யா தென்றும் எதிர்த்திடும் பிணக்கில்
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடும் ஒருகால்
மரக்கலம் வந்திடும் வயற்கரை ஒருகால்
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென ஓவிறந் தொலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்குமந் நாட்டிடை ஒருசார்

### நண்டு பணம் எண்ணுதல்

நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்
படர்தரும் பழனக் கம்பளம் பரப்பித்
தாமரைத் தூமுகை தூமமில் விளக்கா
நிலவொளி முத்தும் கவடியும் பணமா
அலவன் பலவிர லாலாய்ந் தெண்ண

### பல்வகை ஒலிகள்

துகிர்க்கால் அன்னமும் புகர்க்கால் கொக்கும்
செங்கண் போத்தும் கம்புள் கோழியும்
கனைகுரல் நாரையும் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவும் எண்ணில குழீஇச்
சிரஞ்சிறி தசைத்தும் சிறகை அடித்தும்
அந்தியங் காடியின் சந்தம் காட்டித்
தந்தம் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி என்றுமே ஆர்தரும் ஒருசார்.

—சுந்தரம்பிள்ளை.

---

# 4. பல்சுவைப் பகுதி

## புறநானூறு

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பன நாழி உடுப்பன இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

— நக்கீரர்.

## 1. புனைந்துரை

### (அ) மருதம்

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ.

— கம்பர்.

### (ஆ) பூவின் விருந்து

வண்டெனும் பாவலர் வந்தார்
மலரெனும் வள்ளலைத் தேடி
வண்டரின் வருகையைக் கண்டார்
மலர்ந்தனர் தாமரை வள்ளல்
கண்டெனும் வண்டமிழ்ப் பாடல்
களிப்புடன் பாடிடக் கேட்டார்
தீந்தமிழ்ப் பாடனன் றென்றார்
தேனினை விருந்தாகத் தந்தார்

பூந்தாது தன்னையும் பொழிந்தார்
பொன்னுடை யாயிற்றும் அங்கே
ஆழ்குளத் தாமரை வள்ளல்
அன்புக்கு நன்றியைக் கூறி
வாழ்கவென் றேவாழ்த்தும் பாடி
வண்டெனும் பாவலர் சென்றார்.

— புலவர். தணிகை உலகநாதன்.

## 2. சீட்டுக்கவி

மின்னு மாளிகை அநந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கும் ஓலைதன்
விருப்பி னல்வலிய வேயழைத்
துன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை யோதுகென ஓதினன்
ஓதி மாசமொரு மூன்று போகியொரு
நாலு மாசமள வாகவும்
இன்ன முந்தனது செவியில் ஏறவிலை
என்னில் என்னஉல கெண்ணுமோ
இராச ராசர்திறை கொள்ளும் என்கவிதை
இங்கு வந்துகுறை வாகுமோ
தன்னை என்சொலுவர் என்னை என்சொலுவர்
தான்தமிழ்க் குமணன் அல்லவோ
தன்பு கழ்க்குமிது நீதியோ கடிது
தானின் னேவருதல் வேணுமே.

— அந்தக்கவி வீரராகவ முதலியார்.

## 3. சிலேடை

### தனிப்பாடற்றிரட்டு

அம்புலியூர் தன்னை அடைமின் பணிமின்கள்
அம்புலியூர் விண்ணுலகை ஆள்வீர்கள் — அம்போரு
கத்தினய னத்திலகு கைத்தலனி வர்க்கரிய
சத்தினய னத்தியிடத் தான்.

## 4. சிறு பிரபந்தம்

### (அ) மீனாட்சியம்மை குறம்

1. திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்க ணம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே.

2. கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்.
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே.

— குமர குருபரர்.

### (ஆ) சிவஞான பாலய தேசிகர்

### பிள்ளைத்தமிழ்

#### முத்தப் பருவம்

எல்லாத் தேவர் தமதுயிரும்
இமைப்போ தினிலுண் கரியகடு
வீன்ற வோதைக் கடல்முத்தம்
எனைத்தும் வேண்டேம் எழில்மதவேள்

வில்லாய்க் கொலைசெய் தொழில்படைத்த
வேழக் கரும்பின் வெண்முத்தம்
விரும்பேம் மலர்ப்பூம் பொழிற்றிருநெல்
வேலிப் பதியின் வேய்முத்த
மல்லால் கருங்காட் டுயிரனைத்தும்
அலமந் தழியக் கதழெரியை
யாக்கு நெடிய வேய்முத்தம்
அணுகேம் சிறிதும் அருளின்மொழி
செல்லாப் பவளத் திருவாயால்
செல்வா முத்தம் தருகவே
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவா முத்தம் தருகவே.

— சிவப்பிரகாச சுவாமிகள்.

## 5. வழிபாட்டுப் பாடல்கள்

### (அ) திருமால்

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

— திருமங்கையாழ்வார்.

### (ஆ) முகமது நபி

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்

பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே.

— உமறுப்புலவர்.

## (இ) ஏசு நாதர்

அன்பேநீ யாதலினால் ஆருயிர்கள் பொருட்டுன்
அழகுடலை வதைக்கவிட்டாய் அருளுயிரை நீத்தாய்
இந்நிலத்தில் அச்செயலை எக்குரவர் ஏற்றார்
இளங்கன்னி வயிற்றுதித்த இறைமைமணி விளக்கே
அன்பினிலே குறையிருந்தால் அருஞ்செயலை ஆற்றல்
ஆகாதே ஆகாதே அன்புடைய அறவோர்
என்பும்பிறர்க் குரியரென எழுந்தமொழிக் குகந்த
இலக்கியமாய் இலங்கிநிற்கும் ஏசுகுரு நாதா.

— திரு. வி. க.

## (ஈ) காந்தியடிகள்

அன்பருள் பொறைதாம் போன்ற அருமியற்
காந்தி போற்றி
புன்புலை அயலார் பொல்லா அடிமையை
அறுத்தாய் போற்றி
வன்கணர் புரியும் இன்னா இன்பென இசைத்தாய்
போற்றி
நன்றியில் கயவ னாலே நாளுலந் தொளித்தாய் போற்றி

— வித்துவான். பொ. இராமலிங்கம்

# குறிப்புரை

## 1. வாழ்த்து

### 1. இறை வாழ்த்து

#### திருவருட்பா

**திருவருட்பா :** திரு + அருள் + பா. இறைவன் திருவருளால் பாடப் பெற்ற பாடல்கள் என்பது கருத்தாகும். அந்நூலின் **ஆசிரியர் :** இராமலிங்க அடிகள்; இவருடைய **தந்தை :** இராமையாப் பிள்ளை; **தாய் :** சின்னம்மையார்; **காலம் :** கி. பி. 1823–1873; **சமயம் :** சமரச சன்மார்க்கம் **பிறப்பிடம் :** சிதம்பரத்தை அடுத்த மருதூர்; **பிறநூல்கள் :** மனுமுறை கண்ட வாசகம் முதலியன.

#### அருஞ்சொற்பொருள்

எத்துணையும்-சிறிதளவேனும்; சித்துருவாய்-அறிவு வடிவமாய் [ஞான வடிவமாய்]; நடம்-நடனம்; வித்தகர்-ஞான வடிவானவர்; ஆல், ஓ-அசைச் சொற்கள்; யாவர் + அவர் = யாவரவர்; சித்து + உருவாய் = சித்துருவாய்; அடிக்கு + ஏவல் = அடிக்கேவல்.

### 2. மொழி வாழ்த்து

**மொழி வாழ்த்து :** இச்செய்யுளை **இயற்றியவர் :** பாரதியார்; இவருடைய **தந்தை :** சின்னசாமி ஐயர்; **தாயார் :** இலக்குமி அம்மையார்; **பிறப்பிடம் :** எட்டையபுரம்; **குலம் :** பிராமணர்; **காலம் :** கி. பி. 1882—1921; **பிற நூற்கள் :** பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலியன.

பள்ளத்தில் – அறியாமையாகிய பள்ளத்தில்; குருடர்–ஞானக்கண் இல்லாதவர்; விழி–கல்வியாகிய கண்; பதவி–உயர் நிலை; அமரர்–இறவாத தன்மையுடையவர்; தெள்ளுற்ற–தெளிவான தன்மையுள்ள; விழிபெற்று – இரண்டாம் வேற்றுமைத் தொகை; (சுவை) கண்டார்-பலர்பால் வினையாலணையும் பெயர்; (சிறப்புக்) கண்டார்–பலர்பால் வினைமுற்று.

## 3. நாட்டு வாழ்த்து

நாட்டு வாழ்த்து : இச்செய்யுளை இயற்றியவர் தமிழ் முனிவர் திரு. வி. க. இவருடைய தந்தை : விருத்தாசல முதலியார் ; தாயார் : சின்னம்மையார் ; பிறப்பிடம் : துள்ளம் ; குலம் : வேளாளர் ; காலம் : 1883—1954 ; பிற நூற்கள் : முருகன் அல்லது அழகு, இளமை விருந்து முதலியன.

இச்செய்யுள், உரிமை வேட்டல் என்னும் நூலில் உள்ளதாகும்.

மழை—இங்கு மேகத்தைக் குறிக்கிறது ; புடை-பக்கம் ; புசித்து—நுகர்ந்து ; பூவை-நாகணவாய்ப் பறவை (வானம்பாடி என்னும் பறவை); மழலை-இனிய குரல் ; படை—அடுக்கடுக்காக அமைந்த ; மூங்கில்-இங்குப் புல்லாங் குழலைக் குறிக்கிறது. வெள்வளை—வெண்மையான சங்கு ; பாண் மிழற்றும்—இசை பாடும் படியான; பரவை—கடல்; நாகு—இளமை; வண்டு + இசைக்கும் = வண்டிசைக்கும் ; வெள்வளை - பண்புத் தொகை ; நாகு + எருமை = நாகெருமை.

### வினாக்கள்

1. எத்தகையவரது உள்ளத்தில் இறைவன் திருநடனம் புரிகின்றார் ?
2. இராமலிங்க அடிகளின் உள்ளம் விழைவது யாது ?
3. வாக்கினில் ஒளி பெறுதல், குருடர் விழி பெறுதல், இறவாத நிலை பெறுதல் ஆகியவற்றிற்குப் பாரதியார் கூறும் வழிகள் யாவை ?
4. நம் நாட்டின் இயற்கையின்பத்தைப் பற்றி, திரு. வி. க. அவர்கள் கூறுவன யாவை ?

---

## 2. அறவுரை

### (1) திருக்குறள்

திருக்குறள் : திரு + குறள் = திருக்குறள்—சிறந்த குறள் வெண்பாக்களாலான நூல் என்பது பொருள். அது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பால் அதில் உண்டு. 133 அதிகாரங்கள் (1330 குறள்கள்) அதில் உள்ளன. எந்நாட்டார்க்கும் எச்சமயத்

தார்க்கும் எக்காலத்தார்க்கும் ஏற்ற ஒரு பொது மறையாக அஃது இலங்குகிறது. பல மொழிகளில் மொழி பெயர்த்துப் பாராட்டத் தக்க பெருமையையுடையது. திருக்குறளின் **ஆசிரியர்** : திருவள்ளுவர் ; **காலம்** : கி. பி. இரண்டாம் நூற்றுண்டு.

## அருஞ்சொற்பொருள்

1. சேராதார்–இடைவிடாமல் நினைக்காதவர் ; இறைவன் அடி–இறைவனது திருவடியாகிய புணை (தெப்பம்); ஏகதேச உருவக அணி அமைந்துளது.

2. கெடுப்பதூஉம்–பெய்யாமல் நின்று உலக மக்களை அழிப்பதும் ; சார்வாய் எடுப்பதூஉம் – அவர்களுக்குத் துணையாகப் பெய்து நின்று உயர்த்துவதும் ; கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் – இன்னிசையளபெடைகள்.

3. பிற–சொல்லும் வேடமுமாகிய மற்றவை. ஆகுலம் நீர–ஆரவாரத் தன்மையுடையன (ஆடம்பரத் தன்மை உடையன).

4. அறன்–தன்னிடமுள்ளதைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துப் பின் உண்பதாகிய அறம் ; இல்லறத்துக்குரிய பண்பு, அன்புடைமையாகும் ; பயன், அறமுடைமையாகும் ; நிரல்நிறையணி அமைந்துள்ளது ; அறன்–இறுதிப் போலி.

5. தன் காத்து–கற்பொழுக்கத்தால் தன்னைப் பாதுகாத்து ; தகைசான்ற–இருவரிடத்தும் நன்மையமைந்த ; சொல்–புகழ் ; சோர்விலாள்–நற்குண நற்செயல்களில் உறுதிப் பாடுடையவள் ; தற்காத்து–இரண்டாம் வேற்றுமைத் தொகை.

6. என்பு இலதனை – எலும்பில்லாத புழு போன்றவற்றின் உடம்பை ; அன்பு இலதனை–அன்பு இல்லாத உயிரை ; அறம்–அறக்கடவுள் ; என்பு–திரிதல் விகாரம்.

7. செல்விருந்து–தன்கண் வந்து செல்லப் போகும் விருந்தினர் ; வருவிருந்து–இனி வரக்கடவவிருந்தினர் ; பார்த்திருப்பான்–ஆண்பால் வினையாலணையும் பெயர்.

8. துன்புறூஉம் – துன்பத்தை மிகுதியாக்கும்; துவ்வாமை–உணவு உண்ணுமையாகிய வறுமை ; துன்புறூஉம், இன்புறூஉம்–இன்னிசை அளபெடைகள்.

9. தினைத்துணை–தினை அளவு ; பனைத்துணை–பனை அளவு (பனம்பழம் அளவு); தினை பனை என்பவைகள் பழங்காலத்தில் சிறுமைக்கும், பெருமைக்கும் காட்டப்பட்ட உருவ அளவைப் பெயர்களாகும் ; பயன்தெரிவார்–தமக்கு வரும் உபகாரத்தின் பயனை ஆராயும் பண்புடையவர்கள் ; தெரிவார்–பலர்பால் வினை யாலணையும் பெயர்.

10. கொன்று அன்ன–(தமக்கு முன்னே ஒரு நன்மை செய் தவர் பின்னர்) கொன்றமை போன்ற ; இன்னு–துன்பம் ; நன்று ஒன்று உள்ளக் கெடும்–நன்மையொன்றனை நினைத்த அளவிலேயே மறைந்து விடும்.

11. ஒருமையுள்–ஒரு பிறவியின் கண் ; ஐந்து–ஐம்பொறிகள் ; ஏமாப்பு–பாதுகாப்பு ; ஐந்து–எண்ணலளவையாகு பெயர்.

12. யாகாவாராயினும்–தம்மால் காக்கப்படக் கூடிய எல்லா வற்றையும் காக்க முடியாமல் போனுராயினும் ; சோகாப்பர்– துன்பப்படுவர்.

13. உரவோர்–மன வலிமையுடையவர் ; ஒல்கார்–குறைய மாட்டார் ; இழுக்கத்தின் – ஒழுக்கத்திலிருந்து தவறுவதால் ; ஏதம் படுபாக்கு–குற்றம் உண்டாவதை.

14. இன்மையுள் இன்மை–வறுமையிலே மிக்க வறுமையாக அமைவது ; விருந்து ஒரால் – தம்மிடம் வந்த விருந்தினரை உபசரிக்காமல் விலக்குவது ; மடவார்ப் பொறை–அறிவற்றவர் செய்த தீங்குகளைப் பொறுத்துக் கொள்வது. எடுத்துக் காட்டு வமையணி அமைந்துளது.

15. ஒரு பாவி–ஒப்பற்ற பாவி ; திருச்செற்று–இப்பிறப்பில் செல்வத்தை அழித்து ; தீயுழி–நரகின்கண்.

16. கண் நின்று–ஒருவனெதிரில் நின்று ; கண்ணறச் சொல் லினும்–கண்ணேட்டமில்லாமல் (தாட்சணியம் இல்லாமல்) பேசி னுலும் ; முன் இன்று–அவன் எதிரில் இல்லாமல் ; பின் நோக் காச் சொல்–எதிர் காலத்தில் தோன்றும் குற்றம் நோக்காத சொல்லை. **நோக்கா**ச் சொல்–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ; சொல்லற்க–எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

17. பாராட்டுவானை-பல முறையும் பேசுபவனை ; பதடி-நெற்பதர் ; மகன் **எனல்**-எதிர்மறை வியங்கோள் வினைமுற்று ; பதடி **எனல்**-உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

18. ஒப்புரவினல் கேடு வரும் எனின்-ஒருவன், பிறருக்கு உபகாரம் செய்வதனல் செல்வ அழிவு ஏற்படும் என்பவர் உளராயின் ; அஃது-அத்தகைய அழிவு ; விற்றுக்கோள் தக்கது உடைத்து-தன்னை விற்ருயினும் பெற்றுக் கொள்ளும் தகுதியை உடைத்து ; கேடு-முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

19. வன்கணவர்-அருள்தன்மை இல்லாதவர்.

20. அதூஉம் இனிது-அங்ஙனம் இறப்பதும் இன்பம் தரும் ; இயையாக் கடை-முடியாதவிடத்து.

21. தம்நோவார்-புகழ் பெருத காரணத்தால் பிறர் இகழ்ந்த சமயத்தில், அதனைப் பெருததால் அவர்கள் இகழ்கின்ருர்கள் என்று தம்மையே நொந்து கொள்ளாதவராகி ; எவன்-என்ன கருதி.

22. உள்ளத்தால் பொய்யாது-ஒருவன் தன் உள்ளம் நினைத்த வண்ணம் பொய் கூருமல் இருப்பானுயின்.

23. மெய்யாக் கண்டவற்றுள் - மெய்ந்நூற்களாகக் கண்ட நூற்களுள் ; எனைத்தொன்றும்-யாதொரு தன்மையானும் ; நல்ல பிற-சிறந்த பிற அறங்கள்.

24. சிறப்பு ஈனும்-யோகமாகிய சிறப்பினைக் கொடுக்கும்படியான ; செல்வம் பெறினும்-அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்குத் துன்பம் செய்து பெறுவதாக இருந்தாலும் ; பெறினும் **(உம்)** - உயர்வு சிறப்பும்மை.

25. சாக்காடு-இறப்பு ; சாக்காடு-தொழிற்பெயர்.

26. இறை என்று வைக்கப்படும்-மக்களினத்தைச் சார்ந்தவனுயினும் கடவுள் என்று வேறு பிரித்துச் சொல்லப்படுவான்.

27. தாம் இன்புறுவது-தாம் இன்பம் அடைவதற்குக் காரணமான கல்வி ; காமுறுவர்-இன்புறுவர்.

28. நனி நல்லர்–மிகவும் நல்லவராவர். நனி நல்லர்–உரிச்சொற்றொடர். கல்லாதவரும் (உம்) – இழிவு சிறப்பும்மை.

29. செவிக்குணவு–செவியுணவாகிய கேள்வியறிவு ; வயிற்றுக்கும் (உம்) – இழிவு சிறப்பும்மை.

30. கேட்க–உறுதிப் பொருளைக் கற்றறிந்தார் கூறக் கேட்பானாக ; ஒற்கத்தின்–தளர்ச்சி வந்த சமயத்தில் ; ஊற்றும் துணை–பற்றுக் கோடாம் துணை ; கேட்க–வியங்கோள் வினைமுற்று.

31. அற்றம் – அழிவு ; செறுவார்க்கும் – பகைவர்க்கும் ; அழிக்கலாகா உள் அரண் எனச் சொற்களை மாற்றுக ; உள் அரண்–உட்கோட்டை.

32. தூவா வரும்–பற்றுக் கோடாக (உதவியாக) அமையும் ; இனந்தூய்மை–சேரும் இனத்தாரது தூய்மை.

33. தெரிந்து செயல்வகை–அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் தன்மை.

34. பீலி–மயில் தோகை; சாகாடு–வண்டி; அச்சு + இறும் = அச்சிறும்–அச்சு முறியும் ; மயில் தோகையினது நொய்ம்மைத் தன்மையை நோக்கி அளவற்ற தன்மையில் அதை வண்டியில் ஏற்றினல் வண்டியின் வலிய அச்சும் முறியும் என்ற உவமையைக் கொண்டு, படைவன்மை குறைந்த பல மன்னர் ஒன்று கூடுவாராயின், படைவன்மை மிக்க ஒரு பேரரசனையும் எளிதில் வெல்லக் கூடும் என்ற உபமேயக் கருத்துப் பெற வைக்கப்படுகிறது ; இது பிறிது மொழிதலணியாகும்.

35. ஞாலம்–உலகம் ; இடத்தாற் செயின்–போர் செய்வதற்குத் தக்க இடம் நோக்கிச் செய்வானுயின்.

36. வல் கால்–வலிய சக்கரத்தையுடைய ; நாவாய்–கப்பல் ; நெடுந்தேர் கடல் ஓடா, நாவாயும் நிலத்து ஓடா எனச் சொற்களை மாற்றுக ; கடல் ஓடா–ஏழாம் வேற்றுமைத் தொகை ; ஓடா–பலவின்பால் எதிர்மறை வினைமுற்று.

37. தேரான் தெளிவும்–அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும் ; தீரா இடும்பை–நீங்காத துன்பம் ; தீரா–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

38. வான் நோக்கி - வானத்தினின்றும் பெய்கின்ற மழையை எதிர்நோக்கி ; கோல் நோக்கி – அரசனது செங்கோல் ஆட்சியை எதிர்நோக்கி.

39. வேலொடு நின்ருன்–வழிப்பறி செய்யுமிடத்தில் தனியே வேலொடு நின்ற கள்வன் ; இடு என்றது–வழியில் நடந்து செல்பவரைப் பார்த்து நின் கைப்பொருள் தா என்பது; இரவு–குடிகளிடம் பொருள் வேண்டுதல்.

40. வெருவந்த செய்யாமை – அஞ்சத் தக்க செயல் செய்யாமை ; கடிது ஓச்சி – (குற்றம் செய்வாரை ஒறுக்கும் போது) அளவிறப்பச் செய்வார்போல் தொடங்கி ; மெல்ல எறிக–அதனைச் செய்யும் போது அளவிருமல் செய்க ; மெல்ல–குறிப்பு வினையெச்சம், எறிக–வியங்கோள் வினை முற்று ; வேண்டுபவர்–பலர்பால் வினையாலணையும் பெயர்.

41. ஆக்கம்–கைப்பொருள் ; அல்லாவார்–கலங்க மாட்டார் ; ஒருவந்தம்–நிலைபெற்ற.

42. இடும்பை–துன்பம்.

43. பழிமலைந்து – தீய வினைகளைச் செய்வதனுல் பழியைத் தம்மேற்கொண்டு , கழி நல்குரவு–மிக்க வறுமை.

44. புணர்ச்சி – ஒருவனேடு ஒருவன் நட்பாவதற்கு ; உணர்ச்சி–இருவர்க்கும் ஒத்த உணர்ச்சியே.

45. வாள்போல் பகைவர்–வாளைப் போல வெட்டி விடுவோம் என்று எதிர்த்து நிற்கும் பகைவரை; கேள்போல் பகைவர்–உறவினரைப் போல் மறைந்து நிற்கும் பகைவர் ; அஞ்சுக–வியங்கோள் வினைமுற்று ; அஞ்சற்க – எதிர்மறை வியங்கோள் வினைமுற்று ; தொடர்பு–தொழிற் பெயர் ;

46. துஞ்சினுர் – உறங்கினவர் ; கள்ளுண்பார் நஞ்சுண்பாரின் வேறல்லர் எனச் சொற்களை மாற்றுக. எதிர் நிரல் நிறையணி அமைந்துளது.

47. அற்றம்–பிறரது அவமானத்தை.

48. அரம் போலும் கூர்மையர்–அரம் போன்ற கூர்மையான அறிவுடையவர் ; இல்லாதவர்–பலர்பால் எதிர் மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

50. உழவினர் கைம்மடங்கின் – உழவர்கள் தம் உழவுத் தொழிலைச் செய்யாராயின் ; விழைவதூஉம் – விரும்பத் தக்க உணவையும்.

## வினுக்கள்

1. மழையின் சிறப்பைக் கூறுக.
2. அறத்தின் இலக்கணம் யாது ?
3. இல்லானுக்குரிய இலக்கணம் யாது ?
4. எத்தகையவன் வானேர்க்கு விருந்தினனுவான் ?
5. இன்சொல்லால் ஏற்படும் நன்மையைக் கூறுக.
6. செய்ந்நன்றி மறவாதவரின் இயல்புகள் யாவை ?
7. அழுக்காறு கொள்வதால் ஏற்படும் தீங்கினைக் கூறுக.
8. ஒப்புரவறிதல் பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?
9. ஈகை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?
10. புகழ்பட.........எவன்?–இக்குறளுக்குத் தெளிவான பொருள் கூறுக.
11. வாய்மை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?
12. நிலையாமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?
13. இனந்தூய்மையால் வரும் நன்மைகள் யாவை ?
14. தீரா இடும்பை தருவன யாவை ?
15. ஊக்கமுடைமையால், இடும்பைக்கு இடும்பை படாமையால் ஏற்படும் நன்மைகள் யாவை ?
16. கள்ளுண்டலின் இழிவைக் கூறுக.
17. பெரியவர்க்கும் கீழ்மக்கட்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறுக.
18. உழவுத் தொழிலின் சிறப்பை விளக்குக.
19. கீழ்க் காணும் உவமைகளை உபமேயங்களோடு பொருத்தி விளக்குக.

(அ) என்பிலதனை வெயில் போல

(ஆ) ஒருமையுள் ஆமை போல்

(இ) வேலொடு நின்ருன் இடுவென் றதுபோலும்

20. முறை நிரல் நிறையணி, எதிர் நிரல் நிறையணி, ஏகதேச உருவக அணி, பிறிது மொழிதல் அணி, எடுத்துக்காட்டுவமையணி—இவற்றிற்குச் சான்று காட்டி விளக்குக.

## (2) இன்னிலை

இன்னிலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இனிய ஒழுக்க நிலை பற்றிக் கூறுவதால் அதற்கு அப்பெயர் அமைந்தது. அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் என்ற நான்கு வகைப் பால்கள் அந்நூலில் உண்டு. நாற்பத்தைந்து பாடல்கள் அதில் இருக்கின்றன. பொய்கையார் என்னும் புலவரால் அஃது இயற்றப்பட்டது. இப்புலவரைப் பற்றிய வரலாறு அறியக் கூடவில்லை.

### அருஞ்சொற்பொருள்

**அறப்பால் :** சொல்லாட்டும்-சொல் பேசுதலும்; துணிவறிவும்—பெரியோர் துணிந்து சொன்ன கருத்தறிதலும்; துணை—அளவு; பூயல் படுக்கும் – பொருந்துமாறு சேர்க்கும்படியான; திருவத்தனர்—செல்வமுடையவர்; பறிப்பர்—நீக்குவர்; மடி—வயிறு (பிறவி); கலங்காத்துணை-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; தூய (சொல்) – குறிப்புப் பெயரெச்சம்.

**பொருட்பால் :** அருது உடைமை என மாற்றுக. அருது—இடை விடாமல்; உடைமை—செல்வம்; சென்றக்கால் – அயலூருக்குச் சென்ற பொழுது; கோல் இன்று – ஊன்றுகோல் இல்லாமல். உடைமையாகிய கோல் என்க. வேறுபடும்—சுற்றத்தாரும் அயலார் போல வேறுபட்டு நடப்பர்; ஈட்டல்—தொழிற்பெயர்; உறுதுணை—உரிச்சொற்ருெடர்; ஊரெல்லாம் – ஒருமை பன்மை மயக்கம்.

வீட்டுப்பால்: நயன் உணர்தல் – நல்வழிகளை அறிதல்; பொறை – பொறுமை; ஒல்லும் வாய் – இயலும் வகையில்; இன்னார்க்கு–பகைவர்க்கும்; இனிய–நன்மை தரும் செயல்கள்; நெறி–நல்லொழுக்க நெறி; நாப்பண்–நடு இடம் (பேரின்ப வீடு); நல்லினம் – பண்புத் தொகை; பொறை – தொழிற் பெயர்; பொறு + ஐ = பொறை; பொறு–பகுதி, ஐ–தொழிற் பெயர் விகுதி.

### வினாக்கள்

1. பிறவி எடுக்காமல் இறப்பதற்குரிய வழிகள் யாவை?
2. பொருட் செல்வத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. ஒருவரைப் பேரின்ப வீட்டிற்குச் செலுத்தும் நெறிகள் யாவை?
4. இன்னிலையைப் பற்றிக் குறிப்பெழுதுக.

## 3. பழமொழி

பழமொழி: இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்; முன்றுறையரையனாரால் அஃது இயற்றப்பட்டது. ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழி கையாளப்படுவதனால் அஃது அப்பெயர் பெற்றது.

### அருஞ்சொற்பொருள்

1. முல்லைக்குத் தேர் கொடுத்தவன் பாரி; மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் பேகன்; தொல்லை–பழங்காலத்தில்; அறிமடம்–அறிந்தும் அறியாமைக்குரிய செயல் புரிதல்; நெறி மடல்......... சேர்ப்ப – ஆடூஉ முன்னிலை; அறிதும் – தன்மைப் பன்மை வினைமுற்று.

2. வேளாண்மை–உபகாரம்; வெம் சமம்–கொடிய போரில்; தாளாண்மை – முயற்சியுடைமை; தாழ்க்கும் – குறைக்கும்படியான; மடி–சோம்பல்; வருந்தாதார்–வருந்தி உழைக்காதவர்; வாழ்க்கை – இல்லற வாழ்க்கை. வெம்மை + சமம் = வெஞ்சமம் – பண்புத் தொகை.

3. செல்வத்து உயர்ந்த பெருமை – செல்வத்தால் உயர்ந்த ஒரு சிறப்பை; பெருமை வைத்தல் எனக் கூட்டுக. நடக்கை – ஒழுக்கம்; ஒள்ளியன்–தூயன்.

4. தமர்–தம் உறவினர்; என்னபடினும்–அவரால் எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும்; செய்வது இடர் என்னை – செய்வதனால் என்ன இடர் ஏற்படும்? துன்னூசி–வினைத்தொகை; இன்னொவி வெற்ப–ஆடூஉ முன்னிலை.

5. மிகு புனல் – மிக்கநீர்; ஒழிதல் – நீங்குதல்; இன நலம்–இனத்தின் நன்மை; மன நலம் – மனத்தின் நன்மை; கீழ் – கீழ் மக்கள்; இப்பாட்டு உவமையணி.

6. விலங்கேயும்–விலங்காயினும்; உடன் உறைதல் மேவும்–ஒன்றாக வசித்தலைப் பொருந்திய; கலந்தாரை–கூடிய நட்பினரை; ஒல்லா–மாட்டா. தாய் இழியும்–பாய்ந்து இழியா நின்ற; இன்னாதே–துன்பந் தருவதேயாம்; பேயோடானும் பிரிவு–பேயோடாயினும் அதனின்று பிரிவது; உவமையணி.

7. ஈரம் பட்டஃதேபோல்–ஈரம் உண்டானதினால் வெள்ளம் வரும் என்று அறிவது போல; கள்ளம் உடையாரை – மனத்தில் வஞ்சனை உடையவர்களை; கண்டே – முகத்தைக் கண்டே; உள்ளம் படர்ந்ததே–மனத்தில் நினைத்ததையே.

8. மடியை – சோம்பல் உள்ளவனை; வியங்கொள்ளின் – ஒரு காரியத்தில் ஏவினால்; முடியாதவாறே – முடியாத வழியே; முயலும் – முயலுவன்; பாரித்தவனை – உடல் பருத்தவனை; மூரி உழுதுவிடல் – கிழவெருது கொண்டு உழுவதனோடு ஒக்கும்; உவமையணி.

9. உடையதனை – தான் உடையபொருளை; அதுவே – அப்பொருளே; அடையின் – சென்றடைந்தால்; புதற்கு – புதருக்கு; உவமையணி.

## வினாக்கள்

1. அறிமடமும் சான்றோர்க்கணியாவ தெங்ஙனம்?
2. எந்தெந்தப் பண்புடையாரது இல்லற வாழ்க்கை நன்கமையாது?
3. குரங்கின் கைக்கொள்ளி கொடுத்துவிடல் - இப்பழமொழியால் விளக்கப்படும் நீதி யாது?

4. துன்னூசி......இழை - இப்பழமொழி கொண்டு நீவிர் அறிந்து கொள்வன யாவை ?

5. கீழ்மக்கள் இயற்கைக் குணம் மாறுது - இதற்குக் கூறப்படும் உவமை என்ன ?

6. பேயோடானும் பிரிவு இன்னுது - இதனை விளக்கி இதனுல் கூறப்படும் அறிவுரையையும் எடுத்துக் கூறுக.

7. கள்ளம் உடையாரைக் கண்டே அறியலாம் - எது போல ?

8. மூரி உழுதுவிடல் - இப்பழமொழியை விளக்கி இதனுல் உணர்த்தப்படும் நீதியையும் கூறுக.

9. புலிக்குப் புதலும், புதற்குப் புலியும் வலியாகும் - இதனை விளக்குக.

---

## 3. தொடர்நிலைச் செய்யுள்

### (1) சிலப்பதிகாரம்

### அடைக்கலக் காதை

சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை மிகவும் விரித்துக் கூறும் நூல் என்பது பொருள். அஃது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சேரன் செங்குட்டுவனின் இளவலாகிய இளங்கோவடிகளால் இயற்றப் பட்டது. இயல், இசை, நாடகமாகிய முத்தமிழ் அதில் அமைந் துள்ளது. புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் ஆகிய மூன்று காண்டங்கள் அதில் அமைந்துள்ளன. ஒவ்வொரு காண்டமும் பல காதை (கதை) யாகப் பிரியும். நம் பாடப் பகுதி, மதுரைக் காண்டத்திலுள்ளது.

இளங்கோவடிகள் சைன சமயத்தைச் சார்ந்தவர். இளமை யிலேயே துறவு பூண்டவர். அவருடைய **தந்தை** : இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ; **தாய்** : நற்சோணை ; **சமகாலப் புலவர்** : மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் ; **காலம்** : கி. பி. இரண்டாம் நூற்றுண்டு.

மாதவியினிடம் பிணக்குற்றுப் பிரிந்த கோவலன் தன் மனைவியாகிய கண்ணகியினிடம் வந்து சேர்ந்தான். கண்ணகி கொடுத்த ஒரு சிலம்பை விற்றுச் செல்வம் பெற்று அதனை முதற் பணமாக வைத்து வாணிபம் செய்ய நினைத்தான் கோவலன். ஆதலால் கோவலனும் கண்ணகியும் சிலம்பை விற்க மதுரை நோக்கிப் புறப்பட்டனர். சைனத் துறவியாகிய கவுந்தியடிகள் அவர்களுக்கு வழித்துணையானர்.

## அருஞ்சொற்பொருள்

### (வரி: 1—10)

அறம்புரி – அறத்தை விரும்பும்படியான ; புறஞ்சிறை – மதுரைக்குப் புறத்தே உள்ள தவப்பள்ளி ; பூங்கண் – உவமைத் தொகை (பூப்போலும் கண்) ; இயக்கி – ஆரியாங்கனை என்ற தெய்வம் ; பால்மடை – பாற்சோறு ; பெயர்வோள் – திரும்புபவள் – பெண்பால் வினையாலணையும் பெயர் ; ஆயர்–இடையர் ; முதுமை + மகள் = முதுமகள் - பண்புத் தொகை ; ஆப்பயன் – பசுவினல் கிடைக்கும் பால், மோர் முதலியன ; கொடும்பாடு – கொடுமைத் தன்மை ; அளியள் - இரக்க உள்ளம் உடையவள் ; ஏதம் - குற்றம்.

### (வரி: 11—16)

தாதை - தந்தை (மாசாத்துவான்) ; பெறுநர் - பெறுபவர் - பலர்பால் வினையாலணையும் பெயர் ; தட + கண்ணி = தடங்கண்ணி - பெரிய கண்களையுடையவள் - உரிச்சொற்றொடர் ; கடிமனை - காவலுள்ள வீடு - உரிச்சொற்றொடர் ; மடந்தைக்கு - மடந்தையாகிய உன்னிடம் (மாதரியினிடம்).

### (வரி: 17—22)

செம்மை + கயல் = செங்கயல் - பண்புத் தொகை ; கயல் - கெண்டை மீன் ; அஞ்சனம் - மை ; தூமடி - தூய்மையான ஆடை ; உடீஇ - உடுத்து - சொல்லிசை அளபெடை ; ஆயம் - விளையாட்டு மகளிர் கூட்டம் ; ஆய் இழை - ஆராய்ந்தெடுக்கப் பட்ட அணிகலன்களைப் பூண்ட கண்ணகி - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ; தாங்கு - ஆதரிப்பாயாக.

**(வரி : 23—30)**

வண்ணச் சீறடி - அழகிய சிறிய கால்கள் ; சிறுமை + அடி = சீறடி - பண்புத் தொகை ; நடுங்கு துயர் - நடுங்குவதற்குக் காரணமான துயரம் ; நா + புலர = நாப்புலர - நா உலர ; தன் துயர் காணு - தன் துயரத்தைப் பொருட் படுத்தாத ; தகைசால் - பெருமை நிறைந்த ; பூங்கொடி - அன்மொழித் தொகை ; கடம் - கடமை ; பொற்பு உடை - அழகுடைய ; கண்டிலம் - தன்மைப் பன்மை எதிர்மறை வினைமுற்று ; ஆல் - அசைச் சொல்.

**(வரி : 31—36)**

வானம் பொய்யாது - மழை பெய்யத் தவருது ; நீள் + நிலம் = நீணிலம் ; கொற்றம் - அரசாட்சி.

**(வரி : 37—48)**

தோடு + ஆர் = தோட்டார் - இதழ்கள் நிறைந்த மலர் ; தோடு - சினையாகுபெயர் ; உவந்தனள் (ஏத்தி) - முற்றெச்சம் ; முதுக்குறை - பேரறிவுடைய ; கனைகுரல் - வினைத்தொகை ; மறி - ஆட்டுக்குட்டி ; நவியம் - கோடரி ; உறிக்காவாளர் - உறிக் காவடியர் ; செறிவளை - வினைத்தொகை ; கோல் - விட்டெறியும் கோல் ; குந்தம் - ஈட்டி ; ஞாயில் - ஒரு மதிலுறுப்பு ; நுடங்கும் - அசையும்.

**வினுக்கள்**

1. மாதரியின் உயர் பண்புகள் யாவை ?
2. அரும்பொருள் பெறுநரின் - இவ்வுவமையைப் பொருளொடு (உபமேயத்தோடு) பொருத்தி விளக்குக.
3. கண்ணகியை எப்படி ஓம்பும்படி (உபசரிக்கும்படி) கவுந்தியடிகள் மாதரிக்குக் கூறினர் ?
4. கண்ணகியின் உயர் பண்புகள் யாவை ?
5. பத்தினிப் பெண்டிரின் சிறப்பினைக் கூறுக.
6. தவத்தோர்....கேளாய் - இத்தொடர்மொழி வந்துள்ள இடஞ் சுட்டி விளக்குக.
7. மாலை நேர வருணனையும், வாயிலின் வருணனையும் புலப் படுத்துக.

8. **இலக்கணக் குறிப்பெழுதுக :**

மூதூர், ஆகாத்து, கடிமனை, நன்னீர், செங்கயல், உடீஇ, சீறடி, காணு, நல்லுரை, வெண்பல், செல்சுடர், செறிவளை, உறிக்காவாளர், ஆப்பயன்.

9. **பிரித்துக் காட்டுக :**

புறஞ்சிறை, பான்மடை, அரும்பொருள், நெடுங்கண், சின்மலர், சீறடி, நடுங்குதுயர், பூங்கொடி, நீணிலம், வெண்பல், நாட்கொடி.

---

## (2) மணிமேகலை

## மலர்வனம் புக்க காதை

**மணிமேகலை :** கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல் என்பது பொருள். அஃது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்ருகும். அதில் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை வரை, முப்பது காதைகள் அடங்கியுள்ளன. நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி, மூன்ருங் காதையாகும்.

மணிமேகலையின் **ஆசிரியர்**, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனூர். மதுரையில் கூல (தானிய) வாணிகம் செய்த காரணத்தால் அவருக்கு அப்பெயர் அமைந்தது. அவரது **பிறப்பிடம்** சீத்தலை என்பர் அறிஞர் ; **காலம் :** கி. பி. இரண்டாம் நூற்ருண்டு; அவர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். அவருடைய சமகாலப் புலவர், இளங்கோவடிகள்.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு மணிமேகலை துயருற்றனள். இந்நிலையைக் கண்ட அவளுடைய தாயான மாதவி, 'நீ தொடுக்கும் இப்பூமாலை உன் கண்ணீர்க் கலப்பால் தூய்மையொழிந்தது ; ஆதலின், வேறு மாலை தொடுத்தற்கு நீ சோலை சென்று புதுமலர் பறித்து வா' என்ருள். மணிமேகலையின் துயர நிலையை மாற்றற்கு மாதவி அத்தகைய ஏற்பாடு செய்தனள். சுதமதி என்ற தோழியின் அறிவுரைப்படி உவவனம் என்ற மலர்

வனத்தில் மணிமேகலை மலர் பறிக்கச் சென்ருள். அப்போது சுதமதி அவளுக்கு உறுதுணையானுள். அவர்கள் மலர் வனத்துக் குச் செல்லும் வழியிலே நடக்கும் காட்சிகள் உள்ளத்துக்கு மிகவும் இன்ப மூட்டுவனவாகும்.

## அருஞ்சொற்பொருள்

**வரி : 1—9**

அணியிழை நல்லாய் - அழகிய அணிகலன் பூண்ட பெண்ணு கிய மாதவியே ; போவல் - போவேன்; தன்மையொருமை வினை முற்று ; கொம்பர் - கடைப் போலி ; செல்வுழீஇ - இன்னிசை யளபெடை ; சிமிலிக் கரண்டையன் - உறியில் வைத்த குண்டிகை யுடையவன் ; நுழைகோல் - நுண்ணிய (மெல்லிய) திரட்சி பொருந்திய , தவல் அரும் - அழிதல் இல்லாத ; அராந்தாணம் - அருகத்தானம் [சினலயம்] ; காணு - கண்ணுக்கும் புலப்படாத ; கையற்று - செயலற்று ; உயவல் - வருந்துதல் ; யானையின் (இன்) - ஐந்தாம் வேற்றுமையின் உருபாகிய 'இன்' ஒப்புப் பொருளில் வந்துள்ளது ; மண்ணு - கழுவப் படாத ; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**வரி : 10—21**

மலரடி - உவமைத் தொகை ; இம்மை மறுமை - இப்பிறவிப் பயனும் மறுபிறவிப் பயனும் ; தேறலின் - கள்ளினுல் ; யோகம் - கள்ளாகிய மருந்து ; கையுதிர்க் கொண்ம் - கைவிட்டு விடுவீரோ? சூளுற்று - சபதம் செய்து ; களிமகன் - கட்குடியன் ; **கொண்ம், உண்ம்** - மகரக் குறுக்கம்.

**வரி : 22—33**

கணவிரமாலை - அலரிமாலை ; சிதவல் துணி - கிழிந்த துணி ; சினை - கிளை ; ததர் - நெருங்கிய ; விழ்பு - சுள்ளி ; வெண்பலி - வெண்ணீறு (திருநீறு) ; வெண்ணீறு - பண்புத் தொகை ; சாந்தம் - சந்தனம் ; கிளவி - சொல் ; ஒரு சிறை - ஒரு பக்கத் தில் ; மறல் - மாறுபாடு கொள்ளுதல் (பகைத்தல்) ; மறல் - தொழிற் பெயர் ; நிற்குநர் - பலர்பால் வினையாலணையும் பெயர் ; தொழூஉம், எழூஉம், அழூஉம், விழூஉம் - செய்யுளிசை அள பெடைகள்.

**வரி : 34—39**

வம்பமாக்கள் – புதியவர் ; கம்பலை - முழக்கம் ; முதுமை + ஊர் = மூதூர் - பண்புத் தொகை ; சுடுமண் - செங்கல் ; மை - குற்றம் ; படிவம் - வடிவம் ; வெண் சுதை - வெண்மையான சுண்ணும்புச் சாந்து ; வித்தகர் - ஓவியக் கலைஞர் ; கவர் ஓவியம் - வினைத்தொகை.

**வரி : 40—48**

குடசம் - வெட்பாலை ; வெதிரம் - மூங்கில் ; கால் - அடிப் பகுதி ; எரிமலர் - உவமைத் தொகை ; சித்திரச் செய்கைப் படாம் - ஓவியத் தொழில் பொருந்திய துணி ; தொழுதனள் (காட்டிய) - முற்றெச்சம்.

## வினக்கள்

1. மலர்வனம் புக்க காதை என்ருல் என்ன ? தெளிவாக விளக்குக.
2. உண்ணு நோன்பியின் பண்புகள் யாவை ?
3. உண்ணு நோன்பியுடன் களிமகன் சூளுற்றுரைத்தன யாவை ?
4. பித்தனின் உருவ அமைப்பினையும், மெய்ப் பாட்டினையும் விளக்குக.
5. காவிரிப்பூம்பட்டின ஓவியக் காட்சியைத் தெரிவிக்க.
6. உவவனம் எங்ஙனம் சிறப்பிக்கப்படுகின்றது ?
7. மணிமேகலைப் பகுதியில் வந்துள்ள உவமைகளைக் கண்டு பிடித்து, அவற்றை உபமேயத்தோடு பொருத்தி விளக்குக.
8. மணிமேகலையில் அமைந்துள்ள இயற்கைக் காட்சியைப் பற்றி எழுதுக.
9. பிரித்தெழுதுக : நெடுநிலை, புழுக்கறை, வெண்சுதை.

## (3) பெரிய புராணம்

## மெய்ப்பொருள் நாயனர் புராணம்

பெருமை வாய்ந்த சிவனடியார்களைப் பற்றிய பழங்கதை என்பது அத்தலைப்பின் பொருளாகும். (பெரியர் + புராணம் = பெரிய புராணம்). தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய எழுபத்திரண்டு சிவனடியார்களைப் பற்றி அந்நூல் கூறுகிறது. **சேக்கிழாரால்** அஃது **இயற்றப்பட்டது.**

சேக்கிழாரின் **இயற்பெயர் :** அருண்மொழித் தேவர் ; **குடிப் பெயர் :** சேக்கிழார் ; **பட்டப் பெயர் :** உத்தம சோழப் பல்லவர் ; **சிறப்புப் பெயர் :** தொண்டர்சீர் பரவுவார் ; **சம கால அரசர் :** அநபாய சோழன் ; **குலம் :** வேளாளர் ; **பிறப்பிடம் :** தொண்டை நாட்டுக் குன்றத்தூர் ; **காலம் :** கி. பி. 12 ஆம் நூற்றுண்டு.

## அருஞ்சொற்பொருள்

1. நீடு - உயர்ந்த ; மாது ஒரு பாகர் - உமாதேவியை இடப் பாகத்தில் கொண்டுள்ள சிவன் ; மலாடர் - மலை நாடர் ; கோமான் - தலைவன் ; காதலால் - பக்தியினுல் ; மலாடர் - மரூஉச் சொல்.

2. நீடி - பெருகச் செய்து ; ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ; பாடல் ஆடல் - உம்மைத் தொகை.

3. தேடிய மாடும் - தாம் தேடி வைத்த செல்வமும் ; நீடு செல்வமும் - நீண்ட காலமாக இருந்து வரும் முன்னேர்களின் செல்வமும் ; தில்லை மன்று - சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலம் ; ஆடிய - நடனமாடிய ; நாடிய - விரும்பிய.

4. இகல் திறம் - பகைமைத் தன்மை ; பொன் அணி ஓடை - பொன்னுல் செய்யப்பட்ட நெற்றிப் பட்டம் ; பொருபரி - போர் செய்யும் குதிரைப் படை ; பரிபவப்பட்டு - அவமானப்பட்டு ; பொருபரி - வினைத்தொகை ; பொருபரி காலாள் - உம்மைத் தொகை.

5. இகலினுல் - பகைமையினுல் ; சீலம் - ஒழுக்கம் ; அற்றத்தில் - தக்க சமயத்தில் ; செப்பரு நிலைமை - வாயினுல் சொல்லக்

கூடாத தன்மை (கொலைத் தன்மையை) ; வெண்மை + நீறு = வெண்ணீறு - பண்புத் தொகை.

6. வேணிகள் - சடை முடிகள் ; படை கரந்த - வாட்படை மறைத்து வைக்கப்பட்டுள்ள ; புத்தகக் கவளி - புத்தகக் கட்டு ; மைபொதி விளக்கு - கருமை நிறமுள்ள பொருள் உள்ளே மறைந்துள்ள விளக்கு ; கறுப்பு - வஞ்சகத் தன்மை.

7. கடையுடை - வாயிற்கண் உள்ள ; ஏத்தி - துதித்து ; உடையவர் - எல்லா உயிர்களையும் தம்மகத்தே உடையவராகிய சிவன் ; தனித்து அடை நின்ற - தனியாகப் பக்கத்தில் நின்ற ; இடைதெரிந்தருள வேண்டும் - சமயம் அறிந்து கொள்ள வேண்டும் ; உடையவர் - குறிப்பு வினையாலணையும் பெயர்.

8. புரவலன் - அரசராகிய மெய்ப்பொருள் நாயனுர் ; மாடு - பக்கத்திலே ; மன்றல் - நறுமணம் ; மென்மை + சாயல் = மென்சாயல் - பண்புத் தொகை.

9. **கதும்** என - விரைவுப் பொருளைக் குறிக்கும் இடைச்சொல் ; அண்டர் நாயகனுர் - தேவர்களின் தலைவராகிய சிவபெருமான் ; இழிந்து - இறங்கி ; கொள்கையின் - வணங்க வேண்டிய முறைப்படி ; செங்கை - பண்புத் தொகை.

10. மங்கலம் பெருக - நன்மை நிறைவதாக ; நாயகனுர் - தலைவராகிய சிவன் ; ஆகமநூல் - சைவாகம நூல் ; மண்மேல் - மண்ணுலகில் ; கொடு (கொண்டு) - தொகுத்தல் விகாரம் ;

11. பேறு - நற்பேறு (நல்ல பாக்கியம்) ; பிரான் - தலைவனுகிய சிவன் ; மாறு இல் - நிகர் இல்லாத ; பேறு - முதல் நிலை திரிந்த தொழிற்பெயர் ; பூ + கோதை = பூங்கோதை.

12. திருமகள் என்ன - இலக்குமியைப் போன்ற ; பரிவுடன் - விருப்பத்தோடு ; அந்தப்புரம் - அரசி இருக்கும் இடம் ; தருதவ வேடத்தானை - புனைந்து கொண்ட வேடம் உடையவனை ; தவிசு - இருக்கை (ஆசனம்) ; இருநிலம் - பெரிய பூமி.

13. கைத்தலத்து - கையின்கண் ; புரிந்து - விரும்பி ; பத்திரம் - வாள் ; அப்பரிசே - அத்தன்மைப்படியே (கொலை செய்தல் என்ற எண்ணப்படியே).

14. மறைத்தவன் - பொய்த் தவவேடம் பூண்ட முத்தநாதன்; இறைப் பொழுதின்கண் - சிறிது நேரத்தின்கண் ; கூடி - சென்று; குருதி - செந்நீர் ; சோர - ஒழுக ; தறை - திரிதல் விகாரம் ; நமர் - நம்மவர். (உயிரைப் போக்கும் எமனைப் போன்றவர் என்ற பொருளைக் குறிப்பால் தருவதைக் காண்க.)

15. தாதன் - வேலைக்காரன் ; என்ன - என்று கேட்க ; எம்பிரான் - எம் தலைவனாகிய சிவன்.

16. பொய்த்தவன் - பொய்யான தவ வேடம் தாங்கியவன் ; புடை - பக்கத்தில் ; இறைவனது ஆணை - அரசனது கட்டளை ; இ + தவன் = இத்தவன்.

17. கைவடி நெடுவாள் ஏந்தி - கையிலே கூர்மையான நீண்ட வாளைத் தாங்கி ; ஆள் உறு - மக்கள் நடமாட்டம் இல்லாத ; வெவ்வினை - கொடிய செயல் ; வெம்மை + வினை = வெவ்வினை - பண்புத் தொகை.

18. செற்றவர் - சினந்தவர் ; சொல் திறம் - சொல்லின் தன்மையை ; சோர்கின்ற - நீங்குகின்ற ; ஆவி தாங்கும் - உயிரை விட்டுப் பிரியாமல் தாங்கிக் கொண்டிருக்கும் ; கோமகன் - அரசன் ; குறிப்பில் - வேறு ஏவல் குறிப்பில்.

19. இன்று - இப்பொழுது ; கருணை கூர்தல் - அருள் தன்மை மிகுதல் ; செய்தது + யார் = செய்ததியார் - குற்றியலிகரம் ; செய் தவ வேடம் - வினைத்தொகை.

20. அரசியல் ஆயத்தார் - அரசாங்கத்தில் பணி செய்யும் கூட்டத்தினர் ; அழிவுறும் - துன்புறும்படியான ; விரவிய செய்கை - பொருந்திய செயல் ; விதியினாலே - முறையினாலே ; பரவிய - துதிக்கத் தக்க ; உய்ப்பீர் - வாழ்க்கை நடத்துவீராக ; புரவலர் - அரசராகிய மெய்ப் பொருள் நாயனார் ; கழல் - வீரக் கழல் அணிந்த திருவடி - தானியாகு பெயர்.

21. இமயப் பாவை - பர்வதராசன் மகளாகிய உமாதேவி ; துணைவனார் - கணவராகிய சிவன் ; வானவர்கட்கு எட்டா - தேவர்களாலும் அடைய முடியாத ; நீழல் - நீட்டல் விகாரம்.

## வினாக்கள்

1. பெரிய புராணத்தைப் பற்றிக் குறிப்பெழுதுக.
2. மெய்ப்பொருள் நாயனாரின் சைவத் தொண்டினை விளக்குக.
3. நாயனாரை முத்த நாதன் கொல்ல முயன்றதேன் ?
4. முத்த நாதன் பூண்ட தவ வேடத்தை விளக்குக.
5. பொய்த் தவனைக் கண்ட நாயனார், ஓம்பிய முறையை விளக்குக.
6. பொய்த் தவ வேடத்தானின் வஞ்சகம் எவ்வாறு வெற்றி யுற்றது ?
7. மெய்ப்பொருள் நாயனாருக்கு அப்பெயர் வரக்காரணம் யாது?
8. இன்னா செய்பவர்க்கும் இனியதே செய்பவர் நாயனார் என்பது எங்ஙனம் விளங்கும் ?
9. தாதனும் தத்தனை நாயனார் பாராட்டியதேன் ?
10. நாயனார் இறக்கும் சமயத்தில் கூறிய அறிவுரை யாது ?
11. மைபொதி விளக்கே என்ன - இவ்வுவமையைப் பொருளொடு பொருத்தி விளக்குக.
12. கீழ்க்காணும் செய்யுளடிகள் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

    (அ) யானவற் குறுதி கூற நின்றிடு நீயும்.

    (ஆ) மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்த தென்ன.

    (இ) இன்றெனக் கையன் செய்தது யார் செய்ய வல்லார்.

## (4) கம்ப ராமாயணம்

### கங்கைப் படலம்

கம்ப ராமாயணம்: **கம்பரால் இயற்றப்பட்ட** இராமனது வரலாறு. பால காண்டம், அயோத்தியா காண்டம் முதலிய ஆறு காண்டங்கள் அந்நூலில் உள்ளன. ஒவ்வொரு காண்டமும் பல படலங்களாகப் பிரியும்.

கம்பரின் **பிறப்பிடம்** : திருவழுந்தூர் ; **தந்தை** : ஆதித்தன் ; **குலம்** : உவச்சர் ; **சமயம்** : வைணவம் ; **சமகாலப்புலவர்** : ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் ; **காலம்** : கி. பி. 9 அல்லது 12 ஆம் நூற்றுண்டு ; **பிறநூற்கள்** : சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதியந்தாதி முதலியன ; சடையப்ப வள்ளலால் அவர் ஆதரிக்கப் பட்டார்.

கங்கைப் படலம், அயோத்தியா காண்டத்தில் உள்ளது. இராமன் தன் மனைவியாகிய சீதையுடனும், தம்பியாகிய இலக்குவனுடனும் காட்டுக்குப் புறப்பட்டு, கங்கைக் கரைக்குத் தலைவனாகிய குகன்தன் உதவியால் அக்கங்கையாற்றைக் கடக்கும் பகுதியை அது குறிக்கிறது.

### அருஞ்சொற்பொருள்

1. ஈண்டு நிற்றி - இவ்விடத்திலேயே நிற்பாயாக ; நெடியவன் - இராமனை (திருமாலை) ; நிமிர்ந்த - நிறைந்த ; எற்று - மோதும்படியான ; நாவாய் - படகு ; இறை - தலைவன் ; குகன் குறுகினன் (நெருங்கினன்) எனக் கூட்டுக ; எற்றுநீர் - வினைத் தொகை ; தூயவன், நல்லான் - குறிப்பு வினையாலணையும் பெயர்கள்.

2. அண்ணல் - பெருமைக் குரிய இராமன் ; பண்ணவன் - நற்பண்புகளுடைய குகனே ; என்ன—என்று இலக்குவன் அழைக்க ; கண்ணனை - இராமனை ; குஞ்சி - ஆண்களின் தலை மயிர் ; அழைத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று ; வருக - வியங்கோள் வினைமுற்று ; புகு + ஆன் = புக்கான் ; புகு - பகுதி, புகு என்னும் பகுதி புக்கு என இரட்டித்து இறந்த காலம் காட்டியது ; அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. ஈண்டு இருத்தி - இவ்விடத்திலேயே அமர்க ; அருத்தியன் - அன்புடையவன் ; அமுதினுக்கு - உணவினுக்கு ; திருத்தினன் கொணர்ந்தேன் - செம்மைப் படுத்திக் கொண்டு வந்துள்ளேன் ; விருத்த மாதவர் - கிழ முனிவர் ; இருத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று ; **திருத்தினன்** (கொணர்ந்தேன்) - முற்றெச்சம் ; கொணர்ந்தேன் - இதில் கொணு என்பது பகுதி.

4. காதல் தெரிதர - பக்தி விளங்கும்படி ; சீர்த்த - சிறப்புடையன ; பரிவினில் தழீஇய வென்னில் - அன்பினுல் பொருந்தியனவென்ருல் ; பவித்திரம் - தூய்மையானவையே ; உண்டனெம் - உண்டதாகக் கருதப்படும் ; தழீஇய - சொல்லிசை அளபெடை ; உண்டனெம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

5. சிங்க ஏறு - ஆண் சிங்கம் ; ஏறுதும் - கடப்போம் ; விடியல் - விடியற்காலையில் ; யாணர்ப்பொங்கு - நன்மை மிகுந்த ; சாருதி – முன்னிலை யொருமை வினைமுற்று.

6. கார்குலாம் நிறத்தான் – மேகம் போன்ற கரிய நிறமுடைய குகன் ; பார்குலாம் செல்வ நின்னை – அரசச் செல்வத்தோடு இருக்கும் நிலையில் பார்க்க வேண்டிய உன்னை ; ஈர்கிலா – பிளந்தெறியாத ; கள்வனேன் – வஞ்சகமுடையவன் ; இன்னலின் இருக்கை – துன்ப இருப்பிடம் ; தீர்கிலேனுனது – உயிர் நீங்காமல் இருக்கிறது ; செய்குவன் – தன்மையொருமை வினைமுற்று.

7. கோதை வில் – வெற்றி மாலை சூட்டப் பெற்ற வில் ; குரிசில் - ஆண்களில் சிறந்தவன் ; தீராக் காதலனுகும் - நீங்காத அன்புக் குரியவனுகும் ; இருத்தி – முன்னிலையொருமை வினை முற்று.

8. ஆழி – கடல் ; துடி – ஒரு வகைப் பறை ; பள்ளி – தவப்பள்ளி ; வீக்கி – (இடுப்பில்) கட்டிக்கொண்டு ; வடிசிலை – நாண் கட்டப்பட்ட வில் ; ஏத்தி - துதித்து.

9. நியமம் – கடமை ; மரபுளி – முறைப்படியே ; வைகல் இயற்றி என மாற்றுக ; வைகல் – நாள்தோறும் ; வேலைவாய் அமுது அன்னுள் - பாற்கடலில் தோன்றிய அமிழ்தம் போன்றவளாகிய சீதை ; நாணல் பாரின் பாயல் என மாற்றுக. நாணல் புல் பரப்பப்பட்ட தரையாகிய படுக்கையில் என்பது அதன் கருத்து ; வரிவில் – கட்டமைந்த வில்.

10. மற்று – மேலும் ; அவள் இறைஞ்சி ஏக – அந்த நித்திரா தேவி இலக்குவனை வணங்கிச் செல்ல ; தவிசு – இருக்கை (ஆசனம்) ; பொற்றொடி – பொன்னால் செய்யப்பட்ட வளையல் அணிந்த இலக்குமி போன்ற சீதை ; புன்மை – சிறுமை ; இற்ற தோர் நெஞ்சனாகி - உடைந்த உள்ளமுடையவனாகி ; சிலை - வில்; மலர்த் தவிசு – உருவகம் ; மாமலர் – உரிச் சொற்றொடர் ; நீங்கா – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ; பொன்+தொடி = பொற்றொடி.

11. தும்பி – யானை ; கண்ணன் – கண்களை உடையவனான ; குழாத்தின் – கூட்டத்தைப் போல ; அம்பி – படகு ; கண்ணீர் அருவி – உருவகம் ; சோர் குன்றின் - வினைத்தொகை.

12. துறக்கம் - சுவர்க்கம் ; மறக்கும் ஆ (று) நினையல் - அழியும் தன்மையுடையன என்பதை நினைப்பீராக என்பது கருத்து ; தோற்றம் - பிறவி ; இறந்தான் - மறைந்தான் ; பிறவா வெய்யோன் - பிறவித் தன்மையில்லாத கதிரோன் ; வெய்யோன் - குறிப்பு வினையாலணையும் பெயர். பிறவா (த) - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் ; நினையல் - வியங்கோள் வினைமுற்று ; அம்மா - வியப்பிடைச் சொல்.

13. பொய்ம் முறை அலரா – பொய்த் தன்மை பொருந்தாத ; தார் - மாலை ; இ உறவு முறை என்ன என மாற்றுக - எம்முடைய உறவினர்களாகிய இவர்களை உம்முடைய உறவுத் தன்மையுடையவர்கள் என்றெண்ணி ; வலியேம் - குறிப்பு வினைமுற்று ; குறுமை + ஏவல் = குற்றேவல் – பண்புத் தொகை ; செய்குதும் – தன்மைப் பன்மை வினைமுற்று ; என்ன – செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம் உடன் பாட்டுப் பொருளில் வந்துளது ; (வலியேம்) **ஆல்** - அசைச் சொல்.

14. துணை - (உன்) உதவிக்காக ; நாயேம் – நாய் போன்று கீழ்மைப் பட்டவர்களாகிய எங்களின் ; கான் – காடு ; நான் உளதனையும் – நான் உயிரோடு இருக்கின்ற வரையில்.

15. ஆணை – கட்டளை ; ஒரு நாள் நீ வைகுதியெனின் உய்குதும் என மாற்றுக ; குடில் – குடிசை ; செய்குநர் – பலர்பால் வினையாலணையும் பெயர் ; உய்குதும் – தன்மைப் பன்மை வினை முற்று.

16. அண்ணல் – பெருமைக்குரிய இராமன் ; கேளா–கேட்டு– செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் உடன் பாட்டுப் பொருளில் வந்துளது ; வெண்மை + நிறம் – வெண்ணிறம் - பண்புத் தொகை.

17. நெறி – செல்வதற்கரிய வழியில் ; இடுநெறி - புதுவழி அமைப்பதில் ; நேடினென் தரவல்லேன் எனச் சொற்களைக் கூட்டுக ; நேடினென் - தேடினவனாகி – முற்றெச்சம் ; நறவு – தேன் ; பிறிகிலென் - திரிதல் விகாரம்.

18. ஒருவலென் – நீங்காதவனாகி ; மருவலர் உளரானார் எனின் - உனக்குப் பகைவர் இருப்பாராயின் ; போதுவென் – வருவேன் .

19. அமலன் – குற்றமற்ற இராமன் ; உரை நேர்வான் – சொல்லத் தொடங்கினான் ; இளவல் – எம் தம்பியாகிய இலக்குவன் ; நன்னுதலவள் - அழகிய நெற்றியுடையவளாகிய சீதை ; கேள் – உறவினள் ; நளிர் கடல் – குளிர்ந்த கடல் – உரிச் சொற்றொடர் ; உன் தொழில் உரிமையின் – உன் கட்டளைத் தொழிலிலே.

20. பின்பு உளது – சந்திக்கும் சமயம் பின்னர்த்தான் ஏற்படப் போகின்றது ; உன்னேல் – நினைக்காமல் இருப்பாயாக ; என உன்னு - என்று நினைக்க முடியாதப்டி.

21. படர் உற உம்பி உளன் – எமக்குத் துன்பம் நேர்ந்தால் அதைப் போக்க உம் தம்பியாகிய இலக்குவன் உளன் ; பகை யா– பகைகள் யாஉள ; யான் என உரியாய் – யான் காத்தலுக்கு இருப்பதாகவே எண்ணி உம் நாட்டில் காத்தல் தொழில் செய்வாயாக ; வடி – கூர்மையான ; வடக்கு + திசை = வடதிசை ; பகல் எல்லாம் – ஒருமை பன்மை மயக்கம்.

1. இராமனிடம் குகனுக்கு இருந்த பணிவையும், அன்புப் பெருக்கையும் விளக்குக.
2. இலக்குவனின் காவல் சிறப்பை விளக்குக.
3. அம்பியின் தலைவன், கண்ணீர் சிந்தியதற்குக் காரணம் யாது ?
4. கதிரோன் தோற்றம் எங்ஙனம் வருணிக்கப்படுகின்றது ?

5. தன்னூரில் இராமன் தங்கினுல் என்னென்ன உதவி செய்வதாகக் குகன் கூறினன் ?

6. தன்னையும் காட்டிற்கு அழைத்துச் சென்ருல், இராமனுக்குத் தன்னுல் என்னென்ன உதவி கிடைக்குமென்று குகன் கூறினுன் ?

7. குகனது வேண்டுகோளை இராமன் மறுத்துரைத்த நயத்தை விளக்குக.

8. கீழ்க்காணும் தொடர் மொழிகள் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

(அ) பரிவினில் தழீஇய வென்னில் பவித்திரம்

(ஆ) எம்குடிலிடை ஒருநாள்நீ,
வைகுதி யெனின்மேலோர் வாழ்வில பிறிது.

(இ) மருவல ரெனின்முன்னே மாய்குவென்.

9. இடியுடை மேக மென்ன, அருவிசோர் குன்றின் – இவ்வுவமைகள் வந்துள்ள இடங்காட்டி விளக்குக.

---

## (5) இரக்ஷணிய யாத்திரிகம்

## இரக்ஷணிய சரிதப் படலம்

### சிலுவைப்பாடு

இரக்ஷணிய சரிதம்: பாதுகாப்புப் பெறுதல் குறித்துச் செய்யப்படும் மன யாத்திரை. அஃதாவது, ஆன்மா அழிவில்லாத நற்பேறெய்திப் பாதுகாப்புப் பெறுவதற்காகச் சமய நெறிகளைத் தன்னகத்தே கொண்டு மனம் செய்யும் யாத்திரை என்பது கருத்தாகும். அந்த நூலில் 3800 பாடல்கள் உள்ளன. Pilgrims Progress என்னும் ஆங்கில நூலை அடிப்படையாகக் கொண்டு தமிழில் அஃது இயற்றப்பட்டது.

சிலுவைப்பாடு: ஏசுநாதர் யூதர்களால் சிலுவையில் அறையப்பட்டுத் துன்புறுதல்.

**நூலாசிரியர் :** கிருஷ்ணப் பிள்ளை ; **பிறப்பிடம் :** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இரட்டியாபட்டி ; **சமயம் :** கிறித்தவம் ; **காலம் :** கி. பி. 1827—1900 ; **பிறநூற்கள் :** இரக்ஷணிய மனோகரம், இரக்ஷணியக் குறள், இரக்ஷணிய சமய நிர்ணயம்.

## அருஞ்சொற்பொருள்

1. எள்ளி - இகழ்ந்து ; புறக்கணித்து - அலட்சியப்படுத்தி ; வாய்மதமாய் - வாய்கொழுத்த தன்மையாய் ; பொல்லாங்கை எல்லாம் - ஒருமை பன்மை மயக்கம்.

2. செம்மை + அங்கி = செவ்வங்கி - பண்புத் தொகை ; ஆகடியம் - பரிகாசம் ; தெவ்வர் - பகைவர் ; கவ்வை - பேரொலி ; கலுழ - கண்ணீர் சிந்த ; நகர் - இடவாகு பெயர் ; அ + அங்கி = அவ்வங்கி ; நகர் என்பது எருசலேம் நகரைக் குறிக்கிறது.

3. அயர்ந்து - சோர்ந்து ; வெய்ய - கொடிய - குறிப்புப் பெயரெச்சம் ; அலசி - அலைந்து ; துய்ய - தூய்மையான ; அய்யன் - முதற்போலி ; மறுகூடு - தெருவின் நடுவில்.

4. ஆசி - இறைவன் திருவருள் ; மங்கலை - மங்கலத் தன்மையுடையவள் ; மெல்லியலார் - மென்மையான தன்மையுடைய பெண்கள்.

5. வதனம் - முகம் ; குடிபோயது - நீங்கி விட்டது ; நந்தா - அழியாத ; நறு - தேன் ; சிந்தா குலம் - மனத் துன்பம்; தேசு - அழகு ; செம்மை + தாமரை = செந்தாமரை - பண்புத் தொகை ; நந்தா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ; கருணை நறு, கண்மலர்கள் - உருவகங்கள்.

6. அரற்ற - வாய் விட்டுக் கதற ; கண்டு கேட்டவர் என்பதை, கண்டவர் கேட்டவர் என்க ; கருத்து - உள்ளம் ; மண்டு- நிறைந்த ; துயரெனும் தீ - உருவகம் ; கடி நகரம் - உரிச்சொற்றொடர் ; பண்டெரி......போல - கடவுளின் கட்டளையை எடுத்து மொழிந்து அறிவு புகட்டிய ஆபிரகாம் என்பவரைச் சோதோம் நகர மக்கள் எள்ளி நகையாடினர். அதனால் ஆண்டவர் சினந்தார் ; அந்த நகரை எரியுண்ணும்படி செய்தார் ; அங்குள்ள மக்கள் அவ்வமயம் வாய்விட்டுக் கதறியழுதமை போல ஏசுநாதரின் துன்ப நிலையைப் பார்த்த எருசலெம் மக்கள் கதறியழுதனர்.

7. குழல் நூலின் - எறிகுழல் சென்ற வழியே நூல் சென்றமை போல ; நலிய - வருத்த ; கரந்து - மறைந்து ; பசுந்தோகை- அழகிய தோகையுடைய மயில் போன்ற மரியன்னை - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ; பசுமை + தோகை = பசுந்தோகை ; சாம்பி - வாடி ;

8. இப்பரிசு - இத்தன்மையாக ; முதுமூலத்து ஒரு பொருளை- பழைய முதற் காரணமான ஒப்பற்ற பொருளாகிய ஏசுவை ; மை - குற்றம் ; வன்மை + மனம் = வன்மனம் - பண்புத் தொகை ; கொலை + ஞ் + அர் = கொலைஞர்.

9. செற்றமொடு - கோபத்தோடு ; குருசு - சிலுவை (கழு மரம்) ; சொற்ற - சொன்ன ; மறை - வேதம் (விவிலியம்) ; சுருதி முதல் - வேதங்களுக்கெல்லாம் முதல்வராகிய ஏசு.

10. சதைப்புண்டு - சிதைக்கப்பட்டு ; பன்னரிய - வாயினுல் அளவிட்டுச் சொல்ல முடியாத ; பரிந்து - அன்பு கொண்டு ; எந்தாய் - பரம பிதாவே ; கனிவாய் - உவமைத் தொகை.

## வினுக்கள்

1. பகைவர்கள், ஏசுநாதருக்கிழைத்த கொடுமைகள் யாவை ?
2. எருசலெம் நகர் வழியாகச் சென்ற ஏசுபெருமானின் நிலையை விளக்குக.
3. எருசலெம் நகர மக்கள், ஏசுமீது இரங்கி உரைத்தன யாவை?
4. ஏசுவைக் குருசில் அறைந்த முறையை விளக்குக.
5. பரம பிதாவினிடம் ஏசுநாதர் வேண்டியது யாது ?
6. கீழ்க்காணும் உவமைகள் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.
   (அ) பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோல
   (ஆ) தழலிடுபூங் கொடியேபோல்
7. இன்னதென அறிகில்லார்......மன்னியும் - இச்சொற்ருெடர் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

## (6) சீருப்புராணம்

### கபு காபுப் படலம்

சீருப்புராணம் : 'சீறத்' என்ற சொல்லுக்கு 'வரலாறு' என்பது பொருள் ; சீறத் என்பது அரபுச் சொல்லாகும். முகமது நபியின் வரலாற்றை அஃது உரைக்கின்றது ; அந்த நூலில் மூன்று காண்டங்களும், 5026 பாடல்களும் உள்ளன.

நூலாசிரியர் : உமறுப் புலவர் ; தந்தை : சேகு முதலியார் ; பிறப்பிடம் : கீழக்கரை ; சமயம் : இசுலாம் ; காலம் : கி. பி. 17ஆம் நூற்றூண்டு ; பிற நூற்கள் : முதுமொழி மாலை, நொண்டி நாடகம்.

மதீனமா என்னும் நகருக்கு முகமது நபி சென்ருர் ; அபு அய்யூபு என்பவரது இல்லத்தில் தங்கினர். அவ்வமயம் ஹம்மாறு என்னும் பெரியார், தம்முடன் கபு காபு என்னும் சிறுவனை அழைத்துக் கொண்டு போய் முகமது நபியைக் கண்டார். நபிகள் பெருமான், சிறுவனை நோக்கி அவனது வரலாற்றைக் கேட்க, அவன் பின் வருமாறு கூறுகிருன்.

### அருஞ்சொற்பொருள்

1. வானவர் – தேவர் ; தானவ – தேவனே ; கோன் நகர்– தலை நகரம் ; ஏத்தும் - பாராட்டும் , ஈனம் இல் – இழிவுத் தன்மை இல்லாத ; மறைகள் – வேதங்கள் ; பண்டிதன்–புலவன் ; மன் ஓ – அசைச் சொற்கள்.

2. சந்ததி – மகன் ; தனயர் – பிள்ளைகள் ; புந்தி – மனம் ; நந்தல் இல் - புகழ் அழியாத ; எந்தை - மரூஉச் சொல்.

3. உத்தமர் செல்வம் போன்றும் – உயர்ந்த பண்புடையவர்களின் செல்வம் சிறப்புறுவது போலவும் ; மாசு – குற்றம் ; பத்தியர் – பக்தியுடையவர் ; செவ்வியர் – சிறந்த பண்புடையவர் – குறிப்பு வினையாலணையும் பெயர் ; இல்லாப் பத்தியர் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

4. புந்தி – அறிவு ; புந்தி (புத்தி) – மெலித்தல் விகாரம் ; வேதவாசகம் – மறை மொழிகள் ; போதர – நுழையும்படி ;

பொருவு இலா வண்ணத்து – ஒப்பில்லாத தன்மையில்; வேத வாசகம் புராணம் – உம்மைத் தொகை.

5. வேதம் மூன்று - ஈமான், இபாதத்து, இஹ்சான் என்ற மூன்று வேதங்கள்; பல+நெறி=பன்னெறி; மின் அவிர் – மின்னலைப் போன்று ஒளிவிடும்; பேழை–பெட்டி; காப்பு – முத்திரையிடுதல் போன்ற பாதுகாப்பு; தெருள்வன் – தெளிவேனுனேன்; மன் ஓ - அசைச் சொற்கள்; அவிர் பேழை - வினைத்தொகை.

6. வில் – ஒளி; ஆடகத்தின் – ஆடகம் என்னும் சிறந்த பொன்னுல்; செப்பு - பெட்டி; பேதுற்றேன் – கலக்க முற்றேன்.

7. எம்மான்பாலின் வந்து – எம் தலைவராகிய தந்தையின் கண் வந்து; தாள் வழுத்தி – திருவடியைத் துதித்து; சந்ததி – குழந்தையே!; தாள் வழுத்தி – இரண்டாம் வேற்றுமைத் தொகை.

8. கனகம் – பொன்; இழை - அணிகலன்; ஒல்லை – விரைவில்; மல்லல் – வளமான.

9. கபடு - வஞ்சனை; தேவதத்தின் – கடவுளின்.

10. அடுபகை – அழிக்கக் கூடிய பகைமை – வினைத்தொகை; வியன் - சிறந்த; பேரும் புள்ளியும்–பெயரையும், அவன் தோன்றும் காலத்தையும்; பரிவின் - ஆவலோடு.

11. வெறி - மது குடித்ததனுல் ஏற்பட்ட வெறி; குறி - முத்திரை; வல்லே – விரைவில்.

12. விறல் – ஆற்றல் படைத்த; வீறு – பெருமை.

13. நேர்ந்து – பொருந்தி; 'முகம்மதே என்று ஆன நும் திருநாமத்தை' எனச் சொற்களைப் பிரிக்க; ஆய் பதறி – தாய் துடித்து.

14. புலம்பு கொண்டான் – அழுதல் செய்தான்; குறிப்பு நோக்கி – உடம்பில் தோன்றும் அறிகுறிகளை ஆராய்ந்து; வாதை - துன்பம்; கனம் கரும் கவிகை - பெருமை வாய்ந்த பெரிய வெண் கொற்றக் குடை; நும் பெயர் – முகமது நபியாகிய உங்கள் பெயரை.

**16.** ஒரு திருமொழி – ஒப்பற்ற சொல்லாகிய முகமது நபி ; இருள்பட மறைத்தல் – யாரும் அறியாதிருக்கும் வகையில் மறைத்தல் ; மணிபூண் – உம்மைத் தொகை ; கல்லா – ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**17.** போதம் – ஞானம் ; மனுவின் நூல் – மனு தர்ம சாத்திரம் ; தாதையர் – தந்தையரின் ; கரப்பது – மறைப்பது. தகைமைத்தன்று – பெருந்தன்மையுடையதன்று ; பேறு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

## வினாக்கள்

1. கபு காபுவின் தந்தையினது சிறப்பைக் கூறுக.
2. கபு காபு சிறப்பாக வளர்ந்தமைக்குக் காட்டப்படும் உவமைகள் யாவை ?
3. கபு காபுவின் சிந்தையில் ஏற்பட்ட ஐயத்தினைத் தெளிவாக விளக்குக.
4. முத்திரையிட்ட பொற்பேழையைத் தீண்ட வேண்டாவென்று கபு காபுவின் தந்தை கூறியதற்குரிய காரணத்தை விளக்குக.
5. 'முகமது நபியே !' என்று கபு காபு வாய் விட்டுக் கதறியதன் காரணத்தை விளக்குக.
6. கபு காபுவின் பெற்ரோரின் துன்ப நிலையை விளக்குக.
7. தன் தந்தைக்குக் கபு காபு கூறிய அறிவுரையை விளக்குக.
8. கீழ்க்காணும் செய்யுளடிகள் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

(அ) இருள்பட மறைத்தல் கல்லாப் புல்லர்க்கும் இழிவதாமால்

(ஆ) மாதவமுடையீர் பித்தோ வஞ்சனைத் தொழிலோ.

## (7) பாரத வெண்பா

பாரத வெண்பா : பரத வமிசத்தில் பிறந்தவர்களைப் பற்றி, வெண்பா என்னும் செய்யுள் வகையால் இயற்றப் பெற்ற நூலாகும். இந்நூல் **பெருந்தேவனாரால் இயற்றப்பட்டது.** உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளால் இந்நூல் அமைந்துள்ளது. உத்தியோக பருவம், வீடும பருவம், துரோண பருவம் ஆகிய மூன்று பருவங்களே இப்போது கிடைத்துள. 818 வெண்பாக்களும், ஆறு ஆசிரியப்பாவும், ஆறு விருத்தப்பாவும் இந்த நூலில் உள்ளன.

சங்க காலத்தில் வழங்கிய பாரதம் பாடிய பெருந்தேவனார் எனவும், புறநானூறு குறுந்தொகை முதலிய தொகை நூற்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் எனவும், பாரதம் பாடிய பெருந்தேவனார் எனவும், பெருந்தேவனார் பலர் இருந்தனராக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பாரத வெண்பா பாடிய பெருந்தேவனார் **காலம்** மூன்றும் நந்திவர்ம பல்லவன் காலமாகும்.

நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதி உத்தியோக பருவத்தில் அமைந்துள்ளது.

## அருஞ்சொற்பொருள்

1. போர்வீரர் தம்மோடும் – போர் செய்யவல்ல வீரராகிய துரியோதனாதியரிடம் ; பரசியக்கால் – சொன்னால் ; பார் வீரர் கொள்வீரோ எனச் சொற்களைக் கூட்டுக. பார்வீரர் – உலகாளத் தக்க வீரராகிய பஞ்சபாண்டவரே! ; உய்வீராய் போவீரோ எனச் சொற்களைக் கூட்டுக ; ஓரீர் – போர் செய்வதைக் கருதாதவர்களாய் ; வெங்கானம் – பண்புத் தொகை.

2. பெற்றம் – பெருமை பொருந்திய ; தனிமுரசம்.........கோன் – ஒப்பற்ற முரசக் கொடியுடையவனும் தாமரையில் எழுந்தருளியிருக்கும் இலக்குமி போன்ற திரௌபதியின் கணவனுமாகிய தருமன் ; அவரை – அந்தத் துரியோதனாதியரை.

3. செலவிட்டால் – தூதாகச் செல்ல விட்டால் ; பொருகை – போர் செய்தல், தொழிற் பெயர் ; 'உன்னைத் தூதுவனேயாக்கத் துணி' எனச் சொற்களைக் கூட்டுக ; காண் – அசைச் சொல்.

4. கொள்வதுவும் – வெற்றி கொள்வதும்; ஆற்றுவரேல் – போர் செய்வாராயின்; மேல் – முற்காலத்தில்; தான் – அசைச் சொல்; அரசாள்கை – தொழிற்பெயர்.

5. வெற்பு ஆர் பனி – மலைமீது நிறைந்துள்ள பனி; வெற்பு ஆர் தோள் எனச் சொற்களைக் கூட்டி, மலை போன்ற தோள் எனவும் பொருள் கொள்ளலாம்; பாழி – வலிமை பொருந்திய; தொங்கல் – மாலை.

6. சூழ் – பல மன்னர் சூழ்ந்த; சூள் – சபதம்; பரிபவம் – அவமானம்; வாழி – வாழ்க; இச்சொல், எதிர்மறைப் பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறது; ஆய் – ஆய்க; ஓட்டெழுத்து – தலை மண்டை எழுத்து; சூழ்சபை – வினைத்தொகை.

7. தாம் மானம் – தமது பெருமை; தீமானம் – அவமானம்; தார் – மாலை; செரு – போர்; 'செருநின்றது' எனச் சொற்களைக் கூட்டுக; ஆம் ஆகில் – அங்ஙனமாயின்; ஆம் அளவு – இயலும் அளவில்.

8. கார் – மேகம்; பாம்பு உயர்த்தோன் – பாம்புக் கொடியுடைய துரியோதனன்; ஊர் வேண்டல் – ஐந்து ஊர்களைக் கொடுக்கும்படி வேண்டுக; வேண்டல் – வியங்கோள் வினைமுற்று; ஐந்து ஊர்கள்: குசஸ்தலம், மிருகஸ்தலம், வருணபதி, வரசந்தி, சயசந்தி; பாங்குடனே – அமைதியுடனே.

9. வேண்டி – போர் வேண்டி; அகன்று போதாய் என்க; போதாய் – வருக; பொருபடை – வினைத்தொகை.

10. வடிக்கயிறு – கசைக்கயிறு; மா – குதிரை; கூடலார் – பகைவராகிய; பகுவாயின் பாடியிலே – பிளந்த வாயாகிய ஊரிலே; உய்க்கும் – செலுத்தப் பெறும்;

11. இந்திரன் சேய் – இந்திரனுக்குப் பிறந்த அருச்சுனன்; இரட்டையர் – நகுல சகதேவர்; அரிவை – திரௌபதியாகிய பெண்; புந்தி – அறிவு; புந்தி (புத்தி) – விகாரம்; வந்தித்து – துதித்து.

12. மணிவண்ணா – நீலமணி போன்ற நிறமுடைய திருமாலே (கண்ணபிரானே); கஞ்சம் – தாமரை; கஞ்சமலர் – இரு

பெயரொட்டுப் பண்புத் தொகை ; வாரணம் – கஜேந்திரன் என்ற யானை ; மணிவண்ணு – உவமைத் தொகை.

13. தகவு இன்மை – தகுதியற்ற சொல் ; வேதாதிபனே – வேதங்களைக் கற்றுணர்வதில் தலைமை வாய்ந்த சகதேவனே ; ஏதோதான் விளம்பிக்காண் – யாதென்று சொல்க.

14. அந்த மறமன்னர் – அந்தக் கொடிய மன்னராகிய துரியோதனுதியர் ; அடியோமை – அடியவர்களாகிய எங்களை (பஞ்சபாண்டவர்களை) ; மன்னர் – இரு திறந்தார்க்கும் துணையாக வந்த பிற மன்னர் ; பாரதத்தால் – பாரதப் போரில் ; அடைவு – முறையாக.

15. புக்கு – புகுந்து.

16. போதாய் – வருக ; ஆரும் தலத்து – (கண்ணனின் சக்தி) நிறைந்த தூணினிடத்தில் ; திருமால் நரசிங்க அவதாரம் தாங்கி இரணியனைக் கொன்ற கதை கூறப்பட்டுள்ளமையைக் காண்க ; நெடியோன் – திருமால்.

17. கனல் – நெருப்பு ; சுடர் – நிலா ; என – என்றெல்லாம் சகதேவன் துதிக்க ; என்ருன் – என்று சகதேவனைக் கேட்டான் கண்ணன் ; நான்கு + திசை – நாற்றிசை ; குறிப்பு – எண்ணம்.

18. அருங்கானம் – கொடிய காடு ; அரவணை மேல் – ஆதிசேடன் என்ற பாம்புப் படுக்கைமீது ; காசினி – உலகு ; மண்ணளந்தாய் – மகாபலியினிடம் வாமன அவதாரம் தாங்கி வந்து மூன்றடி மண் இரந்து மண் விண் முதலியவற்றை அளந்த திருமாலே.

19. பார் – உலகம் ; மன்னவன் – துரியோதனனுகிய அரசன் ; சந்து – சமாதானம் ; கொற்றக் குடை – வெண் கொற்றக் குடை ; வெற்றியுடன் + நாம் + தருவோம் = வெற்றியுடனுந்தருவோம்.

## விஞக்கள்

1. வனவாசம் கழித்து வந்த பஞ்ச பாண்டவர்களைப் பார்த்துக் கண்ணபிரான் கேட்டன யாவை ?
2. தருமன்மீது வீமன் சினந்துரைத்தன யாவை ?

3. தருமனுக்கும் வீமனுக்குமிடையே நடந்த பொறுமையுரை யையும், சினவுரையையும் வரைக.

4. கண்ணபிரானிடம் தருமன் தன் முடிவை எங்ஙனம் விளக்கு கிருன் ?

5. விசயன், தருமன்மீது சினந்துரைத்த முறையை விளக்குக.

6. நகுலன், தருமன் மீது சினந்துரைத்தது யாது ?

7. கண்ணபிரானுக்கும், சகதேவனுக்கும் நிகழ்ந்த உரையாடலை விளக்குக. (15 வரிகளில் எழுதுக).

8. கீழ்க்காணும் தொடர்மொழிகள் வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

(அ) மன்னவரை மன்னவர்கள் மண்ணிரந்தார் இல்லைகாண்.

(ஆ) தனிமரமும் தோப்பாமோ தான்.

(இ) என்னேட் டெழுத்தோ இது.

9. இப்பாடப் பகுதியில் வந்துள்ள கதைப் பகுதிகளைத் திரட்டிக் கூறுக.

## (8) மனேன்மணீயம்

சீவகவழுதி என்ற பாண்டிய மன்னனின் மகளாகிய மனேன் மணியினது வரலாற்றைக் கூறுவதனுல் அந்நூலுக்கு அப்பெயர் அமைந்தது.

**நூலாசிரியர் :** சுந்தரம் பிள்ளை ; **பிறப்பிடம் :** ஆலப்புழை ; **தந்தை :** பெருமாள் பிள்ளை ; **தாய் :** மாடத்தி அம்மையார் ; **மரபு :** வேளாளர் ; **சமயம் :** சைவம் ; **காலம் :** கி. பி. 1855 – 1897; **பிற நூற்கள் :** திருஞானசம்பந்தர் காலவாராய்ச்சி, நூற்றொகை விளக்கம் முதலியன ; **பணி :** திருவனந்தபுரத்தில் அரசர் கல்லூரி யில் தத்துவப் பேராசிரியர்.

தீய அமைச்சனுன குடிலன் என்பவன், சீவக வழுதிக்கு, சேர நாட்டிலுள்ள நாஞ்சில் நாட்டு வளத்தைக் கூறுகிருன்.

## அருஞ்சொற்பொருள்

**வரி: 1—5**

நன்செய் நாடு – நாஞ்சில் நாடு ; அந்தம் இல் – முடிவு இல்லாத ; மருதம் – வயலும், வயல் சார்ந்த நிலமும் ; நெய்தல் – கடலும் கடல் சார்ந்த நிலமும் ; மயங்கு – கலந்திருத்தல் ; புரை அறு – குற்றம் நீங்கின.

**வரி: 6—16**

மழலை – இன்குரலொலி ; வண்டானம் – நாரையின் பெயர் ; புலர் மீன் – கருவாடு ; ஓம்புபு நுளைச்சியர் – காவல் செய்யும் நெய்தல் நிலப் பெண்கள் ; இரும்சிறை – கரிய சிறகை ; புலர்த்தும் – உலர்த்தும்படியான ; அலக்கண் – துன்பம் ; கேதகை – தாழை ; தாரா – கோழியின் பெயர் ; கோங்கு – கோங்க மரம் ; வால்வளை – வெண்மையான சங்கு ; சூல் உளைந்து – கர்ப்பத்தால் வருந்தி ; ஓதிமம் குடம்பை - அன்னப் பறவையின் முட்டை ; உன்னுபு – நினைத்து ; அடம்பு – அடப்பங்கொடி ; எறிகுழை – வினைத்தொகை ; நுண்மை + தாது = நுண்தாது ; உன்னுபு – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

**வரி: 17—22**

கரும்பு அடுசாலை – கருப்பஞ்சாறு காய்ச்சப்படும் இடம் ; மண்ட – நிறைய ; கூம்பிய – மூடிய ; கல் காரா – மலைப் பகுதியில் உள்ள பசு ; அலம் முகம் – கலப்பையின் நுனி ; அலமரும் – கலக்கமுறும் ; ஊடல் – பிணக்கு ; எறி குங்குமம் – வினைத்தொகை ; பூ + தளிர் = பூந்தளிர்.

**வரி: 23—26**

சினை – கிளை ; மருது – மருத மரம் ; நளி – பெருமை பொருந்திய ; விளி – ஒலி ; வேய் – மூங்கில் ; சாலி - நெற்பயிர் ; பஃறி – ஓடம் ; பூ + சினை = பூஞ்சினை ; உறங்கா – பலவின்பால் வினைமுற்று ; சாய்குலை – வினைத்தொகை.

**வரி : 26—81**

கொண்மூ — மேகம் ; அமிழ்து என்பது மழையைக் குறிக்கின்றது ; மிடி — துன்பம் ; சாரல் — சாரல் மழை ; இராப்பகல் — உம்மைத் தொகை.

**வரி : 32—38**

முந்நீர் — கடல் ; நீத்தம் — வெள்ளம் ; எய்யாது — குறையாமல் ; ஓவிறந்து — நீங்குதல் இல்லாமல் ; நன்மை + நீர் = நன்னீர் ; மூன்று + நீர் = முந்நீர்.

**வரி : 39—43**

திரணம் — புல்வகை ; பழனம் — வயல் நிலம் ; தூமுகை — தூய மொட்டு ; தூமம் இல் — புகையில்லாத ; கவடி — சோவி (விளையாட்டுக்குரிய ஒரு பொருள்) ; அலவன் — நண்டு ; நிலவொளி முத்து — உவமைத் தொகை ; நான்கு + நிறம் = நானிறம்.

**வரி : 44—52**

துகிர்க்கால் - பவழம் போன்ற கால் — உவமைத் தொகை ; புகர்க்கால் — புள்ளிகளுடைய கால் ; செங்கண் போத்து — சிவந்த கண்களுடைய செம்போத்து என்னும் பறவை; கம்புள் கோழியும் — செம்பங் கோழியும் ; குழீஇ—கூடி—சொல்லிசையளபெடை ; அந்தி அங்காடியின் — மாலைக் காலத்துக் கடையில் எழும்பும் பேரொலி போல ; சந்தம் — அழகு ; ஆர்தரும் — நிறையும்.

## வினாக்கள்

1. மனோன்மணீயத்தில் பறவையினம் எங்ஙனம் புனைந்துரைக்கப் படுகின்றது ?
2. விலங்கு பற்றிய புனைந்துரை யாது ?
3. நாஞ்சில் நாட்டு மழை வளம் எங்ஙனம் சிறப்பிக்கப்படு கின்றது ?
4. நாஞ்சில் நாட்டு நீர்வளம் எங்ஙனம் புனைந்துரைக்கப்படு கின்றது ?
5. நண்டு பற்றிய வருணனை யாது ?
6. அந்தி அங்காடியின் சந்தம் காட்டி — இத்தொடர் மொழி வந்துள்ள இடங்காட்டி விளக்குக.

# 4. பல்சுவைப் பகுதி

## புறநானூறு

புறம் + நானூறு = புறநானூறு – புறப் பொருளைப் பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய நூல் என்பது பொருள். அஃது எட்டுத் தொகையில் ஒன்றாகும். பல புலவர்கள் பாடிய பாடல்கள் அதில் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. காலம் : கி. பி. 2 ஆம் நூற்றாண்டு.

இப் பாடல் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியதாகும்.

### அருஞ்சொற்பொருள்

பொது + இயல் = பொதுவியல் – வெட்சி, கரந்தை முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான இலக்கணம் கூறல். பொருள் + மொழி + காஞ்சி = பொருண்மொழிக் காஞ்சி – முனிவர் முதலியோர், மக்கட்கு நிலையாமையை உணர்த்தி வீடுபேறு அடைவதற்குரிய உறுதிப் பொருள்களை மொழிதல்.

தெண்கடல் – தெளிந்த கடல்; வளாகம் – உலகம்; வெண்குடை – வெண் கொற்றக்குடை; ஒருமையோர் – தனி அரசாட்சி செய்வோர்; நடு நாள் யாமத்தும் பகலும் – நள்ளிரவிலும், நண்பகலிலும்; கடுமாப் பார்க்கும் – விரைவாக ஓடும் விலங்குகளைக் கொல்லப் பார்க்கும்; கல்லா – கல்வியறிவில்லாத; நாழி – மூன்றுழாக்கு ($\frac{3}{8}$ படி); தப்புந – தவறுவன.

## 1. புனைந்துரை

### (அ) மருதம்

இச்செய்யுள் கம்ப ராமாயணத்தில் உள்ளது. கம்பரைப் பற்றிய குறிப்புக்களை முன்னரே அறிந்துள்ளீர்கள்.

### அருஞ்சொற்பொருள்

தண்மை + தலை = தண்டலை – குளிர்ந்த இடமாகிய சோலை; தாமரை – செந்தாமரை; குவளை – நீலோற்பல மலர்; தெண்திரை – தெளிந்த அலைகள்; எழினி – திரைச் சீலை; மாதோ – அசைச் சொல்; தண்டலை – அசைச் சொல்.

### (ஆ) பூவின் விருந்து

இப்பாடலை **இயற்றியவர்,** புலவர் திரு. தணிகை உலகநாதன் அவர்கள். இவர், சென்னையில் தமிழாசிரியப் பணி புரிந்து வருகின்றார். மாணவ உலகிற்கு அரும்பெரும் தொண்டாற்றி வரும் படியான சென்னை மாணவர் மன்றத்தில் செயலாளராக இருக்கின்றார். அவர் சிறந்த கவிஞருமாவார்.

### அருஞ்சொற்பொருள்

கண்டு – கற்கண்டு ; பாடல்+நன்று=பாடனன்று ; தாது – மகரந்தம் ; மகரந்தமாகிய பொன்னுடையென்க ; மலரெனும் வள்ளல், வண்டெனும் பாவலர் – உருவகங்கள் ; பூ+தாது= பூந்தாது ; ஆழ்குளம் – வினைத்தொகை.

## 2. சீட்டுக் கவி

கவிதை வடிவில் கடிதம் வரைவதற்குச் சீட்டுக் கவி என்று பெயர். சீட்டுக் கவியை **இயற்றியவர் :** அந்தகக் கவி வீரராகவ முதலியார். இவர் பிறவிக் குருடர். செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள புதூரில் பிறந்தவர். அவரது **காலம் :** கி. பி. 1654. அவரியற்றிய **பிறநூற்கள் :** திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா முதலியன. அந்தகக் கவி வீரராகவ முதலியார், சந்திரவாணனுக்கு இச்சீட்டுக் கவியை எழுதியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள்

அநந்தை – அநந்தபுரம் ; கோவை – சிறு நூல் வகைகளுள் ஒன்று. தன்னை என்றது சந்திரவாணனை ; அநந்தை – மரூஉச் சொல் ; திறை – கப்பமாகச் செலுத்தும் பொருள் ; இன்னே – இப்பொழுதே

## 3 சிலேடை

### தனிப்பாடற்றிரட்டு

வெவ்வேறு காலத்திருந்த வெவ்வேறு புலவர் பலர் இயற்றித் தொகுக்கப்பட்டுள்ள நூலே தனிப்பாடல் திரட்டாகும். இப்பாடலை இயற்றிய புலவர் யார் என்பது அறியக்கூடவில்லை.

ஒரு சொல்லுக்குப் பலபொருள் அமையும்படி பாடுவது **சிலேடையாகும்.**

## அருஞ்சொற்பொருள்

அம்புலியூர் – சிதம்பரம்; அம்புலி + ஊர் = அம்புலியூர் – நிலா ஊர்ந்து செல்லும்படியான; அம்போருகத்தின் + அயன் + நத்து + இலகு + கைத்தலன் – தாமரையில் எழுந்தருளியுள்ள நான்முகன், சங்கைக் கையிலேந்திய திருமால்; சத்தி + நயனத்தி + இடத்தான் – வேல் போன்ற கண்களையுடைய உமாதேவியை இடப்பாகத்தில் ஏந்திய சிவன்; அடைமின் - ஏவல் பன்மை வினைமுற்று.

## வினாக்கள்

1. நக்கீரரின் பொருளுரையை விளக்குக.
2. மருத நிலம் எங்ஙனம் வருணிக்கப்படுகின்றது ?
3. 'பூவின் விருந்து' என்ற தலைப்புள்ள பாடலில் அமைந்திருக்கும் கற்பனையை விளக்குக.
4. அந்தகக் கவி வீரராகவ முதலியாரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
5. சந்திரவாணனுக்கு அந்தகக் கவி வீரராகவ முதலியார் அறிவுறுத்தியன யாவை ?
6. அம்போருகத்.........கைத்தலன் — இதிலுள்ள சொற்களைப் பிரித்துக் காட்டிப் பொருள் கூறுக.

# 4. சிறு பிரபந்தம்

## (அ) மீனாட்சியம்மை குறம்

மதுரையில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சியம்மையைப் பற்றிப் பாடப்படும் குறம் என்பது பொருள். குறம் என்பது தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். அதனை **இயற்றியவர்** குமரகுருபரராவார். இவரது **பிறப்பிடம் :** பாண்டிய நாட்டிலுள்ள

ஸ்ரீவைகுண்டம் ; **தந்தை :** சண்முகசிகாமணி கவிராயர் ; **தாய் :** சிவகாமசுந்தரி ; **காலம் :** கி. பி. 17ஆம் நூற்றுண்டு ; **பிற நூற்கள்:** சிதம்பரச் செய்யுட் கோவை ; சகலகலாவல்லிமாலே, நீதிநெறி விளக்கம் முதலியன.

## அருஞ்சொற்பொருள்

1. புயல் - மேகம் ; தமிழ் முனிவன் - அகத்தியன் ; அங்கயற்கண் அம்மை – மீனுட்சியம்மை ; தங்குபுயல் – வினைத் தொகை.

2. விழுந்த வள்ளி – தோன்றிய வள்ளிக் கிழங்குக் கொடியிலிருந்து ; கல்லி – தோண்டியெடுத்து ; தேறல் – தேன் ; மரவுரி – மரப்பட்டையாகிய ஆடையை ; வினை – தீவினையை ; கொழுங்கொடி – பண்புத் தொகை ; பசுமை + தழை = பசுந்தழை - பண்புத்தொகை ; சினவேங்கை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

## (ஆ) சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத் தமிழ்

### முந்தப் பருவம்

பொம்மபுரம் சிவஞான பாலய தேசிகர்மீது பாடப் பெறும் பிள்ளைத் தமிழ் என்பது பொருள். இந்நூலை **இயற்றியவர் :** துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவார். இவருடைய **தந்தை :** குமாரசாமி தேசிகர் ; **காலம் :** கி. பி. 18ஆம் நூற்றுண்டு ; **சமயம் :** வீர சைவம் ; துறைமங்கலம் அண்ணமலை ரெட்டியாரால் ஆதரிக்கப்பட்டவர் ; மேனுட்டுக் கிறித்தவச் சமயத்தவரும் தேம்பாவணி முதலிய பல தமிழ் நூற்களின் ஆசிரியருமான வீரமாமுனிவர் (பெஸ்கி) அவர்களின் காலத்தில் வாழ்ந்துள்ளார். வீரமா முனிவரும் சிவப்பிரகாச சுவாமிகளும் சொற்போர் செய்துள்ளார்கள்.

பிள்ளைத் தமிழ் என்பது கடவுளரையோ, மக்களிற் சிறந்தாரையோ குழந்தையாக நினைத்துப் பாடப்பெறும் ஒரு பிரபந்தமாகும். இது தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருகும். ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என

அஃது இரு வகைப்படும். பிள்ளைத் தமிழில் காப்புப் பருவம் முதலிய பத்துப் பருவங்கள் அமையும். நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதி முத்தப் பருவத்தில் அமைந்துளது.

### அருஞ்சொற்பொருள்

தேவர் உயிர் உண் கடு (நஞ்சு) எனச் சொற்களைக் கூட்டுக ; வேள் – மன்மதன் ; மன்மதனின் வில், வேழக் கரும்பாகும் ; அலமந்து – கலங்கி ; கதழ்எரி – மிகுந்த நெருப்பு ; வேய் – மூங்கில் ; அருள் இல் மொழி செல்லா – அருள் தன்மையற்ற மொழி அமையாத ; சிவஞான பாலய தேசிகராகிய குழந்தையின் வாய் முத்தம் அருள் தன்மைக் குரியது ; ஆனால் ஏனைய முத்துக்கள் அருள் தன்மைக் குரியனவல்ல என்பதாம் ; திருநெல்வேலியிலுள்ள மூங்கிற் புதரின்கண் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதால் அங்கு விளையும் முத்து, தீங்கு பயவாததாயிற்று. வேழக் கரும்பு– இரு பெயரொட்டுப் பண்புத்தொகை ; கதழ்எரி - வினைத்தொகை ; வேய் முத்தம் – ஆறும் வேற்றுமைத் தொகை.

## 5. வழிபாட்டுப் பாடல்கள்

### (அ) திருமால்

திருமாலைப் பற்றிய இப்பாடல் திருமங்கையாழ்வாரால் இயற்றப்பட்டது ; இவருடைய **தந்தை :** நீலி என்னும் படைத்தலைவர் ; திருமங்கையாழ்வார் ஒரு மன்னராவார் ; இவர் பல சிற்றரசர்களை வென்றுள்ளார் ; **காலம் :** கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு ; **சமயம் :** வைணவம் ; பன்னிரண்டாழ்வார்களில் இவர் ஒருவராவார்.

### அருஞ்சொற்பொருள்

குலம் - உயர்குலச் சிறப்பு ; நிலந்தரஞ் செய்யும் - மண்ணிலே மடியச் செய்யும் ; நீள் விசும்பு – பரந்த பேரின்ப வீடு ; வலம் – வெற்றி ; பெற்றதாயினும் ஆயின செய்யும் - பெற்றெடுத்த தாயால் ஏற்படும் நன்மைகளை எல்லாம் செய்யும்.

### (ஆ) முகமது நபி

முகமது நபியைப் பற்றிய இப்பாடல் உமறுப் புலவரால் இயற்றப்பட்டது. இவரைப் பற்றிய குறிப்புக்களைச் சீறுப் புராணத்தில் காண்க.

## அருஞ்சொற்பொருள்

மெய்ப்பொருளை – உண்மைப் பொருளாகிய இறைவனை ; முக்காலமும் உணர்ந்து – மூன்று கால நிகழ்ச்சிகளை உணர்ந்து ; இதய ஆசனம் – உள்ளமாகிய இருப்பிடம் – உருவகம் ; மதி மறந்தவர் – அறிவிழந்தவர் ; மண் – மண்ணுலகம் ; **முக்காலம்** (உணர்ந்து) – காலவாகு பெயர் ; இன்ப துன்பம் – உம்மைத் தொகை ; மூன்று + காலம் = முக்காலம்.

## (இ) ஏசுநாதர்

ஏசுநாதரைப் பற்றிய இப்பாடல், திரு. வி. க. அவர்களால் இயற்றப்பட்டது. இவரைப் பற்றிய குறிப்புக்களை வாழ்த்துப் பகுதியில் காண்க.

## அருஞ்சொற்பொருள்

வதைக்கவிட்டாய் – யூதர்கள் சிலுவையில் அறைந்து துன்புறுத்திக் கொல்லும்படி விட்டுவிட்டாய் ; எக்குரவர் – எந்தப் பெரியார் ; இளங்கன்னி – மரியன்னை ; இறைமை – தலைமை ; ஆகாதே – இயலாதே ; 'என்பும்.........உரியரென'...... — இவ்வடியில் குறள் கருத்திருப்பதைக் காண்க.

## (ஈ) காந்தியடிகள்

காந்தியடிகளைப் பற்றிய பாடல் வித்துவான் பொ. இராமலிங்கம் அவர்களால் இயற்றப்பட்டது.

## அருஞ்சொற்பொருள்

இயல் – தன்மை ; புன்புலை – மிகவும் தாழ்ந்த ; வன்கணர் – கொடியவர் ; இன்னா – துன்பத்தை ; கயவன் – காந்தியடிகளைக் கொன்ற கீழ்மகன் ; நாள் உலந்து – வாணாள் அழிந்து.

## வினாக்கள்

1. பொதியமலையின் சிறப்புக்கள் யாவை ?
2. குறக்குடிக்கடுத்த இயல்புகள் யாவை ?
3. பிள்ளைத்தமிழ் — குறிப்பு வரைக.
4. சிவப்பிரகாச சுவாமிகளைப் பற்றிக் குறிப்பு வரைக.

5. சிவஞான பாலய தேசிகராகிய குழந்தையின் வாய் முத்தமே சிறந்ததாவதெங்ஙனம்? ஏனைய முத்துக்கள் சிறப்புருமைக் குள்ள காரணத்தைப் புலப்படுத்துக.

6. நாராயணு என்னும் நாமம் மொழிவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

7. எந்தெந்தத் தன்மையுடைய இறைவனை மறக்கக்கூடாதென்று உமறுப் புலவர் கூறுகிருர்? அங்ஙனம் மறப்பதால் ஏற்படும் தீங்கினைக் குறிக்க.

8. ஏசுநாதரை, திரு. வி. க. அவர்கள் எவ்வெப்படிப் பாராட்டுகிருர்?

9. காந்தியடிகளின் உயர் பண்புகளைக் கூறுக.

TB
031(10)
N67
13 0150
தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.

# உரை நடைப் பகுதி

## 1. இசைக்கலை

[வித்துவான் அ. நாராயணசாமி அவர்கள்]

இசை ஓர் அரிய கலை. வண்டுகள் முரல்வதையும், குயில்கள் கூவுவதையும், அருவிகள் ஒலிப்பதையும் கேட்டு மாந்தர் வியந்தனர்; இவ்வாறு இயற்கையிற் கேட்டுணர்ந்த ஓசை வேறுபாடுகளைத் தாமும் தம்முடைய குரலால் எழுப்பி இன்புற்றனர்; தம்முடைய குரலொலியை நாளடைவில் ஒழுங்குபடுத்திக் கேட்பதற்கு இன்பம் பயக்குமாறு செய்து கொண்டனர்; தம் மனத்தில் எழுந்த உணர்ச்சி வேறுபாடுகளை இசையின் மூலம் வெளியிடத் தொடங்கினர். நாளடைவில் அவ்விசை, கலையாய் வளர்ந்தது. பின்னர், அவ்விசைக்குப் பல பிரிவுகள் அமைக்கப்பட்டன. அவையே பண்கள் எனப்படும். அப்பண்களே பின்னர், பண், பண்ணியல், திறம், திறத்தியல் என இலக்கண அமைதியோடு எழுந்தன. வடநூலார் இவ்விசை சாம வேதத்தினின்றும் தோன்றியது என்று கூறுவர். இசை நுணுக்கம் பெருநாரை, பெருங்குருகு முதலிய இசை இலக்கண நூல்கள் தமிழகத்தில் எழுந்தன. ஆனல், பல்வேறு காரணங்களால் நாளடைவில் அந்நூல்கள் மறைந்தன.

நாத மாத்திரையாய்க் குறியீட்டிலக்கணங்களோடு அமைந்த இசையை ஒரு வகையாகவும், பொருள் நன்கு விளங்கும்படியான பாடல்களோடு விளங்குவதை மற்ெறாரு வகையாகவும் கூறுவர். முன்னையதைப் பெரும்பாலும், இசை நுணுக்கம் நன்குணர்ந்தவர்களே துய்க்க இயலும். ஆனல் பொருள் விளங்கும் பாடல்களோடு அமைந்த இசையை யாவரும் எளிதில் அனுபவிக்கலாம்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில், இசை நடுநிலையாய் அமைந்திருக்கின்றது. இசை இயலிலும், இயல் இசையிலும் விரவிவரும். அவ்விரண்டும் விரவி நடித்துக் காட்டுவது நாடகமாகும்.

இயற்றமிழ்ச் செய்யுட்களை இசையுடன் பயின்றால் தான் அவற்றின் பொருள், கருத்து, சுவை முதலியன நன்கு புலனாகும். காவிய இன்பத்தைச் சுவைத்தற்கும் இசை பெருந்துணை புரிகின்றது. சுவை மிக்க உணவும் அளவுக்கு மிஞ்சினால் தெவிட்டிவிடும். ஆனால், இசையோடு கலந்த கவியோ, தெவிட்டாத இன்பம் பயக்கும்.

" தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் ", என்று திருநாவுக்கரசு அடிகளும் கூறுகின்றார். சிலப்பதிகாரம், பரிபாடல், இடைக்காலத்தில் தோன்றிய தேவாரம் முதலிய நூல்கள் தொன்று தொட்டு நம் நாட்டில் விளங்கி வந்துள்ள இசைக் கலையின் பெருமையை அறிதற்கு எடுத்துக் காட்டுக் களாய்த் திகழ்கின்றன.

இசைக்குப் பெருந்துணை புரிவன இசைக் கருவிகள். இவை தோற் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்பனவாகும். இசையால் அமைந்த பாடல்களை ஒரு வித ஒழுங்கு முறையில் அமைக்கத் தாளம் என்ற கால அளவு ஏற்படுத்தப்பட்டது. இசைக்குரிய தாளத்திற்குப் பயன்படுவனவே தோற் கருவிகளாகும். அவை முழவு (மத்தளம்), மிருதங்கம், கஞ்சிரா முதலியவை யாகும். குழல், நாதசுரம் முதலியன துளைக்கருவிகளாகும்.

" குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

என்ற குறளால் குழல், யாழ் என்பன அக்காலத்தே இனிமை மிக்க இசைக் கருவிகளாய்க் கையாளப்பட்டு வந்தன என்பது புலனாகின்றது. குழல் என்பதைப் புல்லாங்குழல் என்றும், வேய்ங்குழல் என்றும் வழங்குவர். வேய் என்ப தற்கு மூங்கில் என்பது பொருள். மூங்கிலினால் செய்யப் பெற்ற குழல் வேய்ங்குழல் என்று வழங்கலாயிற்று. இக் குழலுக்குரிய துளைகளை இசையின் குறியீட்டிலக்கணத்திற் கேற்ப அமைத்திருப்பர். குழலிசை மக்களையன்றி விலங்கு களையும் இன்புறுத்தும் இயல்பினது.

கண்ணன் புல்லாங்குழலை எடுத்து வாசிக்குங்கால், ஆக்களும், ஏனைய விலங்குகளும் அங்கு வந்து கண்ணனைச் சூழ்ந்து மெய்ம்மறந்து நின்றன என்பதை ஆழ்வார் பாசுரங்களால் அறிகின்றோம். சைவ சமய குரவர்களுள் ஒருவரான ஆனாய நாயனார் வேய்ங்குழலினால் எழுப்பிய இசையைக் கேட்டு, விலங்குகள் மெய்ம்மறந்து கூடின என்பதேயன்றி, ஆண்டவனே அவருடைய இசையில் ஈடுபட்டு, அவரைத் தம்மோடு இணைத்துக் கொண்டார் என்ற செய்தியைப் பெரிய புராணத்தின் மூலம் அறிகின்றோம்.

யாழிசைக்கு யானை முதலிய விலங்குகளும் கட்டுப்பட்டன என்பதைப் பழந்தமிழ் நூல்கள் மூலம் அறிகின்றோம். உதயணன் என்னும் வேந்தன் யாழிசையில் தேர்ந்தவன். அவனை உச்சயினி நாட்டு வேந்தனான பிரச்சோதனன் என்பான் சிறை செய்தான். அந்நாட்டுப் பட்டத்து யானைக்கு மதம் பிடித்து அஃது ஊரை அழிக்கத் தொடங்கியது. மாவீரர்களாலும் அடக்க முடியாத அவ்யானையைச் சிறைப்பட்டிருந்த உதயணன் தன்னுடைய யாழிசையால் அடக்கினான். இது பெருங்கதை என்னும் தமிழ் நூலில் காணப்பெறும் ஒரு செய்தியாகும்.

தமிழகத்தில் பாணர் என்னும் குலத்தினர் இசையை நன்கு பயின்று பாடுவதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை நூல்கள் வாயிலாக அறிகின்றோம். அவர்களைப் பல வள்ளல்கள் ஆதரித்தனர். அவர்கள் யாழிசையினைக் கொண்டு தம் பாடலை இசைப்பார்கள். அவர்களை 'யாழ்ப்பாணர்' என்று கூறுவர்.

இவ்வாறு ஆதிகாலந்தொட்டு வளர்ந்து வந்த இசைக்கலை பிற்காலத்தில் இசையில் தேர்ந்த பல பெரியோர்களின் தொண்டினால் வளர்ந்திருக்கின்றது. சீர்காழி, மாயூரம், முதலிய இடங்களில் அரசியல் பணியாற்றிய வேதநாயகம் பிள்ளை கணக்கற்ற கீர்த்தனங்களைத் தமிழில் இயற்றித் தமிழிசையை வளர்த்திருக்கிறார். இவர் இயற்றிய கீர்த்தனைகளடங்கிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் என்னும் நூல் மிகச் சிறப்புற்று விளங்குகின்றது.

கோபாலகிருஷ்ண பாரதியார் என்ற இசைச் செல்வர் திருநாளைப் போவாரது (நந்தனாரது) சரித்திரத்தைத் தமிழில் இசையழகு நிறைந்த பாக்களாகப் பாடியிருக்கின்றார். அவர் திருவாவடுதுறையில் வதிந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தம்முடைய பாடற்சுவடிகளைக் காட்டிச் சிறப்புப்பாயிரம் தருமாறு வேண்டினார். பிள்ளையவர்கள் சுவடிகளைப் பார்வையிட்டுச் சிற்சில இடங்களில் பிழைகள் இருக்கக்கண்டு சிறப்புப்பாயிரம் கொடுக்க மறுத்து விடடார். ஆனால், பாரதியார் தம் முயற்சியைக் கைவிடாமல் சின்னாட்கள் திருவாவடுதுறையிலேயே தங்கியிருந்து பிள்ளையவர்களைக் காணுந்தோறும் தம் வேண்டுகோளை நினைவுபடுத்திக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் பிள்ளையவர்களைப் பார்க்க வந்த நேரத்தில் பிள்ளையவர்கள் வீட்டினுள்ளே ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கவே, வெளித் திண்ணையில் உட்கார்ந்து தாம் இயற்றிய நந்தனார் கீர்த்தனங்களுள் ஒன்றான "கனக சபாபதி தரிசனம் ஒரு நாள் கண்டால் கலிதீரும்" என்ற பாட்டை உள்ளம் உருகப் பாடிக் கொண்டிருந்தார். அப்போது உள்ளே ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பிள்ளையவர்கள் அப்பாட்டின் கருத்தழகிலும், இசையினிமையிலும் ஈடுபட்டு மெய்ம்மறந்தார். பாட்டு முடிந்ததும் பிள்ளையவர்கள் வெளியில் வந்து பாரதியாரைப் போற்றிப் புகழ்ந்து அவருடைய கீர்த்தனங்கட்கு அழகிய சிறப்புப்பாயிரம் வழங்கினார். இவ்வாறு பாட்டின் இலக்கண உருவம் சிறிது தவறுடையதாயினும், அதன் இசையின்பம் பெரும் புலவரையும் ஈர்த்தது.

சிந்து, பள்ளு முதலியனவும் இவ்விசையைக் கொண்டு பாடப்பெறும். அண்ணாமலை ரெட்டியார் என்பார் முருகனுடைய இயல்புகளைத் தொகுத்துக் காவடிச்சிந்து என்ற பெயரால் பல பாக்களைப் பாடியுள்ளார். அருணாசலக் கவிராயர் இராமாயணத்தைத் தமிழில் இசைப்படுத்திச் சீரிய முறையில் பாடியுள்ளார். இத்தகைய பழமையும், பெருமையும் வாய்ந்த இந்நாட்டு இசைக் கலை, ஏனைய கலைகளான ஓவியம், சிற்பம் முதலிய யாவற்றினும் சிறந்து விளங்கும் நிலையில் பல்வேறு இசைக் கழகங்கள் மூலமாகவும் வேறு

பல துறைகள் மூலமாகவும் வளர்ந்து மக்களின் உள்ளத்தில் இன்பத்தைப் பெருக்கி வருகின்றது.

## அருஞ்சொற்பொருள்

முரல்வது – ஒலிப்பது (ரீங்காரம் செய்வது); நாதமாத்திரை – ஒலி அளவு; விரவி – கலந்து; துய்க்க – அனுபவிக்க; குரவர்கள் – பெரியவர்கள்; புலனாகும் – வெளிப்படும்; கனக சபாபதி – பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள தலைவனாகிய சிவன்; கலிதீரும் – துன்பம் நீங்கும்; சிறப்புப்பாயிரம் – நூலாசிரியரைச் சிறப்பித்து, நூலின் முகப்பிலே அமையும்படி ஒரு புலவர் பாடும் பகுதி.

## வினாக்கள்

1. இசை, ஒரு கலையாய் வளர்ந்த தெங்ஙனம்?
2. பழங்காலத்திலிருந்த இசை நூற்களின் பெயரைக் கூறுக.
3. இசைக் கலையின் பெருமைகளை எடுத்துக் காட்டுக.
4. இசைக் கருவிகளின் வகைகளைத் தெரிவிக்க.
5. குழலிசை பற்றிக் குறிப்பெழுதுக.
6. யாழிசைக்கு யானையும் அடங்கியது என்பதற்கு ஒரு சான்று தந்து விளக்குக.
7. பிற்காலத்தில் இசைக் கலையை வளர்த்த பெரியார் யாவர்?
8. கோபால கிருஷ்ண பாரதியார் தம் இசை நூலுக்குச் சிறப்புப் பாயிரம் பெற்ற தெங்ஙனம்?

## 2. குடும்பக் கலை

[திரு. கோ. சந்திரமவுலீஸ்வரன், M. A., B. O. L., B. T.]

முன்னுரை :

நாம் வாழும் பாரத நாட்டில் மக்கள் பண்டைக் காலந் தொட்டே சீரிய நாகரிக முறையில் வாழ்ந்து வந்தனர். அதற்குக் காரணம் அவர்தம் குடும்பங்களேயெனில் மிகை யாகாது. சமூக நலத்திற்கும் வளர்ச்சிக்கும் அவைகளே அடிப்படையாய் அமைந்தன. சுதந்தர இந்தியாவில் மக்கள் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். ஆடவருக்கும் பெண்டி ருக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. பெண்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும்; ஆடவர்கள் பிழைப்பிற் கென வெளியே சென்று உழைக்க வேண்டும் என்ற நிலை மாறிக் கொண்டே வருகிறது. ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் கல்வி கற்க முனைந்துள்ளனர். குழந்தைத் திருமணங்கள் சட்டத்தின் வாயிலாகத் தடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குடும்பக் கலையின் இன்றியமையாமையைப் பெற்றோர்களும், சிறுவர்களும் புறக்கணிக்கின்றனர். எனவே, குடும்பக்கலை நல்வாழ்வு நடத்த எங்ஙனம் உறுதுணையாய் அமைந்துள்ளது என்பதைக் காண்போம்.

குறிக்கோள் :

மக்கள் வாழ்க்கையில் நிறைந்த இன்பத்தைப் பெறுவதே குடும்பக் கலையின் நோக்கம். இல்லறமே நல்லறம் எனப் படும். மக்கள் சமூகத்திற்கு அடிப்படையானது குடும்பம். ஒரு குடும்பத்தில் தந்தை, தாய், குழந்தைகள் முதலியோர் வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்தைக் காப்பாற்ற வெளியே சென்று உழைத்து ஊதியம் பெறுபவன் **தந்தை**; செல்வத் திலும் இன்பத்திலும் துன்பத்திலும் அவனுக்கு உறுதுணை யாய் அமைந்து குடும்பத்தை நடத்துபவள் **தாய்**. இவர்கள் குடும்பக் கலையை அறிந்திருந்தால் குடும்பத்தை இனிது நடத்தலாம்.

குடும்பக் கலை :

குடும்பக்கலையின் வாயிலாக நல்ல உணவு, உடை, குழந்தை வளர்ப்பு, வீட்டு ஆட்சி, உடல் நலம், சமூகத் தோடு நமக்குள்ள உறவு முதலியவற்றை நாம் தெரிந்து கொள்ளலாம்.

முதன் முதலாக நாம் உணவைப் பற்றி நன்கு அறிதல் வேண்டும். உணவு செய்யும் வேலைகளுக்குத் தகுந்தபடி அதைச் சில பகுதிப் பொருள்களாகப் பிரித்துள்ளனர் விஞ்ஞானிகள். அவை கார்போ ஹைடிரேட்டுக்கள், கொழுப்புக்கள், புரோட்டீன்கள், தாது உப்புக்கள், நீர், வைட்டமின்கள் என ஆறு வகைப்படும். வைட்டமின்கள் என்னும் சத்துக்களின் குறைவால் நோய்கள் தோன்றும். அவற்றை அறிந்து போக்கவேண்டும். நோய்வாய்ப்பட்டோ ருக்கு ஏற்ற உணவு யாதென அறிந்து கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாகக் குடும்ப ஆட்சியைப் பற்றி அறிய வேண்டும். வீடு கட்டுவதற்கு ஏற்ற இடத்தைத் தேடி வீடு கட்ட வேண்டும். அவ்வீட்டில் சமைப்பதற்கும், சாப்பிடு வதற்கும், உறங்குவதற்கும், குழந்தைகள் படிப்பதற்கும், பொருள்களைச் சேமித்து வைப்பதற்கும், விருந்தினர்களை உபசரிப்பதற்கும் ஏற்ப இடங்களை அமைக்க வேண்டும். அது வெளிச்சமுள்ளதாகவும், காற்றோட்ட வசதியுள்ள தாகவும் அமைய வேண்டும். தோட்டம் அமைக்கத் தகுந்த இடம் வேண்டும். ஏழைகள் குடியிருக்கும் வீடுகளில் அறைகளைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வருவாய்க்குத் தக்கபடி வாங்கிக் கொள்ளவேண்டும். வீட்டை அழகாக வைத்திருக்க வேண்டும். வீட்டு வேலைகளைக் குடும்பத்தில் உள்ளவர்கள் பகிர்ந்து கொண்டு கால அட்டவணைப்படி செய்தல் நலம். வரவு செலவு என்ன ஆகும் என்பதைக் குறிப்பாக முன்ன தாகவே எண்ணி ஒரு திட்டம் போட்டுக் கொள்ளவேண்டும். அவ்வாறு திட்டம் போடுங்கால் வீட்டு வாடகை, உணவு, உடை, வீட்டு ஆட்சிக்காக ஏற்படும் செலவு, குழந்தை

களின் படிப்பு, சேமிப்பு முதலியவற்றைக் கூர்ந்து ஆராய்தல் வேண்டும்.

குடும்பத் தலைவி உடையைப் பற்றி அறிய வேண்டும். பருத்தி, பட்டு, கம்பளி முதலிய உடைகளின் பண்பை அறிந்து காலத்திற்கேற்றவாறு அவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஆடைகளைத் துவைத்து, மடித்துப் பெட்டி போடக் கற்றுக் கொண்டால் ஆடைகள் நெடு நாட்கள் கிழியாமல் இருக்கும். குடும்பத் தலைவி தையல் இயந்திரத்தைக் கொண்டு குழந்தைகளின் உடுப்பைத் தைக்கக் கற்றிருத்தல் நல்லது. ஓய்வு நேரத்தைப் பயன் தரும் முறையில் கழிக்க வேண்டும்.

குடும்பத்தில் உள்ளவர்கள் நல்வாழ்வை நடத்தக் குடும்பத் தலைவி துணைபுரிதல் வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் எடையும் உயரமும் அவரவர்கள் வயதிற்கேற்றவாறு இருக்கின்றனவா என்று அறிந்து ஆவன செய்தல் நலம் தரும். பெரும்பாலும் வீட்டில் தோன்றும் நோய்களைப் போக்கும் மருந்துகளை அறிந்து, நோய்வாய்ப்பட்டோருக்குத் தக்க வசதியளிக்க வேண்டும்.

குழந்தையை வளர்க்கும் பொறுப்பு மிகவும் முக்கியமானது. குழந்தையைக் குளிப்பாட்டுவதிலும், அதற்கு உணவு கொடுப்பதிலும் மிக்க கவனம் செலுத்தி நோய் அணுகாவாறு பாதுகாக்க வேண்டும். குழந்தைகளிடையே பெருவாரியாகத் தோன்றும் வயிற்றுக் கடுப்பு, மலச்சிக்கல், கக்குவான், காய்ச்சல் போன்ற நோய்கள் வந்தால் தக்க மருந்துகளைக் கொடுக்க வேண்டும். தகுந்த காலத்தில் அம்மை குத்த வேண்டும்.

குடும்பத்தில் உள்ளவர்கள் அன்புடன் பழக வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்கள் நண்பர்களுடனும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடனும் நன்றாய்ப் பழக வேண்டும்; பண்டிகைகளைக் கொண்டாட வேண்டும்; உற்றார்

உறவினரை அழைத்து அவர்களை நல்ல முறையில் உபசரிக்க வேண்டும்; ஊரில் நடைபெறும் பொது விழாக்களில் பங்கு கொள்ள வேண்டும். சமூகத்தோடு தொடர்பு கொண்டு நாட்டின் நலத்திற்காக உழைக்க வேண்டும்.

**குடும்பத் தலைவி :**

> ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.''

என்று முப்பால் கூறும்.

ஈண்டுக் குறிப்பிட்டவற்றுள் கணவனை உண்டி முதலிய வற்றால் உபசரித்தல் தலைவியின் சிறந்த கடமையாகும். எனவே, சமையற் கலையில் சிறப்புற்ற செல்வியே கணவன் கருத்தைக் கவரும் காரிகையாவாள். மணப் பருவம் வரை பள்ளியில் பயின்று வரும் நங்கையர் ஏட்டுக் கல்வியே உயி ரெனக் கருதிப் பேணி வருகின்றனர். அவர்கள் பின்னல், தைத்தல், சங்கீதம் முதலியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆனால் அவர்கள் சமையல் அறையில் புகுவதும், சமையல் செய்யக் கற்றலும், வீட்டு வேலைகளைச் செய்தலும் இழிவெனக் கருதுகின்றனர். சத்துள்ள உணவை அறிந்து, பக்குவமாகச் சுவையுடன் சமைத்துக் குடும்பத் தினருக்கு அளித்தல் வேண்டும். கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் வாழ்வதற்கு இஃது ஒன்றே சாலும். எத்துணைக் கருத்து வேறுபட்ட கணவனையும் தன்பால் இழுக்கும் காந்த சக்தி இதுவே. அன்புடன் அறுசுவை அளிப்பாரை வெறுப்பவர் யார் ?

**வருவாய்க் கேற்ற செலவு :**

குடும்ப வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம் வருவாய்க் குத் தக்க செலவு செய்தலேயாகும். ஏழைக் குடும்பங்கள் செல்வக் குடும்பங்களைப் பார்த்துத் தமக்கொவ்வாத செயல் களில் தலையிடுதல் கூடாது. நம் நாட்டில் பெண் கொள் வோர் பெண் கொடுப்போரிடம் ஏராளமான தொகையைப் பெற விழைகின்றனர். இது சமூகத்தில் காணப்படும்

ஊழலாகும். இதனை அறவே களைதல் வேண்டும். பெண் வீட்டார் கொடுக்கும் பணத்தைக் கருதாது பெண்ணின் நற்குண நற்செயலைக் கண்டு நங்கையைக் கொள்ளுதல் நன்மகன் செயலாகும். இத்தகைய குடும்பங்களில் தீராப் பூசல்கள் உள்ளன. மேலும் மணம், மரணம் போன்ற சமயங்களில் நம்மவர் பிறர் தம்மை நன்கு மதிக்க வேண்டு மென்று ஏராளமாகச் செலவு செய்கின்றனர். தங்கள் நிலையறிந்து செலவு செய்தலே சிறப்புடையது. எத்தகை யோரும் சிக்கன வாழ்வை மேற்கொண்டு வறுமைக் காலத்திற்கெனவும், முதுமைப் பருவத்திற் கெனவும் சேமித்து வைக்க வேண்டும்.

பாதுகாப்பும், முதலுதவியும் :

வீட்டில் உள்ளவர்களின் கவனக் குறைவால் பல ஆபத் துக்கள் நேரிடலாம். அடுப்பினருகே குழந்தைகளை விடுதல், நெருப்பை முற்றிலும் அணைக்காமல் இருத்தல், விளக்கின் அருகே விரைவில் தீப்பற்றும் பொருள்களை வைத்தல், மருந்துப் புட்டிகளைக் குழந்தைகள் கையில் எடுக்கும்படி வைத்தல், கண்ணுடிப் பாத்திரங்களை அவர்கள் விளையாடு மாறு வைத்தல் முதலிய செயல்கள் நடைபெருவண்ணம் இருத்தல் நல்லது. தீப்பிடித்தல், கத்தியால் கையை வெட்டிக் கொள்ளுதல், நச்சுப் பொருள்களை உண்ணுதல் முதலியவை நிகழும் சமயங்களில் முதல் உதவி செய்ய வேண்டும்.

முடிவுரை :

எனவே, குடும்பத்தை நடத்துதல் எளிதன்று. குடும் பத்தில் உள்ளவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தலை சிறந்தவர்களாய் விளங்க வேண்டும். அத்தன்மை வாய்ந்த குடும்பமே நாட்டின் செல்வமாகும்.

## அருஞ்சொற்பொருள்

*சீரிய* – சிறந்த ; *முனைந்துள்ளனர்* - முற்பட்டுள்ளனர் ; *புறக்கணித்தல்* - நீக்குதல் ; *ஊதியம்* - சம்பளம் ; *உறுதுணை* -

மிகவும் துணையாக ; தற்காத்து - மனைவி, தன் கற்பொழுக்கத்தால் தன்னைக் காப்பாற்றி ; தற்கொண்டான் - தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்ட கணவனை ; சொல் காத்து - புகழைக் காப்பாற்றி ; சோர்வு இலாள் - உறுதிப்பாடுடையவள் ; ஈண்டு - இவ்விடத்தில் ; உண்டி - உணவு ; காரிகை - பெண் ; களைதல் - நீக்குதல் ; பூசல் - பிணக்கு.

## வினாக்கள்

1. குடும்பக்கலையின் நோக்கத்தைப் புலப்படுத்துக.
2. குடும்பத்தில் உணவுபற்றி நாம் அறியவேண்டியன யாவை ?
3. வீடு எங்ஙனம் அமைய வேண்டும் ?
4. குடும்பத்தில் உடை பற்றி அறிய வேண்டியன யாவை ?
5. குழந்தை வளர்க்கும் முறையை விளக்குக.
6. குடும்பத்தில் உள்ளவர்கள் எவ்வெப்படிப் பழக வேண்டும் ?
7. மனைவி, எந்தெந்தக் கலையில் பயிற்சியுள்ளவளாக இருக்க வேண்டும் ?
8. வருவாய்க்கேற்ற செலவு செய்வதெங்ஙனம் ?
9. வீட்டில் எந்தெந்த வகையில் இடர்ப்பாடுகள் ஏற்படலாம் ?

## 3. பிள்ளைக் கவிஞர்

[புலவர் தி. முருகுசுந்தரம், எம். ஏ.]

**பிறப்பு :**

பாவேந்தர் பாரதிதாசனின் தந்தை கனகசபை முதலியார் புதுச்சேரியில் பெரிய வணிகர். மணிலா முதலிய பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டியவர். எதிர்பாராமல் ஏற்பட்ட இழப்பால் முதலியாரின் வாணிபம் முறிந்தது. வளமான வாழ்வை யிழந்து வறுமையுற்ற காலத்தில், அவருக்குப் பிள்ளையாய்ப் பிறந்தார் பாவேந்தர். சுப்புரத்தனம் என்று பிள்ளைப் பெயர் சூட்டிப் பெற்றோர் அவரை அன்புடன் வளர்த்தனர்.

**கல்வி :**

திருப்புளிசாமி ஐயா என்பவர் ஒரு வைணவர் ; தமிழில் நல்ல புலமை வாய்ந்தவர். அவர் புதுச்சேரியில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்தி வந்தார். பிரெஞ்சு அரசாங் கத்தார் நடத்தும் துவக்கப் பள்ளியொன்றில் ஐந்தாண்டுகள் கல்வி பயின்றபின் இளைஞர் சுப்புரத்தனம் முறையாகத் தமிழ்க் கல்வி பெறுவதற்காகத் திருப்புளிசாமியிடம் வந்தார்; அவரிடமும், பங்காரு பத்தர் என்பவரிடமும் தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வி முறையாகப் பயின்றார். பின்னர் அந்நகரி லிருக்கும் கால்வே கல்லூரியில் சேர்ந்து தனித் தமிழ்ப் புலவர் தேர்விற்காகப் பயின்றார்.

கால்வே கல்லூரியில் அப்போது தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் புலவர் பெரியசாமிப் பிள்ளை என்பவர். அவர் மகாவித்வான் என்றும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அப்போது தமிழ்ப் புலமை நடாத்தி வந்த அரசஞ் சண்முக னாருக்கு ஒப்பான புலமையுடையவரென்றும் அவரைப்பற்றிப் பாவேந்தரே கூறுவதுண்டு. மாணவர்க்குப் பாடஞ் சொல்லு வதிலும் பெரியசாமிப் புலவர் வல்லவர்.

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அழகாகக் கவிதை எழுதும் ஆற்றலும், இசையோடு பாடும் ஆற்றலும், நாடகங்

களில் திறம்பட நடிக்கும் ஆற்றலும் ஒருங்கே பெற்றுச் சுப்புரத்தனம் விளங்கினார். அவருடைய இசையினிமையில் ஈடுபட்டோர் அவரைப் பள்ளி நாடகங்களில் முக்கிய நடிக ராக்கி மகிழ்ந்தனர். எனவே, எதிர்காலத்தில் முத்தமிழ் வித்தகராக விளங்குதற்குரிய அறிகுறிகள் இளமையிலேயே அவரிடம் காணப்பட்டன. கணிதத்திலும், கட்டுரை வன்மை யிலும் அவருக்கொப்பான மாணவர் வேறு யாரும் இலர். அவருடைய நுண்ணறிவையும் படிப்பாற்றலையும் கண்ட அரசியலார், கல்லூரியில் பயிலும் போது அவருக்கு உதவித் தொகை கொடுத்து ஊக்கினர். சுப்புரத்தனமும் தமது பதினாறும் அகவையில் கல்லூரியிலேயே முதல்வராகத் தேறிப் புலவரானார்.

**தமிழாசிரியர் :**

நிரவியில் உள்ள அரசாங்கப் பள்ளியில் தமிழாசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். அவ்வோரிடத்துக்குச் சுப்பு ரத்தனத்தோடு புலவர் தேர்வில் வெற்றி பெற்ற முப்பது பேரும் போட்டியிட்டனர். அவர்களில் மேலிடத்துச் செல்வாக்குப் பெற்றவர்களும் சிலர் இருந்தனர். எனவே, தம் மகனுக்கு வேலை கிடைக்குமா ? கிடைக்காதா ? என்ற ஐயப்பாட்டோடு கனகசபை முதலியார் இருந்தார். மேலும் சுப்புரத்தனம் வயதிலும், உருவத்திலும் மிகவும் சிறியவராக இருந்தார் ; தோற்றத்தில் ஒரு விளையாட்டுச் சிறுவனைப் போல் காணப்பட்டார். தமிழாசிரியர் வேலைக்கு விண்ணப் பம் செய்திருந்தவர் எல்லாரும், ஒருநாள் புதுச்சேரிக் கல்வி இயக்குநரின் முன்னால் அழைக்கப்பட்டனர். தோற்றத்தில் தம் மகன் பெரியவனாகத் தெரிய வேண்டும் என்பதற்காகக் கனகசபை முதலியார், சுப்புரத்தனத்திற்குக் குதி உயர்ந்த செருப்பும், ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று மொத்த மான மேற் சட்டைகளும் அணிவித்து அழைத்துச் சென்றார். கல்வி இயக்குநர் சில வினாக்கள் வினவினார். சுப்புரத்தனம் அவ்வினாக்களுக்கு ஏற்ற விடைகள் பகர்ந்தார். தாம் அரசாங்க உதவித் தொகை பெற்றுப் படித்துக் கல்லூரியில் முதல்வராகத் தேறிய காரணத்தால், சட்டப்படி தமிழாசிரியர்

வேலை தமக்கே தரப்பட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநரை நேரிற் கண்டு தாம் பேசப் போவதாகவும் இயக்குநரிடம் சுப்புரத்தனம் அஞ்சாமல் கூறினார். இயக்குநர் தம் அருகில் இருந்த செயலாளரை நோக்கி, "அப்படி ஏதேனும் சட்டம் உளதா?" என்று வினவினார். அரசாங்க உதவித் தொகை பெற்றுப் படித்த வருக்கே முதலில் வேலை கொடுக்க வேண்டும் என்று சட்ட மிருப்பதைச் செயலாளர் எடுத்துக் காண்பித்தார். பதினாறு வயது நிரம்பிய சுப்புரத்தனம் நிரவி அரசியலார் பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார்.

நீண்ட அங்கியும், தலைப்பாகையும், மூக்குக்கண்ணாடியும் அணிந்த முதியவர் ஒருவர் தாம், தமிழாசிரியராக வரக்கூடும் என்று எதிர்பார்த்த நிரவி மக்களுக்குச் சுப்புரத்தனத்தைப் பார்த்ததும் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது. உருவத்தில் பள்ளிச் சிறுவனைப் போல் தோற்றமளித்த சுப்புரத்தனத்தைத் தமிழாசிரியராக ஏற்றுக் கொள்ள நிரவி மக்களின் உள்ளம் ஏனோ இடந்தரவில்லை. சுப்புரத்தனம் பாதையில் செல்லுவதைப் பார்த்த அவ்வூர்ப் பெண்கள், 'இப் பிள்ளையாண்டான் தான் தமிழ் வாத்தியாராம்!' என்று கேலிக் குறிப்போடு கூறுவார்களாம். அவ்வூர்ப் பெரியவர் கள் இவரை மேலும் கீழும் பார்க்கத் தொடங்கினராம்.

புலமைச் சிறப்பு :

பள்ளிக்கு எதிரில் விசுவலிங்கம் பிள்ளை என்பவர் குடியிருந்தார். அவர் அவ்வூர்ப் பெரிய மனிதர்களில் குறிப்பிடத் தக்கவர்; செல்வர். அவர் வீட்டுக் குறட்டிலே பலகை அடித்திருக்கும். அது சங்கப் பலகை. மாலை வேளையில் அப்பலகையில் சிலர் கூடியிருந்து இலக்கியம் பற்றி உரையாடுவது வழக்கம். இராமசாமி நாயுடு என்ற பெரியவர் அவ்வூரில் கொஞ்சம் தமிழ் படித்தவர். அவருக்கு வயது எழுபதிருக்கும். விசுவலிங்கம் பிள்ளைக்கு இலக்கிய ஆசான் அவரே. நாள்தோறும் மாலை வேளையில் அங்குக் கூடியிருப்பவர்களுக்குத் தப்பும் தவறுமாக அவர் இலக்கியப்

பாடம் சொல்லிக் கொடுப்பது வழக்கம். சுப்புரத்தனம் இதைப் பார்த்தும் பார்க்காதவர் போல் சென்று விடுவார்.

ஒரு நாள் பள்ளி விட்டுச் சுப்புரத்தனம் வெளியில் வந்த போது திருவாளர் நாயுடுவுக்கு அவரைச் சுட்டிக் காட்டி, ‘இப் பையன் தான் நம்மூர்ப் பள்ளித் தமிழாசிரியன்’ என்று விசுவலிங்கம் பிள்ளை கூறினர். சுப்புரத்தனமும் மரியாதைக் காக அவர்கள் அருகில் சென்றுர். பெரியவர் சுப்பு ரத்தனத்தை ஏற இறங்க ஒரு முறை பார்த்து விட்டுப் புன்னகை பூத்தார். அவர் புன்னகை, ‘இச் சிறுவன் என்ன படித்திருக்கப் போகிருன்?’ என்று கேட்பது போலிருந்தது. பெரியவர் சுப்புரத்தனத்திடம் சில கேள்விகள் கேட்கத் தொடங்கினர்.

‘ஏன் தம்பி! என்ன படித்திருக்கிருய்?’

‘புலவருக்குப் படித்திருக்கிறேன்.’

‘அது சரி! என்ன இலக்கியம் படித்திருக்கிருய்?’

‘தமிழில் உள்ள முக்கியமான இலக்கியங்களையெல்லாம் ஓரளவு படித்திருக்கிறேன். இலக்கணமும் முறையாகப் பாடங் கேட்டிருக்கிறேன்.’

‘நால்வர் நான்மணிமாலை படித்திருக்கிருயா?’

‘படித்திருக்கிறேன்.’

‘அதில் இலைபடர்ந்த பொய்கை...... என்று தொடங்கும் பாடலுக்குப் பொருள் தெரியுமா?’

‘தெரியும்.’

‘அப்படியென்ருல் சொல் பார்க்கலாம்.’

சுப்புரத்தனம் அப்பாடலைச் சொல்லி அதன் பொருளையும் கூறினர். அது ஞான சம்பந்தரைப் பற்றிய பாடல். ஞான சம்பந்தருக்கு அன்னையராக இருவர் அப்பாடலில் குறிப்பிடப் படுகின்றனர். ஓர் அன்னை உமையம்மை. மற்ருேர் அன்னை பாண்டிமா தேவியான மங்கையர்க் கரசியார். ‘இவ்விரண்டு

அன்னையரில் எந்த அன்னை சிறந்த அன்னை ?' என்று பெரியவர் கேட்டார்.

"ஞானசம்பந்தர் குழந்தையாகக் குளக்கரையில் அழுது கொண்டிருந்த போது உள்ளமிரங்கி ஞானப்பாலூட்டிய உமையம்மை இறைவி. உலகத்தின் தாயான உமாதேவியார், ஓர் உயிர்க்கு இரங்கி அருள்புரிவதென்பது இயற்கை. அவர் செய்கையில் பாராட்டத் தகுந்த சிறப்பு எதுவுமில்லை. ஆனால் மனிதப் பிறவியான மங்கையர்க்கரசியார் ஞான சம்பந்தரைக் கண்ணுற் கண்டதில்லை. அவர் புகழை அமைச்சர் வாயிலாகக் காதால் கேட்ட மாத்திரத்தில் உள்ளம் உருகினார். தாயன்பு அவர் நெஞ்சத்தில் பெருக் கெடுத்தோடிப் பாலும் சுரந்தது. ஒரு மானிடப் பெண்ணுக்கு இத்தகைய உள்ளம் வாய்ப்பது மிகவும் வியப்பிற்குரிய தன்றோ ? அதனாற்றான் அப்பாடலைப் பாடிய சிவப்பிரகாச சுவாமிகளும் மங்கையர்க்கரசியாரை 'அருட்கோமகள்' என்று அப்பாடலில் குறிப்பிடுகின்றார். எனவே, மங்கையர்க் கரசியார் தாம் சிறந்த அன்னையார்" என்று தக்க சான்று களுடன் விடையிறுத்தார் சுப்புரத்தனம். சிறுவரான சுப்புரத்தனத்தின் அறிவு நலத்தைக் கண்டு பெரியவர் வியப்படைந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ள வில்லை. அதோடு சுப்புரத்தனத்தின் புலமையைக் குறைத் துப் பேசவும் தொடங்கினார்.

'நீ கூறுவது சரியில்லை. இப்பாடலைப் புரிந்து கொள்ள உனக்குப் புலமை போதாது. உனக்கு இந்நூலைப் பாடம் சொன்னவர் யார் ?' என்று பெரியவர் கேட்டார்.

தம்முடைய புலமையைக் குறைத்து மதிப்பிட்டதைச் சுப்புரத்தனம் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தம் முடைய ஆசிரியரின் புலமையைக் குறைகூறத் தொடங் கியதும் சுப்புரத்தனம் குத்துண்ட நாகம்போல் சீறியெழுந் தார்.

'பெரியவரே ! போதும் நிறுத்தும் ! எனக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்த இடம் பெரிய இடம் ! என் ஆசிரி

யரைப் பற்றிப் பேசும் தகுதி உமக்குக் கிடையாது. அவர் அடித்தூசுக்குக்கூட நீர் ஒப்பாக மாட்டீர். உம்முடைய புலமை எனக்குத் தெரியாதா? நீர் தப்பும் தவறுமாக இவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதை நான் நாள் தோறும் பார்த்துக் கொண்டுதானே போகிறேன்! உம்மிடம் ஏன் வீண் பேச்சு! உமக்கு விடை இனி நான் வாயால் கூறப்போவதில்லை; பத்திரிகை வாயிலாகக் கூறுகிறேன்' என்று கூறினர் சுப்புரத்தனம்.

சுப்புரத்தனத்தின் பேச்சைக் கேட்டுப் பெரியவர் அஞ்சியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. 'ஊர்த் தலைவர் பிரம்புசாமி பிள்ளையை நேரிற்கண்டு உன்னுடைய துடுக்குப் பேச்சை அவரிடம் எடுத்துக் கூறி, உன்னை இன்றே இவ்வூரைவிட்டுக் கிளப்புகிறேன் பார்!' என்று கூறித் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு பெரியவர் அவ்விடத்தை விட்டு வேகமாகச் சென்றார். சுப்புரத்தனம் உள்ளம் துணுக்குற்றார். தமது வேலைக்கு ஏதேனும் தொல்லை ஏற்பட்டால் என்ன செய்வது? என்ற அச்சத்தோடு தமது இல்லம் நோக்கி நடந்தார்.

இரவு ஏழு மணி இருக்கும். பெரியவர் இராமசாமி நாயுடு திடீரென்று சுப்புரத்தனத்தின் வீட்டிற்குள் நுழைந்தார். 'தம்பி! நான் சொன்னதை நீயொன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உனக்கு நல்ல புலமையிருக்கிறது. அப்பாடலுக்கு நீ சொன்ன பொருள்தான் பொருத்தமானது. அங்கிருந்தவர்களெல்லாரும் என்னிடம் தமிழ் படித்தவர்கள். அவர்கள் என்னை உயர்வாக மதிக்க வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு பேசிவிட்டேன். நீ பத்திரிகையில் ஏதாவது எழுதி என் மானத்தை வாங்கி விடாதே!' என்று அழாக் குறையாகச் சுப்புரத்தனத்திடம் கேட்டுக் கொண்டார்.

அன்றிலிருந்து சுப்புரத்தனத்துக்குச் சிறிய பையன் என்ற பெயர் மறைந்தது; மதிப்பு உயர்ந்தது. பிரெஞ்சுத் தமிழகத்தில், தமிழில் ஏதேனும் ஐயமென்றால் பிறகு சுப்புரத்தனத்தைத் தேடித்தான் எல்லாரும் வருவர். இவரைக் கலக்காமல் எந்த இலக்கிய நிகழ்ச்சியும் அங்கு நடைபெறாது.

புதுச்சேரியில் சுப்புரத்தனம் என்ருலோ, பாரதிதாசன் என்ருலோ பல பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனுல் 'வாத்தியார்' என்று சொன்ஞல் அவரை அறியாதார் யாரும் இருக்க முடியாது. ஆம்! புதுச்சேரி வரலாற்றில் என்றும் அழியாமல் நிலேத்து நிற்கும் ஆசிரியர் அவர்தாம்!

## அருஞ்சொற்பொருள்

புலமை – அறிவு; அகவை – வயது; அங்கி – மேற் சட்டை; குறடு – ஒட்டுத் திண்ணே; ஆசான் – ஆசிரியர்.

## விஞக்கள்

1. நிரவியில் தமிழாசிரியராகச் சுப்புரத்தனம் பணியேற்ற போது அவ்வூர் மக்கள் என்ன பேசிக் கொண்டனர்?
2. நிரவியில் 'சங்கப்பலகை' என்று சுப்புரத்தனம் எதைக் குறிப் பிடுகின்ருர்? அவ்வாறு அவர் குறிப்பிடக் காரணம் என்ன?
3. ஞான சம்பந்தரிடம் அன்பு காட்டிய அன்னேயர் இருவரில் சிறந்தவர் யார்? அதற்குச் சுப்புரத்தனம் கூறும் விளக்கம் யாது?

## இடஞ்சுட்டி விளக்குக :

1. 'இப்பிள்ளேயாண்டான்தான் தமிழ் வாத்தியாராம்!'
2. 'உனக்கு இந்நூலேப் பாடஞ் சொன்னவர் யார்?'

## கட்டுரை எழுதுக :

1. பாவேந்தரின் பள்ளி வாழ்க்கை.
2. பாவேந்தரின் புலமைச் சிறப்பு.

## 4. நோபல் பரிசு

[பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.]

ஔவையார் 'தாதா கோடிக் கொருவர்' என்று ஆய்ந்து கூறியபடி, உலகில் எந்நாட்டிலும் வள்ளல்கள் சிலராகவே இருந்து வருகின்றனர். அச்சிலருடைய வண்மையும், கேளாமற் கொடுப்பது, கேட்டுக் கொடுப்பது, பலமுறை கேட்டுக் கொடுப்பது என, முறையே தலை, இடை, கடையாக மூவகைப்படும்.

"தண்டாமல் ஈவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை – அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி."

என்று கூறிப் போந்தார் ஔவையார்.

உலக நலத்தைக் குறித்துக்கொண்டதும், நிலைபேறுள்ளதும், தேச குல மத வேறுபாடின்றி எல்லார்க்கும் பொதுவானதும், பெருந்தொகையானதுமான பரிசு, உலகமுண்டானது முதல் இதுவரையும் நோபல் பரிசு ஒன்றே ஆகும். இதை ஏற்படுத்திய ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபல் (Alfred Bernhard Nobel) என்பவர், 1833ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் தேதி சுவீடன் நாட்டுத் தலைநகராகிய ஸ்டாக்ஹோமில், எம்மானுவேல் நோபல் என்னும் இயந்திர வினைஞரின் மூன்றாம் மகனாகப் பிறந்தார். இவர் இளமையிலேயே தம் குடும்பத்துடன் இரஷ்யாவிலுள்ள பீட்டர்ஸ்பர்க் என்னுமிடத்திற்குச் சென்றார். அங்கு இவருடைய தந்தையார் போர்க்கலங்களை உடைக்கும் வெடிகுண்டுத் (Torpedo) தொழிலைத் தொடங்கிச் சில ஆண்டுவரை நடத்தி, பின்பு அதைத் தம் இரண்டாம் மகனிடம் ஒப்புவித்துவிட்டு, சுவீடனுக்குத் திரும்பியபோது,

இவரும் உடன் திரும்பினர். பிறகு அங்குச் சென்று, இவர் பல அரிய ஆராய்ச்சிகள் புரிந்து, டைனமைட் என்னும் வெடி மருந்தைக் கண்டு பிடித்தார். அதற்கு ஓர் உரிமைக் காப்பைப் பெற்றுத் தொழிலை விருத்தி செய்து கொண்டு, காலத்தைக் கழித்து வந்தார். நாளடைவில் இவருக்குப் பெரு நிதி திரண்டது. இவர் ஒரு புது நிருமாணிகராயும், வள்ளலாயும் விளங்கினர்; கடைசியில், தம் இறுதிக்காலம் அடுத்ததை அறிந்து, தாம் தேடிய பொருளில் பெரும் பகுதியை — 20,00,000 பவுனை — உலக நலத்திற்கென்று, ஆருயிரத்தைந்நூறு பவுன் முதல் எண்ணுயிரம் பவுன் வரை பெறுமானமுள்ள ஐந்து பரிசுகளை — தேச மத வேறு பாடின்றித் தக்கார்க்கு ஆண்டுதோறும் அளிக்கும்படி, 'இறுதி முறி' (Will) எழுதி வைத்து, 1896ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் தேதி, இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவரது இறுதி முறியில் குறிக்கப்பட்டுள்ள பரிசுகள், பௌதிக நூல் (Physics) பரிசு, இரசாயன நூல் (Chemistry) பரிசு, மருத்துவ (Medical Science) நூல் அல்லது உடல் நூல் (Physiology) பரிசு, இலக்கியப் (Literature) பரிசு, உலக அமைதி ஆக்கப் பரிசு (World Peace) என்பன. இவை ஆண்டுதோறும், அவ்வத் துறையில் புதுமையான தேர்ச்சி காட்டும் அறிஞருள் தலை சிறந்தவர்க்கு அளிக்கப் படும். இதற்கென்று நோபல் கழகம் (Nobel Institute) என ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. பௌதிக இரசாயன நூற் பரிசிலரைத் தேர்ந்தெடுத்தற்குச் சுவீடன் அரச அறிவியற் கழகமும் (Royal Academy of Science), மருத்துவ நூல் அல்லது உடல் நூல் பரிசிலரைத் தேர்ந்தெடுத்தற்கு ஸ்டாக்ஹோமிலுள்ள அரசாங்க மருத்துவக் கழகமும் (Faculty of Medicine), இலக்கியப் பரிசிலரைத் தேர்ந்தெடுப்பதற்குச் சுவீடன் அரசு இலக்கியக் கழகமும் (Royal Academy of Literature), உலக அமைதியாக்கப் பரிசிலரைத் தேர்ந்தெடுப் பதற்கு நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தால் அமைக்கப் படும் ஒரு கழகமும் நியமிக்கப்பட்டுள்ளன. இக்கழகங் களைச் சேராது சுவீடனிலும், பிற நாடுகளிலுமுள்ள சிறந்த

அறிஞர்களின் மதிப்புரைகள், பரிசுத் தீர்மானத்திற்கு மிகப் பயன்படுவனவாகும். பரிசுகள் தீர்மானிக்கப்பட்ட பின், அவற்றின் அறிக்கை நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தால் வெளியிடப்படும்.

ஒவ்வொரு பரிசும் இருவருக்குப் பகுத்துக் கொடுக்கப் படலாம். ஆனால், இருவர்க்கு மேல் பகுத்துக் கொடுக்கப் படாது. ஒரு வினையைப் பலர் சேர்ந்து செய்திருப்பின், அவர் எத்துணைப் பேரானாலும், அத்துணைப் பேர்க்கும் பகிர்ந்து அளிக்கப்படும். இம்முறையில் ஓர் ஆராய்ச்சி நிலையத்திற்கு, அல்லது ஒரு கழகத்திற்கு அளிக்கப்படுவது முண்டு. ஓராண்டில் ஒரு பரிசிற்கு உரியவர் இலரேல், அடுத்த ஆண்டிலும் இல்லையேல், அது மூல நிதியோடு சேர்த்துக் கொள்ளப்படும்; அல்லது வேறாக வைத்து, அதன் வருவாய், மேற் குறித்த வகைகளில் ஒன்றுக்கு வழங்கப்படும்.

நோபல் பரிசுக் கழக விதிகளில் அடிப்படையானவற்றை 1900 ஆம் ஆண்டில் சுவீடன் அரசியலார் அங்கீகரித்தனர். அதன் பின், 1901 முதல், ஆண்டுதோறும், டிசம்பர் மாதம் பத்தாம் நாளாகிய நோபல் இறந்த நாளில், நோபல் பரிசுகள் விழாக் கொண்டாட்டத்துடன் வழங்கப்படும். அன்று ஸ்டாக்ஹோம் இசைக் கழக மண்டபத்தில், சொற் பொழிவுகளும், இன்னிசைகளும் நடைபெறும். சுவீடன் மன்னர் பரிசளிப்பார். ஒவ்வொரு பரிசிலர்க்கும் பரிசுடன் ஒரு தகுதித்தாளும், நோபல் வள்ளலின் உருவம் பொறித்த தங்கப் பதக்கமும், அளிக்கப்படும்.

இதுவரையில் பல துறைகளிலும் பரிசு பெற்றவர்கள் பலராவர். நம் இந்தியாவில் பரிசு பெற்றவர், பௌதிக நூற்கு சர் சி. வி. இராமனும், இலக்கிய நூற்கு இரவீந்திரநாத தாகூரும் ஆவர். இப்பெரும் பரிசு வைத்த வள்ளலை எவர்தாம் மறத்தல் கூடும்?

கலை வளர்ச்சிக்கும், உலக அமைதியாக்கத்திற்கும், இது வரை ஏற்பட்டுள்ள ஏதுக்களில் நோபல் பரிசு தலைசிறந்த

தாகும். ஒரு வள்ளல் தம் வாழ்நாளில் எத்துணைப் பொருளை வழங்கினும், அதற்குக் கைம்மாருன புகழைத் தம் காலத்திலேயே அனுபவிக்கின்ருராதலின், அவரிறந்தபின் நிற்கும் புகழுடம்பு நிறைவற்றதாகும். ஆனல், தம்பொருளைத் தம் காலத்திற்குப்பின் வழங்குமாறு செய்து விட்டுச் செல்லும் வள்ளலோ, மக்கள் நடுவிற் பூதவுடம்பிலிருந்து கொண்டு அனுபவியாமையின், முழு நிறைவான புகழுடம்பை நிறுத்தி விட்டுச் செல்கிருர். அங்ஙனம் சென்ற வள்ளல்களுள் ஆல்பிரட் நோபல் தலை சிறந்தவரல்லரோ ?

## அருஞ்சொற்பொருள்

தண்டாமல் - குறையாமல் ; தாதா - பெருங்கொடையாளன் ; தாளாண்மை - முயற்சியுடைமை ; காற்கூலி – கால் நடந்த கூலி; நிதியம் - செல்வம் ; நிருமாணிகர் - ஏற்படுத்தினவர் ; நீத்தார் - இறந்தவர். இறுதி முறி — ஒருவர் இறக்கின்ற நிலையிலிருக்கும் போது எழுதிவைக்கும் மரணச் சாசனம் (உயில்) ; கைம்மாறு - பிரதி உபகாரம்.

## வினக்கள்

1. வள்ளல்களில் மூவகையினர் யாவர் ?
2. நோபல் பரிசின் சிறப்பியல்பையும், அதை ஏற்படுத்தினவரைப் பற்றிய குறிப்பையும் தருக.
3. நோபல் பரிசு யார் யாருக்குக் கொடுக்கப்படும் ?
4. நோபல் பரிசு கொடுக்கும் வகையில் என்ன முறை மேற்கொள்ளப்படுகிறது ?
5. நோபல் பரிசு விழா கொண்டாடப் பெறும் முறையை விளக்குக.
6. இந்தியாவில் நோபல் பரிசு பெற்றவரைப் பற்றிக் கூறுக.
7. நோபல் பரிசு நிறுவியவர் கொடைக்கும் ஏனையோர் கொடைக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறுக.

## 5. செல்வத்துக் கொருசொல்

(வித்துவான் பொ. இராமலிங்கம், பி. ஏ.)

செல்வமே! உன்னை விழையாத மக்களுயிர் இல்லை; புகழாத நா இல்லை; 'பணம் பத்தும் செய்யும்'; 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே'; 'அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு'; 'பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்' என்றெல்லா மன்றோ நீ புகழப்படுகின்றாய்!

மழை நீர் பெய்வதை நாம் பார்க்கின்றோம்; அது விண்ணிலிருந்து வரும்பொழுது அதற்கென்று தனி மணமும், நிறமும், சுவையும் கிடையா. ஆனால் அம்மழை நீர் நிலத்தில் பட்டதும், அந்நிலத்தின் நிறத்தையும், மணத்தையும், சுவை யையும் பெறுகின்றது. சில இடங்களில் தண்ணீர் சிவப்பாக இருக்கின்றது; சில இடங்களில் கறுப்பாக இருக்கின்றது; சில இடங்களில் பழுப்பு நிறம் படைத்துள்ளது. சில இடங் களிலுள்ள நீர் நம்முடம்பைக் கெடுத்து விடுகின்றது; சில இடங்களிலுள்ள நீர் நம்முடம்புக்கு நன்மை பயக்கின்றது. சில்வகைத் தண்ணீர் உவர்ப்பாக உள்ளது; சில்வகைத் தண்ணீர் இன்பமாக இருக்கின்றது. சில இடத்திலுள்ள நீர் சுண்ணும்பு நாற்றத்தைப் பெறுகின்றது; சில இடத்திலுள்ள நீர் கந்தக நாற்றத்தைப் பெறுகின்றது.

அன்புக்குரிய செல்வமே! நீயும் அப்படித்தான் ஆவாய். நீ சேரும் இடத்திற் கேற்றவாறு பெருமையும் சிறுமையும் அடைவாய். நல்லவரோடு இணங்கினால் நற்புகழும், அல்லாரோடுற்றால் அழிவிலாப் பழியும் அடைவாய்.

பெறலரும் பணமே! வள்ளல்களாகிய பாரி, ஓரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, பேகன், பண்ணன், நன்னன், சீதக்காதி, பச்சையப்பன், அண்ணாமலை முதலிய பல பெரியோரிடத்தில் உறவு கொண்டாய்; என்றும் நிலைபெற்ற புகழ் நாட்டினாய். ஷைலக் போன்ற கீழ்மகனிடத்தில் உறவு கொண்டாய். அவனால் நீ அடைந்தது யாது? என்றும் நீங்காத பழிதானே.

ஒரு நொடியில் மாடமாளிகைகளைப் பொடியாக்கும் அணுகுண்டுக்கும் நீயே காரணம்; ஒரு நொடியில் மாட மாளிகை எழும்புவதற்கும் நீயே காரணம்; ஒருவனை உமிழ்நீர் சொட்டச் சொட்டப் புகழ்வதற்கும் நீயே காரணம்; வாய் வறண்டு போக வைதலுக்கும் நீயே காரணம்.

அரும் பெருஞ்செல்வமே! நீ மிகவும் கள்ளமற்ற உள்ள முடையை. உன்மீது நான் குறை கூறவில்லை. உன்னைக் குறை கூறுபவர் பகுத்துணர்வற்றவராவர். நீ சேரும் இடந் தான் நல்ல இடமாக இருக்க வேண்டும். இதுதான் நான் உன்னை வேண்டிக் கொள்வது. பொல்லாரிடை சேர நேர்ந் தால், பல நற்செயல்களைப் புரியத் தூண்டு. அப்பொழுது தான் உனக்கும் உன்னைச் சேர்ந்தவருக்கும் புகழ் உண்டாகும்.

> "செல்வத்தைப் பெற்றுர் சினங்கடிந்து செவ்வியராய்ப்
> பல்கிளையும் வாடாமல் பாத்துண்டு — நல்லவாம்
> தானம் மறவாத தன்மையரேல் அஃதென்பார்
> வானகத்து வைப்பதோர் வைப்பு."

என முனைப்பாடியார் கூறியுள்ள பொன்மொழிகளை உன் நினைவிற்கு வரச் செய்து கொள். உன்னைப் பெற்றிருப் பவர்கள் சில சமயங்களில் கன்னெஞ்சர்களாய் இருப்பார்கள். ஏழைகள் என்ருல் எரிந்து விழுவார்கள். அவர்கள் சினத்தை அடங்கும்படி செய். சிறந்த நீதிவழியே செல்லும் மனத்தை உன் உறவினனுக்கு உண்டாக்கு. நீ உன் உறவினனுக்கும், உன் உறவினனைச் சேர்ந்தவர்களுக்கும் உதவும்படி இரு. உன்னைச் சேர்ந்தவனுக்கு மட்டும் உதவ வேண்டும் என்ற தன்னலப் பேய் கொண்டு ஆடாதே. உன்னை அணைத்தவனின் உறவினர்க்கு மட்டும் உறுதுணை யாய் இராதே. வறுமைப் பிணியில் வாடி, வாழ வழியற்று, "வாழ்வதா? வீழ்வதா?" என்று ஊசலாடி உழன்று, குற்றுயிர் கொண்டு கிடக்கும் ஏழை மக்கட்கும் உன் திருவருள் மிகவும் சுரப்பதாக. அங்ஙனமிருப்பின் எல்லாம் வல்ல இயற்கையன்னை நெடுநாள் வாழ்வு உனக்கு அளிப்பாள்.

இன்ப வாழ்வுக்கு ஏற்றம் அளிக்கும் இணையறும் செல்வமே! 'உனையல்லால் ஒரு தெய்வம் உள்கேன்' என்று அல்லும் பகலும் உன்னை ஓதி வழிபட்டுக் கொண்டிருக்கும் மக்கள் எல்லாரிடமும் நீ சேராதே. முயற்சியுள்ள ஒருவனிடமே சேர். அவனை அன்பாக வளர்த்துத் தாலாட்டிச் சீராட்டு. 'கலைஞர்களும் திருமகளும் ஒன்றி வாழ்வதில்லை' என்று உலகத்தார் கூறும் பழிச் சொல்லுக்குப் பூட்டுப் போடு. உன் சூழ்நிலையும் அதற்குத் துணை புரிவதாக.

பகரவொண்ணுப் புகழ் படைத்த பணமே! பழங் காலத்தில் நீ நடுநிலையோடு இருந்தது போல இக்காலத்தில் இல்லை. அதனால்தான் உன்னைச் சேர்ந்தவனுக்கு இடையூறுகள் பல தோன்றலாயின.

அதனால் உனக்குக் கடைசியாக ஒரு சொல் சொல்ல விரும்புகின்றேன். ஊன்றிக் கேட்க வேண்டும். நான் சொல்வது கற்பனைக் கதை அன்று; பழங்காலத் தமிழன் பண்ணன் வரலாருகும். அவன் சிறுகுடி என்னும் ஊரைத் தனக்குரிமையாகப் பெற்றிருந்தான். உன் உறவும் அவனுக்கு உண்டு. உன் துணையால் உலகத்தை அவன் மகிழ்வித்தான்; நிலைபெற்ற புகழை நாட்டினான்; பசிப்பிணி மருத்துவனாகத் திகழ்ந்தான்; இன்னிசை பாடி மகிழ்விக்கும் பாணர்களின் வறுமைக்கு முடிவு காட்டினான்.

இங்ஙனமெல்லாம் அவனைப் புகழ்ந்தவன் வறுமையில் வாடும் ஒரு புலவனல்லன்; அவனையொத்த வள்ளலல்லன்; சிற்றரசனுமல்லன்; பேரரசன். முடியுடை மன்னன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனே அவனை அங்ஙனம் புகழ்ந்தவனாவன். மேலும், 'என் வாழ்நாளையும் அந்தப் பண்ணன் பெற்று நெடுங்காலம் வாழ்வானாக' என்று அன்பு ததும்பக் கூறினவனும் அவனேயாவான்.

பண்ணன், தன்னிடம் வந்த பாணரிடம் எங்ஙனம் நடந்து கொண்டான் என்பதைக் கிள்ளிவளவன் ஒரு

சொல்லோவியமாகத் தீட்டுகிருன். உவமைகளின் இன்பம் உன்ன உன்னத் தெவிட்டா மகிழ்வளிக்கத் தக்கது.

பண்ணனிடம் பரிசில் பெறச் செல்கிருன் ஒரு புலவன் ; தன்னலக்காரர் சிலரைப் போல் தான் மட்டும் சென்று பரிசில் பெற்றுப் பேரின்ப வாழ்வு நடத்த அவன் நினைத் தானல்லன் ; வறுமைக் கடலுள் திளைக்கும் தன் சுற்றத் தாரோடு செல்கின்ருன். அந்தப் புலவனுக்கும், அவனைச் சேர்ந்த உறவினர்களுக்கும், குடும்ப வாழ்வுக்குரிய பொருள்கள் அனைத்தும் சிறு மூட்டைகளில் அடங்கி விட்டன. வண்டிகள் தேவையில்லை அம்மூட்டைகளைத் தாங்கிச் செல்ல. அவர்களுடைய கால்நடை வண்டிகள் அவற்றைத் தாங்கிக் கொண்டு கானுறுகளையும், காடுகளையும் கடந்து சென்றன.

"பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் ருங்கு."

என்னும் வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப, அப்புலவனின் வறுமை அறிவொளியை வெளிப்படுத்தாமல் மறைத்து விட்டது. அவனது உணர்வு தேய்ந்தது; கால்நடை ஓய்ந்தது. ஒவ்வொரு நொடிப் பொழுதும் ஒவ்வோராண்டாக அவனுக்குத் தோன்றியது; ஒவ்வோரடித் தூரமும் ஒவ்வொரு கல் தூரமாகத் தோன்றியது. பாவம்! அப்புலவனும் அவனுடைய சுற்றத்தாரும் படும் பாடு சிறிதன்று. அவர்கள், பசிநோய்க்கு மருந்தை நாடும் தன்மை இரங்கத் தக்கது.

பசியால் களைப்புற்று வரும் புலவனின் சுற்றத்தார், தம் மெதிரில் ஒரு பெரும் பாணர்க் கூட்டம் வருகின்றமையைக் கண்டனர். அவர்கள் எல்லாரும் சோற்றுருண்டையைக் கையிலே ஏந்திக் கொண்டு தனித்தனியாக, வரிசை வரிசை யாக வந்து கொண்டிருக்கின்றனர். இக்காட்சி, மழை பெய்யும் பருவத்தைப் பார்த்துத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எறும்புகள் தம் முட்டைகளையும், உணவுகளையும் ஏந்திக் கொண்டு வரிசை வரிசையாக மேட்டு நிலத்தை நோக்கிச் செல்வது போன்றிருந்தது.

மேலும் அப்பாணர்கள் உணவுண்ணும் போது ஏற்படும் ஒலி அளவற்றது. அஃது இடியொலி போன்று ஒலித்தது ; காதுகளைச் செவிடாக்கியது. நெடுநாள் உணவைக் காணுமல் வருந்தி வாடிக் கிடக்கின்ற பாணர்சுற்றம், பண்ணனிடம், விலாப்புடைக்க உண்ட உணவினுல் அளவற்ற மகிழ்ச்சி கொள்வது இயல்புதானே. அதனுல் பேரொலி கிளம்பு வதும் இயல்புதானே. இத்தகைய காட்சி, பறவைகள், நெடுநாட்கள் வரையில் ' பழம் பழுக்கும் ; பழம் பழுக்கும் ' என்று எதிர்பார்த்திருந்த மரம் புத்தம் புதிய பழங்களை வெளிக்காட்டின பொழுது அவைகளுக்கு ஏற்பட்ட பரபரப்பும், பேரின்பமும், பேரொலியும் போலத் தோன்றியது.

இங்ஙனமாகப் பாணர்கள் பண்ணனிடம் சென்று உண்டு களித்துச் சோற்றுத் திரளை ஏந்தி வருவதை, புலவனின் சுற்றத்தார்கள் நேரில் கண்டிருந்தும், பசித்துன்ப மிகுதியினுலும் வழிநடைக் களைப்பினுலும், " பாணரே ! பசிப்பிணி மருத்துவன், பண்ணன் இல்லம் இன்னும் அண்மையில் உள்ளதா ? சேய்மையில் உள்ளதா ? " என்று கேட்கத் தொடங்கினர். அந்தோ ! அவர்களின் அவலநிலை, கண்ணீர் விடத் தூண்டுகின்றதன்றே !

பேரரசனுக்குப் பேரரசனுகவும் பெரும் புலவனுக்குப் பெரும் புலவனுகவும் திகழ்ந்த சோழன் கிள்ளிவளவன் இடத்திற்கேற்ற உவமை காட்டும் திறம், உய்த்துணர உய்த்துணர இன்பக் கடலுள் ஆழச் செய்கின்றது ; இறும்பூ தெய்தச் செய்கின்றது.

பிற்காலப் புலவன், பறவையின் பேரொலிக்கு உவமை காட்டும் வாய்ப்பேற்பட்டிருந்தால் இதற்குமுன் அவன் கண்டிராத — இனி அவன் காண முடியாத ஊழிக்காலப் பேரொலியையன்றே உவமையாகக் காட்டியிருப்பான் ? ஆனுல் கிள்ளிவளவன், மேடும் பள்ளமும் நிறைந்த காட்டில் பாணர் செய்யும் நிகழ்ச்சிகளுக்கு, அங்குள்ள பழ மரங் களையும், பறவைகளையும், எறும்புகளையும் உவமையாகக் காட்டினமை மிகவும் பொருத்தமான தன்றே ?

அன்பில் தோய்ந்த செல்வமே! மேற் கூறிய அருங் கருத்துக்களை நன்கு கேட்டனையோ? "ஆம்......" என்று வறிதே தலையசைக்காதே. நன்றாக ஆராய்ந்து பார். ஒரு முடிவுக்கு வருக. பல பாரிகளையும், பண்ணன்களையும் பச்சையப்பன்களையும் உண்டாக்கு. இதுவே, நான் உனக்கு அறிவுறுத்தும் சொல்.

மேற்கூறிய கருத்துள்ள புறநானூற்றுச் செய்யுள்:

"யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி அரவந் தானுங் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே."

## அருஞ்சொற்பொருள்

விழையாத – விரும்பாத; சினம் கடிந்து – சினத்தை நீக்கி; பல்கிளை – பல சுற்றத்தார்; பாத்து உண்டு – தம் பொருளைப் பிறருக்குப் பகுத்துக் கொடுத்துப் பிறகு தாம் உண்டு; வானகத்து - பேரின்ப உலகின்கண்; வைப்பு – சேம நிதி; முனைப்பாடியார் – அறநெறிச்சாரம் என்னும் நூலின் ஆசிரியர்; உள்ளேன் – நினையேன்; உன்ன – நினைக்க; பொச்சாப்பு – மறதி; கொல்லும் – அழிக்கும்; நிச்ச நிரப்பு – வறுமை என்பது கருத்து; பசிப் பிணி – பசியாகிய நோய்; அண்மை – அருகில்; சேய்மை – தொலைவில்; அவல நிலை – துன்ப நிலை; இறும்பூது – வியப்பு.

## வினாக்கள்

1. செல்வம் எவ்வெப்படிப் புகழப்படுகிறது?
2. மழை நீர் எங்ஙனம் விளக்கப்படுகின்றது?

3. மழைநீரைக் கொண்டு செல்வத்துக்கு அறிவுறுத்துவன யாவை ?

4. செல்வம் எந்தெந்தப் பெரியவரிடம் உறவு கொண்டது ?

5. செல்வம், எந்தெந்தச் செயலுக்குக் காரணமாகிறது ?

6. செல்வத்தைப் பெற்றவர் எந்தெந்தத் தன்மையுடையவராக இருக்க வேண்டும் ?

7. செல்வம் எந்தெந்தத் தன்மையுடையதாக இருக்க வேண்டும்?

8. பண்ணனைப் பற்றிக் குறிப்பு வரைக.

9. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் பாடல் கருத்தைச் சுருக்கி வரைக.

10. செல்வத்துக்குக் கூறப்பட்ட ஒரு சொல் யாது ?

## 6. வீரச் சுவை

[வித்துவான். ஐயன்பெருமாள் கோனூர்]

சுவை என்பது மனவுணர்வு. இதனைத் தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் பழமையான பெரு நூலில் 'மெய்ப்பாடு' என்று குறிப்பிட்டுள்ளார். 'மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அஃதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப் படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்' என்று பேராசிரியர் என்னும் உரையாசிரியர் இதனை விளக்கியுள்ளார்.

இச்சுவையை நாவினால் நுகரப்படும் சுவை எனவும், செவியால் நுகரப்படும் சுவை எனவும் இருவகையாகக் கொள்ளலாம். நாவினால் சுவைத்து உணரும் சுவை இனிப்பு, கைப்பு முதலியனவாக ஆறு வகைப்படும். அவை பண்டங்களை உண்டபொழுது நின்று பின்னர் நீங்கி விடும். செவியால் துய்த்து உணரும் சுவையோ, உள்ளத்தில் என்றும் நீங்காது நின்று இன்பம் பயக்கும். ஆகையால், செவிச்சுவையினையே அறிஞர் பெரிதும் விரும்புவர்.

'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.'

என்னும் திருக்குறளில் ஆசிரியர் திருவள்ளுவர் செவிச் சுவையின் மேன்மையைப் புலப்படுத்தக் கருதி, அஃதில்லாமல் வாயுணர்வு மட்டும் உள்ளவரை 'மாக்கள்' என்று இழித்துக் கூறியுள்ளார். (மாக்கள் என்பவர்கள், பகுத்தறிவற்ற விலங்குகள் போன்ற மனிதர்கள்.) அது மட்டுமின்றி, 'அத்தகையோர் செத்தால் நாம் இழப்பதும், வாழ்ந்தால் நாம் பெறுவதும் ஒன்றுமில்லை,' என்னும் கருத்துத் தோன்ற 'அவியினும் வாழினும் என் ?' என்றும் கடிந்துரைத்துள்ளார்.

செவிச் சுவையாவன, சொற்சுவையும் பொருட்சுவையுமாகும். சொற்சுவை குணம், அலங்காரம் என்று இரு வகைப்படும். பொருட்சுவை, நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமநிலை என்று

ஒன்பது வகைப்படும். இவற்றை 'நவரசம்' என்பர் வட நூலார்.

சமநிலையாவது சாந்தம். அஃதாவது, ஐம்பொறியும் அடங்கப் பெற்றுப் பிறர் வைதாலும் வாழ்த்தினுலும் மனந் திரியாது இரண்டையும் ஒன்ருகக் கொண்டு நிற்கும் நிலைமை. அஃது உலகியலினின்று நீங்கிய துறவிகளின் தன்மை யாதலால், அதனை நீக்கி ஏனைய எட்டுச் சுவைகளையே புலவர்கள் தங்கள் நூல்களில் பயின்று வரும்படி அமைத் துள்ளார்கள்.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப.'

என்று சுவைகள் எட்டெனவே வரையறுத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர். இவர் வீரச் சுவையைப் பெருமிதம் என்று குறிப்பிடுகிருர். வீரமுடையான் எவரினும் மேம்பட்டு விளங்குவதால், அவன் வீரம் பெருமிதம் எனப்பட்டது.

இவ்வீரம் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கும் பற்றித் தோன்றும். இதனைத் தொல்காப்பியர்,

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.'

என்றும் தெரிவித்துள்ளார். கல்வி என்பது பலவகைக் கலை நூல்களைக் கற்றறிதல்; தவம் முதலாகிய விச்சைகளுமாகும். தறுகண் என்பது அச்சம் தரத்தக்கன கண்டவிடத்து அஞ்சா திருத்தல். இசைமை என்பது இன்பமும் பொருளும் மிகுதி யாக இருப்பினும் பழியேற்படும் செயல்களைச் செய்யா திருத்தல். கொடையென்பது, உயிரும் உடம்பும் முதலாகிய எல்லாப் பொருள்களையும் கொடுத்தல்.

பெருஞ்சித்திரனுர் என்ற புலவர், வறுமை மிகுந்த நிலையில் வெளிமான் என்ற வள்ளலிடம் பரிசில் பெறக் கருதிச் சென்ருர். அவர் சென்ற வேளையில் அவ்வள்ளல்

நோய்ப்படுக்கையில் உயிர்விடும் நிலையில் இருந்தான். அந் நிலையிலும் அவன் பலரைக் கண்டு அன்புடன் வரவேற்றுத் தன் தம்பியிடம் புலவர்க்குப் பரிசளிக்குமாறு தெரிவித்து விட்டு உயிர் நீத்தான். பின்னர், தம்பியாகிய இளவெளிமான் கொடைப் பண்பில்லாதவனுகையால், அண்ணன் விருப் பத்தை நிறைவேற்றும் பொருட்டுப் புலவர்க்குச் சிறிது பொருள் கொடுத்தான். பெருஞ்சித்திரனுர் 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது', என்னும் பழமொழிப்படி, அவன் மதிக் காமல் கொடுக்க வந்த பரிசிலை ஏற்றுக் கொள்ளாது, வெறுப் புடன் போய்விட்டார்.

பின்பு புலவர் குமணன் என்ற கொடைவள்ளலிடம் சென்று நன்கு மதிக்கப்பெற்று, பொன்னும் மணியும் களிறும் முதலிய பலவகைப் பரிசில்களைப் பெற்றுத் திரும்பி வந்தார்; அப்பொழுது இளவெளிமான் இருப்பிடம் வந்து, அவனு டைய காவல் மரத்தில் தாம் கொண்டு வந்த களிற்றைக் கட்டிவிட்டு, 'அரசே, இரவலர்களைப் போற்றும் புரவலர்கள் இவ்வுலகில் இல்லாமல் போகவில்லை. என் தகுதியறியாமல் அவமதித்த உனக்குக் குமண வள்ளலிடம் பெற்ற களிற்றினைப் பரிசாக அளிக்கிறேன்; உமது காவல் மரத்தில் கட்டியுள்ள அக்களிற்றினைப் பெற்றுக் கொள்வீராக' என்று வீறுடன் கூறிவிட்டுத் திரும்பிச் சென்று விட்டார்.

இல்லத்தில் மனைவி, மக்கள், பெற்ருேர் யாவரும் உணவுக்கு வழியின்றி வேளைக் கீரையை வதக்கியுண்டு உயிர் வாழும் வறுமை நிலையிலிருந்தும், தம்மை மதியா தளித்த பரிசிலைப் பெருது மறுத்தலும், குமணனிடம் பெற்ற பரிசிலைக் கொடுத்து அறிவுறுத்தத் துணிந்ததும், பெருஞ்சித் திரனுர் பெருமிதத்தைப் புலப்படுத்துவனவாம். இப்பெரு மிதம் கல்வி பற்றித் தோன்றியதெனக் கொள்ளலாமன்ருே?

இருங்கோவேள் என்பவன் ஒரு சிற்றரசன். இவன் அஞ்சாநெஞ்சம் படைத்த வீரன்; வேட்டையாடுவதில் மிகுந்த விருப்பமுடையவன். இவன் ஒரு நாள் தன்னந் தனியாய் வாளும், வில்லும், அம்புங் கைக்கொண்டு காட்டுக் குச் சென்ருன்; அங்கு எதிர்ப்பட்ட முள்ளம் பன்றியைத்

துரத்திக் கொண்டு நெடுந்தொலை சென்றான்; அப்பொழுது அவணுள்ள மலையடிவாரத்தில் தவம் செய்து கொண்டிருந்த ஒரு முனிவரை நோக்கிக் கொடிய வேங்கைப் புலியொன்று திறந்த வாயுடன் பாயத் தலைப்பட்டதைக் கண்டான்; மறு நொடியில் விரைந்து சென்று, அதன்மீது அம்பெய்தான். குறி தவறாது அம்பு பாயவே, புலி வேதனை தாங்காமல் முழங்கிக் கொண்டு, இருங்கோவேள்மீது பாய்ந்தது. இவன் அஞ்சாமல் புலியுடன் போராடித் தன் இடையில் செருகி யிருந்த வாளையுருவி அதனுடலில் ஊடுருவக் குத்தினான். புலி பெரு முழக்கத்துடன் நிலத்தில் சாய்ந்து உருண்டு, சிறிது பொழுதில் உயிர் நீத்தது.

இந்த ஆரவாரத்தால் முனிவர் கண் விழித்துப் பார்த்து, நடந்தவற்றை அறிந்து மகிழ்ந்தார். அவர் இருங்கோவேளின் அஞ்சாமையையும், வீரத்தையும் போற்றிப் புகழ்ந்து, 'புலி யுடன் போராடிச் சென்ற உனக்குப் புலிகடிமால் என்னும் பெயர் வழங்குவதாக!' என்று வாழ்த்தினர். இருங்கோவேள் முனிவரை வணங்கி, விடை பெற்றுக் கொண்டு, தனதிருப் பிடம் சேர்ந்தான். இருங்கோவேளின் பெருமிதம், தறுகண் பற்றித் தோன்றியதெனக் கொள்வதில் தடையில்லை.

இந்திய விடுதலை வேட்கையால் நனி உந்தப்பெற்ற வீரர் சிதம்பரனாரைத் தமிழர் யாவரும் நன்கறிவர். இவர், தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனியொன்று நிறுவி, ஆங்கிலேயரின் கப்பல் கம்பெனி ஈட்டி வந்த கொள்ளையான பணம் குறையச் செய்தார். கூலியைக் குறைத்தும், ஆட்களை ஏவியும், பல வகையில் முயன்று பார்த்தனர்; ஆயினும், வணிகர்களும், மக்களும், தங்கள் பண்டங்களைச் சிதம்பரனாரின் கப்பல்களிலேயே ஏற்றுமதி செய்தும், பயணஞ் செய்தும் வந்ததால், முடிவில் சிதம்பரனாரை இழிவான நிலையில் இழுக்கச் சூழ்ச்சி செய்தனர்; 'ஓரிலட்சம் ரூபாய் தருகிறோம்; கப்பல் கம்பெனியைவிட்டு விலகிவிடுக', என்று சிதம்பரனாரையண்மித் தெரிவித்தனர். எளியவரின் நல்வாழ்வே தம் வாழ்வெனக் கருதி நாட்டுக் குழைத்த நல்லோராகிய வீரர் இதற்குடன்படுவாரோ?

சிதம்பரனுர் மறுத்து விட்டார். செயற்கரிய இச்செயல், இவருடைய வரலாற்றில், குன்றின் மேலிட்ட விளக்கெனப் பெரும்புகழுக்குரியதாய் ஒளி வீசி நிற்கின்றது. 'சான்ருேர் பழியொடு வருஉம் இன்பம் வெஃகார்,' என்பது உண்மை யன்ருே? வ. உ. சிதம்பரனுரின் இப்பெருமிதத்தை, இசைமை பற்றித் தோன்றியதெனக் கொள்ளலாம்.

வேள்பாரி பறம்பு மலைக்குரிய சிற்றரசன். ஈகைத் தன்மையே உருவான கொடை வள்ளல். இவனது இசை நாற்றிசையிலும் ஒளி வீசிச் சிறந்து விளங்குவதைக் கண்டு அழுக்காறுற்ற தமிழ் நாட்டு மூவேந்தர் படை திரட்டி வந்து பறம்பு மலையை முற்றுகையிட்டனர். முற்றுகை பல நாள் நீடித்தும் வெற்றி காணும் வழியறியாது திகைத்திருந்த மூவேந்தரிடம், பாரியின் உயிர் நண்பரான கபிலர் என்னும் செந்தமிழ்ப் புலவர் வந்து, 'வேந்தர்களே, நீங்கள் எவ்வளவு காலம் முற்றுகையிட்டிருந்தாலும் பாரியை வெல்ல முடியாது. ஏனென்ருல், அரணிலுள்ளார்க்கு இயற்கையாகவே கிடைக்கும் மலை நெல்லும், பலாப் பழமும், சுனைநீரும் மிகுதியாயிருப்பதால், அவர்களைப் பட்டினியால் பணிய வைக்க இயலாது. நீங்கள் இரவலராய் உருமாறி வந்து அடிபணிந்து கேட்டால், எம்மரசன் நாட்டைக் கொடுப்பான்; அது மட்டுமன்று; தன் உயிரையும் ஈவான்,' என்று, பாரியின் வீரமும், கொடையும் தோன்ற இகழ்ச்சிக் குறிப்புடன் தெரிவித்தார்.

இதைக் கேட்ட மூவேந்தரும், எங்ஙனமேனும் பாரியை வென்ருெழிக்க வேண்டுமென்னும் தீயநோக்குடனிருந்தமை யால், கபிலர் மொழிந்ததன் கருத்துணராது, அவர் தெரிவித்த வழியே பாரியை வெல்வதற்கு ஏற்றதெனக் கொண்டு, இரவலர் உருவுடன் சென்று, பாரியின் உயிரை வேண்டினர். பாரி, வேந்தரின் விருப்பப்படி தன்னையே ஈந்து தலையாய வீரப் புகழ் எய்தினுன். பாரியின் பெருமிதம், கொடை பற்றித் தோன்றியதெனக் கொள்ளலாம்.

இத்தகைய வீரச்சுவை, வரலாற்று நூல்களிலும் காப்பியங்களிலும் விரவி வரக் காணலாம். வீரச்சுவை

நிரம்பிய நூல்களைப் படிப்பதால் படிப்போர் நெஞ்சில் வீர உணர்ச்சி பெருகி எத்தகைய அரிய செயல்களையும் முடிப்பதற்குரிய ஊக்கம் சிறக்கும். வீரமுள்ளவர்கள் நாடு தழைத்து விளங்குமாதலால், வீரச்சுவை செறிந்த நூல்களைப் பயின்று ஆண்மையுடன் விளங்குவது ஒவ்வொருவர் கடமை ஆகுமன்றோ?

## அருஞ்சொற்பொருள்

உள்ள நிகழ்ச்சி — மனத்தின்கண் பொருந்திய நிகழ்ச்சி; ஆண்டு—அவ்விடத்தில்; துய்த்து - அனுபவித்து; சொற்சுவை — சொல்லின்பம்; அவலம் — அழுகை; வெகுளி — சினம்; இளிவரல்— இகழ்ச்சி; மருட்கை — மருளுதல்; விச்சை - கல்வி; அண்மி — நெருங்கி; வெஃகார் — விரும்பமாட்டார்; அரண் — கோட்டை; தலையாய — முதன்மையாகிய (சிறந்ததாகிய).

## வினாக்கள்

1. சுவை என்பது யாது? தெளிவாக விளக்குக.
2. நாவின் சுவை வகைகள் யாவை?
3. செவியின் சுவை வகைகளைத் தெளிவாக விளக்குக.
4. நாச்சுவைக்கும் செவிச்சுவைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
5. சமநிலை யென்றால் என்ன?
6. எந்தெந்தச் சுவை வழியாகப் பெருமிதம் பிறக்கும்?
7. கல்வி பற்றித் தோன்றிய பெருமிதத்துக்கு ஒரு சான்று தந்து விளக்குக.
8. தறுகண், இசைமை, கொடை ஆகியவை பற்றித் தோன்றும் பெருமிதத்துக்கு ஒவ்வொரு சான்று காட்டி விளக்குக.
9. வீரச்சுவை நிரம்பிய நூற்களைப் படிப்பதால் ஏற்படும் பயன்கள் யாவை?

## 7. சீறூர் சீரமைப்பு

[ வித்துவான். பி. கே. நரசிம்ம ஐயங்கார் ]

'கடவுள் படைத்தது சீறூர்; மனிதன் படைத்தது பேரூர்' என்பது ஒரு பழமொழியாகும். இயற்கையோடு இயைந்த சூழ்நிலை காண்பது சீறூரின்கண்ணேயாகும். தீஞ்சுவைத் தண்ணீரும், நிழல் கெழுமிய மரங்களும், நிழல் கனிந்த கனிகளும், வானளாவிய மலையடுக்கங்களும், மலைச் செறிவுகளும், இவற்றின் மிசை துயிலும் முகிற்குழாங்களும், இன்ன பிறவும் சீறூரில் நிறைந்து கண்ணுக்கினிய காட்சி வழங்குகின்றன; கருத்துக்கின்பம் நல்குகின்றன. ஆதலின் 'கடவுள் படைத்தது சீறூர்' என்பது சாலவும் பொருத்த மாயிற்று.

சீறூர்களில் புத்தம் புதிய கறி வகைகளும், நீர் கலவாப் பாலும், கட்டித் தயிரும், நறுமணங் கமழும் நெய்யும் குறைந்த விலையில் – நிறைந்த அளவில் – எளிய முறையில் கிடைத்துவிடும். மெல்லிய தூய பூங்காற்றுச் சீறூரின்கண் இயங்குவதை நாம் காண்கிறோம். நெல் முதலிய இன்றிய மையா உணவுப் பொருள்களும் சீறூரில்தான் விளைகின்றன. இத்தகைய கிடைத்தற்கரிய நல்ல வாய்ப்புகள் சீறூரில் அமைந்திருந்தாலும், அங்கிருந்து மக்கள் நகரத்துக்கு நகர்வ தேன்? 'கெட்டும் பட்டணஞ் சேர்' என்னும் பழமொழி யைச் சீறூர் மக்கள் பின் பற்றினர் போலும். சீறூர் மக்களில் செல்வ நலம் வாய்ந்தோர், நகர வாழ்க்கையில் நாட்டம் செலுத்துவாராயினர்; இன்பந்துய்க்க எண்ணுவாராயினர். சீறூர் மக்களில் சிலர் தம்மூரில், நோய் தீர்க்கும் மருத்துவ மனை, அறியாமை போக்கும் கலைக்கூடம் முதலியன இல்லாத காரணத்தால் நகரத்தை நாடலாயினர். இவ்வாறு சீறூர் மக்கள் பல்வகை நலம் நாடி, இன்பம் நாடி நகர் நோக்கிப் புறப்படலாயினர். அவர்கள் அங்ஙனம் சென்ற மையால் பெரிதும் சீறூர் பொலிவிழப்பதாயிற்று.

சீறூர் சிறப்புற வேண்டுமெனின், அதனிடம் அமைந் துள்ள குறைகளைக் களைய வேண்டும். பல்வகை நலங் களால் சீறூர் மக்களைக் கவர்ச்சி செய்யத் தகுந்த வழிகளை

நாம் அமைக்க வேண்டும். முதன் முதல் சீறூரின் உழவுத் தொழிலைச் செம்மையுறச் செய்ய வேண்டும். 'ஓதுவா ரெல்லாம் உழுவார்தம் தலைக்கடைக்கே,' 'உழுதுண்டு வாழ் வாரே வாழ்வார்' என்ற சொற்றொட ரெல்லாம் உழவின் மேன்மையைக் குறியா நிற்கும். இத்தகைய மேன்மை வாய்ந்த உழவுத் தொழில் கண்ணெனப் போற்றப்பட வேண்டும். உழவுத் தொழிலில் பழைய முறையை விலக்கிப் புது முறையைக் கையாள வேண்டும். பொருக்கு விதை, புதிய முறை உழு கருவிகள், மாடுகள், செலவுக்குப் போதிய பணம் உழவுக்குத் துணைபுரியும் மக்கள் முதலிய வசதி கள் இல்லாமையால் சிலர் தம் விளை நிலத்தை வாளா விடு கின்றனர். போதிய உழைப்பும் ஊக்கமுமில்லா நிலத்தினர் தம் நிலத்தை உறங்க விடுகின்றனர். இத்தகைய உறக்கம் நாட்டு மக்கட்கு எவ்வளவு தீமை விளைவிக்கின்றது! வறு மைப் பிணி தலைவிரித்தாடுவதற்குத் துணை புரிகின்றது.

'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே'

'இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

என்னும் பொன்மொழிகள், சோம்பேறிகளுக்குரிய அரிய அறிவுரைகளாகும். சீறூர் மக்களிற் சிலர் சோம்பல் கொண்டு கொன்னே காலத்தைக் கழிக்கின்றனர். இத் தகைய நிலை சீறூரில் மாற வேண்டும்.

கூட்டு முறையில் சீறூர் உழுதொழிலை முன்னேற்றலாம். நிலக் கூட்டு, உழைப்புக் கூட்டு எனக் கூட்டுமுறையை இரண்டாகப் பிரிக்கலாம். சீறூரில் உள்ள எல்லா நிலங் களையும் ஒன்றாக இணைக்க வேண்டும். விஞ்ஞான முறை யில் நிலங்களைப் பயிரிட வேண்டும். உழவுத் தொழிலில் நுண்ணறிவு பெற்றவரும், அதில் மிக்க ஆற்றல் வாய்ந்த வரும் ஆகிய சான்றோர், உழவு முன்னேற்றத்துக்குத் துணை

புரிய முன்வர வேண்டும். நிலங்களை உழுவதற்கு டிராக்டர்களைப் பயன்படுத்த வேண்டும். பொருக்கு விதைகள், உர வகைகள், நீர் பாய்ச்சல், களை கட்டல், அறுவடை செய்தல் முதலியன உழவின் முன்னேற்றத்துக்கு ஏற்றனவாக இருக்க வேண்டும்; விஞ்ஞான முறையில் அமைய வேண்டும். கூட்டு முறையில் கிடைக்கும் விளைபொருளை நில அளவுக் கேற்றவாறும், உழைப்பளவுக் கேற்றவாறும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். இம்முறையால், உழைக்க முடியாத நிலத்தினரும், நிலமில்லாத உழைப்பாளிகளும், நிலமும் உழைப்புமுள்ள மக்களும் பயன் பெறுகின்றார்கள். கூட்டு முறை உழவுத் தொழில் முன்னேறுவதற்கு விவசாய அலுவலகங்களை அரசியலார், நகரங்களில் அமைக்காமல் சீறூரில் அமைப்பது நல்லது.

சிறந்தவொரு நாட்டின் இலக்கணங்களாகக் குறிக்க வந்த வள்ளுவர் முதன் முதல் குறையாத விளைச்சலையே குறிப்பிடுகின்றார். அதாவது

> 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு'

என்கிறார். ஆதலால் உழவுத் தொழிலை நாம் உயிர்நாடியாக மதித்து ஓம்புவோமாக.

சீறூரில், உழவுத் தொழிலுக்கடுத்தபடியாகக் கைத்தொழில் நன்முறையில் அமைய வேண்டும். உழவருக்கு ஆண்டு முழுவதும் வேலை இல்லை. உழவுக் காலங்களில்கூட எல்லா நேரத்திலும் உழவருக்கு வேலை இல்லை. ஆதலால் உழவர் தம் ஓய்வுக் காலத்தில் கயிறு திரித்தல், பாய் நெய்தல், கூடை முடைதல் முதலிய பயன்மிக்க தொழில்களைப் புரிதல் நல்லது. இதனால் துணை வருவாய் அவர்களுக்கு ஏற்படுகின்றது. பருவ மழை தவறுவதனாலும், பயிர்களைப் பூச்சி அரிப்பதனாலும் உழவர்களுக்குப் பேரிழப்பு நேர்வதும் உண்டு. இத்தகைய இடர்ப்பாடு நேரும்போது அத்துணை வருவாய் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. கைத்தொழில்

களுக்குரிய பொருள்களை உழவர் வாங்குவதற்கு அரசியலார் துணைபுரிவதோடு, அவர்கள் உருவாக்கிய பொருள்களை விற்பதற்கும் துணைபுரிய வேண்டும். மக்கட்கு உழவுத் தொழில் உயிர் நாடியாக அமைவது போலக் கைத் தொழில் கண்ணாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சீறூர் மக்கட்கு உதவிபுரியும் தொழில்களுள் நெய்தல் தொழில் மிகவும் சிறந்ததெனலாம். ஆடை என்பது அனைவர்க்கும் தேவையானதாகும். ஆடையில்லா மனிதன் அரை மனிதனுவானல்லனோ? தமக்கு வேண்டிய தேவை யைத் தாமே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற அடிப் படையில்தான் காந்தியடிகள் நூல் நூற்றல் போன்ற கைத் தொழில்களை நாட்டு மக்களிடையே பரப்பினர். சீறூர் மக்கள் சீரிய வாழ்வு பெறுவதற்கு நெய்தல் தொழில் தவருமல் துணைபுரியும்.

சீறூர் செம்மையுற வேண்டுமெனின் சிறந்த மருத்துவ மனையும் அங்கு அமைதல் வேண்டும். மருத்துவ மனையில் பணிபுரிவோர் எளிய மக்களின் நோய் நாடி, இன்சொற் பேசி, நோய் தணிக்கும் வழிநாடி, தக்க மருந்தளித்து, அவர்களின் உள்ளங்குளிரச் செய்ய வேண்டும். சீறூர் மக்கள், நகர நாகரிக வாழ்வால் தாக்குண்ணுமையால் இயற்கையாக நல்லுடல் வாய்ந்தவராகவே இருப்பர். நகர மக்களை நாடிக்கொண்டே இருக்கும் குருதிக் கொதிப்பு, சருக்கரை நோய், உப்பு நோய், எண்ணிலடங்காக் காய்ச்சல் முதலிய நோய்கள் சீறூர் மக்களை அஞ்சி விலகும். சீறூர் மக்களின் உழைப்புடலிலே — உரம் வாய்ந்த உடலிலே நோய்கள் புகுவதற்கு அஞ்சும். ஆயினும் அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலை காரணத்தால் சீறூர் மக்களை அந்நோய்கள் தொட்டுப் பார்த்தலுமுண்டு. ஆதலால் சீறூர் மக்கட்கு மருத்துவமனை துணை செய்ய வேண்டும். சீறூர் தோறும் ஒரு மருத்துவமனை இருக்க வேண்டும். போக்குவரவு வசதி

யில்லாத எத்தனையோ சீறூர் உண்டு. பிள்ளைப்பேறு, வயிற்றுப்போக்குப் போன்றவற்றிற்கு மருத்துவ உதவி மிக விரைவில் தேவையானதாகும். போக்குவரவு வசதியில்லாத சீறூர் அவற்றிற்கு உடனே எங்ஙனம் உதவி செய்ய வியலும்? எளிய மக்களும் பணச் செலவின்றி மருத்துவம் பெறும் வாய்ப்பு சீறூரில் அமைய வேண்டும்.

சீறூர் மக்கள் சுகாதார நெறியைப் பின்பற்றுவிட்டால் எத்தனை உயர்ந்த மருத்துவமனை இருந்தாலும் அவர்கட்கு நன்மை ஏற்படாது. நேரிய சாலை அமைய வேண்டும். ஊரின் புறத்தே எருக்குழிகள் அமைய வேண்டும். ஒதுக்கிடத்தே மக்கள் மலம், சிறுநீர் கழிக்க வேண்டும். கூழானலும் குளித்துக் குடிக்க வேண்டும். கந்தையானலும் கசக்கிக் கட்ட வேண்டும். குப்பை கூளங்களைக் கண்டவிடங்களிலெல்லாம் கொட்டாமலிருக்க வேண்டும். நீர் நிலைகள் தூய்மையுடையனவாக இருக்க வேண்டும். காவலாளரைக் கொண்டு அவை பாதுகாக்கப்பட வேண்டும். அழுகிய பண்டங்களைத் தின்னுமலிருக்க வேண்டும். இல்லத்துக்கருகில் நீர் தேங்கும் குழிகள் இருக்க வேண்டா. மாடும், மனிதனும் ஒரு நீர்நிலையில் நீராட வேண்டா.

சீறூர் சீரமைப்பிற்குக் கல்வி நிலையமும் தேவையானதாகும். சீறூர் மக்களின் அறியாமை இருள் அகல வேண்டும். ஞானக்கண் ஒளிர வேண்டும். கல்வி நிலையம் அமைவதற்குச் சீறூர் மக்களின் பேருழைப்பு வேண்டும்; அவர்களின் ஒத்துழைப்பு வேண்டும். பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலத்தில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் தம் குழந்தைகளை ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். தம் குழந்தைகள் நன்கு படிக்கிறார்களா — நல்லினத்தாரொடு சேர்கிறார்களா என்பவற்றை யெல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். தீண்டத்தக்கவர், தீண்டத் தகாதவர் என்ற பாகுபாடு செய்யாமல் எல்லார்க்கும் ஓரிடத்தே கல்வி வழங்கப்பட

வேண்டும். சிற்றூர்ப் பள்ளி ஆசிரியர் உண்மை உள்ளத்தோடு – ஆர்வத்தோடு உழைக்க வேண்டும். மலர்ந்த முகத்தோடு – புன்னகை தவழும் இன்சொல்லோடு கல்விச் செல்வத்தைக் குழந்தைச் செல்வங்கட்கு வாரி வழங்க வேண்டும். படக் காட்சி வழியே கல்விச் சிறப்பு எடுத்துரைக்கப்பட வேண்டும். ஏழை மாணவர்க்கு உணவு வழங்கப் பெற வேண்டும். பொது நூல் நிலையம் அமையப் பெற வேண்டும். அறிவு வளர்ச்சிக்கேற்ற – உலகச் செய்தி அறிவதற்கேற்ற செய்தித் தாள்களை ஊரார் அனைவரும் படிப்பதற்குரிய படிப்பகம் இருக்க வேண்டும்.

மேலும் சிற்றூரில் பொதுவானதோரிடத்தில் வானொலிச் செய்தி பரப்பப்பட வேண்டும். மகிழ்வு மன்றங்களும், நாடக அரங்குகளும், பல சான்றோர்களின் விழாக்களும் நிலவ வேண்டும்.

மேற்கூறப்பட்ட செய்திகளனைத்தும் சிற்றூர் சீரமைப் புக்குப் பெரிதும் துணை செய்யும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## அருஞ்சொற்பொருள்

நிழல் கெழுமிய - நிழல் பொருந்திய, மிசை – மேலே, நல்கு கின்றன – கொடுக்கின்றன. தலைக்கடை – தலைவாயில், வாளா – சும்மா. இலம் என்று அசைஇ – வறுமையுடையோம் என்று சொல்லிச் சோர்ந்து, நகும் –பரிகசிப்பாள், கொன்னே - வீணாக. தள்ளா விளையுள் - குறையாத விளைச்சல்.

## பயிற்சி வினாக்கள்

1. 'கடவுள் படைத்தது சிற்றூர்' என்பது சாலவும் பொருத்த மாகும் — எங்ஙனம்?

2. சிற்றூரின் சிறப்புக்களைப் புலப்படுத்துக.

3. சிற்றூர் மக்கள், நகரத்துக்கு நகர்வதேன்? விளக்குக.

4. சிற்றூர் உழவுத் தொழில் எங்ஙனம் அமைய வேண்டும்?

5. கூட்டு முறையின் சிறப்பை விளக்குக.

6. ஓய்வுக் காலங்களில் உழவர் ஒழுக வேண்டிய முறையை விளக்குக.

7. சீறூரின் நெய்தல் தொழில் பற்றி நீவிர் அறிவன யாவை ?

8. சீறூர் மருத்துவமனை, சுகாதாரம், கல்வி நிலையம் முதலியன பற்றி நீவிர் அறிவன யாவை ?

9. சீறூர் சீரமைப்புக்குத் துணைபுரிவன யாவை ? பதினைந்து வரிகளில் எழுதுக.

# 8. முற்கால வாழ்க்கையும் தற்கால வாழ்க்கையும்

[சொற்போர்]

[பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள்]

[அறிவழகன் திருமாவளவன், மணிவண்ணன், கலையரசி, செந்தாமரை என்ற ஐவரும் கல்லூரியிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள். அவர்கள் தம் ஓய்வு நேரத்தை நன்முறையில் பயன்படுத்தத் தங்களுக்குள் ஒரு கழகத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதற்கு 'ஐம்பெருங்குழு' என்பது பெயர். அறிவழகன் அக்குழுவின் தலைவன். திருமாவளவன் செயலாளன். அவர்கள் ஒவ்வொரு ஞாயிறும் கூடிப் பல பொருள் பற்றிப் பேசியும், சொற்போர் புரிந்தும் தம் சொல் வன்மையை வளர்த்து வந்தனர். அவ்வாறு ஒரு ஞாயிறு மாலை அவர்கள் 'முற்கால வாழ்க்கை, தற்கால வாழ்க்கை, இவற்றில் எது சிறந்தது?' என்பது குறித்துச் சொற்போர் புரியத் தொடங்கினர். அறிவழகன் தலைமை வகித்துத் தன் முன்னுரையைத் தொடங்கினான்.]

**தலைவர் :** ஐம்பெருங்குழு உறுப்பினர்களே! வணக்கம். சென்றவாரம் எனக்கு உடல் நலம் இன்மையால் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. செல்வி கலையரசியார் தலைமையேற்றுக் கூட்டத்தை மிகவும் திறமையாக நடத்தியிருப்பதைச் செயலாளர் படித்த நிகழ்ச்சிக் குறிப்பினால் அறிந்து மகிழ்ந்தேன். இந்த வாரம் நீங்கள் பேச எடுத்துக் கொண்டிருக்கும் பொருள் மிகவும் சிறந்தது ஆகும். நீங்கள் பேசத் தொடங்கும் முன் முற்காலம், தற்காலம் – இவற்றைப் பற்றி ஒரு வரையறை செய்துகொள்ள வேண்டும். தற்காலம் என்பதற்குக் குறிப்பிட்ட காலம் என்பதே பொருள். அதனினும் இக்காலம் என்று கொண்டால் தெளிவாக இருக்கும் என்பது என் கருத்து. முற்காலம் என்பது எது? நமக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் முற்கால நிகழ்ச்சிகளே. எனினும் முற்காலம் என்பது நம் வழக்கில் சங்க காலத்தையே குறிப்பாக உணர்த்தி வருகின்றது. ஆகவே, சங்ககாலப் பழந்தமிழர் வாழ்க்கை நெறி சிறந்ததா?

இக்கால வாழ்க்கை நெறி சிறந்ததா? என்ற பொருளையே இன்றைய வாதத்திற்குத் தலைப்பாகக் கொண்டு கலையரசி யாரை முதலில் பேசும்படி அழைக்கின்றேன்.

கலையரசி : அறிவிற் சிறந்த தலைவர் அவர்களே! நண்பர்களே! அனைவர்க்கும் என் பணிவார்ந்த வணக்கம். நான் நம் முற்கால வரலாற்றையும் இக்கால வரலாற்றையும் விரிவாக எடுத்துக் கூறி உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. எடுத்துக்கொண்ட பொருள்பற்றிச் சில கருத்துக்களை மட்டும் உரைத்து என் கொள்கையை வற்புறுத்த விரும்புகின்றேன்.

வாழ்க்கை என்றால் என்ன? உயிர் உடலோடு கூடி வாழ்வதே வாழ்க்கை என்பது அனைவரும் அறிந்ததே. சிறந்த வாழ்க்கை எது? உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் பெற்றுத் துன்பமின்றி நீண்ட காலம் இன்பமாக வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகும். அவ்விதம் வாழ்வதற்குத் திருவள்ளுவர் தெளிவான ஒரு வழி வகுத்துரைத்துள்ளார்.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்."

என்பதே அவர் கூறும் வழி. பிறர் நம்மைப் பழிக்காத வகையில் வாழ்தல், நம்மிடம் இருப்பதைப் பலருக்கும் உதவி வாழ்தல் ஆகிய இந்த இரண்டையும் நம் கடமையாகக் கொண்டால் நம் வாழ்க்கை நெறி ஒழுங்காகச் செல்லும்; நாமும் நிலமிசை நீடு வாழலாம் என்பதே அவர் கருத்து. இவ்விதம் வாழ்வதற்கு முற்கால வாழ்க்கை நெறியே உதவுகிறது என்பது என் எண்ணம்.

சங்க கால மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வு வாழ்ந்தார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த அவர்கள் ஆங்காங்கு இயற்கையாய்க் கிடைத்த பொருள்களைக் கொண்டு ஆடம்பரம் இன்றி எளிய வாழ்வு வாழ்ந்தனர். அவர்கள்

உணவும், உடையும் இயற்கையோடு பொருந்தியனவாய் இருந்தன; பழக்க வழக்கங்களும் இயற்கைக்கு ஏற்றன வாகவே அமைந்தன. அதனால் அவர்கள் வாழ்வில் அமைதி நிலவியது; இன்பம் பொங்கியது. செயற்கையான ஆடம்பர வாழ்வு வாழும் இக்காலத்தில் அத்தகைய அமைதிக்கும் இன்பத்திற்கும் இடம் இருக்கின்றதா?

இரண்டாவதாக இயற்கையோடு பொருந்திய வாழ்வு வாழ்ந்த முற்கால மக்கள் பாடுபட்டுழைத்துத் தம் தேவைக் குரிய பொருளைப் பெற வாய்ப்பிருந்தது. உழைப்புக்கேற்ற வருவாய், தேவைக்கேற்ற வசதி அனைவர்க்கும் கிடைத்தன. வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே அக்கால மக்கள் அறியாததாகும். ஆனால் இக்கால நிலை என்ன? வேலை யில்லாத் திண்டாட்டமும், பஞ்சமும், பசியும் மக்களை வாட்டி வதைத்தலை அறியாதார் யார்?

அடுத்ததாக முற்கால மக்களிடம் சிறந்த ஒழுக்கமும் உண்மையும் நிரம்பியிருந்தன. பிறரை வஞ்சித்து வாழ் வதைப் பெருங்குற்றமாக அவர்கள் நினைத்தனர். தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் வாழ்க்கையே உயர்ந்த வாழ்க்கை என்று எண்ணினர். பிறர்க்கு உதவுவதால் கேடு வரும் எனின் அக்கேட்டினைத் தன்னை விற்றாயினும் கொள்ள வேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோள்.

“ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.”

என்பதன்றோ வள்ளுவர் வாக்கு? இத்தகைய மக்கள் வாழ்வில் பொறாமைக்கோ பூசலுக்கோ இடம் இருந்திருக்குமா? இன வேறுபாடு, குல வேறுபாடு, மத வேறுபாடு என்ற உணர்ச்சிக்குத்தான் இடம் இருந்திருக்குமா? ஆதலால் அக்கால மக்கள் வாழ்க்கையில் ஒற்றுமை நிலவியது; உயர்வு பெருகியது. எனவே ‘நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை’ என்ற கொள்கையுடன் உயரிய வாழ்வு வாழ்ந்த முற்கால மக்கள் வாழ்வே சிறந்தது என்று நான் வற்புறுத்த விரும்புகின்றேன்.

தலைவர் : நண்பர்களே! அடுத்து இதனை மறுத்துப் பேச விரும்புவோர் தம் கருத்தினை விளக்கிக் கூறுமாறு அழைக்கின்றேன்.

திருமாவளவன் : பேரன்பு மிக்க தலைவரவர்களே! தோழர்களே! மனிதன் சந்திரமண்டலத்திற்குப் பறந்து செல்ல முயன்று கொண்டிருக்கும் இந்த விஞ்ஞானக் காலத்திலே கற்றுணர்ந்த கலையரசியார் முற்கால மக்களின் வாழ்க்கை முறையே சிறந்தது எனப் பேசியது விந்தையே.

பிறர் நம்மைப் பழிக்கும்படியாக வாழ்தல் கூடாது; நம்மிடம் உள்ளதைப் பிறர்க்கும் பகுத்துண்டு வாழ வேண்டும் என்று வள்ளுவர் கூறியதை நானும் முழு மனத்தோடு ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் மன்னன் ஒருவனே எல்லாரையும் அடக்கி ஆண்டு வந்த அக்காலத்தில் உழைப்பவர்க்கு உரிமை இருந்திருக்குமா? உழைப்பவர் சிலர்; உண்டு வாழ்வோர் சிலர் என்ற நிலைதானே இருந்திருக்க முடியும்! ஆனால் இந்நிலை மாறி, 'மக்களே இந்நாட்டு மன்னர்' என்ற சிறந்த முறை தோன்றியுள்ளது; உழைப்பவர்க்கு உரிமை பெருகியுள்ளது. உண்மையாக நோக்கினால் வள்ளுவர் கூறிய பகுத்துண்டு வாழும் முறை இக்காலத்தில் தான் நடைமுறையில் உள்ளது என்பது விளங்கும்.

மற்றும் இயற்கையோடு இயைந்த வாழ்வு என்று சொல்லி விட்டால் போதுமா? எஃது இயற்கை? எது செயற்கை? என்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். ஆதி கால மனிதன் காய் கனிகளையும், பச்சை இறைச்சியையும் உண்டு வாழ்ந்தான். பின்னர், தன் அறிவு வளர்ச்சியால் அவன் சமைத்துண்ணத் தெரிந்து கொண்டான்; உழுது உணவுப் பொருள்களை விளைவிக்கக் கற்றுக் கொண்டான். மரத்தில் உறங்கிய மனிதன் வீடு கட்டி வாழத் தொடங்கினான். தழைகளையே உடையாக அணிந்து வாழ்ந்தவன் அழகிய ஆடை அணிகளை அணியக் கற்றுக் கொண்டான். இவை யாவும் செயற்கை யல்லவா? என்றாலும் அந்த நாகரிகங்கள் யாவும் மக்களின் அறிவு வளர்ச்சிக் கேற்பத்

தோன்றிய வாழ்க்கை வசதிகள் அல்லவோ? அவை போலவே இன்று மின்விசை முதல் அணுகுண்டு வரை தோன்றியுள்ள யாவும் மக்களின் அறிவினுல் ஏற்பட்ட வளர்ச்சிகளே யாம். இவற்றைச் செயற்கை என்று புறக் கணிப்பது அறிவுடைமை ஆகுமா?

பண்டைக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று குறிப்பிட்டார். இஃது அடிப்படை உண்மையை மறந்தோ, மறைத்தோ பேசுவதாகும். பண்டைக் காலத்தில் மக்கள் தொகை மிக மிகக் குறைவு. அவர்கள் தேவையும் குறைவு. தேவைக்கு மேல் உற்பத்தி மிகுதியாக இருந்தது. அதனுல் மக்களிடம் வேலையில்லாத் திண்டாட்டமோ, பஞ்சமோ, பசிப்பிணியோ நேர வாய்ப்பு இல்லை. ஆனுல் இக்கால நிலை என்ன? ஒவ்வோராண்டும் மக்கள் தொகை கோடிக் கணக்கில் பெருகி வருகின்றது. அதனுல் வாழ்க்கை வசதிகள் குறைவதும், வேலையில்லாத் திண்டாட்டம் நேர்வதும் இயற்கையே. எனினும் இக்கால அறிஞர்கள் தம் அறிவாற்றலால் அத்தகைய அவல நிலை ஏற்படாமல் கண்காணித்து வருவதை எண்ணி நாம் மகிழ வேண்டியிருக்கக் குறை கூறுவது பொருந்தாது.

இனி, நான் இக்கால வாழ்வே சிறந்தது என்ற என் கொள்கையை விளக்கிச் சில கூற விரும்புகிறேன். இன்று மனிதன் நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பெரும் பூதங்களையும் அடக்கி ஆளும் வல்லமை படைத்திருக் கின்ருன்; முற்கால மக்களைவிட அறிவிலும் ஆற்றலிலும் பன்மடங்கு உயர்ந்துள்ளான். முற்கால மக்கள் மூட நம்பிக்கை உடையவர்களாய் எல்லாம் விதியின் செயல்; விதியை வெல்ல யாரால் ஆகும்? என்று கூறிக்கொண்டு தம் முயற்சி அற்று வாழ்ந்தனர். இக்கால மக்கள் தம் சக்தியின் ஆற்றலை உணர்ந்துள்ளனர். அதனுல் அவர்கள் இவ்வுலகில் இன்பமாக வாழத்தக்க பற்பல வசதிகளையும் கண்டறிந் துள்ளனர்; மனித உழைப்பைக் குறைத்து அவர்கள் இன்ப வாழ்வைப் பெருக்கியுள்ளனர்.

அக்காலத்தில் மனிதன் மாடு போல் வயலில் உழைத்தான். உழவும், விதைக்கவும், அறுவடை செய்யவும் இன்று விதம் விதமான கருவிகள் உள்ளன. அக்கால மனிதன் போக்கு வரவு வசதியில்லாமல் கிணற்றுத் தவளையாய் நாட்டு வளம் அறியாமல் வாழ்ந்தான். இக்காலத்தில் ஒரே நாளில் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குப் பறந்து செல்ல வசதி ஏற்பட்டுள்ளது. அதனால் இன்று 'உலகமே ஒரு குடும்பம்' என்ற உயரிய பண்பாடு வளர்ந்து வருகின்றது. மற்றும் வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, படக்காட்சி என விஞ்ஞானத்தால் இன்று விளைந்துள்ள புதுமைகள், வசதிகள் எண்ணில் அடங்காதனவாகும். மருத்துவத் துறையில் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள புதுமைகளைப் பழங் கால மக்கள் எண்ணியாவது பார்த்திருக்க முடியுமா? இருதயத்தையும் அறுவைச் சிகிச்சை மூலம் நோய் நீக்கிக் குணப்படுத்த முடியும் என்று இக்கால விஞ்ஞானிகள் விளக்கிக் காட்டியுள்ளனர். அவர்கள் இத்துறையில் செய்து வரும் மற்றும் பல முயற்சிகள் வெற்றி பெற்றால், மக்கள் கலையரசியார் கூறியது போல நீண்டகாலம் இன்பமாக வாழ முடியும் என்பது என் நம்பிக்கை. ஆதலால் இக்காலம் மனித வாழ்விலேயே மிக உயர்ந்த பொற்காலம் என்று கூறி என்னுரையை முடிக்கிறேன்.

தலைவர்: நண்பர்களே! இருவர்தம் உரைகளையும் கேட்டீர்கள். உங்களில் யாராவது அவர்கள் கூறிய கருத்துக்களை ஒட்டியோ வெட்டியோ பேச விரும்பினால், பேசுமாறு அழைக்கின்றேன்.

மணிவண்ணன்: பேரன்புடையவர்களே! வணக்கம் மிகப்பல. நண்பர் நீலகண்டன் விஞ்ஞானப் பித்தினால் பழமையை எள்ளி உரைத்துப் புதுமையை வரவேற்றுப் பேசினார். இக்கால வாழ்க்கையே சிறந்தது என்பதற்கு விஞ்ஞானத்தினால் ஏற்பட்டுள்ள வசதிகளை அடுக்கிக் காட்டினாரேயன்றி மக்கள் வாழ்க்கை இக்காலத்தில் அமைதியும் இன்பமும் உடையதாக இருக்கின்றதா என்று விளக்கத் தவறி விட்டார்.

இயற்கை, செயற்கை என்பதற்கு அவர் கூறிய விளக்கமும் நகைப்பையே விளைவிக்கிறது. நம் நாட்டில் உள்ளவர்கள் அரிசியை உணவாக உண்டு, நம் நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்பப் பருத்தி ஆடை உடுத்து வாழ்தல் இயற்கையோடு இயைந்த வாழ்வாகும். அயல்நாட்டு உணவு, உடை இவைகளை மேற்கொள்வது ஆடம்பரத்துக்காகவேயல்லாமல் இயற்கையாகுமா? பண்டைக்கால மக்கள் இயற்கையோடு ஒட்டிய எளிய வாழ்வு வாழ்ந்தமையாலேயே இன்புற்று வாழ்ந்தனர். காந்தியடிகளாரும் ஏற்ற எளிய வாழ்வே 'நம் நாட்டின் வறுமையை நீக்கும்' என்று கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பண்டைக்கால மன்னர்களைக் குறைகூறி, மக்களாட்சி நடைபெறும் இக்காலத்தில்தான் பகுத்துண்டு வாழும் அறம் சிறந்த முறையில் நடைபெறுகிறது என்று நண்பர் கூறினர். பகுத்துண்டு வாழ்தல் என்ருல் என்ன? யானை, எருது, பூனை, எறும்பு என்ற யாவற்றுக்கும் ஒரே அளவில் உணவுப் பொருளைப் பங்கிட்டுத் தருவது பகுத்துண்டு வாழ்வதாகுமா? தேவைக்கு ஏற்ப உணவும் உடையும் பிறவும் கிடைக்கச் செய்வதே பகுத்துண்டு வாழ்வதாகும். அத்தகைய முறை இப்போது உள்ளது என்று நண்பர் கூறுவாரா? எத்தனை குடும்பங்கள் இன்று உணவுப் பற்ருக் குறையாலும் ஏனைய வசதிக் குறைவுகளாலும் துன்பம் உறுகின்றன என்பது உங்கட்கு நன்ருகத் தெரியும். பண்டைக்கால மன்னர்கள் தலைவராக இருந்து ஆண்டாலும் அவர்கள் நாட்டின் நலம் ஒன்றையே கருத்தில் கொண்டு வாழ்ந்தனர்; தங்களையும் குடிமக்களில் ஒருவராகவே கருதினர். மேலும் கூறுவேன், தற்போதுள்ள மக்களாட்சி முறைக்கு வழிவகுத்தவர்கள் அவர்களே. பண்டைக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சுதந்தரக் குடியரசாய் விளங்கியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியோர்களே கிராம ஆட்சியை நடத்தினர். அதனுல் கிராமத்தில் கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும் நிரம்பியிருந்தன. இன்றைய மக்களாட்சியில் கூட அத்தகைய கிராமங்களைக்காண இயலவில்லையே.

என் நண்பர் இக்காலத்தில் உள்ள விஞ்ஞானப் புதுமைகளை வியந்து பாராட்டினுர். இவையெல்லாம் முற்காலத்தில் உண்டா? என்ருர். இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். இவை எல்லாம் இருந்து என்ன பயன்? இக்கால மக்களிடம், பண்டைக்கால மக்களிடம் இருந்த மனிதப் பண்பு இல்லையே! இன்று ஏற்பட்டுள்ள இவ்விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம் மனிதர்களைச் சோம்பேறிகளாக்கவும், உலகத்தை அழிக்கவும், அஞ்சி நடுங்க வைக்கவும், 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்னும் நிலையை வளர்க்கவும் தாமே பயன் படுகின்றன. இவற்ருல் நாட்டில் இன்பமோ, அமைதியோ ஏற்பட்டனவா? மக்கள் படும் துன்பங்கள் குறைந்தனவா? போரும் பிணக்கும் பேராசையும் பொருமையும் நிறைந்துள்ள இக்காலத்திலும் நம் நாட்டில் வாழ்ந்த புத்தர், திருவள்ளுவர், அசோகர் போன்ற சான்ருேர்கள் வகுத்த அன்புநெறியே இவ்வுலகைக் காப்பாற்றக் கூடியதாய் உள்ளது. நம் தலைவர், பண்டித நேரு கூறும் பஞ்சசீலம் என்பது அப்பழம்பெருங் கொள்கைதானே! ஆதலால் இக்கால மக்களின் இன்ப வாழ்வுக்கு வழிகாட்டியாக உள்ள பழங்கால வாழ்க்கை முறையே சிறந்தது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்வர் என நம்புகின்றேன்.

செந்தாமரை: அறிவு சான்ற தலைவரவர்களே! அன்பர்களே! வணக்கம். முற்கால வாழ்க்கையைப் பாராட்டிப் பேசியவர்கள் இக்காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம் மக்கள் வாழ்க்கையை வளப்படுத்த உதவவில்லை; போர் வெறியைத் தூண்டி நாசம் விளைக்கவே உதவுகின்றன என்று கூறினர். இஃது ஓரளவுதான் உண்மை. துப்பாக்கியும், பீரங்கியும், அணுகுண்டும் போருக்கு உதவுகின்றன என்பது உண்மையே. இதனுலேயே இக்கால வாழ்க்கை பயனற்றது என்று கூறிவிடலாமா? இவர்கள் போற்றிப் புகழ்ந்த சங்க காலத்தில் போர்கள் நடைபெறவில்லையா? சேர சோழ பாண்டிய வேந்தர்கள் ஒற்றுமையின்றிப் போர் புரிந்த செய்தியை விளக்கப் புறநானூறு ஒன்று போதுமே. அக்கால அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப அவர்கள் கண்டு பிடித்திருந்த

வில்லும், அம்பும், வேலும், வாளும் ஆயுதங்களாகப் பயன் பட்டன. பகைவர் நாட்டைக் கைப்பற்றி இடித்துத் தரை மட்டமாக்கி, நெருப்பூட்டி அழித்து நாசம் செய்த கதை அக்காலத்தும் நிகழ்ந்தே உள்ளது. இக்கால அறிவு வளர்ச்சியினுல் கண்டுபிடிக்கப்பட்ட வியத்தகு ஆயுதங்கள் போரில் பயன் படுத்தப்படுகின்றன. அஃது எங்ஙனம் தவருகும்?

இதனுல் நான் போரை ஆதரிப்பதாகக் கருதிவிடாதீர்கள். அஃது எந்தக் காலத்திலும் இயற்கை என்பதே நான் கூறக் கருதியது. ஆனுல் நாகரிகம் மிக்க இக்காலத்தில் அத்தகைய போர் முறைகளை ஒழித்து உலகம் முழுதும் ஒரு குடும்பமாக வாழ வழி காணத் தலைவர்கள் உழைத்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை அதற்காகப் பாடு பட்டு வருவதை அனைவரும் அறிவோம். மனிதப் பண்பின் உயர்ந்த சின்னமாக விளங்குகின்றது அச்சபை. அங்ஙனம் இருக்க, இக்கால மக்களிடம் மனிதப் பண்பாடு இல்லை யென்று கூறியதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன்.

இறுதியாக ஒன்று கூறி முடிக்கின்றேன். பழங்கால வாழ்க்கை முறையைப் போற்றிப் புகழ்ந்த இவர்கள், பழங்கால முறைப்படி உண்டு உடுத்தி வாழ முன் வருவார்களா, என்று கேட்க விரும்புகின்றேன். மக்கள் அறிவு வளர்ச்சியில்லாமல் வாழ்ந்த காலத்தில் தங்கள் தேவைக்கு ஏற்ற எளிய பொருள்களைக் கொண்டு வாழ்ந் தார்கள் என்ருல், அறிவு வளர்ச்சி பெற்றுப் பற்பல வசதி களும் பெருகியுள்ள இக்காலத்தில் அப்பழங்கால வாழ்வுதான் சிறந்தது என்று கூறுவது அறிவுடைமையாமோ? அந்தப் பழங்கால வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாக இருந்தால் மக்கள் ஏன் அதை விட்டுப் புதுப்புது நாகரிக நிலையை விரும்பி ஏற்ருர்கள்? நம் கலையரசியார் கொள்கையைக் கண்டிக்க இந்த ஒன்றே போதும் என்று சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

தலைவர் : அறிவு நலம் சிறந்தொளிரும் நண்பர்களே! உங்கள் அரிய சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெருமகிழ்வு கொள்கின்றேன். ஒவ்வொருவரும் உங்கள் கருத்தை நிலைநாட்டக் கூடிய கருத்துக்களைத் திறம்பட எடுத்துரைத்தீர்கள். முடிவு கூறவேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்துள்ளது. உங்கள் சொற்பொழிவுகளைக் கேட்ட எனக்கு இருவித வாழ்க்கையும் சிறந்தன என்றே தோன்றுகின்றது. பழமையில்லாமல் புதுமை இல்லை. இன்றைய புதுமைகள் யாவும் பழமையிலிருந்து தோன்றி வளர்ந்தனவேயாம். நீரிலே இயற்கையாய்த் தோன்றிய புழுவிலிருந்தே உயிர் வகைகள் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றி வளர்ந்தன. இறுதியாக மனிதன் தோன்றினான். மனிதர்களின் தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும்கூடக் காலப் போக்கிற் கேற்ப எத்தனையோ வேறுபாடுகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அவை போலவே நாகரிகமும் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றி வளர்ந்து பெருகியவண்ணமே உள்ளது. இதனைத்தான் விஞ்ஞானிகள் 'கூர்தல் அறம்' (Law of Evolution) என்று கூறுகின்றனர். உலகில் நிகழும் யாவும் கடவுளின் அருளாகிய இந்த இயற்கை நியதியை ஒட்டியே நிகழ்ந்து வருகின்றன. இவ்வுண்மையை உணர்ந்து கொண்டால் நாம் புதுமையைப் போற்றிப் பழமையை வெறுக்கவோ, பழமையைப் பாராட்டிப் புதுமையைப் புறக்கணிக்கவோ செய்யமாட்டோம்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.'

என்று பவணந்தியார் மொழி இலக்கணத்திற்குக் கூறிய விதி இதற்கும் பொருந்தும் என்று கூற விரும்புகின்றேன்.

பழங்கால மக்களும் அக்காலச் சூழ்நிலைக்கு ஏற்பத் தம் அறிவு ஆற்றல்களால் புதுப்புதுக் கருவிகளை, வாழ்க்கை வசதிகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தியே வாழ்ந்தனர். அக்காலத் தேவைகளுக்கு அவை போதுமானவைகளாய் இருந்தன. மனித அறிவு வளர்ச்சியால் நாகரிகம் வளர்ந்துள்ளது. அவனுடைய தேவைகளும் பெருகியுள்ளன;

வாழ்க்கை முறைகளும் மாறியுள்ளன. அவற்றிற்கு ஏற்ப இக்காலத்தில் புதுப்புதுக் கருவிகளும் வசதிகளும் ஏற்பட்ட வண்ணமாக உள்ளன. பழமையைப் போற்றி இவ்வசதிகளை வெறுத்தல் கூடாது.

எனவே, இக்காலத்தில் ஏற்பட்டுள்ள எல்லாவிதமான வசதிகளையும் நாம் பயன்படுத்த வேண்டும். நம்முடைய அறிவால் இன்னும் பற்பல வசதிகளையும் கண்டறியப் பாடுபடவும் வேண்டும். அதுவே, இயற்கை நெறி.

'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.'

என்ற வள்ளுவர் வாய்மொழியை உங்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

புதுமையைப் போற்றும் அதே சமயத்தில் பழங்கால மக்கள் தந்நலம் இன்றிப் பிறர் நலம் கருதி வாழ்ந்தது போல, அன்பையும் அருளையும் போற்றி வாய்மை வழியொழுகிச் சான்றாண்மை யுடையவராய்த் திகழ்ந்தது போல நாம் வாழ முற்பட வேண்டும். புதிது புதிதாகத் தோன்றும் விஞ்ஞான வளர்ச்சிகள் யாவும் உலகத்தின் அழிவுக்குப் பயன்படாமல் ஆக்கத்திற்கு - இன்ப வாழ்விற்கு - அமைதிக்கு உதவ வேண்டும். இங்ஙனம் முற்கால வாழ்விலும் இக்கால வாழ்விலும் சிறப்புடையனவற்றை அறிந்து கடைப்பிடித்து வாழ்வதே உண்மையான நாகரிக வாழ்வாகும். உங்கள் கருத்துக்களை நேர்மையோடு எடுத்துக் கூறி வாதிட்ட திறமையைப் பாராட்டுகின்றேன். வணக்கம்.

திருமாவளவன்: நண்பர்களே! தலைவர் அறிவழகன் அவர்கள் தம் பெயருக்கு ஏற்பக் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையோடு நாம் கூறிய உரைகளைக் கேட்டு நல்ல தீர்ப்பு வழங்கியதற்காக நம் குழுவின் சார்பில் அவருக்கு நன்றியும் வணக்கமும் தெரிவிக்கின்றேன். சிறந்த முறையில் சொற்போர் புரிந்த உங்கள் அனைவர்க்கும் என் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

## அருஞ்சொற்பொருள்

குழு – கூட்டம்; சங்க காலம் – இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதி; பழியஞ்சி ... இல் – இல்லற வாழ்க்கை நடத்துபவன் பழியொடு பொருந்தாத செல்வத்தை ஈட்ட வேண்டும்; ஈட்டிய செல்வத்தைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துப் பின் தான் உண்ண வேண்டும்; இத்தகையவனது இல்லற நெறி, உலகில் எஞ்ஞான்றும் அழிதல் இல்லை; நிலமிசை – இந்த நில வுலகின்கண்; குறிஞ்சி – மலையும் மலை சார்ந்த இடமும்; முல்லை – காடும் காட்டைச் சார்ந்த இடமும்; மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்; நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்; ஒப்புரவு – உபகாரம் செய்தல்; கேடு – செல்வ அழிவு; அவல நிலை – துன்ப நிலை; எள்ளி – இகழ்ந்து; தட்ப வெப்ப நிலை – சீதோஷ்ண நிலை; பிணக்கு – மாறுபாடு; நாசம் – அழிவு; ஒளிரும் – விளங்கும்; கூர்தல் – மேலும் மேலும் மிகுதல்; வழுவல – குற்றங்கள் அல்ல; உலகத்தோடு ... ... அறிவிலாதார் – உலகம் செல்லும் நெறியை உணர்ந்து அவ்வழி நடவாதவர், பல சிறந்த நூற்களை நன்கு படித்திருப்பினும் அதனுல் யாதொரு பயனும் இல்லை; அவர் அறிவற்றவர் என்றே கருதப்படுவர்; வாய்மை – உண்மை; ஆக்கம் – முன்னேற்றம்.

## வினுக்கள்

1. ஐம்பெருங் குழு — விளக்குக.
2. முற்காலம், தற்காலம் — இவற்றிற்குத் தெளிவான விளக்கம் தருக.
3. முற்கால வாழ்க்கையே சிறந்தது என்பதற்குக் கலையரசி காட்டும் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுக.
4. தற்கால வாழ்க்கையே சிறந்தது என்பதற்குத் திருமாவளவன் கூறும் காரணங்கள் யாவை ?
5. பழமையை எள்ளி உரைத்த நீலகண்டனைப் பார்த்து மணிவண்ணன் கூறுவன யாவை ?
6. தற்கால வாழ்க்கைதான் சிறந்தது என்பதற்குச் செந்தாமரை கூறும் காரணங்கள் யாவை ?
7. வாழ்க்கை என்றுல் என்ன ? என்பதற்குக் கலையரசி தரும் விளக்கம் யாது ?

8. சங்ககால மக்களின் வாழ்க்கை நெறியைக் கலையரசி எங்ஙனம் விளக்குகிறார் ?

9. முற்கால மக்களின் உயர் பண்புகள் எவையெனக் கலையரசி கூறுகிறார் ?

10. மன்னராட்சி சிறந்ததெனக் கூறின கலையரசியைத் திருமாவளவன் எங்ஙனம் மறுக்கிறார் ?

11. ஆதிகால மனிதன் எவ்வெப்படி வாழ்க்கையில் முன்னேறினான் என்று திருமாவளவன் கூறுகிறார் ?

12. வேலையில்லாத் திண்டாட்டம் பண்டு இல்லை யென்று கூறின கலையரசியைத் திருமாவளவன் எங்ஙனம் மறுக்கிறார் ?

13. முற்கால மக்களுக்கும் இக்கால மக்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவையெனத் திருமாவளவன் மொழிகிறார் ?

14. இயற்கை, செயற்கை வாழ்வு பற்றி மணிவண்ணன் தரும் விளக்கத்தைக் கூறுக.

15. பகுத்துண்டு வாழும் அறம் இன்றுதான் உள்ளது என்ற திருமாவளவனைப் பார்த்து மணிவண்ணன் மறுத்துரைப்பன யாவை ?

16. விஞ்ஞான உலகம் சிறந்ததன்று என்பதற்கு மணிவண்ணன் கூறும் காரணங்கள் யாவை ?

17. முற்கால வாழ்க்கையைப் பாராட்டிப் பேசிய நண்பர்களைப் பார்த்துச் செந்தாமரை மறுத்துக் கூறுவன யாவை ?

18. சொற்போரின் இறுதியில் தலைவர் (அறிவழகன்) வழங்கிய தீர்ப்பினைச் சுருக்கிக் கூறுக.

19. கூர்தல் அறம் — குறிப்பு வரைக.

20. தடியெடுத்தவன் தண்டல்காரன், உலகமே ஒரு குடும்பம் — இச்சொற்றொடர்கள் வந்துள்ள இடங்களைக் காட்டி விளக்குக.

## 9. ஐக்கிய நாட்டுச் சங்க அமைப்பு

(வித்துவான். பி. செல்வராஜ்)

உலக அமைதியை நாடாத மனிதனே இருக்க மாட்டான். அமைதி என்பது உள்ளத்துக்கு இன்பத்தைத் தருவது. அத்தகைய இன்பம் தரும் அமைதியை விரும்பாத ஒருவன் இருப்பானுயின் அவனை மக்களினத்துள் அடக்கக் கூடாது; அமைதியற்ற வாழ்வை நாடிக் காட்டில் உழலும் மாக்களினத்துள்தான் அடக்க வேண்டும். முதல் உலகப் பெரும் போர் கி. பி. 1914இல் நடந்தது. பல்லாயிரம் உயிர்கள் போரில் மாண்டன. அப்பப்ப! அதை நினைத் தாலே உள்ளங் குமுறுகிறது. அத்தகைய போர் பல்லாண் டுகள் உலகில் நடந்தால் என்னுகும் என்று சான்ருேர் சிலரின் உள்ளம் பலமுறை சிந்திக்கத் தொடங்கியது.

**சர்வ தேச சங்கம் :**

முதல் உலகப் பெரும் போரினுல் ஏற்பட்ட கொடிய விளைவுகளைத் தவிர்க்கவும், எதிர்காலத்தில் மீண்டும் போர் ஏற்படுவதைத் தடுக்கவும், என்றும் நிலைத்த உலக அமைதி ஏற்படவும் உலகத் தலைவர்கள் பல்வகை முறைகளைக் கையாள முயன்ருர்கள். இத்தகைய தலைவர்களுள் சிறந்த ஒருவர், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சன் என்பவராவர். இப்பெரியாரின் அரிய முயற்சியால் — ஓயா உழைப்பால் உருவான சங்கம், சர்வ தேச சங்கமாகும். இச்சங்கத்திலிருந்து பல சங்கங்கள் கிளைத்தன. பெருமுயற்சியால் தோன்றிய அச்சங்கம், அந்தோ! நெடுநாள் நிலைக்கவில்லை. ஒரு சிறிது காலமே அது தழைத்தோங்கியிருந்தது. அச்சங்கத்தை ஏற்படுத்திய அமெரிக்காவே அதில் பங்கு கொள்ளவில்லை. அச்சங் கத்தின் கட்டுப்பாடுகளையும் ஆணைகளையும் மீறிச்சென்ற சில வல்லரசுகளை அஃது ஒறுக்கப் பின் வாங்கியது. இக் காரணங்களால் அச்சங்கம் ஒளி மங்கி, பின்னர் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

**ஐக்கிய நாட்டுச் சங்கத் தோற்றம் :**

சர்வ தேச சங்கம் மறைந்தாலும், மறக்க முடியாத, மறைய முடியாத ஒன்றனை நிலை நாட்டியுள்ளது. பெரும் புகழ் வாய்ந்து இக்காலத்தே திகழும்படியான ஐக்கிய நாட்டுச் சங்கத்துக்கு வித்திட்டதென்றால் அது மிகை யாகாது. கி. பி. 1944இல் இரண்டாம் உலகப் பெரும் போர் நடக்குங்கால், பல நாட்டிலே உள்ள தலையாய தலைவர்கள், வாஷிங்டனிற்கு அருகிலுள்ள டம்பார்ட்டன் ஒக்ஸ் என்னு மிடத்தில் கூடி, உலக அமைதி மிக இன்றியமையாதது என்பதை எடுத்துரைத்து, அதனைப் பாதுகாக்கவும், செயல்படச் செய்யவும் ஒரு சங்கம் தேவை என்பதை அவர்கள் உணரலானார்கள். 1945இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சான்பிரான்சிஸ்கோ என்ற மாநிலத்தில் ஐம்பது சார்பாளர் கூடி அக்டோபர் 24ஆம் நாள் ஐக்கிய நாட்டுச் சங்கம் நிறுவினார்கள். இதனுடைய தலைமை அலுவலகம் நியூயார்க்கில் உள்ளது.

**ஐக்கிய நாட்டுச் சங்க நோக்கங்கள் :**

1. உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிறுவுதல்.

2. பல நாடுகளுக்கிடையே கூட்டுறவு மனப்பான் மையை வளர்த்தல்.

3. பன்னாட்டுச் சமூகம், பொருளாதாரம் முதலிய வற்றின் உரிமைகளைப் பாதுகாக்க முயலுதல்.

**சங்க உறுப்பினரின் கடமைகள் :**

1. எந்த உறுப்பினரும், பிற உறுப்பினரை அச்சுறுத் தலோ, வலியத் தாக்குதலோ செய்யக்கூடாது.

2. ஐக்கிய நாட்டுச் சங்கக் கட்டுப்பாடுகளையும், விதிகளையும் மீறிச் செல்லும் நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கும்போது ஏனைய நாட்டு உறுப்பினர், அச்சங்கத் துக்குத் துணைபுரிதல் வேண்டும்.

3. ஐ. நா. வின் உறுப்பாக அமையும் நாட்டில் அமைதிக்குத் தீங்கு விளைந்தாலொழிய அஃது அந்நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது.

ஐ. நா. சங்கப் பிரிவுகள் :

ஐ. நா. சங்கம் தன்னகத்தே ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது :

1. பொதுச் சபை. 2. பாதுகாப்புச் சபை. 3. சமூக, பொருளாதாரச் சபை. 4. தர்மகர்த்தா சபை. 5. அனைத்து நாட்டு அறநெறி மன்றம். 6. அலுவலகம்.

இனி ஒவ்வொரு பிரிவுக்குமுரிய பணிகளை ஆராய்வோம்.

1. பொதுச் சபை :

ஐ. நா. சங்கத்தின் தீர்ப்புக்குக் கொண்டு வரும் செய்திகளை எல்லாம் ஆராயத் தக்க சபை அதுவேயாகும். ஐ. நா. வின் உறுப்பாக அமையும் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒவ்வொரு சார்பாளர் சென்று அச்சபையில் பங்கு கொள்வர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமை உண்டு. அச்சபை ஒவ்வோராண்டிலும் செப்டம்பர்த் திங்களில் கூடும். மிக இன்றியமையாத தீர்மானங்கள் நிறைவேறுவதற்கு, மொத்த வாக்குரிமைகளில் 2/3 பங்கு வாக்குக்கள் அமைய வேண்டும். ஏனைய தீர்மானங்கள் நிறைவேறுவதற்குப் பெரும்பான்மை வாக்குக்கள் இருத்தலே சாலும். மேற்கூறிய சபையின் இன்றியமையாக் கடமை, அமைதியைப் பாதுகாக்க வேண்டிய வழிகளை வரையறுத்தலாகும்.

2. பாதுகாப்புச் சபை :

இந்தச் சபையின் இன்றியமையாக் கடமைகள் : உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டல் ; இரு நாடுகட்கிடையே ஏற்படும் பூசல்களை ஆராய்தல் ; ஐ. நா. வின் ஆணையை மீறிய நாட்டின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல்.

அச்சபையில் பதினோருறுப்பினர் உள்ளனர். இவர்களுள் ஐவர் நிலைத்த உறுப்பினர். ஏனையோர், பொதுச் சபையிலிருந்து ஈராண்டுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுபவராவர். அச்சபையின் தீர்மானங்கள் நிறைவேறுவதற்கு 2/3 பங்கு வாக்குக்கள் இருக்க வேண்டும். அதனுடைய தீர்மானங்களைத் தடை செய்ய, நிலைத்த உறுப்பினர்க்குத் தனித்தனி அதிகாரம் (Veto Power) உண்டு. அச்சபை திங்கட்கிருமுறை கூடும்.

**3. சமூக, பொருளாதாரச் சபை :**

சமூக, பொருளாதார நலன்களையும், உறுப்பினர்களின் முன்னேற்றத்தையும் பார்த்துக்கொள்ள, பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டு உறுப்பினர் உளர்.

**4. தர்மகர்த்தா சபை :**

இச்சபையின் கடமைகள் : உலகில் பிற்போக்காக உள்ள – விடுதலை உரிமையற்ற நாடுகளின் நலன்கள், அவற்றின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு, அரசியல் முன்னேற்றம் ஆகியவைகளைக் கண்காணித்தலும், அத்தகைய நிலைகளை அந்நாடுகள் பெறுதலும் ஆகும்.

**5. அனைத்து நாட்டு அறநெறி மன்றம் :**

ஐ. நா. உறுப்புக்களாக அமையும் நாடுகட்கிடையே ஏற்படும் சட்டம் தொடர்பான செய்திகளில் தன் ஆய்வுரைகளை நல்கும். அதில் பதினைந்து நடுவர் (நீதிபதிகள்) இருப்பர். அம்மன்றம் ஹாலந்து நாட்டில் ஹேக் (Hague) என்ற நகரத்தில் உள்ளது.

**6. அலுவலகம் :**

இவ்வலுவலகத்தில் பொதுச் செயலாளர் ஒருவரும், இவருக்குத் துணை செய்யும் அலுவலரும் இருப்பர். ஐ. நா. வின் பொறுப்பாளராக இருப்பவர், பொதுச் செயலாளராவார். இவர் ஐந்தாண்டுகள் வரை அதில் பணியாற்றும் உரிமையுடையவராவார். இப்போது அதன்

பொதுச் செயலாளராக இருப்பவர், பர்மியரான ஊதாண்ட் என்பவராவார்.

**ஐ. நா. வின் கிளைச் சங்கங்கள் :**

ஐ. நா. வின் தூண் போல் நின்று துணைபுரியும் கிளைச் சங்கங்கள் உள்ளன :

1. பன்னாட்டுத் தொழில் நிறுவனம் (I. L. O.)
2. உணவு, உழவு நிறுவனம் (F. A. O.)
3. ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாடு, நிறுவனம் (Unesco)
4. உலக வங்கி (I. B. R. D.)
5. அனைத்துலகச் செல்வ நிதி (I. M. F.)
6. உலகச் சுகாதார நிறுவனம் (W. H. O.)

**ஐ. நா. வின் தொண்டுகள் :**

பாலத்தீனம், இந்தோனேஷியா, டுனீஷியா, கொரியா, காங்கோ முதலிய நாடுகட்கு ஐ. நா. ஆற்றிய பணி அளவிடற்கரியது; பாராட்டுதற்குரியது. நிற வெறியை ஒழிப்பதிலும், பொருளாதாரத் துறையில் தாழ்ந்துள்ள நாடுகளைக் கண்காணிப்பதிலும், அணுப்படை அமைப்புப் பெருக்கத்தைத் தடுப்பதிலும், பல்வகைத் துறையில் அமைதியைப் பாதுகாப்பதிலும் அஃது எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டற்குரியதாகும்.

**உலக அமைதியில் இந்தியாவின் பங்கு :**

ஐ. நா. வின் உறுப்பாக நிலவி வரும் நம் இந்தியா பல்லாற்றானும் உலக அமைதிக்குப் பாடுபட்டு வருகின்றது; தொண்டாற்றி வருகின்றது.

1. ஆசிய மாநாட்டைக் கூட்டி இந்தோனேஷியாவுக்கு விடுதலை உரிமையை வாங்கித் தந்தது நம் இந்தியா.

2. ஐ. நா.வில், கொரியாச் சிக்கலைத் தீர்த்து வெற்றி காண்பதற்கு முதற் காரணமாகத் திகழ்ந்தது.

3. ஐ. நா.வின் கிளைச் சங்கங்களில் சேர்ந்து கொண்டு உலக முன்னேற்றத்துக்கு உழைத்து வருகின்றது.

4. ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை மேனாட்டு அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க அரும்பாடுபட்டு வருகின்றது.

5. செஞ்சீனா, ஐ. நா.வில் பங்கு கொள்வதற்குப் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

6. இந்தோனேஷியாவிலுள்ள பாண்டுங் என்ற இடத்தில் ஆசிய ஆப்பிரிக்க மாநாடு ஒன்றைக் கூட்ட வழி கோலியது.

தன்னலம் பாராமல், பிறர் நலத்துக்கே அல்லும் பகலும் அயராமல் உழைத்து வரும் ஐக்கிய நாட்டுச் சங்கத்துக்கு, சிற்றரசுகளும், பேரரசுகளும் ஊக்கமும் ஆக்கமும் தந்து, அதன் கோட்பாடுகளையும், கட்டுப்பாடுகளையும் கடைப் பிடிப்பதில் பெரிதும் துணை புரிந்து உலக அமைதியைப் பாதுகாக்க வேண்டும். அவற்றின் உள்ளங்களிலே நல்லமைதி திருநடனம் புரிவதாக.

## அருஞ்சொற்பொருள்

உழலும் – வருந்தியும் ; மாக்கள் – விலங்குகள் ; ஆணைகள் – கட்டளைகள் ; ஒறுக்க – தண்டிக்க ; தலையாய – முதன்மையான ; சார்பாளர் – பிரதிநிதிகள் ; வாக்குகள் – ஓட்டுகள் ; ஆய்வுரைகள் – ஆலோசனைகள் ; ஆக்கம் – முன்னேற்றம்.

## வினாக்கள்

1. சர்வ தேச சங்கம் ஏற்பட்டதற்குரிய காரணங்கள் யாவை ?
2. அச்சங்கம் சீரழிந்ததற்குரிய காரணங்கள் யாவை ?
3. ஐக்கிய நாட்டுச் சங்கம் தோன்றிய வரலாற்றைக் கூறுக.
4. ஐக்கிய நாட்டுச் சங்க நோக்கங்கள் யாவை ?

5. ஐ. நா. உறுப்பினரின் கடமைகள் யாவை?

6. ஐ. நா. சங்கப் பிரிவுகள் யாவை?

7. ஒவ்வொரு பிரிவையும் விளக்குக.

8. ஐ. நா. சங்கத்தின் கிளைச் சங்கங்கள் யாவை?

9. ஐ. நா. சங்கத்தின் தொண்டுகள் யாவை?

10. உலக அமைதிக்காக இந்தியா எங்ஙனம் பாடுபடுகிறது?

## 10. புலான் மறுத்தல்

(உரையாடல்)

(வித்துவான். பா. வேங்கடாசலம், பி. ஏ.)

**கண்ணன் :** பொன்னு, வணக்கம். எங்கு இவ்வளவு காலையில் விரைந்து சென்று வருகின்றனை?

**பொன்னன் :** வணக்கம், கண்ணு. கடைத்தெருவிற்குச் சென்று கறி வாங்கி வருகிறேன். காலையில் சமையலுக்கு நேரமாகுமே என விரைகின்றேன்.

**கண்ணன் :** நன்று. என்னென்ன கறி வாங்கினை?

**பொன்னன் :** கடைத்தெருவில் என்ன கறி கிடைக்கின்றது? ஆட்டுக்கறி யொன்றுமே கிடைத்தது. மான் கறிக்கும், முயல் கறிக்கும், பிறவற்றிற்கும் எங்குப் போவது?

**கண்ணன் :** அப்படியா! கறி என்று சொன்னவுடன், காய் கறி வகைகள் என் நினைவிற்கு வந்து நாவூறிற்று. இப்பொழுது காதடைக்கும் போல் உள்ளது.

**பொன்னன் :** நீ என்னப்பா பத்தாம் பசலியாக இருக்கிறாய்? உயர்ந்த சைவர் அனைவரும் முட்டை, இறைச்சி வகைகள் உண்ணத் தொடங்கி விட்டனர். நீ சொல்

வினைக் கேட்டவுடன் காதடைக்கிறது என்கிருய். நல்ல அறத்தைக் கடைப் பிடிக்கின்ருய் அப்பா நீ!

கண்ணன் : புலால் உண்ணுமை, அறம் மட்டுமா? நம் உடல் நலனுக்கும் அது சிறந்ததாகும்.

பொன்னன் : புலால் உண்ணுமை எங்ஙனம் சிறப்புடைய தாகும்? புலால் உண்பதால், உடல் வலிமை பெற்று நோய் வராமல் இருக்கும். மேலும் பகைவர்களைத் தாக்கு தற்கும் அது துணை செய்யும். வலிமை மிகுந்திருப்ப தால் நாட்டுக்கும், சமூகத்திற்கும் நம்மாலான தொண்டு கள் செய்யலாம்.

கண்ணன் : நீ பிறழ உணர்ந்தனை. புலால் உண்பவர் தாம் வலிமை மிகுதியாகப் பெற்றிருப்பர் என எண்ணுகின் றனை. புலால் உண்பவர் மிகவும் உரம் பெற்றிருப்பர் என்பது உண்மையே. அத்துடன் புலால், உணர்ச்சி யையும் மிகுதிப்படுத்தும் என்பதையும் உணர வேண் டும். எவ்வெவற்றின் இறைச்சியை மக்கள் உண்ணு கின்ருர்களோ, அவர்கள் அவ்வவற்றின் விலங்கு உணர்ச்சியையும் பெறுகின்றனர். அதனுல் மன அடக் கத்தை இழக்கின்றனர். உணர்ச்சிக்கேற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். நாட்டுக்கும் சமூகத்திற்கும் அது தீமை விளைக்கின்றது. இதனை நாம் நேரில் காண் கின்ருேம் அல்லமோ? வள்ளுவரும் தம் திருக்குறளில் புலாலுண்ணுமை என அதிகாரம் ஒன்றை இதனு லன்ருே அமைத்துள்ளார்.

பொன்னன் : என்னப்பா கண்ணு, கண்ணற்றவன் பேசுவது போலப் பிதற்றுகின்றனை. மேனுட்டாரும் பிறரும் புலால் உண்ணவில்லையா? அவர்கள் அடக்கமாக இல்லையா? நாட்டுக்கும் மக்கட்கும் நலம் விளைக்கவில்லையா?

கண்ணன் : நீ கூறுவது சரியே. மேனுட்டர் பெரும் பாலோர் புலால் உண்கின்றனர் என்ருல், அவர்கள் நாட்டு வெப்ப தட்பங்கட்கு அஃது ஏற்றது. நம்

நாட்டுக்கு அஃது எங்ஙனம் பொருந்தும்? மேனாட்டார் நாடு குளிர்ச்சியுடையது. இறைச்சி உடலை வெம்மைப் படுத்திக் கொள்ள உதவும். நம் நாடோ வெப்பம் மிகுந்த நாடு. இறைச்சி உண்பதால், உடலில் இன்னும் வெப்பம் மிகுதிப்படும். உறுப்புக்களை விரைவில் கிழப் பருவ நிலையடையச் செய்யும். புலால் உண்பது பல நோய்கட்கு வித்தாகும் என்று எண்ணிய மேனாட்டாரில் சிலர் அதனை விலக்குவாராயினர்.

பொன்னன்: நம் முன்னோர் பண்டைய நாளில் புலால் உண்டு வந்தனர் என்பதை வரலாற்று வாயிலாகவும், நூல் வாயிலாகவும் உணருகிறோம். அவர் வழிவந்த நாம் புலால் உண்பதால் என்ன தவறு?

கண்ணன்: நம் முன்னோர் உழவுத் தொழில் செய்தறியாத காலத்து வேட்டையாடி உண்டனர். அன்று அது தவிர வேறு உணவு இல்லை. இப்பொழுது எல்லா வகை உணவு வகைகளையும் பெறுகின்றோம். மேலும் சிறு காயம் ஏற்பட்டாலும் பதைக்கின்ற நாம், பிற உயிர்கட்குத் தீமை ஏன் செய்ய வேண்டும்? தன் உயிரைப் போலப் பிற உயிரைப் பார்ப்பவனிடத்து அன்றோ இறைவன் வீற்றிருப்பான் என்று கூறுகிறார் இராமலிங்கனார்.

“எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன்.”

என்று காண்க. மேலும் புலால் உண்ணாதவனே உயர்ந் தோன் என்றும், புலால் உண்பவன் புலையன் என்றும் முன்னோர் கூறினர்.

வள்ளுவர்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்று புலால் உண்ணுனைச் சிறப்பித்தார். மேலும் புலால் உண்பவன், பிற உயிர்களைக் கொல்ல நேர்கிற தன்றோ ?

பொன்னன் : அங்ஙனமாயின் தாவரப் பொருட்களுக்கும் உயிர் உண்டு. அவற்றை அழித்து உண்பவரும் கொலைஞர் அல்லரோ ?

கண்ணன் : நன்று வினவினை. தாவரப் பொருள்களும் உயிர் உள்ளவையே. ஐயமில்லை. எனினும் விலங்கு கட்கும் தாவரங்கட்கும் பெரிதும் வேற்றுமை உண்டு. தாவரங்கள் உற்றறி உயிர்கள். "உற்றறி உயிரே ஓரறி வுயிர்" என்பர் இலக்கண நூலார். எனவே, தொட்டால் உணரும் தன்மையே தாவரங்கட்கு உண்டு. ஆனல் விலங்குகட்குச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் ஐந்தறிவும் உண்டு. அவை நம்மைப் போன்று இன்பதுன்பங்கள் அறிந்தவை. நாம் குடும்பம் நடத்துவது போலப் பல விலங்குகள் கணவன், மனைவி, குட்டி என்ற உறவு முறையுடன் வாழ்கின்றன. எனவே, தாவரத்திற்கும், விலங்குகட்கும் மிகுந்த வேற்றுமை உண்டு என்பதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். மேலும், தாவரங்களில் சிலவற்றைத்தாம் அவற்றின் இளமையில் அழிக்கின்றோம். ஆயினும் பெரும்பாலான பயிர்களின், விளைந்து பழுத்துச் சாய்ந்த கதிர்களைத்தாம் நாம் உண்ணுகிறோம். மேலும் அவற்றையும் உண்ணு மல் மக்கள் எவ்வாறு உயிர் வாழ முடியும்? தாவரங்களை உட்கொள்ளாவிடில் விலங்கினையே உண்ண வேண்டி வரும். தாவரங்களையும் உண்ணது இருக்க வேண்டும் என்றால் பொதுவாக மனிதனுலாகாது.

பொன்னன் : பொதுவாக மனிதனுல் ஆகாதெனின் சிறப் பாக எவரால்தான் தாவர உணவுகளையும் உட்கொள்ளா மல் இருக்க முடியும் ?

பொன்னன் : சில தவ முனிவர்கள், தாவரப் பொருட்களை யும் உண்ணுது நீர், காற்று இவற்றையே உட்கொண்டு வாழ்ந்தனர் என்று கூறுகின்றனர். அதற்குத் தவ வலிமை வேண்டும் என்பர். இல்லறத்தில் ஈடுபடுபவர் அத் தவரையும் பேணும் இயல்பினர். ஆதலின் அவர் களுடன் நாம் போட்டியிட முடியாது. நாம் தாவர உணவுப் பொருட்களை நன்கு உண்டு வாழலாம்; குற்ற மின்று.

கண்ணன் : தாவரப் பொருட்களையே உண்ண விரும்பின், சிலர் விலங்குணவு உண்ண விருப்பமிருப்பின் என்ன செய்வது ?

பொன்னன் : அதற்கு எளிய முறையொன்று உளது. நாம் உணவுக்கென உயிரைக் கொல்லுதல் வேண்டா. தாமா கவே இறக்கும் விலங்குகள் பல உண்டு. அவற்றை உண்ணலாம். குற்றமின்று. மணிமேகலையிலும் சாது வன் நாகர் தலைவனுக்கு, "மூத்து விளி மாவொழித் தெவ் வுயிர் மாட்டும் தீத்திறம் ஒழிக" என அறிவுறுத்தினுன். ஆனல் அக்கொள்கையும் நல்லதாக எனக்குத் தோன்ற வில்லை. இறந்த விலங்கையோ, இறக்கும் நிலையிலுள்ள விலங்கையோ உண்பது நமது உடல் நலத்தைக் கெடுத்து நோயைப் பெருக்கும்.

பொன்னன் : சரிசரி. நீ என் தடித்த உடலைக் கெடுப்ப தற்கெனக் கங்கணம் கட்டிப் பேச வந்தனைபோலும்.

கண்ணன் : தன் உடலைப் பெருக்குவதற்குப் பிறிதின் உடலை உண்பவன் எங்ஙனம் அருளுடையவனுய் இருக்க முடியும். வள்ளுவரும்,

> "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
> எங்ஙனம் ஆளும் அருள்."

என்ருர். எனவே, உன் உடலைக் காக்க மற்றவரின் உடலைச் சிதைக்கற்க.

பொன்னன் : சரியப்பா! நன்று. எனக்கு எல்லாவற்றையும் விளக்கினை. இனியேனும் புலால் உண்ணுமலிருக்க முயற்சி செய்கின்றேன்.

## அருஞ்சொற்பொருள்

எத்துணையும் = எ + துணையும் – மிகச் சிறிதளவும் ; யாக்கை – உடம்பு ; தட்பம் – குளிர்ச்சி ; உற்றறி உயிர்கள் – தொட்டால் உணரும் உயிர்கள் ; மூத்து – வயது முதிர்ந்து ; விளிமா – இறக்கும் நிலையில் உள்ள விலங்கு ; தீத்திறம் – கொலைத் தன்மையாகிய கொடிய தன்மை ; தன் ஊன் – தனதுடம்பு.

## வினாக்கள்

1. கறி என்ற சொல் சிலேடைப் பொருளில் எங்ஙனம் அமைந்தது ?

2. புலால் உண்டால்தான் வலிமையுற்று வாழ முடியும் என்பதைக் கண்ணன் எப்படி மறுக்கிறான் ?

3. மேனாட்டார் புலால் உண்பதனால் ஏற்படும் நன்மைகளையும் நம் நாட்டார் அதனால் அடையும் தீமையையும் விளக்குக.

4. இராமலிங்க அடிகள் புலால் மறுத்தல் பற்றிக் கூறுவன யாவை ?

5. தாவரங்கள் உயிர் உடையன அல்லவா ? இவற்றை அழிப்பதும் தீமை தானே ? — இக்கருத்தினை விளக்குக.

6. கொல்லாமை பற்றிச் சாதுவனைக் கொண்டு நீவிர் அறிவன யாவை ?

7. உடலைப் பெருக்குவதற்கு ஊன் உண்ண வேண்டும் என்பதைக் கண்ணன் எங்ஙனம் மறுக்கிறான் ?

## 11. கர்ணனும் கும்பகர்ணனும்

[வித்துவான். சே. மா. கோதண்டராம முதலியார்.]

உலகில் மக்கட்கு வேண்டிய உயர் பண்புகள் பலவுள. இவற்றுள் செய்ந்நன்றியறிதலும் ஒன்ருகும். திருவள்ளுவர், 'செய்ந்நன்றியறிதல்' என்ற அதிகாரத்தில் செய்ந்நன்றி மறவாப் பண்பைப் பலபடப் புகழ்கின்ருர். பெருவாயின் முள்ளியார் தம் ஆசாரக் கோவையில், ஆசார வித்துக்கள் எட்டனுள் முதலாவதாகச் செய்ந்நன்றியறிதலை வைத்துச் சிறப்பித்துள்ளார். விளம்பி நாகனுர் தம் நான்மணிக்கடிகையில், 'பிறர் செய்த நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டும்' என அதனைப் பற்றிக் கூறுகின்ருர். 'நன்றி மறவேல்' என ஔவை மூதாட்டி தம் ஆத்திச்சூடியில் கூறுகிருர். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் 'செய்ந்நன்றி கொல்லன்மின்' என்கிருர். புறநானூற்றில் ஆலத்தூர் கிழார்,

'நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்ருேர்க் குய்தி யில்லென
வறம்பா டிற்றே'

என அச்செய்ந்நன்றியறிதலை வற்புறுத்திப் பாடுகின்ருர். இத்தகைய செய்ந்நன்றியறிந்த பெருமக்களுள்ளே கர்ணனும், கும்பகர்ணனும் தலைசிறந்து விளங்குகின்றனர். இவர்களைப் பற்றிப் பின்வருமாறு ஆராய்வோம்.

பஞ்ச பாண்டவர் ஐவரும் இளமை முதற்கொண்டே பல்வகையாலும் முன்னேறுவதைக் கண்ட துரியோதனன், அவர்கள்மீது அழுக்காறு கொண்டான். இளமையில் அரும்பிய அவ்வழுக்காறு பூத்துக் காய்த்துக் கனியாயிற்று. இருதிறத்தாரும் போர்க்கோலம் பூண்டனர். கர்ணன் மிகவும் வில்வித்தையிற் சிறந்தவன் என்பதைக் கண்ணபிரான் உணர்ந்திருந்தான். ஆதலின் கர்ணனின் தாயாகிய குந்திதேவியின் துணைகொண்டு கர்ணனிடம் சில வரங்களைப் பெற்று, அவனை வன்மையற்றவனுக்கிப் பஞ்சபாண்டவர்க்கு உதவி செய்ய நினைத்தான். பஞ்சபாண்டவர் பக்க

லில் கர்ணன் வந்து சேருமாறு குந்திதேவி வழியே சொல்லி யனுப்பினுன். குந்திதேவியும் கர்ணனிடம் வந்து அச் செய்தியைப் பின் வருமாறு கூறுவாளாயினள் :

'என் மகனே! வா. உன் பின்னவர்களாகிய தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐவரும் உன் மரைமலர் நிகரும் இணையடிகளை அன்புடன் வணங்கி, உடன் பிறந்தவர்கள் என்ற உரிமையைக் கொண்டு, மனமுவந்து, நீ இடும் பணிகளைப் புரியச் செங்கோல் நடாத்தி, மன்னவர் யாவரும் போந்து உன் பாதங்களை வணங்க, ஆண்மையும் பெருஞ் செல்வமும் விளங்க, குருகுலத்தில் தோன்றியோர் யாவருள்ளும் சிறந்தவனுக வாழ்வு பெறுவது தான் உன் தலையாய கடன்' என்பதாம்.

ஈன்ருள் புகன்ற இன்னுரைகளைக் கேட்ட மைந்தன், "நற்ருயே! நீ கன்னியாயிருக்குங்கால் என்னை ஈன்றனை. ஈன்ற அது போதே என்மாட்டு அன்பில்லாமையினுலோ, கன்னி ஒரு மகவைப் பெற்ருள் என்று உலகோர் கூறும் பழி மொழிக்கு அஞ்சியோ என்னையொரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டனை. நீ என்னைக் கைவிட்ட அந்நாட்டொடங்கி இந்நாட்காறும் இராசராசனுகிய துரியோதனன் என்னை ஆருயிர்த் தோழனுகக் கொண்டு, அங்கத நாட்டிற் கதிபனுக்கி, யாது குலம், யாவர் தாய் தந்தையர் என்ற உண்மைகள் அறியப்படாமல், இழிகுலத்தவன் என்று யாவராலும் இழித்துக் கூறப்படும் தன்மையிலிருந்த என்னுடன் உண்டு, தன் துணைவரும், உறவினரும் என்னடி வணங்க ஏற்றம் செய்தான்.

"இழிகுலத்தவனுகக் கருதப்பட்டு வந்த நானும், அரசர்க் கரசனும் துரியோதனின் இல்லக்கிழத்தியும் அந்தப்புரத்தில் ஏகாந்தமாக இருந்துகொண்டு சூதாடிக்கொண்டிருந்தோம். அவ்வமயம் தன்னில்லாளன் வருகையைக் கண்டு, எழுந்து போதற்கு முயன்ற அவன் துணைவியினது முன்ருனையை என் கரத்தால் பற்றி இழுத்தேன். அங்ஙனம் இழுத்ததால்

அவள் சிற்றிடையில் அணிந்திருந்த மேகலே அறுந்து மணிகள் சிதறின. இவ்வளவும் நிகழ்ந்த பின்னர் நான் சுயோதனன் வருகையைக் கண்டு ஒன்றும் தோன்ருது செய்கையற்றிருக்குங்கால், களங்கமற்ற பண்பு வாய்ந்த அவன், "இம்மணிகளைப் பொருக்கட்டுமா? அல்லது கோக்கட்டுமா?" என என்பக்கல் சிறிதளவாயினும் ஐயம் இன்றிக் கடாவினுன். இவ்வளவு உயர் குணங்கள் வாய்க்கப்பெற்ற அச் சுயோதனனுக்காக நான் போர்முனையிற் சென்று செஞ்சோற்றுக் கடன் கழித்துக் கொள்வதுதான் என்றனக்கு இயம்பரும் புகழ்தரும் செயலாகும்; அறச்செயலும் அதுவேயாகும், எனத் தன் தாய்க்கே செய்ந்நன்றியறிதலின் இன்றியமையாமையை எடுத்தியம்பினுன். அன்பே உருவான தாயினும் செய்ந்நன்றியறிதலே சிறப்புடைத்தென்ருன். கர்ணனின் கடமை வீரத்தை என்னென்று புகழ்வது! பாரதக் கதையில் அத்தகைய அரும் பெருங் கருத்துக்கள் அடங்கிய பாடல்களைக் காண்டல் இன்பந்தருமன்ரே?

பெற்றநீர் மகவன்பிலா மையோ வன்றிப்
பெரும்பழி நாணியோ விடுத்தீர்
அற்றைநாட் டொடங்கி யென்னை யின்றளவு
மாருயிர்த் துணையெனக் கருதிக்
கொற்றமா மகுடம் புனைந்தர சளித்துக்
கூடவுண் டுரியதம் பியருஞ்
சுற்றமா னவரும் என்னடி வணங்கத்
தோற்றமு மேற்றமு மளித்தான்.

மடந்தை பொற்றிரு மேகலை மணியுகவே
மாசறத் திகழு மேகாந்த
இடந்தனிற் புரிந்தே நானயர்ந் திருப்ப
எடுக்கவோ கோக்கவோ வென்ருன்
திடம்படுத் திடுவே லிராசரா சனுக்குச்
செருமுனைச் சென்று செஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங்
கருமமுந் தருமமு மென்ருன்.

இனி இராமாயணத்திலிருந்து, கும்பகர்ணன் எங்ஙனம் செய்ந்நன்றி மறவாதவனாக இருந்தான் என்பதை ஆராய்வோம்.

இலங்கைமா நகரத்தை யாண்ட இராவணனுடன் பிறந்தவர் கும்பகர்ணனும் விபீடணனுமாவர். இராமனின் மனைவியாகிய சீதையை இராவணன் தன் அசோக வனத்தில் சிறை வைத்தமை தகாது என்று விபீடணன் தன் தமையனாகிய இராவணனுக்குப் புகன்றான். விபீடணனின் உரையைக் கேட்ட இராவணன் அவனை எள்ளி நகையாடினான். எக்காரணங்கொண்டும் சீதையைச் சிறை விடுக்க முடியாது என்று கூறிவிட்டான். அதனால் இராமனுக்கும் இராவணனுக்கும் போர் தொடங்கி விட்டது.

தன் தமையனாகிய இராவணனுக்கு எத்துணையோ அறிவுரை புகன்றும் பயன் விளையாததை நோக்கிய விபீடணன், கும்பகர்ணனாகிய தன்னுடன் பிறந்தானிடம் பின் வருமாறு நல்லுரை மொழிகின்றான் :

''என் முன்னவனே! நீ காகுத்தனைச் சரணென அடைந்தால் அவன் உனக்கு அபயதானம் அளித்து உன் பிறவி நோய்க்கு மருந்துமாகிச் சகடக்காலனைய இவ்வுலக வாழ்க்கையை ஒழித்து முத்திப் பேற்றை அளிப்பன். எனக்கு அத் தாசரதி தந்த இலங்கையையும் அதனைக் காக்கும் அரச உரிமையையும் நினக்குத் தந்து, நான் உன் ஏவலின்படி நடப்பேன். உன்னுயிர்க்கு உறுதி தருவது இதனினும் வேறொன்றுமில்லை. என் மன நோயைப் போக்கிப் பிறந்த குலத்தையும் விளங்கச் செய்க.

''நம் மெய்யின்கண் தோன்றிய கட்டியை வாளாலறுத்து, அதன்கண் பொருந்திய, தூய்மையற்ற செந்நீர் முதலியவற்றை வெளியேற்றி, காரம் வைத்துச் சுட்டு நம்மை நலம் பெறச் செய்துகொள்வதுபோல், சானகியைச் சிறை செய்த வஞ்சக நெஞ்சனை நம்மவன் என்றெண்ணாமல் அவனை நம்மினின்றும் வேறுபடுத்தி அறவொழித்தலே செய்யத் தக்கது. கலியாண குணங்களால் யாவரையும் மகிழச்

செய்யும் இராமனது திருவருளால் துன்பந் தீர்ந்து, செல்வம் வாய்க்கப் பெற்று, அழியாவாணுள் எய்தி, அரசர்க்கரசனுய் இருப்பாய்.

"தேவர்க்குத் தேவன் நல்க நீ இலங்கைச் செல்வத்தைப் பெற்ருல் யாரிடத்தும் சிறுமை யுடையவனுகமாட்டாய். உன்னை நலியு மாற்ருர் யார்? நீ தாசரதியுடன் சேர்ந்து கொண்டால் உன் மகாரும், என் சிருரும், இக்குடிக்கு இறுதி சூழ்ந்தவனின் மக்களோடு இனிது வாழ்வார்கள். திருமரு மார்பன் தன்மாட்டு இயற்கையாக உள்ள திருவருளாலும், என்கண் வைத்த அன்பினுலும் உன்னை வேண்டிக் கொள்ளு மாறு அனுப்பினுன். ஆதலின் ஐயனே! அறத்தொடு மாறு படாமல் அக்கமலக் கண்ணனைக் காண நீயே வருக" என்பதாம்.

மேற்கூறிய சொற்களைச் சொல்லித் தன்னடிகள் இரண் டனையும் பற்றிக் கண்ணீர் சிந்திய விபீடணனைப் பார்த்தான் கும்பகர்ணன். தன் தம்பியைக் கும்பகர்ணன் மார்புறத் தழுவிக் கொண்டான். அம்பகங்களில் வெம்புணீர் சொரிய நின்று பின்வருஞ் சொற்களைச் சொல்பவனுனுன்.

"நீர்மேல் எழுதிய கோலம் நிகர் நிலையிலாச் செல்வ வாழ்க்கையை விரும்பி, பல நாள் வளர்த்து, போர் மூண்ட இக்காலத்து, அமர்புரிவதற்குரிய ஆடை அணிகளை எனக்கு அவனே உடுத்தி, "போர் புரிந்து வா" என்று என்னை அனுப்பிய இராவணன் பொருட்டு என்னுயிரைக் கொடுக் காமல் இராமனிடம் போய்ச் சேரமாட்டேன். என் மனத் துயரத்தைப் போக்க வேண்டுமென்ற எண்ணம் உனக்கிருந் தால், நீ கடிதில் கார்க்கோல மேனியானை அடைவாயாக. நான்முகன் நினக்குத் தந்த வழுவிலா வரத்தினுல் நீ அழிவி லாத அறத்தை மேற்கொண்டாய். உலகமுள்ளளவும் நீ உயிருடனிருப்பாய். இந்நானிலம் முழுவதற்கும் நீயே தலைவன். நீ காகுத்தனைச் சரணடைதல் முறை. அமரில் அழிதல் எனக்குப் புகழ். உன்னிப் பார்க்கும் உயர்குணம் இல்லாத தலைவனெருவன் தீய தொழில்களைப் புரிய நினைத்

தால் அச்செயல்களைச் செய்யவொட்டாது திருத்த முடியுமாயின் திருத்துதல் நன்று. திருத்த வியலாதாயின் மாற்ருரைச் சரணென அடைதலால் எய்தும் பயன் யாது? ஒருவருடைய சோற்றை உண்டவர்க்குரிய கடமை யாதெனில் பொருதொழிற்குரியராகித் தலைவர்க்கு முன்னர் இறத்தலேயாகும்.

"விண்ணவரும் மண்ணவரும் புகழ என் முன்னவன் மூவுலகையும் ஆண்டு, இறுதியில் இராமபிரான் அம்புகளைச் சுற்றிலும் செலுத்துகையில் உடன் பிறந்தார்களின்றிச் சேனைகளுடனும், உறவினர்களுடனும் மாண்டு கிடப்பதற்குரியவனுவானே? வெள்ளிமலையை எள்ளிப் பெயர்த்த திரண்ட தோள்கள் காலப் பாசத்தால் பிணிக்கப்படுகையில் அச்சங் கொண்டு பின்னவரின்றி முன்பு தனக்குத் தோற்ற கூற்றுவனிடத்துச் செல்லுதல் முறையா?

"போரில் காலனையும் வென்ற யான் இலங்கை நகரின் செல்வத்தை நிலையானதென்றுன்னி, என் முன்னவன் உயிரைக் கவர்ந்த பற்றலனைப் பாராட்டி, புண்பட்ட மனத்துடன் கும்பிட்டு வாழமாட்டேன். இராம இலக்குமணர்களையும் வானர சேனைகளையும் வென்று, உலகைச் சுற்றி வரும் ஆதவன் போன்று அவனியில் திரிந்து கொண்டிருப்பேன். விபீடணனே! நான் இதுவரை உன்னிடம் உரைத்த உரையின்படிதான் நடக்கவியலும். ஆதலால் நீ இராம இலக்குமணரை அடைந்து அவர்கள் நட்பை மேலும் பெருக்கிக் கொள். இனி என்னுடன் உரையாடுதலால் விளையும் பயனே ஒன்றுமின்று" என்பதாம்.

மேற் கூறப்பட்ட கும்பகர்ணனின் உரைகளில் எவ்வளவு உருக்கமும் உறுதிப்பாடும் உள்ளன என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். நன்றி கொன்ற மகனுக நானிலத்தில் உலவுவதை விட இறந்து விடுவதே இன்பந் தரும் என்ற கோட்பாட்டைக் கும்பகர்ணன் கொண்டான். வாழ்க அவன்றன் நன்றியுள்ளம்! வாழ்க அவன்றன் கடப்பாடு!

## அருஞ்சொற்பொருள்

நிலம்புடை பெயர்வதாயினும் – நிலம் தலைகீழாக மாறுவதாக இருந்தாலும், செய்தி - செய்த நன்றி, உய்தி - பாவங்களிலிருந்து தப்பிப் பிழைத்தல், ஆண்மை - வீரம், அந்தப்புரம் - அரசியிருக்குமிடம், ஏகாந்தமாக - தனியாக, சுயோதனன் – துரியோதனன், கடாவினன் – கேட்டான், காகுத்தன் - இராமன், சகடக் காலனைய - வண்டிச் சக்கரம் மாறி மாறி வருவது போன்ற, சானகி - சீதை, கலியாண குணங்கள் - சிறந்த குணங்கள், திருமரு - இலக்குமி பொருந்திய.

## பயிற்சி வினாக்கள்

1. செய்ந்நன்றி யறிதல்பற்றி எவ்வெப்புலவர் எவ்வெவ்வாறு கூறியுள்ளார் ?
2. கௌரவர்க்கும் பஞ்சபாண்டவர்க்கும் போர்மூண்டதேன் ?
3. குந்திதேவி, தன் மகனாகிய கர்ணனை நோக்கிக் கூறியன யாவை ?
4. கர்ணன், தன் தாயினிடம் செய்ந்நன்றி மறவாப் பண்பை எங்ஙனம் அறிவுறுத்தினான் ?
5. இராம இராவணர் போர் ஏற்பட்டதேன் ?
6. இராமனிடம் அடைக்கலம் புகுமாறு விபீடணன், கும்பகர்ணனை எவ்வெப்படித் தூண்டினான் ?
7. கும்பகர்ணன் தன் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விபீடணனிடம் எங்ஙனம் எடுத்துரைத்தான் ?

# 12. விஞ்ஞான உலகம்

[ J. S. பாபு கிறிஸ்டியன், பி. ஏ., ]

நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகமாகும். எல்லாம் வல்லது இயற்கையுலகம்; எவரும் எதுவும் தன்னை அடக்கியாள முடியாது என்று தருக்கியது இயற்கை உலகம். இத்தகைய இயற்கை யுலகை விஞ்ஞான உலகம் அடக்கி யாண்டுவிட்டது; ஆட்டிப் படைத்துவிட்டது; செம்மாந்து நின்ற இயற்கை யுலகை நடுங்கச் செய்து விட்டது.

விஞ்ஞான உலகைக் கலிலியோ, தாமஸ் ஆல்வா எடிசன், சர் ஐசக் நியூட்டன், மார்க்கோனி, மேடம் கியூரி அம்மை யார் போன்ற கலைஞர்கள் படைத்தார்கள். அவ்வுலகைப் படைக்குங்கால் அவர்கள் அடைந்த அல்லல்கள் அளப்பில; அளப்பரும் உழைப்பால் அவர்கள் அதனைப் படைத்தார்கள். வாணாள் முழுவதும் அதனைப் படைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள்.

பல்வகை அறிவியற் கலைகளின் படைப்புக்களால் தான் விஞ்ஞான உலகம் உண்டாகியது. சிற்சில அறிவியற் கலை யைப் படைக்க முனையும்போது கலைஞர் தம் வாணாளிலேயே முழுவதுமாக அவற்றைப் படைக்க முடியாமற் போனதும் உண்டு. ஓர் அறிவியற் கூறுக்கு ஒரு கலைஞர் வித்திடு வார். அடுத்து வருங் கலைஞர் அதனை மேன்மேலும் ஆய் வார்; ஓரளவில் அதனை உருவாக்குவார்; அவருக்கும் பின் வருங் கலைஞர் அதனை முழு அளவில் படைப்பார். இங்ஙன மாகப் பலரது முயற்சியால் — பேருழைப்பால் அமைந்ததே விஞ்ஞான உலகம்.

பரந்த உலகம் சுருங்கிக் காண்பதற்கும், நெடுந்தொலை வில் உள்ள வானம் அணுகித் தென்படுவதற்கும், விஞ்ஞான உலகம் துணைபுரிவதாயிற்று. விஞ்ஞான உலகம் விண்ணையும் அளந்தது; மண்ணையும் அளந்தது; நீரையும் அளந்தது. அறிவியற் கலைஞர்களின் மூளையை என்னென்று

வியப்பது! மீனைப் போல நாம் நீரில் மூழ்கி நீந்திச் செல்வதற்கும், பறவையைப் போல வானில் பறப்பதற்கும் விஞ்ஞான உலகம் துணை செய்வதாயிற்று. இத்தகைய அரும் பெரும் விஞ்ஞான உலகின் படைப்புகளைப் பற்றி ஆய்வோம்.

மக்களுக்கு அன்றாட இன்பப் பொழுது போக்குகளில் படக்காட்சியும் ஒன்றாகும். நாம் படக் காட்சியில் பங்கு கொள்கின்றோம். நடிப்பவர்களின் திறமை—அல்லது திறமையின்மை, மொழி நடை, இசைப்பாடல், பட இயக்குநரின் திறமை – அல்லது திறமையின்மை முதலியனபற்றி நாம் பேசுகின்றோம். ஆனால் நாம் அப்படக் காட்சியைப் படைத்த தாமஸ் ஆல்வா எடிசன் அவர்களைப் பற்றிச் சிறிதும் சிந்தித்ததில்லை ; பேசிப் பாராட்டியதில்லை. எவ்வளவு பேருழைப்புக் கிடையே அப்படக் காட்சி கண்டு பிடிக்கப் பட்டது! முதன் முதல் அவரது ஊமைப் படக் காட்சியே (Silent picture) திரையுலகுக்கு வந்தது. ஊமைப் படக் காட்சி மக்கட்கு மிக்க இன்பந் தர முடியுமா? படக் காட்சியோடு ஒலியையும் அவர் இணைத்து, பேசும் படக்காட்சியை உருவாக்கினர். தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் உண்மைகளைக் கண்டு பிடித்துள்ளார். புறவிருளைப் போக்கும் மின்விளக்கைப் படைத்தவரும் தாமஸ் ஆல்வா எடிசனே யாவார்.

கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோனி யாவார். இவரது கண்டு பிடிப்பு இக்கால உலகிற்குப் பெரிதும் நன்மை விளைவிக்கின்றது.

விண்வெளியில் வானி (Ether) இருப்பது எல்லாராலும் அறிந்து கொள்ள முடியாத தொன்றாகும். அதனைக் கண்டு பிடித்தவர் மார்க்கோனியாவார். வானி என்பது வானிலும், கானிலும், பள்ளத்திலும், மேட்டிலும், வீட்டிலும் பரந்திருக்கக் கூடியதாகும். மிக விரைவில் எதனையும் ஊடுருவிச் செல்லும் இயல்பினதாகும். ஒளி, ஒரு நொடியில் ஏறக்குறைய 2,97,600 கி. மீ. (1,86,000 கல்) தொலை பாயும்

தன்மையது. வானியும் அதே வேகத்தில் தன்னகத்தே ஓசை யலைகளைச் சுமந்து ஊடுருவும் தன்மையதாகும். இத் தன்மையை ஒரு சான்று வழியே உணர்ந்து கொள்ளலாம். அமெரிக்காவில் ஓர் இசைக் கலைஞன், இசையரங்கு நிகழ்த்துவதாக வைத்துக் கொள்வோம். ஒலிபரப்புக் கருவி வழியே அவனது இசையொலி பரப்பப்படுகிறது. அப்போது இசையரங்கிற்கு இருநூறு கிலோ மீட்டர் தொலைவில் அமர்ந் திருப்பவர் இசையொலி கேட்பதற்கு முன்னரே மிகத் தொலை வில் உள்ள நாம் அதைக் கேட்டு விடலாம். விஞ்ஞானத் தின் விந்தைதான் என்னே!

நீரிலும் ஒலியலை பாயுந் தன்மையது. நாம் நம் கப்பல் களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் கடலில் அனுப்புகின் றோம். பகைவர்களுடைய கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல் களும் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதை உணர்வ தற்கு ஒலியலை உதவுகின்றது. நாம் ஒலியலைகளை நீருக்குள் செலுத்த வேண்டும். இங்ஙனம் செலுத்தப்பட்ட ஒலியலை கள், பகைவரின் கப்பல்மீது தாக்கும். அங்ஙனம் தாக்கப் பட்ட எதிரொலி, நம் எல்லையைச் சார்ந்து உணர்கருவியில் பதிவாகிறது. இவ்வாறு பதிவாகிய ஒலியலைகொண்டு, எத்தனை கிலோ மீட்டர் தொலைவில் பகைவரது கப்பற்படை இருக்கிறதென்பதை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

ஒலியலை இரண்டு வகைப்படும் என்று அறிவியற் கலைஞர் செப்புகின்றனர். அவைகளாவன : கேட்கும் ஒலி, கேளா ஒலி. நம் காதுக்கு எட்டும் ஒலியைக் கேட்கும் ஒலியெனவும், காதுக்கு எட்டா ஒலியைக் கேளா ஒலியென வும் மொழியலாம். மண்ணுலகம் முதல் விண்ணுலகம் வரையில் எத்தனை வகை ஒலியலைகள் தம்முள் மோதிக் கொள்கின்றன! இவற்றுள் சில நம் காதுக்கு எட்டுகின்றன; சில எட்டுவதில்லை. நொடிக்கு முப்பது ஒலியதிர்வுகளுக் குக் குறைந்தாலும், 20,000 ஒலியதிர்வுகளுக்கு மிகையானு லும் நம் காதுக்கு ஒலி எட்டுவதில்லை. உலகில், ஒலியுணர் திறன் எல்லா உயிரினத்துக்கும் ஒரு வகையாக அமைவ தில்லை. பறவைகளாலும், விலங்குகளாலும், கடலாலும்,

காற்ருலும், மக்களாலும், இரசாயன மாற்றத்தாலும், விண் வெளிக் கோளங்களாலும் ஏற்படும் ஓசை, ஒலியலைகளாக மாறி எல்லா இடங்களிலும் பரவுகின்றது. வானவெளி அமைதியாக இருப்பதுபோல் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அஃது அமைதியென்பதையே தன்னகத்துக் காணுததாகும். ஆதலால் வானவெளி எப்போதும் சலசலப்புடையதாகவே இருக்கும். வான வெளியில் நடமாடும் பல்வகை ஓசை, ஊடகங்களில் (Media) மோதி ஒலியலையாக மாறுகின்றது.

இனி ஒளியலைகளைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். கதிரோனிடமிருந்து ஒளி நம்மை அணுகுவதற்கு ஏறக்குறைய எட்டரை நிமிடங்களாகின்றன. இந்த அளவை ஆதாரமாகக் கொண்டு கதிரோனுக்கும் நமக்குமிடையே ஏறக்குறைய 15,20,00,000 கி. மீ. (ஒன்பதரை கோடி கல்) தொலைவுள்ள தென்பது கணக்கிடப்படுகிறது. கதிரோனுக்கு அடுத்த விண் மீனிலிருந்து ஒளி நம்மிடம் வந்து சேர நாலரை ஆண்டாகுமாம். இங்ஙனமெனின் அதன் தொலைவை எங்ஙனம் கணக்கிடுவது! அறிவியற் கலைஞர் அதனை 'ஒளியாண்டு' என்ற முறையில் கணக்கிடுகின்றனர். கதிரோனிடமிருந்து ஒளி, நிலவுமண்டிலத்துக்குச் சென்று நம்மிடம் பிரதிபலிப்பதற்கு மூன்றரை நிமிடந்தான் ஆகிறது. இதற்குக் காரணம் நிலவு மண்டிலம் நமக்கு 2,08,000கி. மீ. தொலைவில் உள்ளமையாகும்.

இயற்கையொளி, செயற்கையொளி என ஒளி இரு வகைப்படும். கதிரோன் ஒளி இயற்கையொளியாகும். மின் விளக்கும் கதிரோனின் துணையால்தான் உண்டாகிறது எனலாம். ஞாயிற்றின் வெம்மையால் தண்ணீர் ஆவியாக மாறுகிறது. இந்நீராவியால் குளிர்காற்றுப் பட்டதும் மழை பெய்கிறது. பெய்த மழை நீர்வீழ்ச்சியாக விழும்போது உருளை கொண்டு அதனைச் சுழற்றினல் மின்னலைகள் ஏற்படுகின்றன. இத்தகைய மின்னலைகளைச் செம்புக் கம்பி வழியே செலுத்தி மின் விளக்கு அமைக்கப்படுகின்றது.

கதிரோன் என்பது காற்றும் நெருப்பும் கலந்த ஓர் உருண்டைப் பொருளாகும். உலகில் ஏற்படும் இயற்கை விளைவுகளத்தனையும் கதிரோனால் உண்டாவனவே. காற்று, மழை, வெந்நீரோட்டம், குளிர்நீரோட்டம், கல் மழை, சூரிய கிரகணம், சந்திர கிரகணம் முதலியனவெல்லாம் கதிரோன் தந்த விளைவுகள் ஆகும்.

இனி மின்னல் எங்ஙனம் உண்டாகிறது என்பதை நோக்கலாம். மின்சாரமும் மின்னலும் ஒரு தன்மையன எனலாம். மேகங்களிடம் நிலைமின்சாரம் உண்டு. இது நிலம் நோக்கி வரும்போது இடியாக மாறுகிறது. மின்னலும் இடியும் பேராற்றல் படைத்தவை. இவைகள் திருவுளம் வைத்தால் வீடுகளைப் பொடியாக்கலாம்; பசு மரங்களைத் தீயுண்ணச் செய்யலாம்; இன்னும் எத்தனையோ திருவிளையாடல் புரியலாம். இதனால் தான், பெருஞ்செலவில் கட்டப்படும் கட்டடங்கள் மீது இடிதாங்கி வைத்து அவைகள் பாதுகாக்கப்படுகின்றன. தமையன் தம்பிமார்களில் பெரும்பாலும் தமையன் சற்று உயரமாக இருப்பான். மழைக் காலங்களில் இருவரும் செல்லுங்கால் இடி, தான் விழுவதற்கு அண்மை இடமாகிய மூத்தவன் தலைமீது விழுகிறது. சிலர் எண்ணுவது போல் தமையன் என்ற காரணத்தால் அவன்மீது இடி விழவில்லை; தம்பியைவிடத் தமையன் உயரமாக இருக்குங் காரணத்தால் அவன்மீது இடி விழுகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஐசக் நியூட்டன் செய்த அறிவியல் ஆய்வுகளில் ஒன்று நிறமாலையாகும். கதிரோனிடமிருந்து வரும் வெண்கதிர்களை அவர் ஏழு நிறமுள்ளனவாகப் பிரித்தார். இங்ஙனம் பிரிக்கப்பட்டதற்குரிய பெயர் நிறமாலை. இங்ஙனமே அவற்றை ஒன்றாகச் சேர்த்து வெண்கதிர் படைத்ததாக்கினார். நேர்க்கோட்டில் செல்வதுதான் ஒளியின் பண்பாகும். அதனால்தான் நிழல் உண்டாகிறது. இங்ஙனமில்லையானால் நாம் மர நிழலில் அமரவும் வீட்டு அறையில் அமரவும் முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

இங்ஙனமாக விஞ்ஞானப் படைப்புகள் எத்தனையோ உள. அவற்றையெல்லாம் யெடுத்துப் புகல முனைந்தால் வரையறையின்றி வளர்ந்து கொண்டே போகும். ஆதலால் இக்கட்டுரையை இத்துடன் நிறுத்திக் கொள்ளுதும்.

## அருஞ்சொற்பொருள்

தருக்கியது – செருக்குக் கொண்டது, செம்மாந்து – கம்பீரமாக, அல்லல்கள் – துன்பங்கள், பட இயக்குநர் – படத்தை நடத்தி வைப்பவர், புறவிருள் – உலகில் சூழ்ந்துள்ள இருள், கானிலும் – காட்டிலும், ஒரு நொடி – ஒரு விநாடி, இசையரங்கு – இசைக் கச்சேரி, விந்தை – வியப்பு, உருளை – சக்கரம்.

## பயிற்சி வினாக்கள்

1. அறிவியற் கலைஞரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. விஞ்ஞானக் கலை அமையும்போது ஏற்படும் சில சூழ்நிலைகளைக் கூறுக.
3. விஞ்ஞான உலகின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுக.
4. படக்காட்சி பற்றி நீவிர் அறிவன யாவை ?
5. வானிலே ஒலியலை பாயுந் தன்மையை விளக்குக.
6. நீரில் ஒலியலை பாய்வதனை ஒரு சான்று வழியே தெளிவாக்குக.
7. கேட்கும் ஒலி, கேளா ஒலி – இவற்றை விளக்குக.
8. இயற்கையொளி, செயற்கையொளி – குறிப்பெழுதுக.
9. கதிரோன் தந்த விளைவுகள் யாவை ?
10. மின்னலும் இடியும் உண்டாகும் முறையையும், அவை தாக்கும் முறையையும் விளக்குக.
11. நிறமாலை – குறிப்பெழுதுக.

# 13. வேடர் குலத் திலகம்

[ நாடகம் ]

[ வித்துவான். மு. இரத்தினவேல். ]

## காட்சி 1.

உறுப்பினர் : எயினன்–1, எயினன்–2.

இடம் : பொத்தப்பி நாட்டு உடுப்பூர்.

காலம் : காலை.

எயினன்–1: என்ன நண்பரே! இந்தக் காலை நேரத்திலே, ஆழ்ந்த சிந்தனையிலே உங்கள் உள்ளம் மூழ்கிக் கிடக்கின்றது!

எயினன்–2: இந்த உடுப்பூரைப் பற்றித்தான் ஆழ்ந்த சிந்தனை.

எ–1: உடுப்பூரைப் பற்றியா? நம் வேடர் குலத் தலைவர் நாகன் இருக்கின்ற வரையில் நம் பதியில் இடரேது? களிற்றுக் கோடுகளாலான அரணஞ் சூழ்ந்தது நம் உடுப்பூர். இவ்வுடுப்பூரின் பாறை முன்றிலே பன்றி முதலியவற்றின் இறைச்சியும், ஐவனமும் உணங்கும். நம்மிளஞ்சிறுர்கள் புலிக் குருளையோடும் கரிக் கன்றோடும் அஞ்சாது விளையாடுகின்றார்கள். நம் எயிற்றியரும் பிணை மான்களோடு துள்ளி விளையாடுகின்றனர். சுருக்கமாக நோக்கினல், நம் உடுப்பூர் குன்று உணவுக்கும், மறத்துக்கும், இன்பத்துக்கும் நிலைக்களனாக வன்றோ திகழ்கின்றது? இங்ஙனமிருக்கும்போது நம் உடுப்பூரைப் பற்றி நீவிர் கவல்கின்ற காரணம் யாதோ வறியேன்.

எ–2: அன்பரே! உற்று நோக்கின் ஒரு குறைவுமின்று நம்முடுப்பூருக்கு. ஆயினும் அதன் எதிர்காலம் பற்றித் தான் எம்முள்ளம் ஆழ்ந்து சிந்திக்கின்றது. அதாவது நம் தலைவர், நாகனுக்குப் பின் ... ... ...

எ–1: ஒகோ! அதைப் பற்றிச் சிந்திக்கின்றீரா? நாம் என் செய்வது? நம் தலைவர் நாகன் அவர்கள் அன்போடும், அருளோடும் நம்மைக் கண்மணிபோல் காத்து வருகின்ருர். ஆயினும் குறுகுறு நடந்து சிறுகை நீட்டி, இட்டுந் தொட்டுந் துழந்தும் கவ்வியும் மயக்கும் மக்கட் செல்வம் பெற்றிலர். உண்மையில் யாமும் அது பற்றிப் பெரிதும் கவல்கின்ருேம். நாகனுரும் தத்தையும் நம் குலத் தெய்வமாகிய முருகவேளை நாளும் பராவி வருகின்றனர். அவனுக்குப் பல விழாக்களும் செய்து வருகின்றனர். திருமுருகன் அருள் புரிவான் என்பதில் ஐயமில்லை.

எ–2: நண்பரே! செவ்வேளின் திருவருளால் நம் நாகனுருக்கு அரும்பெருஞ் செல்வன் ஒருவன் தோன்றிஞல் போதும். அறநெறி வழா அவர்தம் குடிசிறக்க ஆண் மகவு ஒன்றிருந்தால் போதும். முருகன் அருள் புரிவானுக.

[இருவரும் தம் குலத் தொழில் புரியப் புறப்படுகின்றனர்.]

## காட்சி 2.

உறுப்பினர் : நாகன், தத்தை, எயினன்–1, எயினன்–2, மற்றையோர்.
இடம் : நாகன் மனை.
காலம் : காலை.

தத்தை — கணவரே! நெடுநாட்களாக நம் மனத்தில் போராடி வந்த அல்லல்கள், கதிரோனைக் கண்ட பனி போல இரிந்தன. முருகன் திருவருளுக்கு நன்றி

செலுத்த ஒரு விழா எடுப்பித்தல் சாலவும் பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

நாகன் — அன்பு வடிவான தத்தை! நின் நினைப்பில் தவறேது. எல்லாம் வல்ல திருமுருகனுக்கு விழா எடுப்பித்தல் மிக மிகத் தேவையானதன்றோ? நம்மினத்தாரே விழா கொண்டாடுவதற்கு வழி வகுத்துள்ளார்கள். இன்னும் சிறிது நேரத்தில் விழா நடக்கப் போகின்றது.

எயினன்–1 நண்பரே! கரையற்ற உவகையோடு விரைந்து செல்கின்றீரே! காரணம் யாதோ?

எயினன்–2 அன்பரே! அன்று வாடியிருந்த உள்ளத்துக்கு இன்று எல்லையற்ற இன்பம் ஏற்பட்டுள்ளது. நம் தலைவராகிய நாகனுருக்கு ஆண் மகவு பிறந்துள்ளது. பல்லாண்டு கடந்து அவர்க்கு மகவு பிறந்துள்ளது என்பதை நீவிர் அறிவீர்! மங்குவதாக இருந்த அவரது குல விளக்கை ஓங்கச் செய்தது அம்மகவு. ஆதலால் மகிழ்ச்சிக் கறிகுறியாக விழாவொன்று நாகன் மனையில் சிறிது நேரத்தில் நடக்கப் போகின்றது. ஆதலால் விரைந்து செல்கின்றேன். நீரும் வருகின்றீரா?

எயினன்–1 நண்பரே! நானும் வருவதில் தடையுண்டோ? சின்னாட்களாக இவ்வுடுப்பூரில் நான் இல்லாத குறையால் அத்தகைய இன்பச் செய்தியை அறியக் கூடாமற் போயிற்று. வருக! விரைந்து செல்லலாம்.

எயினர் } எங்கள் அருமைத் தலைவரே! நாகனுரே!
எயிற்றியர் } எங்கள் மனக்குறையெல்லாம் நீங்கியது. மாசற்ற மணி, தங்கள் குலக்கொடியை ஓங்கச் செய்தது பற்றி இன்பக் கடலுள் மூழ்குகின்றோம். நாங்கள் அன்புக் காணிக்கையாகக் கொண்டு வந்துள்ள மலைபடு

பொருள்களை அன்பு கூர்ந்து பெற்றுக் கொள்ளுங்கள். எங்கள் மகிழ்ச்சிக் கறிகுறியாகக் களியாட்டம் ஒன்று நிகழ்த்தப் போகின்றோம். அருள் கூர்ந்து அதற்கு இசைவு தர வேண்டுகின்றோம்.

நாகன் — அன்புகூர் மக்காள்! உங்கள் எண்ணப்படியே செய்யுங்கள். உங்கள் எண்ணத்துக்கு யான் என்றும் மாறுபட்டதில்லையே.

[எயினரும் எயிற்றியரும் சேர்ந்து பாடுதல்.]

அன்பர்குறை தீர்த்தருளும் அருள்முருகன் வாழி
நம்தலைவர் நாகனரி னருளாட்சி வாழி
இன்பமெங்கும் ஓங்கச்செயு மவர்மகவு வாழி
நம்குலத்தை வாழவைக்கும் அம்மகவு வாழி
வன்புலிகள் கருங்கரிகள் வளர்க்குமிடர் நீக்கி
வாழவைக்கும் அம்மகவு வாழ்கபல் லாண்டே
நன்மைபல நாளுமருள் நம்முருகன் வாழி
எங்குமின்பம் பொங்கிடவே இவ்வுலகம் வாழி.

நாகன் — அன்புள்ள மக்களே! எம்மகவுக்கு என்ன பெயர் சூட்டலாம் என்பதைச் சற்று ஆராய்ந்து பாருங்கள்.

ஒரு முதியவர் — நாகனரே! தங்கள் மகன் திண்ணிய உருவம் படைத்தவனாக இருத்தலின் திண்ணன் என்ற பெயர் வைக்கலாம் என்றெண்ணுகிறேன்.

அனைவரும் கூறல் — அப்பெயர் மிகப் பொருத்தம்; அப்பெயர் மிகப் பொருத்தம்.

நாகன் — எல்லாரது எண்ணப்படியே எம் மகவுக்குத் திண்ணன் என்னும் பெயர் இன்று முதல் வழங்கக் கடவது.

## காட்சி 3.

உறுப்பினர் : நாகன், திண்ணன், நாணன், காடன், வேடர்.

இடம் : நாகன் இல்லம், காடு.

காலம் : காலை.

**வேடர்** — அந்தோ! நாகனரே! நாங்கள் என்ன செய்வோம்! எங்கள் துன்பங்களைக் கேட்டருளுங்கள்.

**நாகன்** — என் அன்புக்குரிய மக்காள்! இந்தக் காலை நேரத்திலே உங்கட்கு நேர்ந்த துன்பமென்ன? சொல்லுங்கள்; உடனே அதை ஒழித்துக் கட்டுகிறேன்.

**வேடர்** — அன்புக்குரிய தலைவரே! முறையாகத் திங்கள் தோறும் வேட்டையாடுதல் நின்ற காரணத்தால் சிங்கம், புலி, யானை, கரடி, கடமை, பன்றி, மான் முதலியவற்ருல் ஏற்படும் துன்பங்கட்கு எல்லையில்லை. ஒவ்வொரு நாளும்—ஏன்—ஒவ்வொரு நொடியும் நாங்கள் உயிரோடு போராடிக் கொண்டிருக்கிருேம்.

**நாகன்** — உங்கள் வேதனை கண்டு நோதல் செய்கின்றேன். என் மூப்புக் காரணத்தால் வேட்டையாடும் கடமையில் நான் தவறி விட்டேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆயினும் என் அருமை மகன் திண்ணன் உங்கள் துன்பத்தைப் போக்குவான். இனி நீங்கள் கவலையின்றிச் செல்லலாம்.

**வேடர்** — வணக்கம் தலைவரே! போய் வருகின்ருேம்.

**நாகன்** — திண்ணன்! (அழைத்தல்)

**திண்ணன்** — என்ன அப்பா!

**நாகன்** — என் கண்மணியே! யான் இயம்புவ கேண்மோ.

திண்ணன் — அருமைத் தந்தையே! இயம்புவ இன்னே இயம்புங்கள். தடை செயாது நிறைவேற்றுகின்றேன்.

நாகன் — மகனே! என் மூப்புக் காரணத்தால் நம் காட்டில் திங்கள் முறை வேட்டையாடும் வினை தாழ்த்தது. ஆதலின் நின் தலைமையில் வேடர் சென்று கொடிய விலங்குகளை ஒடுக்க வேண்டும். என்ன சொல்கின்றாய்?

திண் — தந்தையே! தங்கள் பணியைத் தலைமேற்கொண்டேன். தினவு தோள்களுக்கு நல்லுணவு கிடைத்தது. என் ஆற்றல் குறித்துத் தங்கட்கு ஐயம் இராதே. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இதோ புறப்படுகின்றேன். நாணனும் காடனும் என் வேட்டைக்குத் துணையாக நிற்பர்.

நாகன் — சரி...... அங்ஙனமே ஆகட்டும். புறப்படு மகனே! நம்மக்கட்கு இடர் விளைக்கும் காட்டு விலங்குகளை ஒடுக்குக. இப்பொழுதே புறப்படுக.

திண் — இதோ...... புறப்பட்டேனப்பா. நாணன்! காடன்!!

நாணன், காடன் — என்ன திண்ணன்!

திண் — நம் வேடர்க்கு இடர் விளைக்கும் காட்டு விலங்குகளை ஒடுக்க வில் அம்பு முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்க.

நாணன், காடன் — எல்லாம் முன்னேற்பாடாக அமைந்துள. இந்த நொடியிலேயே புறப்படலாம்.

[எல்லாக் காட்டு விலங்குகளையும் அவர்கள் அஞ்சி ஓடச் செய்கின்றார்கள். ஒரு காட்டுப் பன்றியை மூவரும் துரத்திச் செல்கின்றனர். திண்ணன் அம்பெய்து அதைக் கொல்கின்றான்.]

நாணன் } காடன் } திண்ணன்! நாங்கள் நெடுந்தொலைவு வந்தமையால் மிகவும் களைத்து விட்டோம். எங்களை வருத்தும் பசி நீங்கினால்தான் மேற்கொண்டு நாங்கள் காட்டுக்குள் செல்லவியலும். என்ன செய்வோம்.

திண் — சரி...... உங்கள் உள்ளக் கருத்துப்படியே ஆகட்டும். தீந்தண்ணீர் யாங்குளது ?

நாணன் — அதோ...... அந்தக் காளத்தி மலைக்கு அண்மையில் பொன் முகலியாறு ஓடுகின்றது. இவ்வாறு தீஞ் சுவைத் தண்ணீரைத் தன்னகங் கொண்டது.

திண் — நல்லது. இந்தப் பன்றியை அவ்வாற்றங் கரையின் கண் எடுத்து வருக. நாணன்! அந்த மலையின் கண் யாதுளது ?

நாணன் — திண்ணன்! அம்மலை முகட்டில் உள்ளங் கொள்ளை கொள்ளும் காட்சியொன்றுளது. குடுமித் தேவர் அம்மலை முகட்டில் எழுந்தருளியுள்ளார்.

திண் — அங்ஙனமாயின் நாமிருவரும் அங்குச் சென்று வருவோம். காடன், தீக்கடை கோலின் துணை கொண்டு நெருப்புண்டாக்கி வைக்கட்டும். இதற்கிடையில் நாம் அம்மலை முகட்டுக்குச் சென்று வருவோம்.

நாணன் — அங்ஙனமே செய்யலாம்.

[இருவரும் மலைமிசை ஏறுகின்றனர்.]

திண் — நாணன்! என் உள்ளம் உவகையில் ஆழ்கின்றது. இதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. என் தலைமீதிருந்த பாரம் கழிந்தது போன்றதோர் உணர்வு எனக்குத் தோன்றுகின்றது.

[இலிங்க வடிவத்திலிருந்த குடுமித் தேவரைக் கட்டித் தழுவிக் கொண்ட பின்]

## தனி மொழி

அந்தோ! எம்பெருமானே! இக்கொடிய காட்டில் நீ எவ்வாறு தனிமையாக இருக்கின்றனை. வல்லரியேறும், வயக்கரியும் வழங்கும் இக்கடுங் காட்டில் எங்ஙனம் தனித் துறைகின்றனை. ஒருவேளை நினக்குத் துன்பம் நேர்ந்தால்...... ஆம்...... நேர்ந்தாலும் நேரலாம். குடுமித்தேவரே! உன்னிடமிருந்து அடியேன் பிரியேன்; பிரிந்து வாழேன். நினக்குத் துணையாக இருப்பார் ஒருவருமிலர். ஆதலால் இறைவனே! உன்னை விட்டுப்பிரியேன். ஆம்......உனக்குப் பச்சிலையும் பூவும் இட்டு நீர் வார்த்தார் யார்?

நாணன் — திண்ணன்! இக்குடுமித் தேவருக்குப் பச்சிலையும் பூவுமிட்டு நீர் வார்த்து வழிபாடு நிகழ்த்தியவர் ஓரந்தணராவார். ஒருமுறை உன் தந்தையோடு நான் வேட்டைத் தொழிலுக்கு வந்தேன். அப்போது நானும் அவரும் இங்கு வந்தோம். அத்தகைய வழிபாட்டினை அவர் செய்ததை அறிந்தோம். ஆதலால் இன்றும் அவர்தாம் இத்தகைய வழிபாடு நிகழ்த்தியிருக்க வேண்டும்.

திண் — அந்தோ! என்னிறைவன் கடும்பசியால் துன்புறுகின்றனே! என் செய்வேன்! ஆம்...... இறைவ! நீ இங்கேயே இரு. இதோ விரைவிற் போந்தேன். நல்

விறைச்சியை நான் கொண்டு வந்து விடுகின்றேன். [சிறிது தொலைவு சென்று மீண்டு வந்து] என்னையாண்டானே! உன்னை எங்ஙனம் தனித்திருக்கும்படி பிரிவேன். ஆம்...... இனி யான் உன்னைப் பிரியேன். ஐயோ! நீ பசியால் எவ்வளவு நொந்தனை! இதோ இறைச்சியைக் கொண்டு வருகின்றேன்.

[நாணனும் திண்ணனும் மலையிலிருந்து கீழே இறங்கிக் காடன் இருந்த இடஞ் சேர்தல்.]

**காடன்** — என்ன திண்ணன்! இவ்வளவு நேரங் கழித்துப் போந்தனை. நாம் எப்போது நம் மனைக்கு மீள்வது? சரி... சரி... தீக்கடைகோல் துணைகொண்டு நெருப்புக்கு ஏற்பாடு செய்துள்ளேன்.

**நாணன்** — காடன்! நம் திண்ணன் ஒன்றும் பேசமாட்டான். குடுமித் தேவரிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டான். நம்மைப் பற்றி அவனுக்கு இப்போது ஒன்றும் தெரியாது. காடன்! இதோ பார். திண்ணனே பன்றியிறைச்சியைத் தீயிலிட்டு வதக்கிப் பக்குவம் பார்க்கின்றான். நாம் அழைத்தாலும் இவன் வாரான். வலைபற்றிய வல்லுடும்பானான். தெய்வ மயக்கத்தால் பிணிப்புண்டான். இம்மயக்கத்தைத் தீர்க்க நாகனோடும் தேவராட்டியோடும் இங்குப் போதுவம். வா போகலாம்.

[நாணனும் காடனும் பிரிதல்.]

## காட்சி 4.

உறுப்பினர் : கண்ணப்பர், குடுமித் தேவர், சிவகோசரியார்.

இடம் : காளத்தி மலை.
காலம் : மாலை, காலை.

திண் — இறைவனே! நீ சாலப் பசித்திருப்பாய். இதோ போந்தேன். [மலைமுகடெய்துதல். தலைமீது வைத்திருந்த பூவைக் குடுமித் தேவர்மீது இடுதல். வாயிலிருந்த நீரை அவர்மீது உமிழ்தல். தேக்கிலையில் வைத்திருந்த ஊனை அவருக்குப் படைத்தல்.] ஆண்டவனே! காலந் தாழ்த்த தற்காகப் பொறுத்தருள்க. என் நாவாலேயே நான் இறைச்சியைச் சுவை பார்த்து, பக்குவம் பார்த்துக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றருள்க. கதிரோன் மறை கின்றான். ஆதலால் இன்னும் இறைச்சி கொண்டு வருவதற்கில்லை. நாளைக் காலையில் வேண்டுமளவு கொண்டு வருகின்றேன். நான் இன்றிரவு உன்னை நீங்கிடின் காட்டு விலங்குகளால் உனக்கு ஊறு நேரும். ஆதலால் உன்னை விட்டுப் பிரியேன். வில்லும் அம்பு மாகத்தான் இன்றிரவு முழுவதும் இருப்பேன்; கண் ணுறங்கேன்.

[பொழுது புலர்ந்ததும் வேட்டையாடி இறைச்சி கொணர வெளியிற் போதல்.]

சிவகோசரியார் — (காலையில் வந்து வழிபாடு செய்தல்.) அந்தோ! என்ன செய்வேன். எவனோ ஒருவன் இத்தகைய மாசினை எம்பெருமானுக் கிழைத்தானே. இறைச்சியும் எலும்பும் இங்கு மலிந்து கிடக்கின்றனவே. என் செய்வேன். (தூய்மை செய்து தன் வழிபாடு புரிந்து சென்று மீண்டும் மறுநாள் அத்தகைய நிலை அமைந்திருப் பதைக் கண்டு இறைவனை வேண்டுதல் புரிதல்.)

குடுமித் தேவர் — சிவகோசரியாரே! திண்ணனன் என்ற வேடன் இத்தகைய செயல் புரிகிறான். அவன் அன் புக்கு எல்லையில்லை. நீ இங்கே ஒளிந்திரு. அவனது அன்பு முதிர்ச்சியை உணர்ந்து கொள்வாய். (சிவ கோசரியார் ஒளிந்திருத்தல்.)

திண் — (இறைச்சி முதலியன கொண்டு வந்து குடுமித் தேவரைக் காணுதல். அவரது வலக்கண்ணில் குருதி வருதலைக் காணுதல்.) பெருமானே! உனக்கு இத்தகைய தீங்கு செய்த கயவன் யாவன்? அவன் என் கையகப்பட்டால் உடனே கொன்றொழிப்பேன். ஆம்... இம் மருந்துச் செடியின் சாறு இக்குருதியை நிறுத்தும். (மருந்துச் செடி சாற்றினை ஒழுக விடுதல். குருதி நிற்காமையை உணர்தல்.) அந்தோ! என்ன செய்வேன்! குருதி நின்றபாடில்லையே. ஆம்...... ஊனுக்கு ஊன் பொருத்தமாகும். (தன் கண்ணிடந்து இறைவனது வலக்கண்ணில் அப்புதல். உடனே குருதி நிற்றல்.) ஆண்டவனே! இப்போதுதான் என் உள்ளம் இன்பக் கடலில் மூழ்குகின்றது. நான் அடைய வேண்டிய வேறு நற்பேறு யாதுளது! (மற்றொரு கண்ணிலிருந்து இறைவன் குருதி பெருகச் செய்தல்.) ஆ! என்ன இப்புதுமை! மற்றொரு கண்ணிலிருந்தும் குருதி பெருகுகின்றதே. ஆண்டவனே! நான் அஞ்ச மாட்டேன். இதோ மற்றொரு கண் என்னிடமுள்ளது. (கண்ணிடந்து வைக்க முனைதல்.)

குடுமித்தேவர் — கண்ணப்ப! வேடர் குலத் திலகமே! நில். நின் கரையற்ற அன்பினை உலகுக்குக் காட்டவே அங்ஙனம் செய்தேன். என்றும் என் வலத்தில் அமர்ந்து நற்பேறு எய்தக் கடவாய்! (மறைதல்)

### அருஞ்சொற்பொருள்

எயினன் – வேடன். களிற்றுக்கோடு – யானைத் தந்தம். ஐவனம்–மலைநெல். கரி–யானை. கவல்கின்றேம்–கவலையடைகின்றேம். பராவி–துதித்து. மலை முகடு மலையுச்சி. கண் இடந்து–கண்ணைத் தோண்டியெடுத்து.

## வினாக்கள்

1. உடுப்பூரின் சிறப்பை விளக்குக.
2. நாகனின் மனக் குறையையும் இது நீங்கிய வகையையும் விளக்குக.
3. திண்ணன் வேட்டைக்குப் போக வேண்டிய தன் காரணத்தைப் புலப்படுத்துக.
4. திண்ணனின் வேட்டை நிகழ்ச்சியை விளக்குக.
5. கண்ணப்பனின் பக்தி நிலையைத் தெளிவு படுத்துக.
6. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ? — வந்துள்ள இடஞ்சுட்டி விளக்குக.

## 15. பிறந்த நாள் கடிதம்

[திரு. சவாகர்லால் நேரு அவர்கள்
மொழிபெயர்ப்பு : திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள்]

மத்திய சிறை,
நைனி,
அக்டோபர் 26, 1930.

*உன் பிறந்த நாளன்று உனக்குப் பரிசுகளும் நல் வாழ்த்துக்களும் கிடைப்பது வழக்கம். உனக்கு வேண்டிய மட்டும் நல் வாழ்த்துக் கூறுகின்றேன்; ஆனல் நைனி சிறையிலிருந்து உனக்கு நான் என்ன பரிசு அனுப்ப முடியும்? என்னுடைய பரிசுகள் இம் மண்ணுலகத்தைச் சேர்ந்தனவாக இருக்க முடியாது. வானத்துத் தேவதை உனக்கு வழங்கக் கூடியதைப் போன்று காற்ருலும், மனத்தாலும், உயிராலும் ஆன பொருளேயே உனக்கு நான் அனுப்பக் கூடும். சிறையின் உயர்ந்த புறமதிற் சுவரும் அதைத் தடுக்க முடியாது.

என் அன்பே, பிறருக்கு அறிவுரை கூறுவதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை என்பது உனக்குத் தெரியும். நான் அறிவுரை கூறத் தொடங்கும் போதெல்லாம் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருவதுண்டு. நீயே ஒரு காலத்தில் அக் கதை காணப்படும் நூலைப் படிக்கக் கூடும். ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சீன நாட்டிலிருந்து யுவான் சுவாங் (Hiuen Tsang) என்னும் பெரியார் அறிவுச் செல்வத்தையும், கலைச் செல்வத்தையும் நாடி இந்தியாவுக்கு வந்தார். ஆறுகளையும் மலைகளையும் பாலை நிலங்களையும் கடந்து, துன்பத்தை மதியாமல் தடைகள் பலவற்றையும் எதிர்த்து வென்று அவர் இங்கு வந்து சேர்ந்தார். அறிவை வளர்த்துக் கொள்வதிலே அவருக்கு அத்துணை ஆவல். இப்போது பாட்ன என்று வழங்கும் பாடலிபுத்திர நகருக்கருகிலிருந்த நாலாந்தாப் பல்கலைக் கழகத்தில் அவர் நெடுநாள் தங்கித்

* இந்திரா பிரியதரிசினிக்கு அவளது பதின்மூன்ருவது பிறந்த நாளன்று எழுதியது.

தாமும் கற்றுப் பிறர்க்கும் கற்பித்துக் கொண்டிருந்தார். யுவான் சுவாங் அவர்களின் கல்வி மேம்பாட்டை உணர்ந்த மேலோர் அவருக்குப் 'பௌத்த சமயத் தலைவர்' என்னும் பட்டத்தை வழங்கினர்கள். யுவான் சுவாங் இந்தியா முழுமையும் சுற்றி வந்தார்; மிகப் பழைய அந்நாளிலே இப் பெரிய நாட்டில் வாழ்ந்த மக்களையும், அவர்தம் பழக்க வழக்கங்களையும் நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டார். பிறகு அவர், தம் அனுபவங்களை யெல்லாம் திரட்டி ஒரு நூல் எழுதினர். அந்த நூலில்தான் நான் மேற்சொன்ன கதை வருகிறது. அது வருமாறு :

தென் இந்தியாவிலிருந்து கர்ண சுவர்ணம் என்னும் பட்டணத்திற்கு ஒருவன் வந்தான். பீகாரில் பகல்பூர் என்று இப்போது வழங்கும் இடத்திற்கருகில் அப்பட்டணம் இருந்திருக்க வேண்டும். அவன் அரையில் செப்புத் தகடு களைக் கட்டிக் கொண்டும், தலையின் மீது ஒரு தீப்பந்தத்தை வைத்துக் கொண்டும், கையில் ஒரு கோலைத் தாங்கிப் பெருமிதத்துடன் எங்கும் திரிந்து வந்தானும். அக்கோலத் தைக் கண்ட ஒருவர் அதன் காரணத்தை வினவியபோது, "என்னுடைய கல்வியறிவுக்கு அளவே இல்லை. செப்புத் தகடுகளைக் கட்டிக் கொள்ளா விட்டால் அறிவு மிகுதியால் என் வயிறு வெடித்தே போய்விடும். அறியாமை இருட்டிலே கிடந்து உழலும் மக்களின் மீது பிறந்த இரக்கத்தாலே என் தலையில் ஒளியைத் தூக்கிச் செல்கிறேன்" என்று அவன் விடை கூறினனும்.

நிற்க, அறிவு மிகுதியால் வயிறு வெடித்துவிடும் என்னும் பயம் எனக்கு இல்லை. ஆகவே, நான் செப்புத் தகடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டியதில்லை. மேலும் எனக்குள்ள அறிவும் என் வயிற்றினிடத்தே இல்லை என்று நான் நம்பு கிறேன். அறிவு என் உடம்பில் எங்கு இருந்தாலும் அது மேலும் மேலும் பெருகுவதற்கு நிறைய இடம் இருக்கிறது. அறிவு நிரம்பி விட்டது; இனி இடமில்லை என்னும் நிலைமை எந்நாளும் ஏற்படாது. இவ்வாறு நானே அறிவிற் குறைந் தவனயிருக்கும் போது பிறருக்கு அறிவுறுத்தக் கூடிய

முற்றும் நிறைந்த ஞானியாக நடிப்பது எங்ஙனம்? ஆகவே நியாயம் இன்னது, அநியாயம் இன்னது; செய்யத் தக்கது இது, தகாதது இது என்று அறிவதற்குச் சிறந்த வழி பிறருக்கு நீண்ட சொற்பொழிவு நிகழ்த்துவதன்று என்று நான் எண்ணுகிறேன். பிறருடன் கலந்து பேசி விவாதிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் சிறிது உண்மை புலப் படும். உன்னுடன் பேசுவதில் எனக்கு எப்போதுமே விருப்பம் உண்டு. நாம் பலவற்றைப் பற்றிக் கலந்து பேசி யிருக்கிறோம். ஆனால் இவ்வுலகமோ பெரியது; இவ்வுலகத் துக்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகங்களும் இருக்கின்றன. ஆகவே, யுவான் சுவாங் கதையில் வரும் அந்தக் கருவங் கொண்ட மூட மனிதனைப் போலக் கற்க வேண்டியவையெல்லாம் கற்று நிரம்பி விட்டோம் என்றிரா மல், 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என் பதை உணர்ந்து மேலும் மேலும் கற்றலே அறிவுடைமை யாகும். எல்லாம் கற்றுத் தெளிந்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் இருந்தால் அவர்களும் "இன்னும் கற்பதற்கு ஒன்றும் இல்லையே!" என்று சில சமயங்களில் ஏக்கம் அடை வார்கள். அறிவினால் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கும் இன்பத்தை அத்தகையவர்கள் இழக்க நேரிடுமன்றோ? நம்மில் விரும்புவோர் அவ்வின்பத்தை அடையலாம்.

ஆகவே, நான் அறிவுரை கூறுவது கூடாது. ஆனால் நான் என்ன செய்வது? கடிதம் எழுதுவது நான் ஒருவனே செய்யும் செயல். ஆதலால் அது நாம் இருவரும் பேசுவது போல் ஆகாது. ஆகவே, நான் எழுதுவதில் ஏதேனும் உனக்குச் சிறந்த அறிவுரை கூறுவதைப் போலத் தோன்றி னால் அதைக் கைப்பு மருந்து உட்கொள்ளுவதைப் போல எடுத்துக் கொள்ளாதே. நாம் உரையாடிக் கொண்டிருக் கையில் கூறப்படும் ஒரு குறிப்புப் போன்று அதை எடுத்துக் கொண்டு நன்கு ஆராய்ந்து பார்ப்பாயாக.

நாட்டு வரலாறுகளில் நாம் பெருமையும் சிறப்பும் உடைய காலப் பகுதிகளைப் பற்றிப் (Great Periods) படிக் கிறோம். பெரியவர்கள் தோன்றுகிறார்கள்; அவர்கள்

செயற்கரிய செயல்கள் செய்கின்றுர்கள். நம் கனவிலும் கற்பனையிலும் அப்பண்டைக் காலத்து வீரர்களும் வீரப் பெண்மணிகளும் வாழ்ந்த காலங்களில் நாமும் வாழ்வது போலவும் அவர்களைப் போலவே நாமும் செயற்கரிய செயல் கள் புரிவது போலவும் எண்ணிச் சில சமயங்களில் இன் புறுகின்றோம். ஆர்க் சோன் (Joan of Arc) என்பவளின் கதையை நீ முதன் முதலில் படித்த போது அதில் மிகவும் ஈடுபட்டு அவளைப் போல் நீயும் ஆகவேண்டுமென்று நினைத் தது உனக்கு நினைவு இருக்கிறதா? பாமர மக்களுடைய உய ரிய குணங்கள் சாதாரணமாக வெளியில் புலப்படுவதில்லை. அவர்களுக்கு உண்ணும் உணவைப் பற்றியும், வீடு வாசல், குழந்தைகளைப் பற்றியும் நினைப்பதற்கே பொழுது சரியாய்ப் போய் விடுகிறது. ஆனால், அதற்குரிய காலம் பிறக்கும் போது ஒரு சமூகம் முழுவதுமே ஒரு பெரிய இலட்சியத்தில் (Great cause) ஆர்வம் கொண்டு ஆவேசம் நிறைந்து நிற் கிறது. அப்போது சாதாரண மனிதர்களும் பெரிய வீரர்கள் ஆகின்றுர்கள். சரித்திரம் கிளர்ச்சி நிறைந்ததாகவும், சிறப்பு நிறைந்ததாகவும் மாறுகிறது. பெரிய தலைவர்களின் மந்திர ஆற்றலினுல் சமூகம் முழுவதும் உறக்கத்தினின்று விழித் தெழுந்து தீரச் செயல்கள் புரிகிறது.

நீ பிறந்த 1917ஆம் ஆண்டு, சரித்திரத்தில் நினைவு கூர்தற்குரிய ஆண்டுகளில் ஒன்றுகும். அவ்வாண்டு நீ பிறந்த தினத்திலேயே உருசிய நாட்டில் துன்பத்தில் வாடும் ஏழை எளியவர்களுக்காக அன்பினுல் உள்ளம் கரைந்துருகும் லெனின் என்னும் பெரியார் தலைமையின் கீழ் அந்நாட்டு மக்கள் வரலாற்றிலேயே இதற்கு முன் கண்டும் கேட்டுமிராத அற்புதம் ஒன்றைச் செய்து முடித்தார்கள். லெனின் ஆரம் பித்த பெரிய புரட்சியானது உருசியாவையும், சைபீரியாவையும் அடியோடு மாற்றிவிட்டது. இன்று நம் நாட்டில் உள்ள மற் ருெரு பெரியார், துன்பத்தில் உழலுவோர்க்கெல்லாம் இரங்கி அவர்கள் துன்பத்தைத் துடைக்க விரையும் அன்பு வடிவ மான உத்தமர்; அவருடைய ஆத்ம சக்தியால் தூண்டப் பட்டு நம் நாட்டு மக்கள் விடுதலையடையவும், ஏழைகள் வறுமை முதலான கொடுமைகளினின்றும் நீங்கிப் பிழைக்க

வும் அரும்பெரும் செயல்களேயும் தியாகங்களேயும் செய்து வருகிருர்கள். காந்தியண்ணல் இன்று சிறையில் கிடக்கிருர். ஆனல், அவருடைய செய்தியோ, மாய மந்திரம் போன்று கோடிக் கணக்கான இந்திய மக்கள் இதயத்தே புகுந்து நிற்கிறது. ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளுங்கூடத் தங்கள் சிறிய கூட்டை உதறித் தள்ளி விட்டு இந்திய உரிமைப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கிருர்கள். இந்தியாவில் இன்று நாம் சரித்திரத்தையே படைத்துக் கொண்டிருக்கிருேம். நம் கண் முன்பாக இவை நடக்க நாம் பார்ப்பதாலும், இந்தப் பெரிய நாடகத்தில் நாமும் சிறிது பங்கு எடுத்துக் கொள்வதாலும், நீயும் நானும் பாக்கியசாலிகள்.

இந்தப் பெரிய இயக்கத்தில் நாம் எவ்வாறு நடந்து கொள்வது? நம் பங்கு என்னவாகும்? என்று நான் சொல்ல முடியாது. அஃது என்னவாயினும், நாம் எடுத்திருக்கும் பெருஞ் செயலுக்கு இழுக்குத் தருவதையோ நம் மக்களின் மானத்துக்குக் கேடு விளேக்கக் கூடியதையோ நாம் செய்யக் கூடாது. இந்தியாவின் போர் வீரர்களாகிய நம்மிடத்தில் நமது நாட்டின் தூய்மையான மானம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நாம் செய்ய வேண்டுவதைப் பற்றி அடிக்கடி நம்முள் ஐயம் எழலாம். இது சரி, இது சரியன்று என்று தேர்வது எளிதன்று. உனக்கு ஐயம் எழும் போதெல்லாம் அதைத் தீர்த்துக் கொள்ள ஒரு சிறு வழி சொல்லித் தருகிறேன். மறைவாக எதையும் செய்யாதே. பிறரிடமிருந்து நீ ஒளிப்பதற்கு விரும்புவதை ஒரு போதும் செய்யாதே. நீ எதையாவது ஒளிக்க விரும்புவதன் பொருள் உனக்குள் அச்சம் இருக்கிறது என்பதாகும். அச்சம் தீயது; தகாதது. எதற்கும் அஞ்சாதே. மற்றவையெல்லாம் தாமே வந்து சேரும். அச்சம் ஒழிந்தால் வெட்கப்படத்தக்க செயல் எதையும் நீ செய்யமாட்டாய். காந்தியண்ணலின் தலைமை யின் கீழ் நடந்து வரும் சுதந்தர இயக்கத்தில் ஒளிப்பதற்கும் மறைப்பதற்கும் ஒன்றுமில்லை என்பது உனக்குத் தெரியும். நாம் சொல்வதை அஞ்சாமல் சொல்கிருேம்; செய்வதையும் அஞ்சாமல் செய்கிருேம். வெளிப்படையாக வேலை செய்து

வருகிறோம். அதே போல நமது சொந்த வாழ்க்கையிலும் யாதொரு ஒளிவு மறைவுமின்றிச் செயல் புரிய நாம் பயில வேண்டும். நாம் தனிமையில் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. அவற்றை நாம் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் செய்யத்தான் வேண்டும். அது வேறு; மறைவாகக் காரியங்கள் செய்வது வேறு. குழந்தாய், நீ இம்முறையில் பழகி வந்தால் ஒளியும் அமைதியும் பெற்று விளங்குவாய்; என்ன நேர்ந்தாலும் கலங்காத உள்ளம் பெறுவாய்.

நீண்டதொரு கடிதம் எழுதி விட்டேன். ஆயினும் உனக்கு நான் சொல்ல விரும்புவது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. ஒரு கடிதத்தில் எல்லாவற்றையும் எப்படிச் சொல்ல முடியும்?

நம் நாட்டில் நடைபெறும் இவ்வுரிமைப் போராட்டத்தை நீ உன் கண்ணெதிரிலேயே பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறாய் என்று முன்னரே சொன்னேன். இன்னொரு வகையிலும் நீ பேறு பெற்றவள். உன் தாய் வீரமும், அன்பும் உடையவள். அவள் உன் ஐயமெல்லாம் தெளிவிப்பாள்.

அன்பே, விடை பெற்றுக் கொள்கிறேன். இந்திய நாட்டுக்குத் தொண்டு புரியும் வீரப் பெண்மணியாக நீ வளர்ந்து விளங்க வேண்டும்.

கொள்ளை கொள்ளையாக என் அன்பும் வாழ்த்தும்.

— சவாகர்லால் நேரு.

### அருஞ்சொற்பொருள்

வினவியபோது - கேட்டபோது; உழலுவோர் - வருந்துவோர்; முன்னணியில் - முன் வரிசையில்; அஞ்சாமல் - பயப்படாமல்; புலப்படாமல் - தெரியாமல்.

### வினுக்கள்

1. யுவான் சுவாங் என்பவர் யார்? அவர் தம் அறிவை வளர்த்துக்கொள்வதில் பேராவல் கொண்டிருந்தார் என்பதை நாம் எதனுல் அறியலாம்?
2. யுவான் சுவாங் தம் நூலில் கூறியுள்ள கதையையும், அதன் கருத்தையும் எடுத்துக் கூறுக.
3. மேலும் மேலும் கற்றலே அறிவுடைமை என்பதை நேரு அவர்கள் எவ்வாறு எடுத்துக் கூறுகின்ருர்?
4. பாமர மக்களின் நிலையை அவர் எவ்வாறு விவரிக்கின்ருர்?
5. ஐயத்தைத் தீர்த்துக் கொள்ள அவர் இந்திரா பிரியதரிசினிக்குக் கூறும் வழிகள் எவை?

---

## 16. பேரறிஞர் பெர்னுர்ட்சா

[திரு. புலவர் தணிகை உலகநாதன் அவர்கள்.]

ஒரு நாள் மகாத்மா காந்தியடிகள் கவியரசர் இரவீந்திர நாத தாகூரைக் காணச் சென்ற சமயம். "எழுபத்து நான்கு வயதுடைய இளைஞராகிய தங்களை அறுபத்து நான்கு வயதுடைய கிழவனுகிய யான் காண வந்துள்ளேன்" என்று கூறினுராம். அறிஞர்கள் தங்கள் உள்ளத்து உணர்ச்சியினுல் என்றும் இளமை நலம் கமழப் பெறுவர் என்பதே இப்பேச்சின் உட்கோளாகும். அறிவாராய்ச்சிகளில் வல்ல புலவர்கள் எவ்வூரிற் பிறப்பினும் என்ன? எந்த ஊரையும் அவர்கள் தம் சொந்த ஊராகவே பாராட்டுவர். உலக மக்கள் அனைவரும் அறிஞர்களைத் தத்தம் நாட்டுக் கண்களாகப் பாராட்டி அவர்கள் கூறும் அறவழிகளில் நின்று நலம் பெறுவர். அன்னுர் எழுதும் கவிதைகளும், கதைகளும், நாடகங்களும், நவீனங்களும் மக்களுக்கு

நல்வழி காட்டும் அறிவுக் களஞ்சியங்களாகவே விளங்கும். இங்ஙனம் அறிவுப் பணியில் முன்னின்ற திருவள்ளுவர், விவேகானந்தர், தாகூர், காந்தியடிகள் முதலியவர்களைப் போலவே ஆங்கில நாட்டிலும் பெர்னர்ட்சா என்னும் பேரறிஞர் தம் தொண்ணூற்று நான்கு வயதிலும் ஏடும் கையுமாகவே இருந்து நாடகங்களும், கடிதங்களும், கட்டுரைகளும் எழுதிக் கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு வாழ்வு பெற்ற அவ்வறிஞரை 'உலகப் பேரறிஞர்களின் திலகம்' என்றே போற்றினும் பொருந்தும். வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் தம் நுண்மாண் நுழை புலத்தால் அதன் அடிப்படையான காரணத்தைக் குறிப்பிட்டு எளிதில் திருத்தும் ஆற்றலை அவர்தம் எழுத்தோவியங்களிற் காணலாம். அதனாலேயே பெர்னர்ட்சா உலகப் புகழ் பெற்றார்.

பெர்னர்ட்சா 1856 ஆம் ஆண்டு சூலை 26 ஆம் நாளில் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் பிறந்தார். பெர்னர்ட்சாவின் தந்தையார் குடும்பப் பொறுப்பற்ற ஒரு குடிகாரர்; ஆயினும் தம் மைந்தரின் நல்வாழ்க்கையில் விருப்பமுடையவர். இசைக் கலையிலும் அவருக்குப் பயிற்சி உண்டு. பெர்னர்ட்சாவின் அன்னையோ நற்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிடமான நங்கை. அவர் பெண்மைக் குணங்கள் எல்லாம் நிரம்பிக் குடும்ப விளக்காகத் திகழ்ந்தார். கணவரின் குடிப் பழக்கத்தால் மனம் வெறுத்த அவர், தம் பெண் குழந்தைகள் இருவருடனும் ஆண் குழந்தை ஒன்றுடனும் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். குழந்தைகள் மூவரில் பெண்கள் இருவரும் மூத்தவர்கள். அவர்களுடைய தம்பிதான் பெர்னர்ட்சா. பெர்னர்ட்சாவின் தாயார் குடும்பப் பாதுகாப்புக்கு வேண்டும் பொருளீட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அவ்வம்மையாருக்கும் இசையில் நல்ல பயிற்சி உண்டு. அவர் தம் பெண் குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு இலண்டன் நகரம் சென்று அங்கே இசையாசிரியராகப் பணியாற்றி வந்தார்.

சார்சு பெர்ஞர்ட்சா மீண்டும் தந்தையாருடன் டப்ளினில் வாழ்ந்து வந்தார். ஆனுல் அவர் தந்தையார் தொழில் புரிந்து வந்த அலுவலகத்தில் அவரை வேலையை விட்டு நீக்கி விட்டனர். அவர் தமக்குக் கிடைத்த ஓய்வு நிதியைக் கொண்டு வேறு ஒருவருடன் சேர்ந்து ஒரு மாவரைக்கும் இயந்திரம் அமைத்துத் தொழில் நடத்தினுர். அத்தொழிலிலும் அவருக்குப் போதிய வருவாய் இல்லை. ஒருநாள் பெர்ஞர்ட்சாவின் தந்தை குடித்து விட்டு விழுந்து பெருந் துன்பப்பட்டார். அன்று தொட்டு அவர் குடிப்பழக்கத்தைக் கைவிட்டார். எனினும் அவர் தம் இறுதிக் காலத்திலேயே இந்நல்லறிவு பெற்றதால் குடும்பத்திற்கு அதனுல் எத்தகைய நன்மையும் ஏற்படவில்லை.

பதினைந்தாம் அகவையில் பெர்ஞர்ட்சா உத்தியோக வேட்டையில் நுழையலானுர். அவர் டப்ளினில் ஒரு சிறிய கணக்கர் வேலையில் அமர்த்தப்பட்டார். வேலையில் இருக்கும் போதும் பெர்ஞர்ட்சா ஆங்கில நூல்கள் பலவற்றைப் பயின்று வந்தார். பெர்ஞர்ட்சாவின் புலமை வளர்ந்தது போல் வறுமைப் பிணியும் முதிர்ந்து அவரை வருத்தத் தொடங்கிற்று. அவர் தம் நெருங்கிய நண்பர்களிடமும் கடன் வாங்க அஞ்சினுர். 'ஒரு நண்பனிடம் மூன்று பவுன் கடன் வாங்கிஞேமென்ருல், அதனைத் திரும்பக் கொடுக்காத நிலைமையில் அவன் நட்பை மூன்று பவுனுக்கு விற்றுத் துறந்தது போல் ஆகுமே' என்னும் உணர்ச்சி இளமையிலேயே அவர்பால் குடிகொண்டிருந்தது. அவர் தாமாகவே முன் வந்து உதவிய நண்பர்களின் பொருளையும் வாங்க மறுத்தார். பிறரிடம் ஊழியம் செய்து வாழும் அடிமைத் தொழிலிலும் பெர்ஞர்ட்சாவுக்கு வெறுப்பு ஏற்பட்டது. 1876 இல் அவர் தம் அன்னையார் வாழும் இலண்டன் மாநகருக்குச் சென்ருர்.

இலண்டனில் இருக்கும்போதுதான் அவர் நவீனங்கள் எழுதத் தொடங்கினுர். தொடக்கத்தில் அவை யாவும் பத்திரிகையாசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டன. எனினும் அவர் மேன்மேலும் தமது பயிற்சியில் முயற்சியுடையவராய்

இருந்தார். சின்னுட்களில் எச். சி. வெல்சு, கிரகாம், வேல்சு போன்ற அறிஞர்களின் தொடர்பு பெர்னுர்ட்சாவுக்குக் கிடைத்தது. பெர்னுர்ட்சா அவர்களுடன் சேர்ந்து சமூகச் சீர்திருத்தப் பிரசாரங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். அவர் ஞாயிறு தோறும் மேடைமீதேறிச் சீர் திருத்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர். இருபதாண்டுகள் முழு மூச்சுடன் சமூகப் பணியாற்றி வந்தார் ; சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் சுட்டிக்காட்டி மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் செல்லு மாறு ஊக்கினுர். பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பெர்னுர்ட்சா அரிய பணிகள் ஆற்றினுர். அதற்காகவே பல இனிய கதைகளும் நாடகங்களும் இயற்றினுர்.

நாளடைவில் அறிஞர் பெர்னுர்ட்சாவின் கருத்துக்களும் இனிய எழுத்துக்களும் மக்களுள்ளத்துக்கு நல்விருந்தாயின. அவர் எழுதிய நாடகங்கள் உலக மக்களால் பெரிதும் பாராட் டப்பட்டன. அவர் நவீனங்கள் எழுதியபோது கிட்டாத பேரும் புகழும் பெருஞ் செல்வமும் நாடகம் எழுதத் தொடங் கியபோது வந்து குவிந்தன. நாடகங்களில் அவர் எழுதிய முன்னுரையே பிறரால் பெரிதும் மதிக்கப்பட்டதெனின் உள்ளுறை பற்றி உரைக்கவும் வேண்டுமோ ? அவர் எழுதிய நாடகங்களில் 'பேயின் சீடன்' என்பது ஒன்று. அந்நாடகம் அமெரிக்காவில், நடந்தபோது நாடக நிலையங்களில் எள் விழுவதற்கும் இடமில்லை என்னுமாறு மக்கள் திரள் திரளாகக் கூடி, அறிஞரின் சொற்சுவை பொருட்சுவை மிக்க கருத்துக்களைக் கேட்டுக் களித்தனர். அதனுல் அளவற்ற செல்வமும் அவருக்குக் கிடைத்தது. நாடக உலகில் தமக்குக் கிடைத்த நல் வரவேற்பைக் கண்ட பெர்னுர்ட்சா அதுகாறும் தாம் ஆற்றி வந்த பத்திரிகைத் தொழிலினின்று விலகிக்கொண்டார்.

1898இல் பெர்னுர்ட்சா தம் அறிவுக்கும் திறமைக்கும் பொருத்தமான சார்லட் பிரான்சிசு டவுன்சண்ட் என்னும் ஆரணங்கை மணந்து இல்லறமென்னும் நல்லறம் ஆற்றினுர். உருவும் திருவும் வாய்ந்த அந்த அம்மையாரும் தம் கணவனு

ரிடம் மாருத அன்பும் பணிவும் உடையவராய் விளங்கினர். நெடுநாட்களாக அவர்களுக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. இங்ஙனமிருக்கும் நாளில் அம்மையார் நோய்வாய்ப்பட்டு 1943ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தம் அருமைத் துணைவியை இழந்த பெர்னர்ட்சா மிகவும் வருந்தினராயினும் தமது கடமையை மறவாமல் இலக்கியப் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர்தம் இலக்கியச் சேவையைப் பாராட்டி நோபல் பரிசுச் சங்கத்தார் 1926ஆம் ஆண்டில் அவருக்கு உலகம் புகழும் அப்பரிசை யளித்துச் சிறப்பித் தனர். அவர் பெற்ற அப்பரிசுத் தொகையாகிய 8000 பவுணை யும் இலக்கிய வளர்ச்சிக்காகவே நன்கொடையாகக் கொடுத்தமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

பெர்னர்ட்சா தம்து வாழ்க்கையில் ஐம்பது நாடகங் களுக்கு மேல் எழுதியுள்ளார். அவை உலகமெங்கும் பரவி யுள்ளன; வெள்ளித் திரையிலும் காட்டப்படுகின்றன. அவரது நாடகமென்ருல் மக்களுக்குப் பெரு மகிழ்ச்சி. நாடகங்களின் மூலம் தமக்குக் கிடைத்த திரண்ட செல்வத்தை அவர் வீண் செலவு செய்ததில்லை. தம் சொந்த உழைப்பால் அவரவர் மிகுந்த செல்வம் ஈட்டுதல் வேண்டும் என்பதே அவர்தம் உயர்ந்த எண்ணமாகும். நாடகங்கள் எழுதித் திரண்ட பொருள் ஈட்டியவர்கள் உலகில் பெர்னர்ட்சாவன்றி வேருெருவரும் இலர் என்றே கூறலாம். உலகின் பல்வேறு பொருள்களின் நுட்பங்களையும் பெர்னர்ட்சா நன்கு உணர்ந்தவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவர் தம்மைத் தாமே ஒரு பத்திரிகையாளன், விமர்சகன், நாவலாசிரியன், நாடகாசிரியன், கிளர்ச்சிக் காரன், தத்துவஞானி, அரசியல்வாதி, மதாசிரியன், பொருளாதார அறிஞன் என்று கூறிக்கொள்வதில் மிகவும் பெருமிதம் கொள்வார்.

மாணவர்கள் விரும்பிப் படிக்கும் 'அந்திரோகிளிசு' என்னும் கதை அவர் எழுதியதேயாகும். அவரது 'கான்டிடா', 'டாக்டரின் தரும சங்கடம்', 'மகாத்மா சோன்' என்னும் நாடகங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தருவன.

பெர்னார்ட்சா உடல் ஓம்புவதில் வல்லவர். தினமும் அவர் தவருமல் உடற் பயிற்சி செய்வார். அவர் நாடோறும் நீரில் தம் கண்களைக் கழுவியமையால் முதுமைப் பருவத்திலும் மங்காத பார்வையைப் பெற்றிருந்தார். அவர் தம் ஆயுளைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ கவலை கொள்ளவில்லை. சென்ற இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது செர்மனியரின் குண்டுகள் இலண்டன் நகரத் தெருக்களைத் துளைத்துக் கொண்டிருந்த போதும் அவர் அஞ்சாமல் தனியே திரியும் ஆற்றல் பெற்றிருந்தமையே அதற்குத் தகுந்த தொரு சான்ருகும். பெர்னார்ட்சா உழைப்பால் உயர்ந்தவர். தமது தொண்ணூற்று நான்காம் பிராயத்திலும் அவர் நாவல்கள் எழுதிக் கொண்டிருந்தார். தம் கையினுலேயே கடிதங்களும், கடிதங்களுக்குப் பதிலும் எழுதினுர். அவர் தம் கருத்துக்கு உண்மை என்று பட்டதை எங்கும் யாரிடத்தும் அஞ்சாது நின்று புகலும் மன உறுதி பெற்றவர். தாம் ஓர் ஆங்கிலேயராக இருந்தும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஊழல்களை அடிக்கடி எடுத்துக் காட்டித் திருத்திய தனிப் பெரும் செம்மல் அவரே. அவர் உண்மைக்கும் நேர்மைக்கும் உறைவிடமாய் இருந்தார். ஆடம்பர வாழ்வை அவர் இம்மியும் விரும்பவில்லை. இறுதி வரையில் எளிய வாழ்வே நடத்தி வந்தார்.

பெர்னார்ட்சா உயிர்களிடத்தில் அன்புமிக்கவர்; 'எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்கலாகாது' என்பது அவர் கொள்கை. மதுவருந்தலும், புலால் உண்ணுதலும், வேட்டையாடுதலும் மாபெரும் பாதகங்கள் என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு. "நான் எல்லாம் வல்ல முடிமன்னனுக இருந்தால், என் குடிமக்கள் தங்களுடைய வாழ்க்கைப் பொறுப்புக்களைத் தாங்கி நடத்துவதற்காக உணர்ச்சியகற்றும் பொருள்கள், போதைப் பொருள்கள், காஃபி முதலிய கிளர்ச்சிப் பொருள்கள், புகையிலை, மீன், புலால் ஆகிய இவற்றின் சார்பிலிருந்து மீட்டு இயற்கைப் பொருளைப் பங்கீடு செய்யுமாறு உத்தரவு பிறப்பிப்பேன்" என்று அவரே ஒரு முறை கூறியுள்ளார்.

அவர் பேரறிஞராக இருந்தும், எல்லாரிடமும் எளிதாக வும் அன்பாகவும் உரையாடுவார்; அவர் பேச்சில் எப் போதும் நகைச் சுவையுடன் உண்மைக் கருத்துக்களும் நிறைந்திருக்கும். அவருக்கு மூளை வேலை அதிகமாயிருந் தமையின், அடிக்கடி தலைவலி வருவதுண்டு. ஒரு சமயம் நான்சென் என்பவர் அவரைக் காண வந்திருந்தார். நான்சென் ஒரு நிலநூல் வல்லுநர். அவரே வடதுருவத்தைக் கண்டு பிடித்தவர். அவரைப் பார்த்து, பெர்னுர்ட்சா, "தலை வலிக்கு நீங்கள் ஏதாவது மருந்து கண்டு பிடித்திருக்கிறீர் களா?" என்று கேட்டார்.

நான்சென்: இல்லையே!

பெர்னுர்ட்சா: தலைவலி மருந்தைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சியாவது செய்ததுண்டா?

நான்சென்: இல்லையே! தலைவலியைப் பற்றி நான் ஒன்றும் கவலைப்படுவதில்லை.

பெர்னுர்ட்சா: நன்று! இது மிகவும் வியப்பே! யாருமே கவலைப்படாத வடதுருவத்தைக் கண்டு பிடிக்க உங்கள் ஆயுள் முழுவதையும் செலவழித்திருக்கிறீர்கள். ஆனுல் ஒவ்வொரு மனிதனையும் கதற வைத்துக் கவலைக்குள்ளாக்கும் தலைவலியைப் பற்றித் தாங்கள் கவலைப்படவே இல்லை என்கிறீர்களே.

பெர்னுர்ட்சாவின் இவ்வுரையைக் கேட்ட நான்சென் தம் அறியாமைக்காக வெட்கப்பட்டுப் புலவரைப் பாராட்டிச் சென்ருர். பெர்னுர்ட்சா நாம் வாழும் காலத்தில் வாழ்ந்தார். அதனுல் நமக்கும் பெருமையைத் தந்தார். அவர் 2—11—50 இல் தமது தொண்ணூற்று நான்காம் பிராயத்தில் மண்ணுலகை நீத்து, விண்ணுலகு எய்தினர் என்ற செய்தி கேட்டு உலக மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர். அவர் மறைந்தார்; ஆனுல் அவர்தம் சீர்திருத்தக் கருத்துக்கள் அமைந்த இலக்கியச் செல்வங்கள் நம்மை விட்டு மறைய வில்லை. அவை உலகில் எல்லா மொழிகளிலும் மொழி

பெயர்க்கப்பட்டு, இலக்கியச் சோலையில் என்றென்றும் மலர்ந்து குலுங்கும் வாடா மலர்களாக விளங்குகின்றன.

## அருஞ்சொற்பொருள்

நுண்மாண் நுழைபுலம் - நுட்பமான மாட்சிமைப்பட்ட அறிவு; நங்கை – பெண்மணிகளில் சிறந்தவர் ; ஈட்டும் – திரட்டும் ; அகவை – வயது ; உள்ளுறை – பொருளடக்கம் ; இம்மியும் – சிறிதும் ; கருவூலம் – சேமிப்பு நிதி.

## வினாக்கள்

1. பெர்னார்ட்சா எவ்வாறு உலகப் புகழ் பெற்றார் ?
2. பெர்னார்ட்சா கடன் வாங்க விருப்பமில்லாதவர் என்பதைச் சான்று கூறி விளக்குக.
3. பெர்னார்ட்சா எவ்வாறு எழுத்தாளர் ஆனார் ?
4. அவர் எழுதிய நாடகங்களை மக்கள் விரும்பிப் பாராட்டினர் என்பதை எங்ஙனம் அறியலாம் ?
5. மரணத்தைப் பற்றிப் பெர்னார்ட்சா சிறிதும் அஞ்சாதவர் என்பதற்குச் சான்று தருக.
6. பெர்னார்ட்சா உயிர்களிடத்தில் மிகவும் அன்புடையவர் என்பதைக் காட்டும் சான்று யாது ?
7. அவர் நகைச்சுவை கலந்து பேசும் ஆற்றலுடையவர் என்பதைப் புலப்படுத்துக.

# 17. இலக்கிய ஓவியம் — முத்தொள்ளாயிரம்

பேராசிரியர்.
[திரு. ச. ஆறுமுக முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி.]

குருதிவேல் மாறன் : பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டுத் துறைமுகமாக விளங்கியது கொற்கை. இந்நகர மானது உலகோர் அனைவராலும் பாராட்டப்பட்டு வந்தது. அவ்வாறு பாராட்டுவதற்குக் காரணமாய் இருந்து வந்தது கொற்கைத் துறையில் விளையும் முத்து. நல்ல முத்துச் சிப்பிகள் சூல்உளைந்து ஈன்ற வெண் முத்துக்கள் இவை; போலி முத்துக்கள் அல்ல. நல்ல முத்துக்கள் ஆதலால் இவை ஒளிர் விட்டுச் சுடர்கின்றன. இவற்றை 'இப்பி ஈன்றிட்ட எறிகதிர் நித்திலம்' என்று விளக்கினார் புலவர். இக் கொற்கைக்கு இறைவன் யார்? கொற்கைத் துறைவன் மாற்றாரை மாய்த்த வேலைத் தாங்கியோன் ஆகிய பாண்டியன் ஆவான். மாற்றாரை மாய வீழ்த்தியதால் அவன் வேற்படை குருதிக் கறை தோய்ந்துள்ளது. மாற்றாரை வெல்லும் மதுகை வாய்ந்த அவனது தோள் வலியை அகன்று பரந்த அவன் மார்பு காட்டுகின்றது. ஆண்மை போலவே அருளும் உடையான் என்பதை அவன் மார்பிற் பூசிய குளிர்ந்த சந்தனம் காட்டுகிறது. அவனது தோற்றப் பொலிவைப் புலவர் வாக்கில் பார்ப்போம். அதைப் படிக்கும் போது, பாண்டியனது இளமையும் கட்டழகும் சேர்ந்த தோற்றப் பொலிவு நம் கண் முன் காட்சி அளிக்கிறது. இதை ஒரு சொல்லோவியம் எனலாம். 'கொற்கைக் குருதிவேல் மாறன் குளிர் சார்ந்தகலம்' என்பதே அவர் வாக்கு.

கண் புதைத்தல் : இனி, அடுத்துப் பாண்டியனது போர்க்களச் சிறப்பியல்பைப் படம் பிடித்துக் காட்டும் காட்சிக்குப் போவோம். பாண்டியன் படைகளும், பகைவர் படைகளும் போர்க்களத் தெதிர்ந்தன. யானைப் படை யானைப் படையோடு பொருதது. காலாட்கள்

காலாட்களைத் தாக்கினர். எதிரியின் சார்பில் எண்ணற்ற வீரர் விண்ணுலகெய்தினர். தம் காதலர் போரிற் பொன்றினர் என்று கேள்வியுற்ற அவர்தம் மனைவிமார் ஆகிய வீரப் பெண்டிர் போர்க்களம் புக்கு 'இனி உயிர் வாழோம்' என்று உறுதி கொண்டு தீ வளர்த்து அதிற் புகுகின்றனர். இச்சமயத்து, வேப்பந்தார் புரளும் மார்புடைய பாண்டியன் களிறேறிப் போர்க் களம் பார்க்கப் புறப்பட்டான். அவன் அப்போது கண்ட காட்சி பெண்டிர் தீப்பாயும் காட்சி. பொறுக்கலாற்றாத அக்காட்சி அவன் உள்ளத்தைப் பிடித்து அறுத்தது. அதற்கு மேலும் அதைக் காணப் பொறாத மாறன் தன் மேலாடையின் முன்தானையால் தன் கண்களைப் புதைத்துக் கொண்டான். கண்களினின்றும் வழிந்தோடிய நீரையும் அப்படியே துடைத்துக் கொண்டும் இருக்கலாம். புலவர் தீட்டிய இச்சொல்லோவியம் ஒரு காட்சியாக நம் உள்ளத் திரையில் படிகின்றது. இதை ஓவியமாகவும் மாணவர்கள் தீட்டி மகிழலாம். இதோ இருக்கிறது அக்காட்சிப் பகுதி :

"ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையார் கண்புதைத்தான் தார் வழுதி"

என்பது அது. இனி இக்காட்சியின் மற்றொரு பகுதியும் பார்க்கத் தகுந்தது. அரசனது துயரம். அவனோடு விட்டபாடில்லை; அஃறிணைப் பொருளாகிய யானையையும் பற்றியதாம்.

அச்செய்தி என்ன? அரசன் ஏறி வந்த களிறும், பிற களிறுகளும் போர்க் களத்தைப் பார்த்தன. மாற்றாரின் களிறுகள் மாய்ந்து கிடப்பதைக் கண்டு ஆற்றாத அவற்றின் பிடிகள் பொலிவிழந்தனவாய்ப் புன்மை நிறைந்து புலம்ப அதனைக் கண்ட களிறுகளும் தம் அரசனைப் போலவே பொறுக்கலாற்றாது தம் கண்களை மூடிக் கொண்டன. போரில் வெற்றி என்பது ஒன்று கிடைத்தாலும், அதனைக் கூர்ந்து பார்க்கும் போது துயரம் என்பது உள்ளாரத் தங்கிக் கிடக்கும் என்பதை இச்செய்யுள் தெற்றெனக் காட்டுகிறது. அவலச்

சுவை வழிந்தோடுமாறு யானை கண் புதைப்பதில் ஆசிரியர் அமைத்துள்ள நயம் வியத்தற்குரியது. பாட்டு முழுவதையும் இப்போது பாருங்கள்:

ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி — யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்யானை அட்ட களத்து.

புறங்கடை நின்றது: இனி அடுத்துச் சோழனது யானை மறத்தைப் பாருங்கள். மலை போன்று பருத்துத் திரண்டு வலிமை யுடையனவாய் விளங்கும் தோள்களை உடையவன் கிள்ளி. அவனது களிறு போர்க் களத்தினின்று மீண்டது. போரிலிருந்து மீண்ட வீரரெல்லாம் வரும் வழியைப் பார்த்துக் கொண்டும் வருவார் கொழுநர் எனக் கதவம் திறந்து வைத்துக் கொண்டும் இருக்கும் அவர்தம் காதலியர் அவரை வரவேற்று மகிழ்ந்தனர். ஆனால் சோழனது களிற்றை வரவேற்க அதன் பிடி காத்துக் கொண்டிருந்தும் களிறு கோட்டைக்குள்ளேயே வரவில்லை. புறங்கடையிலேயே நின்று விட்டது; ஏன் உள்ளே போகவில்லை? தன் அருமைக் காதலியின் முகத்தில் விழிப்பதற்கும் நாணிப் புறங்கடையிலேயே அது நின்று விட்டது. ஏன் நாண வேண்டும்? பிடியினது கண்ணையும் கருத்தையும் கவர வல்ல கட்டழகோடு களிறு விளங்கிற்று போருக்கு முன். போருக்குப் பின் முடியை நோக்கினால் முன்னைய பொலிவில்லை. கொடிகள் தூக்கிய மாற்றார் மதில்களைக் கோடு கொண்டு குத்தித் தகர்த்தலால் நுனி சிதைந்து முறிந்தன கொம்புகள். அடியை நோக்கினால் அங்கேயும் முன்னைய அழகில்லை. ஏன்? முடிசூடிய மன்னர்களையும் தன் அடி கொண்டு இடறித்தேய்த்த காரணத்தால் எண்ணற்ற முடிகளோடு உராய்ந்து நகங்களும் தேய்ந்து உருவிழந்தன. இவை காரணமாகப் பிடியின்முன் செல்ல அழகிழந்து தோன்றும் பொல்லாமைக்கு நாணிப் புறங்கடையிலே நின்று விட்டதாம்!

கோடும், நகமும் பொலி விழந்தன என இழிவாகக் கூறினும், புலவர், அவையே வீரக் களிற்றின் வெற்றிச்

சின்னங்கள் என உய்த்துணர வைத்து, களிற்றின் அழகையும், வீரத்தையும், கிள்ளியின் தோள் வலியோடு சேர்த்துப் பாராட்டிக் காதலையும் உடன் கூட்டி, இழிவில் வைத்துச் சொன்ன நயத்தையும் வியவாது என் செய்வது! இயல்பாகவே புறங்கடையில் யானை நின்றது. அஃது உள்ளே செல்ல நாணியது என்ற தன் குறிப்பை, அதன் மேல் ஏற்றிப் புலவர் புனைந்துரைத்த தற்குறிப்பேற்ற அணி நயமும் பாராட்டற்பாலது. பாட்டையே முழு உருவத்தில் பார்ப்போம்:

"கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும் — பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு."

என்பதே அச்செய்யுள்.

முத்தமிழ் வேந்தரில் மாறனது மறத்தைக் கண்டோம். செம்பியனது சீரையறிந்தோம். சேரனது சிறப்பையும் ஒரு செய்யுளில் பார்ப்போம்.

வெள்ளம் தீப்பட்டது: மாற்றார் மனத்தில் நச்சுப் போல் அச்சத்தை விளைவிக்கக் கூடிய இலை வடிவு கொண்ட வேற்படையைக் கையில் ஏந்திய சேரனது நாட்டில் பகைவர் படையெடுத்து வருவர் என்று குடிகள் நடுக்குற்று அஞ்சிக் கூக்குரலிட வேண்டிய இன்றியமையாமை இல்லை. அவ்வளவு பாதுகாவல் அங்கு உண்டு எனினும், ஓர் ஆரவாரம் மட்டும் கேட்கின்றது. அஃது என்ன? சிறகுகளாகிய தம் கைகளாலே தம் இளங்குஞ்சுகளை நீர்ப் பறவையினங்கள் அணைத்துக் கொள்கின்ற ஆரவாரம் மட்டும் இருக்கின்றது. ஏன் தம் குஞ்சுகளை அவை அணைத்துக் கொள்ள வேண்டும்? தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும் தீப்பிடித்து விட்டது என்று கருதி, அஞ்சி, தம் உயிரைக் கொடுத்தேனும் தம் இளங்குழவிகளைக் காக்க வேண்டும் என்று கருதியமையால் அங்ஙனம் அணைத்துக் கொண்டன. தீ எப்படிப் பிடித்தது? தண்ணீர் தீப்பிடிக்குமா? தீயுமில்லை, ஒன்றுமில்லை. சேறு சிறக்கும் அவ்வயலில் செந்நிறம் பொருந்திய ஆம்பல்கள் இதழ் விரித்து மலர்ந்திருக்கின்றன. மிகுதியாகப் பூத்திருத்தலால் தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும், செந்நிறம்

பரவியிருப்பதை, வெள்ளம் முழுவதும் தீப்பரவியது போல, பகுத்தறிவு அற்றவையும், குஞ்சுகளின் பால் தாய்மையருள் உற்றவையும் ஆகிய இப்பறவைகள் கருதி விட்டன. அவ்வளவே. இதைத் தான் புலவர் கற்பனைக் காட்சியாக நமக்களிக்கிருர்.

மேலும், பறவையின் கவ்வை தவிர வேருெரு கவ்வையும் எழக் காரணமில்லை. கோதை நாட்டில் என ஒழித்துக் காட்டணியின் வாசம் இதில் வீசுகின்றதன்ருே ?

> "செஞ்ஞா யிற்றுத் தெற லல்லது
> பிறிதுதெறல் அறியார் நின்னிழல் வாழ்வோரே
> திருவி லல்லது கொல்வில் லறியார்
> நாஞ்சில் அல்லது படையு மறியார்."

என்னும் புறப்பாட்டு அடிகளை இதனேடு ஒப்பிடுக. சேர நாட்டின் நீர் வளமும், நில வளமும், சேரனது வீரமும், ஈகையும் வெளிப்படுகின்ற ஒரு கலவைச் சுவையையன்ருே இதில் நாம் சுவைக்கிருேம். இயல்பாகவே செந்நிறம் படிந்திருக்கின்ற சிறப்பில், பறவைகள் தீப்பிடித்ததாகக் கருதின என்னும் தன் குறிப்பை யேற்றிப் புலவர் வைத்திருக்கும் தற்குறிப்பேற்ற வாசமும் இதில் கலந்து வீசுகிறது. பறவையின் சிறகுகளை, அருமைத் தாய் சேயினை அணைக்கும் செங்கைகளாகச் சிறப்பித்ததில் உருவக நயமும் காண்க. இதோ இருக்கிறது முழுப் பாட்டும் :

> "அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
> வெள்ளந்தீப் பட்டதென வெரீஇப் — புள்ளினந்தங்
> கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
> நச்சிலைவேற் கோக்கோதை நாடு."

இவ்வழகிய பாட்டின் முழுப்பொருளும்,

> "வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
> முழுகியதென் றஞ்சு முதுமந்தி — பழகி
> எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே திங்கட்
> கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று."

என்ற "ஈங்கோய் எழுபது" பாடலிற் பயில்வதை ஒப்பு நோக்கிச் சுவைத்தல் சிறந்த இன்பம் பயப்பதொன்ரும்.

இத்தகைய சொல்லோவியங்கள் நிறைந்த செந்தமிழ்க் கவிதையே, "முத்தொள்ளாயிர" மாம்.

## அருஞ்சொற்பொருள்

சூல் – கர்ப்பம் ; உளைந்து – வருந்தி ; இப்பி – முத்துச் சிப்பி ; நித்திலம் – முத்து ; குருதிக்கறை – இரத்தக்கறை ; மதுகை – வலிமை ; பொன்றினர் – அழிந்தனர் ; தார் – மாலை ; நயம் – இன்பம் ; கொழுநர் – கணவர் ; தூக்கிய – உயர்த்திய ; கோடு – தந்தம்; பொல்லாமை – குற்றம் ; செம்பியன் – சோழன்; வாசம் – வாசனை.

## வினுக்கள்

1. பாண்டியனின் சிறப்பைக் கூறுக.
2. பாண்டியனது போர்க்களக் காட்சியை விளக்குக.
3. யானையினது மறம் எங்ஙனம் புனைந்துரைக்கப்படுகின்றது?
4. சேரனது நாட்டு வளம் எங்ஙனம் கற்பனை செய்யப் படுகின்றது ?

## 18. நாலடியார் தோன்றிய வரலாறு

[வித்துவான். த. சிவசங்கரன் அவர்கள்.]

சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் மரபினர் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு ஆட்சி புரிந்து வந்தனர். மூவேந்தரும், குறுநில மன்னர்களும், வள்ளல்களும் தம் தாய்மொழியாம் அமிழ்தினும் சிறந்த தமிழினைப் போற்றி வளர்த்தனர்; பொய்யா நாவின் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அவர்களை ஆதரித்தனர். புலவர்களும் என்றும் போற்றிப் புகழத் தக்க சிறப்புடைய நூல்கள் பல யாத்தனர். அவற்றுள் பல, கடல்கோளால் அவற்றின் பெயர்கூட அறியவொண்ணுதவாறு ஆழ் கடலகத்தே அமிழ்ந்தன. ஆயினும் கடைச்சங்க காலத்தில் பாடப்பட்ட நூல்கள் சில நம்மனோர் செய்த நற்றவப் பயனுல் இன்று நாம் கற்றுக் களிப்படையும் வண்ணம் கிடைத்துள்ளன.

கடைச் சங்கம் இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்போதுள்ள மதுரையம்பதியில் இருந்ததென்பர். கடைச் சங்கம் நிலை பெற்றிருந்த காலத்தைச் சங்ககாலம் என்றும், அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களைச் சங்கப் புலவர்கள் என்றும் கூறுவது மரபு. இச்சங்கத்துத் தோன்றிய இலக்கிய நூல்களிலே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க் கணக்கும் குறிப்பிடத்தக்கனவாகும்.

பழைய பனுவல்களை அளவு முதலியனபற்றி மேற்கணக்கெனவும், கீழ்க்கணக்கெனவும் பின்னுளோர் வகைப்படுத்தியுரைத்தனர். இரண்டடி முதல் ஆறடி ஈருகவுள்ள வெண்பாவினுலேனும், அதனினத்தாலேனும், நாற்பது செய்யுள் முதல் ஆயிரக்கணக்கான செய்யுள்வரை அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களில் யாதானும் ஒன்றினை எடுத்துக்கூறும் நூல்களின் தொகுதியே கீழ்க்கணக்கெனப் படும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இன்னவை என

உணர்த்தும் வெண்பா :

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே முதலிலே வைத்து எண்ணப்படும் சிறப்பினையுடையது நாலடியார். இது நானூறு நேரிசை இன்னிசை வெண்பாக்களையுடையது. இந்நூலின் சிறப்புக் கருதியே இஃது 'ஆர்' விகுதி கொடுத்துக் கூறப் பட்டு வருகின்றது. இஃது உலகப் பொதுமறையாம் திருக்குற ளோடு இணையாக வைத்து எண்ணத்தகும் சிறப்பினையுடை யது. 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்,' 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழிகள் நாலடியார் குறள் இவற்றின் சிறப் பினைக் கூறுவனவாயினும், அவற்றுள்ளும் நாலடியாரே முதலில் வைத்துக் கூறப்படுவது நோக்கத்தக்கது. செந்தமி ழின் தீஞ்சுவையுணர்ந்த மேனாட்டறிஞர் ஜி. யூ. போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாற் போன்றே நாலடியார்ச் செய்யுட்கள் பலவற்றையும் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இந்நூல் தோன்றிய வரலாறு பற்றிக் கதை ஒன்று தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் செந்தமிழ்ப் பாண்டி வள நாட்டில் மதுரையம்பதியினைக் கோநகராகக் கொண்டு தென்னர் குலத்தோன்றல் உக்கிரப் பெருவழுதி என்னும் மன்னன் செங்கோலாட்சி செலுத்தி வந்தனன். இவ்வரசர் பெருந்தகை கல்வியறிவு நிரம்பியவன்; புலமையாற் சிறந் தவன்; புலவர் பாடும் புகழுடையவன்; ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோரைத் தமராகக் கொண்டொழு கும் நற்பண்புடையவன். அவன் அவையை அடையும் புலவராயினும், பாணராயினும், கூத்தராயினும், மற்றியாவ ராயினும் பரிசில் பெறாது வறிதே மீள்வ ரல்லர்.

வடபுலத்து வாழ்ந்த எண்ணுயிரம் சமண முனிவர் தம் நாட்டில் ஏற்பட்ட கொடும் பஞ்சத்துக் காற்றுதவராகித் தம் நாடு விடுத்துப் பாண்டிய மன்னனவையை அடைந்தனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர் எண்ணம் கொண்ட உக்கிரப் பெருவழுதியும் அம்முனிவர்களை உள்ள உவகையோடு வரவேற்றுன். அவர்களின் கல்விச் சிறப்பை அறிந்து அவர்களுக்கு யாதொன்றுனும் குறைவு நேராதபடி ஆதரித்து வந்தனன். சில்லாண்டுகள் முனிவர்கள் மதுரையம்பதியிலே மகிழ்வோடு தங்கியிருந்து வரலாயினர்.

தங்கள் நாடு மழைவளம் சுரத்தலினுல் வற்கடம் நீங்கி வளம் பெற்றதை யறிந்த முனிவர்கள் அகமகிழ்வு கொண்டனர்; தம் நாடேகக் கருதிய அவர்கள் பாண்டிய னிடம் சென்று விடை கேட்டனர். தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார் இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ மகிழும் இன்பம் அகல் வானத்து உம்பர் உறைவார் பதி இன்பத்தினும் சிறந்ததாகக் கருதும் பாண்டியன் அம் மொழிகளைக் கேட்டனன். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங் களில் சிறந்த முனிவர்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனுய் விடை கொடாது காலந் தாழ்த்தி வந்தனன்.

சமண முனிவர்கள் தம்பால் குறையா அன்பினையுடைய பாண்டியனை விட்டுப் பிரிய மனமில்லாதவராயும், தம் நாடு செல்லாதிருக்க முடியாத நாட்டுப் பற்றுடையவராயும் உள்ளம் வருந்தினர். முடிவில் தம் நாடு செல்லும் விருப்பமே வெற்றி கொண்டது. நாளும் யாதொரு குறைவு மின்றித் தம்மை யாதரித்த பாண்டியன் செய்ந்நன்றி யுணர்ந்த அந்நல்லோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவினை எழுதித் தாம் வீற்றிருந்த இருக்கையின் கீழ் வைத்து விட்டு எவரும் அறியாவண்ணம் நள்ளிரவில் தம் நாடு நோக்கிச் சென்று விட்டனர்.

மறுநாள் பொழுது புலர்ந்த பின் பாண்டியன் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்து சென்ற முனிவர்களைக் காணுது கவலையுற்றவனுய் அவரிருப்பிடங்களை ஆராயச் செய்தனன். ஆராய்ந்துழி, அவர்களிருக்கையின் கீழ் ஒவ்வொரு வெண்பா

எழுதிய தனித்தனி ஓலைகள் இருக்கக் கண்டனன். அவற்றை எடுத்து ஆராய்ந்த போது அவை கருத்து வகையான் ஒன்றற்கொன்று ஒவ்வாதிருந்தமையாலும், அவர்களைப் பிரிந்த வருத்தத்தாலும் சீற்றங் கொண்டு அவற்றை வையை யாற்றின்கண் எறிந்து வர ஏவலர்க்கு ஆணையிட்டனன். ஏவலரும் அரசன் ஆணை வழியே செயலாற்றினர்.

புலவர் நாவில் பொருந்திய பூங்கொடியாம் வையை யாற்றிலே வீசப்பட்ட எண்ணாயிரம் ஏடுகளுள் நானூறு ஏடுகள் எதிரேறிக் கரை சேர்ந்தன. அவற்றினை எடுத்து வந்து ஏவலர் மன்னனிடம் கொடுக்க, மன்னன் அவற்றின் மாண்புணர்ந்து ஒரு நூலாக்கி மகிழ்ந்தனன். இவ் வரலாற்றை,

‘மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்கண்
எண்ணி இருநான்கோ டாயிரவர் — நண்ணி
எழுதியிடும் ஏட்டுக் கேடெதிரே ஏறும்
பழுதிலா நாலடியைப் பார்.’

என்னும் பழஞ் செய்யுளாலும் அறியலாம்.

இவ்வரலாறே யன்றிச் சங்க காலத்திற்குப் பின் வாழ்ந்த பெருமுத்தரையர் என்ற மன்னர் அவையிலே வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்டது இந்நூல் என்றும் சிலர் கூறுவர்.

பிற்காலத்தே பதுமனாரென்பவர் திருக்குறள் போல் அதிகார அடைவு ஏற்படுத்தி, அவ்வதிகார அடைவுக்கு ஏது கூறி, ஒரு பொழிப்புரை எழுதியுள்ளார். இந்நூலின் பாக்கள் சமண முனிவர்களால் பாடப்பட்டவை யாயினும் அவை சமண மதத்தின் சிறப்பியலைக் கூறாமல் பொது வியலையே கூறுகின்றன. இஃது ஓரரிய சிறந்த நூலென்பது இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க் கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய

உரையாசிரியர்களாலும், பின் வந்த நூலாசிரியர்களாலும் போற்றப்பட்டுள்ளமையால் நன்கு விளங்கும்.

‘வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்
எல்லாருங் கூடி எடுத்துரைத்த — சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதாய் என்மனத்தே
சீலமே நிற்க தெளிந்து.’

என்று பிற்காலத்து வழங்கும் வெண்பாவாலும் இதன் பெருமை இனிது புலப்படும்.

## அருஞ்சொற்பொருள்

பொய்யா நாவின் – பொய்யைச் சிறிதும் உரைக்காத நாவால்; யாத்தனர் – இயற்றினர்; பனுவல் – நூல்; வெண்பாவின் இனம் – வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்; தீம் சுவை – இனிய சுவை; கோநகர் – தலைநகரம்; பெருந்தகை – பெருந்தன்மையுடைய பாண்டியன்; ஆன்று அவிந்து – பல நற்குணங்களும் நிறைந்து பணிவுடன் இருந்து; வடபுலம் – வடநாடு; வற்கடம் – பஞ்சம்; தவல் அரும் – அழிதல் இல்லாத; இகல் – மாறுபாடு; எஃகுடையார் – எஃகுபோன்ற கூர்மையான அறிவுடையார்; இருக்கை – இருப்பிடம்.

## வினாக்கள்

1. பழங்காலத்தில் தமிழை வளர்த்தவர் யாவர்?
2. கீழ்க்கணக்கு — குறிப்பு வரைக.
3. பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள் யாவை?
4. நாலடியாரின் பெருமைகளைத் திரட்டிக் கூறுக.
5. உக்கிரப்பெருவழுதியின் மேன்மையைக் கூறுக.
6. நாலடியார் தோன்றிய வரலாறு யாது?

## 19. புதுவேனில்

[திரு. மு. இராசாக் கண்ணனுர், M A., B. O. L.]

காலத்தின் தன்மையைக் கணித்து அறிந்த அறிவினைப் பெற்றவர் நந்தம் பண்டைத் தமிழர். காலத்தை அறிந்த அறிவின் காரணமாக அவர்கள் ஆண்டு, திங்கள், நாள், நாழிகை எனப் பல பிரிவுகளைக் கண்டனர். ஆண்டு எனினும் யாண்டு எனினும் ஒன்றே. ஆண்டினை ஆறு பிரிவுகளாகப் பிரித்தனர். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன அந்த ஆறு பிரிவு களுக்கும் அமைந்த பெயர். கார்காலம் ஆவணி, புரட்டாசித் திங்கள்களாகும். கூதிர்காலம் ஐப்பசி, கார்த்திகைத் திங்கள் களாகும். மார்கழி, தை ஆகிய இரு திங்கள்களும் முன் பனிக் காலத்திற்குரியவை. சித்திரையும், வைகாசியும் இளவேனில். முதுவேனில் ஆனி, ஆடித் திங்கள்களாம்.

இந்த இளவேனில் ஆண்டுக்கொருமுறை வருதலின் புதிய இளவேனில் எனலாம். இப்பருவத்தைத் தமிழ் மக்கள் எவ்வாறு போற்றினர் என்பதனை இனிக் காண்போம்.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து, தம்மையும் இயற்கை யுள் வைத்துக் கருதிய மாண்பு பண்டைத் தமிழருடையது என்பதனை இங்கு நாம் மறத்தலாகாது. இளவேனிற் காலத்தே மரம், செடி, கொடிகள் எல்லாம் எத்தகைய மாறுதல்களை அடைந்தன என்பதனை அவர்கள் பல்காலும் கண்டு கண்டு களித்து மகிழ்ந்து பாடியுள்ளனர்.

"குயிற் பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுது." (ஐங். 341)

இத்தகைய பொழுது இளவேனிற்காலம். பெண்குயில் இன்பம் மிக்கு ஆண்குயிலை நயம் சிறந்த குரலில் அகவி அழைக்கின்றது. வெள்ளமாய் நீர் பெருகி நுரை சிறந்து கரையுடைத்துப் பாய்ந்த காலம் கார்காலம். ஆனுல், இக் காலத்தில் ஆற்றுப் படுகையில் அழகுடன் அமைந்த நுண்ணிய கருமணல் மேலே சில்லென ஓடும் தண்ணீரினுல்

மெல்லென அசைகின்றது. குளு குளு உணர்வைத் தரும் நீரோட்டம் இயைந்தின்புறும் நல்லுணர்வுக்குப் பெருந் துணை புரிகின்றது.

வேனிற் காலத்து அலரும் மலர்கள் வேறு; மற்றைக் காலங்களில் முகிழ்ப்பவை வேறு. இவ்வேறுபாட்டினை நன்குய்த் தெரிந்து இளவேனிற் காலத்தே இயற்கையன்னை மக்கள் மகிழத் தரும் போது வகைகளைப் பற்றிப் புலவர்கள் பன்னெறியாலும் பாராட்டியுள்ளனர். "இருஞ்சினைக் கருங்கால் நுணவம் கமழும் பொழுது" இளவேனில் என்றார்கள். கருநிறக் கிளைகளிலே நுண்மலர் அலர்ந்து மகிழ்வைத் தருகிறது. திணிந்த நிலைமையொடு கூடிய கோங்கு மலரின் "அணிமிகு கொழுமுகை", அஃதாவது அழகு மிகுந்த வளம் செறிந்த அரும்பு உடையும் பொழுது வேனிற்பொழுது. குரவம் ஒருவகை மரம். இதன் மலர் அலர்ந்தபின் அதனுள் அழகியதொரு பாவை உறங்குவது போல் காட்சி காணப்படும். இப்பாவையினைச் 'செய்யாப் பாவை' என்பர். ஆகவே, நறும்பூங்குரவம் பயந்த செய்யாப் பாவை கொய்யும் பொழுது இளவேனிற் பெரும் பொழுது. அதிரல் என்பது இன்பம் தரும் ஒரு கொடி. இது கதித்து வளரும் காலம் இளவேனிற்காலம். இக்கொடியைக் கொடியனைய மகளிர் தம் தலையில் அணிந்து கொள்வதற் கென இளவேனில் தருகிறது. புன்கமரம் எவரும் அறிந்ததே. இதன் மலர் நெற் பொரியினை ஒத்து விளங்கும். புன்கின் இளந்தளிரை மகளிர் பறித்துத் தம்முடம்போடு இயைத்துக் கொள்ளும் காலம் இந்த இளவேனிற் காலம். "வலம் கரிமராஅம்" என்பது வெண்கடப்ப மலர். இஃது இளவேனிற் காலத்தில்தான் மலரும். ஒரு மரம் ஒரு தோப்பிலிருந்தாலும் அந்தப் பகுதி முழுவதற்கும் நறுமணத்தை நல்க வல்ல ஆற்றல் இம்மரத்தினுடையது. பொழிலில் எல்லாம் வெண்கடப்ப மலரின் நறுமணம் விரவ இளவேனில் பிறக்கிறது. "பொரிகால் மாஞ்சினை புதைய, எரிகால் இளந்தளிர் ஈனும் பொழுது" இளவேனிற் பொழுது. பொரிந்த அடியை யுடையது மாமரம். அதன் கிளைகள் மறைந்து விடுகின்றன. எதனுல்? அக்கிளைகளினின்றும்

தோன்றும் நெருப்பை ஒத்த ஒளியைக் கக்குகின்ற இளைய தளிரினால். எத்தகைய இனிய காட்சி இக்காட்சி! வேம்பின் ஒண்பூ மலர்ந்து உதிர்கின்ற காலமும் இக்காலமே. பாதிரி மலர் பாங்கு பெற அலர்ந்தது என்னும் செய்தியைச் செங்கண் கருங்குயில் செவ்விதின் கூறும் காலமும் இக்காலமே.

இளவேனிற் காலத்தை எவ்வெவ்வாறோ உணர்ந்து அக்காலத்தே தம் உள்ளத்து எழும் உணர்வைத் தலைவன் தலைவியரை முன்னிறுத்தி, வெளிப்படுத்திய புலவர்கள் உண்டு. பாலை பாடிய பெருங் கடுங்கோ, இளவேனிற் காலத்தையே அடிப்படையாக அமைத்துக் "கலித் தொகை"யில் பாடல் இருபத்தாறினை உருவாக்கியுள்ளார்.

தலைவன் பிறநாடு சென்று பொருள் தேட வேண்டும் என்னும் எண்ணத்தால் பிரிந்து விட்டான். பிரிந்த நாளிலே, கண்ணீர் வடித்துக் கலங்கி நின்ற மனைவியிடம் "இளவேனிற்காலம் வருவதற்குள் வந்து விடுவேன்" என்று உறுதி கூறிச் சென்றான். காலம் வந்தது; ஆனால் கணவன் வரவில்லை. இது தலைவிக்கு ஆற்றாமையை விளைத்தது. எனவே, கலக்கமுற்றாள் காரிகை. அதனைக் கண்டாள் அவளின் ஆருயிர்த் தோழி. "அணங்கே! வருந்தாதே. சென்ற தலைவர் தாம் வரும் நாளைக் குறித்து நமக்குத் தூதுவரை அனுப்பவில்லை; என்றாலும் இயற்கைத் தூதுவன் தோன்றி விட்டான். விரை மலர் வாளியோடு வேனிலான் வந்தனன். இந்நாளில் நின்னைப் பிரிவுத்துயர் வாட்டுவது போல அவரையும் வாட்டத்தான் செய்யும். அவர் வந்தே தீருவார்" என்னும் பொருள்படப் பேசுகின்றாள். இப்பாடல் பெருங் கடுங்கோவின் பெரும் புலமையைத் தெற்றென விளக்குகின்றது எனலாம்.

"ஒருகுழை யொருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போல் நனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறார்க்குங் காஞ்சியும்
ஏனோன்போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்

ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும் ஆங்கத்
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்
போதவிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில்.'' (பாலைக்கலி 26)

நம்பி மூத்தபிரான் பலதேவன். அவன் ஒரு குழையை அணிந்த பெருமையை உடையவன். அவனை ஒத்து வெண் கடம்பு பூத்தது. பரிதியாகிய ஞாயிற்றுச் செல்வன் அழகிய செவ்வண்ணத்தான். அவனைப் போலச் செருந்தி அரும்புகள் அலர்ந்தன. மீன் ஏற்றுக் கொடியோன் காமன். அவன் நிறம் போலக் காஞ்சி மலர்ந்தது. காமன் தம்பி சாமன். அவன் உடல் நிற விளக்கத்தினை ஒத்து ஞாழல் பூக்கள் நெருங்கி மலர்ந்தன. இடபக்கொடியினை ஏந்திய எம் பெருமான் இறைவனான சிவபெருமான். அவனை ஒத்து இளவேனிலை எதிர்கொண்டு இலவங்கள் மலர்ந்தன. பலதேவன், பரிதியின் செல்வன், காமன், சாமன், சிவபெருமான் இந்த ஐவருடைய நிறத்தின் தன்மைபோல மலர்ந்த பூக்களுடன் பிற மரங்களும் அழகுற மலர்ந்தன. இந்தக் காட்சி உணர்வை அள்ளும் காட்சி. உள்ளத்தைத் துள்ளவைக்கும் இந்த இனிய இளவேனிற் காலத்தே எப்பொருள் கருதி நாட்டின் எப்பகுதிக்கும் சென்ற எவராயினும் தம் உயிரனைய தலைவியரை நினைத்து மீளவே செய்வர். மீண்டார் கலந்தார். கலந்த காரணத்தால் இன்பம் மீதூரப் பெற்று இளவேனிலை வாழ்த்துவாராயினர்.

இந்த இளவேனிற் காலத்தைச் செம்மையுறத் துய்த்தற்கு எனத் தனி மாடங்களை அமைத்து வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள். இம்மாடம் "வேனில் வீற்றிருக்கும் நிரை நிலை மாடம்'' என்று குறிக்கப்படுகின்றது. இத்தகைய இளவேனிற் காலத்தேதான் கோவலன் மாதவியை விட்டுப் பிரியலுற்றான். அவன் பிரிந்தது மிகவும் தவறானது என்பதை அவன் பின்னொரு காலத்தே உணர்ந்தவனாயினும், பிரிந்த காலத்து அவ்வுணர்வு அவனுக்குத் தோன்றவில்லை. தூய நெஞ்சினைப் பெற்ற மாதவி இளவேனிலின் இயல்பைத் தன் ஆருயிர்க் கொழுநனாகிய கோவலனுக்கு எடுத்துக் கூற வேண்டியவள் ஆனாள். எனவே, அவளுடைய கலை உணர்

வுக்கு ஏற்பக் கருவிகள் சில கொண்டு கடிதம் ஒன்று எழுதினுள். தாழை மலர் ஏடாக, பித்திகையின் கொழுவிய முகை எழுத்தாணியாகச் செம்பஞ்சுக் குழம்பு மையாகப் பின்வருமாறு எழுதினுள்.

"இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீமின்."

(சிலப். வேனிற் காதை 57–63)

என்பது திருமுகம் ஆயிற்று.

உலகில் வாழ்கின்ற மக்களேயன்றி மற்ற உயிர்ப் பன்மைகளையும் தாம் மகிழும் துணையோடு இயையவைக்கும் இனியவன் இளவேனில் என்னும் இளவரசன். அவனே யன்றியும் மாலைக் காலத்திலே மலரும் காமநோய்க்குப் பெருந்துணையாக விளங்குவோன் திங்கட் செல்வன்; ஆதலால் கலந்தோர் புலவி மேற்கொண்டாலும், பிரிந்தோர் தம் துணையை மறந்தாலும் இனிய நறும் பூவாகிய அம்பினுல் உயிரை வாட்டுதல் இளவேனிற்கு உரிய செயல். இதனை மறவாதீர். இவ்வாறு இளவேனிற் காலத்தின் இயல்பினை மாதவி கோவலனுக்கு எடுத்துக் கூறி நம்மையும் அறியச் செய்கின்றுள்.

புதிய வேனில் புத்துணர்வையும் புதிய மகிழ்வையும் புதிய கலப்பினையும் புதிய நல்லுலக ஆக்கத்தினையும் தருவது இவ்வேனிற் காலத்தோடு பிரிவு முடிவு பெறுகின்றது. பிரிந்தவர் கூடுகின்றனர். இவ்வேனிற் காலம் நல்லின்பம் பெற அமைந்து விடுகின்றது. இவ்வுண்மைகளை இந்தப் புதிய வேனில் தொடங்கும் நாளில் இளங்கோவடிகளோடு கலந்து நின்று நாமும் அறிவோமாக.

"செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தார் அசோகம் மடலவிழக்-கொந்தார்
இளவேனில் வந்ததால்......"

"ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்ணை
கூடுமின் என்று குயில்சாற்ற-நீடிய
வேனில்......"

(சிலப். வேனிற்காதை வெண்பாக்கள்)

இவை இந்நாளில் நாமும் நாம் வாழும் நாடும் உலகமும் உணர வேண்டியன. செந்தாமரை இதழ் விரித்து மலர் கின்றது. தேமா கொழுந்துவிட்டுத் தளிர்க்கின்றது. வன்மை யமைந்த அசோக மடல் அவிழ்ந்து மணம் வீசுகின்றது. இவ்வாறு இவ்வேனில் எழுச்சியுறப் புதுமை பொலிய வருகின்றது. "ஊடிக் கூடாது வேறுபட்ட மக்களே! கூடுங்கள். கலந்து வாழுங்கள். இது வேனிற் காலத்துக்கு உரிமை பூண்டவனாகிய உருவமற்ற காமன் கட்டளை."

இயற்கை புதிய கோலம் தாங்கி, மருட்சியைப் போக்க முற்படுகின்ற மாண்புற்ற காலம் இக்காலம். இது சிறந்த காலம். மக்கள் உள்ளத்தே பல்வகை மாறுபாடுகள், பனிப் படலங்கள் மூடிக் கிடந்திருக்கலாம். நெஞ்சிலே நஞ்சு போன்ற தீய நினைவுகள் பரவிப் படிந்திருக்கலாம். ஆனால், அவையெல்லாம் போக வேண்டிய காலம் மலர் பூத்துக் குலுங்கும் இம்மகிழ்ச்சி நிறைந்த காலம். கூடுவதால், குலவுவதால் மாறுபாடு நீங்கும். மனப் பிணக்கு மாயும். போருணர்வு போகும். புதுமை பொலியும்; நல்லாக்கம் பிறக்கும். நன்மை சிறக்கும். நாம் வாழ்வோம். வாழ்க இளவேனில்!

## அருஞ்சொற்பொருள்

திங்கள் – மாதம்; வேனில் – வெயிற்காலம்; முகிழ்ப்பவை – தோன்றுபவை; ஆற்ருமை – தாங்காமை; தணந்த – பிரிந்த.

## வினாக்கள்

1. அறுவகைப் பருவங்கள் யாவை ?
2. புதுவேனில் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
3. செய்யாப் பாவை யாது ?
4. இளவேனிற் பருவத்தில் மலரும் பூக்கள் யாவை ?
5. இளவேனிலின் சிறப்பு என்ன ?
6. தலைவனைப் பிரிந்த தலைவியின் வருத்தம் கலித்தொகையில் எவ்வாறு கூறப்படுகிறது ?
7. ஐவர்கள் நிலைபோலப் பூத்தவை எவை ?
8. மாதவி எழுதிய முடங்கலின் கருத்து என்ன ?
9. புது வேனிலால் நிகழ்பவை யாவை ?

TB
031(10)
N67
ஆவணக் காப்பக
சென்னை-600 008.
130150

RJR/1100